
# கந்தன் கதை



இந்து சமயப் பேரவை

ஒன்ராறியோ

உ

# கந்தன் கதை

வி. கந்தவனம்

ஒன்ராறியோ
இந்து சமயப் பேரவை
கனடா

| | |
|---|---|
| நூல்: | கந்தன் கதை |
| ஆசிரியர்: | வி. கந்தவனம் |
| முதற் பதிப்பு: | சித்திரபானு ஆனி |
| எழுத்தமைப்பு: | மா. கனகசபாபதி |
| அச்சுப் பதிப்பு: | விவேகா அச்சகம் |
| வெளியீடு: | ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை |

| | |
|---|---|
| Title: | Kanthan Kathai |
| Author: | V. Kandavanam |
| First Edition: | June 2002 |
| Typesetting: | M. Kanagasabapathy |
| Printed & Bound by: | Viveka Press |
| Published by: | The Hindu Religious Society of Ontario, Canada |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| I | பதிப்புரை | I |
| II | முன்னுரை | III |
| III | அணிந்துரை | VI |
| IV | சிறப்புரை | X |
| V | நூல் | |
| | - புராண வரலாறு | XII |
| | - கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் பாடியருளிய வரலாறு | XIV |
| | - கந்தபுராணத்துப் பாயிரம் | XVI |
| | - கடவுள் வணக்கம் (தெரிவு செய்யப்பெற்றவை) | XVII |
| | 1. சிவபெருமான் வரம் | 1 |
| | 2. பார்வதி திருமணம் | 5 |
| | 3. முருகன் அவதாரம் | 10 |
| | 4. குழந்தையின் குறும்பு | 14 |
| | 5. ஆறுமுகனின் அறப்போர் முகம் | 20 |
| | 6. செவ்வேளின் சிவ வழிபாடு | 25 |
| | 7. சூரபன்மன் பிறப்பு | 28 |
| | 8. அசுரர் யாகம் | 34 |
| | 9. சூரன் அரசியல் | 39 |
| | 10. அகத்தியர் ஆற்றல் | 44 |
| | 11. அசமுகி ஆணவம் | 51 |
| | 12. வீரவாகுத்தேவர் தூது | 58 |
| | 13. சூரனும் வீரனும் | 64 |
| | 14. அசுரனின் ஆலோசனைக் கூட்டம் | 70 |
| | 15. சூரன் போர் | 77 |
| | 16. தெய்வயானை திருமணம் | 98 |
| | 17. தக்கன் தவம் | 102 |
| | 18. தாட்சாயணி திருமணம் | 106 |
| | 19. தக்கனின் தகாத வேள்வி | 111 |
| | 20. தக்கனைச் சார்ந்த சாபங்கள் | 122 |
| | 21. வீரபத்திரர் வீரதீரம் | 125 |
| | 22. அரும்பெருஞ் சோதி | 130 |
| | 23. முசுகுந்தனுக்கு அருளிய முருகன் | 133 |
| | 24. வள்ளி திருமணம் | 137 |
| VI | நாளாந்தம் ஓதுதற்குகந்த கந்தபுராணப் பாடல்கள் | 149 |

# பதிப்புரை

கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகியன சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் மூன்று கண்கள் என்று சைவச்சான்றோர்கள் குறிப்பிடுவார்கள். பாமர மக்களுக்கு மத்தியில் சமய நம்பிக்கையை ஊட்டுவதற்காகவே புராணங்கள் பரிணமித்தன. புராண படனங்கள் மூலமும் புராணப் பேருரைகள் மூலமும் இலகுவான முறையில் சமய நம்பிக்கையைச் சமயச்சான்றோர்கள் மக்களுக்கு மத்தியில் கிளர்ந்தெழச் செய்தனர். புராணங்களில் நிறைந்த சமய தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. சிவபெருமானின் நெற்றிக்கண்ணாக வர்ணிக்கப்படும் கந்தபுராணம் பதினெண் புராணங்களில் ஒன்றான ஸ்கந்தபுராணத்தை தழுவியது என்றும், சிவபெருமானின் புகழ்பாடுவதால் சிவபுராணம் என்றும் குறிப்பிடுவார்கள்.

குறிஞ்சி நிலக்கடவுளாகவும் தமிழ்க்கடவுளாகவும் இருந்து அருள்பாலிக்கும் முருகப் பெருமானை எமது ஈழத்தமிழ் மக்கள் போற்றி வழிபடுவது வழக்கம். யாழ் குடாநாட்டு மக்களின் கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம் என பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் வியந்துரைக்கின்றார். கந்தபுராணத்தின் பெருமையை மக்கள் மயப்படுத்தத் தவறியதாலேயே ஈழத்தமிழ் மக்களுக்கு இடர்கள் ஏற்படுகின்றன எனவும் தன்னுடன் உரையாடிய அறிஞர்களுக்கு இயல்பாகவே சைவத்தின்மேல் இருந்த பற்றின் காரணமாக பண்டிதமணி எடுத்தியம்பியிருக்கின்றார்.

பண்டிதமணியின் வழித்தோன்றலாகிய கவிஞர் கந்தவனம் அவர்கள் கந்தபுராணத்தைச் சுருக்கி இலகுவான தமிழிலே 'கந்தன் கதை' என்ற பெயரில் சைவத்தமிழ் மக்களுக்குத் தந்திருக்கின்றார். பல நூல்களை எழுதிய கவிஞர் கந்தவனம் ஐயா அவர்களின் சைவசமயப் பணிக்கு ஒருநிலையான முத்திரை பதிக்கும் நூலாக இந்நூல் திகழப் போகின்றது.

அறிவியல் வளர்ந்த இக்காலத்தில் லௌகீக கல்வியில் திளைத்த பெருமக்கள் புராணங்களின் மகிமையை உணருவதில்லை. புராணங்களில் நல்ல கருத்துக்களை உள்வாங்கி, ஏற்றுக் கொள்ள முடியாத கருத்துக்களைத் தவிர்த்து விடலாம்.

இந் நூலிலும் இக்காலத்துக்குப் பொருத்தமற்ற சில கருத்துக்களைக் கவிஞர் ஐயா அவர்கள் தவிர்த்திருப்பதைக் காணலாம்.

இந்நூலை வடிவமைப்புச் செய்து தந்த திரு. மா கனகசபாபதி அவர்களுக்கும் அழகுற அச்சேற்றித் தந்த விவேகா அச்சகத் தினருக்கும் ஆத்மஜோதி நிலையத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்நூல் வெளிவருவதற்குப் பல வழியிலும் உதவி செய்த அன்பர்கள், அடியார்கள் அனைவருக்கும் எங்கள் நிலையத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலை வாங்கிப் படிப்பவர்கள் எல்லோருக்கும் முருகப் பெருமானின் அருள் கிடைப்பதாகுக!

அன்பே சிவம்.

சிவ முத்துலிங்கம்

# முன்னுரை

புராணம் என்றால் பழமைவாய்ந்த கதை என்று பொருள். இதிகாசம் என்பதுவும் பண்டைய வரலாற்றுக் காப்பியம் என்ற பொருளினையே கொண்டுள்ளது. எனினும் இரண்டுக்கும் ஒருசில வேறுபாடுகள் உள்ளன. புராணங்களில் தெய்வங்கள் தெய்வங் களாகவே சித்திரிக்கப்படுவர். இதிகாசங்களில் தெய்வங்கள் மானிடராக வந்துதிப்பர், இராமாயணத்தில் திருமால் இராமராக அவதரித்ததைப்போல. மற்றுமொரு வேறுபாடு காலம் சம்பந்தமானது. மேலும் இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்களில் உலகியலும் இலக்கிய நயமும் அதிகம் இருக்கும். புராணங்களில் ஆன்மீகமும் பத்தியும் விஞ்சி நிற்கும்.

சைவ உலகம் கண்ணெனப் போற்றும் புராணங்கள் மூன்று. அவை திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் என்பன. சிவபெருமானின் வலது கண்ணுக்கு நிகராகத் திருத்தொண்டர் புராணமும் இடது கண்ணுக்கு நிகராகத் திருவிளையாடற் புராணமும் நெற்றிக் கண்ணுக்கு ஒப்பானதாகக் கந்தபுராணமும் மதிக்கப்படுகின்றன.

கந்தபுராணத்தைப் பாடியருளியவர் காஞ்சிபுரம் குமரகோட்டத்துக் கச்சியப்ப சிவாச்சாரியார். இவரது தாசராகிய கச்சிக் கணேசையர் என்பவரே கந்தபுராணத்தை ஈழத்தில் முதன்முதலாக அறிமுகஞ் செய்திருக்க வேண்டுமென்று நம்பப்படுகின்றது.

கந்தபுராணத்தை முதன்முதலிற் பரிசோதித்துப் பதிப்பித்தவர் ஆறுமுகநாவலர் பெருமான். இது 1869ல் நடைபெற்றது. நாவலர் பெருமான் காலத்திலே புராணபடனம் ஈழத்தில் என்றும் இல்லாத அளவில் வளர்ந்தோங்கியது. அதுவும் குறிப்பாக, கந்தபுராணப் படிப்புத் தனித்துவமான ஒரு கலாச்சாரத்தையே உருவாக்கியது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். “கந்தபுராண கலாசாரம்” என்ற நூல் ஒன்றையே எழுதியிருக்கின்றார்கள்.

அதிலே “நாவலரவர்களுக்குச் சைவசித்தாந்த உணர்ச்சி கந்தபுராணத்திலிருந்தே வந்தது. அவரை அறியாமலே கந்தபுராணம் அவரது இரத்தத்தில் ஊறியிருந்தது” என்று பண்டிதமணி கூறியிருப்பது நாவலருக்கும் கந்தபுராணத்துக்குமிருந்த உயிர் உறவைக் காட்டுகின்றது.

ஏனைய புராணங்களிலும் கந்தபுராணத்துக்கு நாவலர் பெருமான் முதன்மை அளித்தமைக்கு ஒரு காரணம் உண்டு. நாவலர் வாழ்ந்த காலத்தில் (1822-1879) பிறமதங்களின் ஆட்சி மேலோங்கியிருந்தது. சைவர்கள் தமது சமயத்தின் மேன்மையை உணராதவர்களாய் அற்ப சலுகைகளை முன்னிட்டுப் பிறமதங்களைத் தழுவலாயினர். அத்தகைய சூழ்நிலையிற் சைவத்தின் மகிமையை மக்களுக்கு உணர்த்தி அதனை எங்கணும் பரப்பி நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்ட நாவலருக்கு மிகவும் பொருத்தமான கருவியாக அமைந்தது கந்தபுராணம். ஏனெனில் அது முழுமையாகவே சைவத்தின் பெருமையை முன்வைக்கும் பக்தி இலக்கியம். இன்னொரு வகையாகச் சொன்னால் அது ஒரு சிவப்பிரசார நூல். பிரசாரத்தின் உச்சக் கட்டமாக விளங்குவது தட்சகாண்டம். அதில் முதலில் நான்முகனும் பின்னர் ததீசி முனிவரும் சிவனின் பெருமையைத் தக்கனுக்கு எடுத்துரைக்கின்றார்கள். தக்கன் பல கேள்விகளைக் கேட்கின்றான். அவர்கள் பதில் சொல்கிறார்கள். கச்சியப்பர் கையாண்ட அந்தக் கேள்வி - பதில் உத்திமுறைதான் நாவலர் பெருமானைச் சைவ வினாவிடை எழுதத் தூண்டியிருக்க வேண்டும் என்று துணிவதே பொருத்தமானது.

நாவலர் பெருமான் காலத்தில் நடந்ததைப் போலவே கனடாவிலும் இன்று சைவர்கள் கிறித்துவத்துக்கு மாறிவருகின்றனர். மாறுவது அவரவர் விருப்பம். ஆனால் சைவத்தைத் தாழ்த்திப் பேசி அதனைத் துறப்பது அறியாமையேயன்றி வேறொன்றில்லை. இந்த அறியாமையைப் போக்குதல் வேண்டியே நாவலர் பெருமான் அடிச்சுவட்டில் "புதிய சைவ வினாவிடை"களை அடியேன் எழுதினேன். "கந்தன் கதை" என்னும் இந்நூலும் சைவத்தின் மேன்மையை விளக்கும் நோக்குடனேயே எழுதப்பட்டுள்ளது.

கச்சியப்ப சிவாச்சாரியார் செய்யுள் நடையில் விரிவாகக் கூறிய கந்தபுராணத்தின் சாரத்தை விளக்கமான உரைநடையில் சுருக்கமாக எழுதியுள்ளேன்.

அவ்விதம் எழுதுகையில் இங்குள்ள சமயமாறிகள் சிலரின் பொய்ப்பிரசாரங்களுக்கும் இளஞ் சந்ததியினர் கேட்கும் கேள்விகளுக்கும் விடையளிக்குமுகமாகப் பொருத்தமான சில மாற்றங்களையும் புதிய விளக்கங்களையும் தந்துள்ளேன். அவ்வித மாற்றங்களும் விளக்கங்களும் சைவநெறிக்கு மேலும் பெருமை தரும் வகையிலேயே செய்யப்பட்டுள்ளன. மிகவும் முக்கியமாக,

தெய்வங்களுக்கிடையிற் போட்டி பொறாமை எதுவும் இருக்க முடியாது என்ற சித்தாந்தத்துக்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. மாற்றங்கள் அல்லது புதிய விளக்கங்கள் பெற்றுள்ள கதைகள் பின்வருமாறு:

1. சிவபெருமான் முருகனிடம் உபதேசம் கேட்டருளல்
2. மாதுளங்கனிப் போட்டி
3. மார்க்கண்டேயர் வரலாறு
4. ஐயனார் வரலாறு
5. விநாயகப் பெருமான் அவதாரம்
6. அடி முடி தேடிய கதை
7. முசுகுந்தனுக்கு வீரவாகுத் தேவர் முதலியோர் படைத்துணைவராதல்
8. வள்ளியம்மையின் அவதாரம்

ஒருசில சம்பவங்கள் முற்றாகவே நீக்கப்பட்டுள்ளன. உதாரணமாக தமது வயிற்றிலே குழந்தை பிறக்கவில்லை என்பதற்காக உமாதேவியார் இந்திரன், பிரமன், திருமால், மற்றுமுள்ள தேவர்களின் மனைவியர்களுக்குப் பிள்ளைகள் பிறக்காது போகட்டும் எனச் சபித்தார் என்று ஒரு கதை உற்பத்தி காண்டத்தில் வருகிறது. கருணையே வடிவான உலகமாதாவின் இயல்புக்கு இக்கதை ஒவ்வாதிருப்பதால் நீக்கப்பட்டுள்ளது.

கச்சியப்பரே முதல் நூலை முழுமையாகத் தழுவவில்லை. அதுபோல் சிறியேனும் கச்சியப்பரை வரிக்கு வரி பின்பற்றவில்லை என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சியில் அடியேனுக்கு ஆதரவாக இருந்த ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை அன்பர் திரு க. தனபாலசிங்கம் அவர்களுக்கும் டாக்டர் ம. சண்முகம் அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்களுக்கும் சிறப்புரை வழங்கிய கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களுக்கும் இதனை வெளியிடுவதற்கு அயராது உழைத்த திருமுறைச் செல்வர் திரு. சிவ முத்துலிங்கம் அவர்களுக்கும் எல்லாம் வல்ல முருகப் பெருமான் அருள்பாலிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

- வி. கந்தவனம்

# அணிந்துரை

சைவ சமயம் பழைமையானது. சிந்து வெளியே அதன் ஆதித்தளம். சிவனோடு சம்பந்தம் உடையது இச்சமயம். பிற்காலத்தில் இந்துமதம் என்ற பெயர்வந்து இதனை விழுங்கிவிட்டது. வேற்றுமதப்படமுன் தமிழினத்தின் சமயமாய் அமைந்தது சிவசமயமே. சிவம் மங்கலகரமானது, அழகானது, நிறைவானது, உயர்ந்தது, செம்மையானது என்று பொருள்படும். மேலைத் தேயத்தவர்களைப் பொறுத்தமட்டில் மதம் ஒரு அமைப்பு எனலாம். இந்தமதம் ஒரு தேன்கூடு போன்றது என்கிறார் மேலைநாட்டுச் சிந்தனையாளர். ஒரு கொள்கை கோட்பாட்டின் நியதிக்குள் அடங்கி, அதன் சடங்குகளை ஏற்று நடப்பவர்கள் மேற்கத்தையவர்கள்.

மதம் என்ற பிரயோகம் மதர்ப்பைத் தரக்கூடாது. எனவே பொருத்தமான வார்த்தை தர்மம் என்பதுதான். ஜனாதன தர்மம், வைதீக சமயம் என்ற தொடர்கள் பொருத்தமானவை. தர்மம் என்ற சொல்லுக்கு ஆழமான பொருள் உண்டு. தர்மம் என்றால் நிலைபெற்று விட்ட ஒன்றை உறுதியாகப் பற்றிக்கொள்வது என்று பொருள். உலக சமயங்களுள் ஒப்பற்றதும், உன்னதமானதும், உலகெங்கும் பரந்து இருந்ததும், எவராலும் தோற்றுவிக்கப் படாததும் இச்சமயமே. அதேவேளை பிறசமயங்களின் விழுமியங் களை மதிக்கும் மாண்பும் இதற்குண்டு.

சைவம் இன்று தென்பாரதத்திலும், ஈழத்திலும், சிங்கப்பூர், மலேசியா, மொறிசியஸ் போன்ற இடங்களிலும் அனுஷ்டிக்கப் படுகின்றது. எண்பதுகளில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிற் குடியேறினர். அங்கே தமது சைவநெறி தழைத்தோங்க ஆவன செய்கின்றனர். எனினும் கிறீத்தவ தாக்கங்களும் சைவத்தை விட்டு அகலவில்லை. தம் சமயக் கடைப்பிடிப்பில் இருந்து வழுவாதவர்கள் கோயிலை அமைத்து சைவப் பண்பாட்டைக் கட்டி வளர்க்கிறார்கள். இவ்வழியில் கிழமை வெளியீடுகள், மாதசஞ்சிகைகள், குடமுழுக்கு மலர்கள், நூல்கள் எனச் சிறந்த ஆக்கங்கள் வெளிவருகின்றன. அப்படி எழுந்ததுதான் "கந்தன் கதை".

தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வாளர் பக்தி இலக்கியங்களுக்குக் கனதியும் காத்திரமும் அளித்துள்ளனர்.

சங்ககாலத்தில் இருந்து கடந்த மிலேனியம்வரை பக்திப் பனுவல்களுக்குக் குறைவே இல்லை. ஆக்க இலக்கியங்களுக்கு முன்னுரிமை வழங்கிய கடந்த தசாப்தங்களை நோட்டம் விட்டால் பழைய மரபுவழி பக்திப்பனுவல்கள் நிறைய வெளிவந்திருப்பதைக் காணலாம். பல்லவர் காலம் பக்தி இலக்கிய காலமெனப் பாராட்டப்படுகிறது. பலவிதமான இலக்கிய வடிவங்கள் வெளிவந்த காலமிது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தம் தோத்திரப் பாமாலைகளால் வைணவத்தையும், சைவத்தையும் போற்றி வளர்த்தனர். இன்றும் அறிஞர்கள் தமிழ் மொழியையும் சமயத்தையும் பேணுகின்றனர். நோபல் பரிசு பெறத்தக்க நவீனங்கள் எழவில்லையே என முனைவர்கள் அங்கலாய்க்கும் இக் காலகட்டத்திலும் கலாநிதி மு. கந்தையா அவர்கள் திருக்கேசுவர மான்மியத்தைப் பாரகாவியமாகப் பாடி வெளியிட்டும் உள்ளார். அஃதேபோலக் கவிஞர் கந்தவனம் போன்ற பலரின் பங்களிப்புகள் பக்தி இலக்கியப் பாதையை அணிசெய்கின்றன.

தமிழ் இலக்கியப் பரப்பிற் புராணங்கள சிறப்பான இடம் வகிக்கின்றன. புராணம் என்னும் வடமொழிச்சொல் பழமை எனப் பொருள்படும். பழைமை, புராதனம், தொன்மை என்பன ஒரே பொருளுடையன. தொன்மை மறவேல் என்பது ஔவை வாக்கு. திருக்குறளிற் பழைமை என்றோர் அதிகாரமே இடம்பெற்றுள்ளது. திருவாசகத்தில் முதல் வருவது சிவபுராணம். இதற்கு “சிவனது அநாதிமுறைமையான பழமை” என்று பொருள். புராணகாரண எனச் சிவனைப் பாடியுமுள்ளார் வாசகர். தேவாரத்திலும் புராணம் என்ற பிரயோகம் உண்டு.

வடமொழியில் எழுந்த மகாபுராணங்கள், உபபுராணங்கள் முதலியன நீண்டகால வரலாற்றை உடையன எனப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார். பதினெண் புராணங்களோடு வேதவியாசர் தொடர்புடையவர். இவற்றிலே சிவபுராணம், ஸ்காந்தபுராணம், விஷ்ணு புராணங்களும் அடங்கும். தமிழிலே புராணகாலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என ஆய்வாளரது கணிப்பு. அவற்றிற் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் மிகச் சிறந்தன. இவற்றை இறைவனின் முக்கண்கள் என்பர். சைவத்தையும் கடந்து இஸ்லாத்தில் எழுந்த சீறாப்புராணம் புலவர்களாற் போற்றப்படுகின்றது.

தொண்டைமண்டலம் சான்றோர் நிறைந்தநாடு. இதன்

தலைநகர் காஞ்சி. இதற்குக் கச்சியென்றும் பெயர். கோயில் நிறைந்த காஞ்சீபுரம் பட்டு பிரபல்யமானது. இது முத்தித் தலங்களில் ஒன்று. இங்கேயமைந்த குமரகோட்டத்து முருகனருளாற் கச்சியப்பசிவாசாரியார் கந்தபுராணம் பாடி அரங்கேற்றினார். அதன் சாரமே கந்தன் கதையும். செவ்வேளின் சிறப்புக் கூறும் பரிபாடல், சிலப்பதிகாரம், திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியம், அருணகிரியார் அருளிச்செய்தவைகள் எல்லாமே முருகன் பெருமை பேசினாலும் இயந்திரமயமான இன்றைய வாழ்வமைதியில் அவற்றை ஆற அமர இருந்து படிக்க முடியாமை கண்டே இந்நூல் துளிர்த்திருக்கலாம்.

செந்தமிழ்த் தெய்வமென்று போற்றப்படும் கந்தன் தமிழரின் சொந்தத் தெய்வமென உரிமை பாராட்டப்பட்டாலும், சிவனில் வேறாகாத அவனை உலகெங்கும் கோயிலமைத்துச் சைவர் மட்டுமன்றி வேறு மதத்தவர்களும் போற்றுகிறார்கள். இந்த நிலையைச் சோமாஸ்கந்த மூர்த்தத்திலும் காணலாம். வடநாட்டுச் சுப்பிரமணியரும் தென்தமிழ்நாட்டு முருகனும் ஒன்றித்த நிலையிலேயே இன்றைய முருகவழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. விநாயகர் உற்பத்தி, முருக அவதாரம் என்பவற்றுக்கு வெவ்வேறு வித்தியாசமான கதைகளும் உலாவுகின்றன. அவ்வாறே ஐயனாருக்கும். இவைபற்றிய செய்திகள் கந்தன் கதையிலே வருகின்றன.

அறக்கருணையால் வள்ளியையும், மறக்கருணையால் சூரனையும் ஆட்கொண்டான் முருகப் பெருமான். கந்தபுராணம் தருமம் என்றொரு பொருள் உளதெனவே துவங்கி முப் பொருளுண்மைகளை விளக்கி நான் எனதற்ற இடமே திருவடி என்ற தத்துவத்தை சூரன், சிங்கன், தாரகன், மூவரிலும் வைத்துப் பேசுகிறது. மும்மல நீக்கமே முப்புரமெரி செய்தமை என்ற உண்மையை விளக்கும் கந்தபுராண தத்துவத்தில் தோய்ந்த ஆறுமுகநாவலர் பெருமான் ஈழத்திலும், தமிழகத்திலும் அதனை நிலைநாட்டிக் கந்தபுராண கலாசாரத்தைப் பரப்பினார். அதில் ஊறித்திளைத்த பண்டித மணியின் பரம்பரையில் வந்த கவிஞரும் காலத்துக் கேற்றபடி இந்நூலை ஆக்கியுள்ளார். இதிலே ஏமகூடத்தை, கந்தமாதனத்தை, வீரமாநகரை, இலங்காபுரத்தை நாம் காண்கிறோம்.

உமா என்பதன் பொருளையும் திருச்சேயநலூர் சேங்கனூர் ஆனதெப்படி என்பதையும், ஒருயோசனை தூரம் எத்தனை

மைல்கள் என்பதனையும், சூளிகை என்றாலென்ன என்பதனையும் மறுசிகை என்ற பிரயோகம் எதைக் குறிக்கிறதென்பதையும் ஆங்காங்கே விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

ஆறு காண்டங்களைக் கொண்டது கந்தபுராணம். கந்தன் கதையும் 24 அத்தியாயங்களால் இயன்றது. ஆறோடு தொடர்புடைய அறுமுகனின் திருமணம் என்று வர எழுதினாரோ தானாக அமைந்துவிட்டதோ? ஆறுமுகத்தான்தான் எழுது வித்தானோ? எல்லாம் ஆறுமுகமான பொருளின் விளையாட்டே.

தெளிந்த நீரோடை போன்ற ஓட்டமும், துள்ளிக்குதிக்கும் நயகராவின் வாளிப்பும், பழகுதமிழின் பளபளப்பும், சுருங்கக்கூறி விளங்கவைக்கும் உத்தியும் நிறைந்த முருக காதை இன்றைய சைவப் பரம்பரையினர்க்குப் பொருத்தமான படைப்பாகும். இதைப் போன்ற பக்திப்படைப்புகள் கந்தவனத்தாரின் கைவண்ணத்தில் இன்னும் வெளிவரவேண்டுமென அறுமுகவனின் வேறுபடாத ஆதிநாராயணனை வேண்டி அமையும்

பங்குனி உத்தரம்
விஷு ஆண்டு
(27-03-2002)

ஆழ்கடலான் முருகவே பரமநாதன்
"பாரதிகுடிசை"
வல்லிபுரம்
புலோலி

# சிறப்புரை

## கலாநிதி இ. பாலசுந்தரம்

ஈழத்துச் சைவத் தமிழ் மக்கள் கந்த புராணப் பாரம்பரியம் அறிந்தவர்கள். அப் பாரம்பரிய மரபில் சமய வாழ்க்கையை மேற்கொண்டு வருபவர்கள். தமிழீழத்தில் ஒப்பீட்டு அடிப்படையில் முருக வழிபாட்டிடங்கள் எண்ணிக்கையில் அதிகமானவை என்றே கூறவேண்டும். நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, மண்டூர், திருக்கோவில், கதிர்காமம் முதலிய கோயில்கள் முருக வழிபாட்டின் பழைமையையும் அவை ஈழத்துச் சைவ மக்களை ஆட் கொண்டுள்ள முறையினையும் ஆராய்ந்து பார்க்கும்போது முருகப் பெருமானின் திருவருட் கடாட்சம் ஈழத்து மக்களை நெறிப்படுத்தி வருகின்றமையைத் துல்லியமாக விளங்கிக் கொள்ளலாம்.

ஈழத்தில் கத்தோலிக்கம் சமய மாற்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்ட காலக்கட்டத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் கந்தபுராண பிரசங்கங்களையும் கந்தபுராண படனத்தையும் கோயில்களில் தொடர்ச்சியாக நடத்திவந்தார். சைவசமய மக்களுக்கு கந்தபுராணம் ஒரு பற்றுக்கோடாக அக் காலத்தில் விளங்கிற்று. சமயப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும், மக்களுக்கு கடவுளின்மேல் பற்றும் நம்பிக்கையும் ஏற்படுவதற்கும் கந்தபுராணம் உறுதுணையாக இருந்தது என்பதை ஈண்டு நினைவுபடுத்துதல் பொருத்தமாகும். கனடாவில் 15க்கும் மேற்பட்ட இந்துக் கோயில்கள் அமைக்கப் பட்டுள்ள போதிலும் சைவ மக்கள், வேற்று மதங்களுக்கு மாற்றப் படும் விகிதமும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இத்தகைய சூழ்நிலையில் கந்தபுராணக் கதையைப் பழகு தமிழில் வடித்துத் தந்துள்ள கவிஞர் கந்தவனம் அவர்களின் முயற்சி காலம் கருதிய பயனுடையதாகும்.

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, சமய நம்பிக்கை, தமிழ்மொழி வழக்காறு என்பவற்றின் நிலைப்பாடு சரிந்துகொண்டே போகிறது. இதனைப் பொதுமக்கள் உணரத் தவறுகிறார்கள். இத்தகைய சமூகக் கண்ணோட்டமும் கவிஞர் கந்தவனம் அவர்களிடம் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

ரொறன்ரோவில் சைவமுந் தமிழும் வளர்ப்பதில் முனைப்பாகச்

செயற்படுபவர்களில் கந்தவனமும் ஒருவர். கவிஞர் அவர்கள் ரொறன்ரோ இந்து சமயப் பேரவையின் காப்பாளராக இருந்து, ஆத்மஜோதி முத்தையா அவர்களின் ‘ஆத்மஜோதி’ மாதச் சஞ்சிகையை மீண்டும் பதிப்பித்து வெளியிடும் பணியிலும் ஈடுபட்டுவருகிறார். இவரது சமயச் சொற்பொழிவுகள் கேட்போர் பிணிக்குந் தகையனவாக உள்ளன. இத் துறையில் அவர் தொடர்ந்து செயற்படின் சைவமும் தமிழும் ரொறன்ரோவில் வளம்பெறத் துணையாகலாம்.

கவிஞர் அவர்கள் கனடாவில் சைவசமய வளர்ச்சிக்கு உதவக் கூடியவகையில பல நூல்களை வெளியிட்டு வருகிறார். அவற்றுள் ‘சிவ வழிபாடு’, ‘கனடாவில் சைவ சமயம்’ முதலான சமய நூல்களின் வரிசையில் கந்தபுராணக் கதையை உரைநடையில் வழக்குத் தமிழில் கூறும் இந் நூலும் குறிப்பிடத்தக்கதாகும்.

கந்தபுராணக் கதையில் இடம்பெறும் காலத்திற்கு ஒவ்வாத சில கருத்துக்கள், நிகழ்வுகளைத் தள்ளியும், சிலவற்றை ஏற்றுக் கொள்ளும் வகையில் திருத்தியும் எழுதியுள்ளமை வரவேற்கத் தக்கது. கந்தன் கதையை ‘சிவபெருமான் வரம்’ என்பது முதல் ‘வள்ளி திருமணம்’ ஈறாக 24 தலைப்புக்களில் பைந்தமிழில் எழுதி, இதனைப் படிப்போர் இறுதிவரை படித்து முடிக்கும் வகையில் வடித்துத் தந்திருக்கும் ஆற்றல் என்னைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இக் கந்தபுராணக் கதைச் சுருக்கம் நாவலர் வழியில் சைவத் தமிழ் மக்களுக்கு சமயச் சார்பான விளக்கங்களை எடுத்துக் கூறும் பயன்பாட்டுத் தகைமை கொண்டதென்பது என் கருத்தாகும்.

ரொறன்ரோ
06.04.2002

# புராண வரலாறு

சௌனகாதி முனிவர்கள் பிரமதேவர் தெரிவுசெய்து கொடுத்த நைமிசாரணியம் என்னும் வனத்தில் தவஞ்செய்து, யாகமும் நடத்தினர். யாகத்தைக் காணச் சூதமுனிவர் வருகை தந்தார். முனிவர்கள் மகிழ்ச்சிகொண்டு அவரை வணங்கி "முனிவர் பிரானே! அசுரர்களைக் கொன்று உலகத்தைக் காத்தருளிய முருகப் பெருமானின் மேன்மை பொருந்திய சரிதத்தைக் கேட்டு உய்வடைய விரும்புகிறோம். அதனை எமக்குக் கூறியருள வேண்டும்" என்று கேட்டனர். அதுகேட்ட சூதமுனிவர் மகிழ்ந்து பின்வருமாறு கூறினார்:

"அருந்தவ முனிவர்களே! ஆதியில் சிவபிரானால் அருளிச் செய்யப்பட்ட வேதங்களை மக்கள் அறியாதிருந்தனர். அதனால் அவர்கள் இறையுணர்வு இன்றிப் பிறவிப் பிணியில் அழுந்தி வருந்தினர். அவர்களுக்கு அருள்பாலிக்க இறைவர் திருவுள்ளங் கொண்டார். வேதஞானத்தையும் புராண தத்துவங்களையும் மக்களுக்குப் புகட்டத் திருமாலை அவர் பூவுலகத்துக்கு அனுப்பியருளினார்.

"திருமாலும் அவ்வண்ணமே பிரமதேவர் வழிவந்த பராசர முனிவருக்கும் யோசனகந்தி என்ற கற்பவதிக்கும் குழந்தையாகச் சென்று உதித்தார். வதரிகாவனத்திற் சிலகாலம் வாழ்ந்த காரணத்தால் வாதநாராயணன் என்னும் பெயரைப் பெற்றார். வேதங்களை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வகுத்து வேதவியாசன் என்னும் பெயரையும் தாங்கினார். இருக்கு வேதத்தை பைலர் என்பவருக்கும், யசுர், சாமம், அதர்வணம் ஆகியவற்றை முறையே வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்பாருக்கும் ஓதினார். அந்த நால்வர் வாயிலாக வேதநெறி பரவலாயிற்று.

"அத்துடன் இறைவர் ஆணைப்படி புராணங்களின் அறிவையும் அவர் வளர்த்தார். வேதங்களின் உட்பொருளை விளக்க இறைவர் பதினெண் புராணங்களை நந்திதேவர் அறியக் கூறியருளினார். நந்திதேவர் அவற்றைச் சனத்குமாரருக்கு உரைத்தருளினார். திருமால் அப்புராணங்களை சனத்குமாரரிடம் கேட்டறிந்து கருணையால் எனக்கு ஓதியருளினார். நான் அவற்றை உலகத்தவர்

பொருட்டு எழுதிப் பரப்பினேன்.

"புராணங்கள் பதினெட்டில் சிவபுராணம், பவிடிய புராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்கபுராணம் காந்தபுராணம், வராக புராணம், வாமன புராணம், மச்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்ட புராணம் ஆகிய பத்தும் சிவபிரானுக்கு உரியவை. பிரம புராணம், பதும புராணம் என்னும் இரண்டும் நான்முகனுக்கு உரியவை. கருட புராணம், நாரத புராணம், பாகவத புராணம் விஷ்ணு புராணம் ஆகிய நான்கும் திருமால் சிறப்புக் கூறுபவை. ஆக்கினேய புராணம் அக்கினி பற்றியும் பிரம கைவர்த்த புராணம் சூரியன் பற்றியும் பேசுவன.

"சிவபுராணங்கள் பத்தில் காந்த புராணத்தில் உள்ள கந்தன் கதையைக் கூறுவேன். கேட்பீர்களாக" என்று உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் என ஆறுவகையாக விரித்துச் சூதபுராணிகர் (சூதமுனிவர்) சௌனகாதி முனிவர்களுக்கு ஆறுமுகப்பெருமானின் அற்புதக் கதையைக் கூறியருளினார்.

கச்சியப்ப சிவாச்சாரியார்

# கந்தபுராணம் பாடியருளிய வரலாறு

தொண்டைநாட்டு நகரங்களிலே காஞ்சிபுரம் மிகவும் புகழ்வாய்ந்தது. இங்குள்ள திருத்தலங்களில் ஒன்று கந்தகோட்டம். குமரகோட்டம் என்றும் இது அழைக்கப்படும். கந்தகோட்டத்தில் வழிவழி அர்ச்சகராக இருந்துவந்த ஆதிசைவமரபில் தோன்றியவர் காளத்தியப்ப சிவாச்சாரியார். அவரது மகனே கச்சியப்ப சிவாச்சாரியார். அவரது காலம் கி.பி. 14ம் நூற்றாண்டு ஆகும்.

கச்சியப்ப சிவாச்சாரியார் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர். செந்தமிழிலும் ஆரிய மொழியிலும் நிரம்பிய புலமையுடையவர்; வேதாகமங்களையும் மிகவே கற்றுத் தெளிந்தவர்.

கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த கச்சியப்பர் தந்தையாருக்குப் பின் கந்தகோட்டத்துப் பெருமானுக்கு அர்ச்சனை புரியும் அருந்தொண்டினை மேற்கொண்டார். கந்தப் பெருமான்மீது ஆராத அன்பு கொண்ட சிவாச்சாரியாருக்குத் தமது குலதெய்வத்தின் பெருமையைத் தமிழிலே பாடவேண்டும் என்னும் விருப்பம் வளரலாயிற்று. ஒருநாள் கந்தப்பெருமானே கனவிலே தோன்றி “திகடசக்கரம்” என்று அடியெடுத்துக் கொடுத்து விருப்பத்தை நிறைவேற்ற அருட்கூட்டினார்.

அந்நாள் முதலாக நாள்தோறும் பாடல்களை இயற்றி 10345 திருப்பாடல்களில் கந்தபுராணத்தை நிறைவுசெய்தார் கச்சியப்பர். அதனை அறிந்த காஞ்சிபுரத்துச் சான்றோர் மிகவும் மகிழ்ந்து, தொண்டை மண்டலப் புலவர்கள் அனைவரையும் அழைத்து நூலை அரங்கேற்றஞ் செய்யும் ஒழுங்கை மேற்கொண்டனர்.

அவை கந்தப் பெருமான் சந்நிதியிற் கூடியது. கச்சியப்பர் கந்தபுராணத்தைக் கந்தப் பெருமான் திருவடிகளில் வைத்து, முறைப்படி பூசனை புரிந்து பின்னர் அதனை அவையோருக்குப் படித்துக் காட்டி விளக்கங்களும் அளித்தார். அவ்வப்போது அவையிலிருந்த புலவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் புதிதாக ஒரு புலவர் தோன்றி மேலதிக விளக்கங்களும் கொடுத்து வந்தார். அவர் தோன்றுவதையும் மறைவதையும் உணர்ந்த அவையோர்

முருகப்பெருமானே அப்புதிய புலவர் எனத் தெளிந்தனர். இச்செய்தி நாடெங்கும் பரவியது. நூல் அரங்கேற்றத்தின் இறுதிநாளன்று தொண்டைநாட்டு இருபத்துநான்கு கோட்டத்து மக்களும் திரண்டெழுந்து கச்சியப்பரைத் தந்தப் பல்லக்கில் ஊர்வலமாகக் கொண்டு சென்று போற்றி மகிழ்ந்தனர்.

கந்தபுராணத்துக்கு முதல் நூல் சூதமுனிவர் ஆரியத்தில் அருளிச்செய்த காந்தபுராணம் என்பது. இதனை அவையடக்கத்தில் கச்சியப்பர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

நாதனார் அருள்பெறு நந்தி தந்திடக்
கோதிலா துணர்சனற் குமரன் கூறிட
வாதரா யகாமுனி வகுப்ப வோர்ந்துணர்
சூதனோ தியதுமு வாறு தொல்கதை.

முன்பு சூதன் மொழிவட நூற்கதை
பின்பி யான்தமிழ்ப் பெற்றியிற் செப்புகேன்
என்ப யன்எனில் இன்தமிழ்த் தேசிகர்
நன்பு லத்தவை காட்டு நயப்பினால்.

சூதமுனிவரின் காந்தபுராணம் ஒரு இலட்சம் சுலோகங்களைக் கொண்ட பெரிய நூல். அது ஆறு சம்கிதைகளாகவும் (பெரும் பிரிவுகளாகவும்) ஐம்பது கண்டங்களாகவும் (உப பிரிவுகளாகவும்) வகுக்கப்பட்டுள்ளது. உபபிரிவுகள் காண்டங்கள் எனப்படும் உட்பிரிவுகளையும் கொண்டுள்ளன.

சம்கிதைகளில் ஐந்தாவதாக உள்ளதற்குச் சங்கரசம்கிதை என்று பெயர். இதில் 30,000 சுலோகங்களும் 12 கண்டங்களும் உள்ளன. இவற்றுள் சிவரகசிய கண்டம் என்பது ஒன்று. இது 13,000 சுலோகங் களையும் 7 காண்டங்களையும் உடையது. அவை சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம், உபதேச காண்டம் என்பன. இவற்றுள் முதல் ஆறு காண்டங்களையே கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணமாகப் பாடியருளினார். அவரது மாணவர்களாகிய ஞானவரோதயர் முதலானோர் கந்தபுராணத்தைப் பல பிரதிகளாக எழுதிக் கந்தன் பெருமையைத் தென்னாடு எங்கும் பரவச் செய்தனர்.

# கந்தபுராணத்துப் பாயிரம்

## விநாயகர் காப்பு

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## சுப்பிரமணியர் காப்பு

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

## நூற் பயன்

இந்திரர் ஆகிப் பார்மேல்
இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச்
சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள்
அடல்கெட முனிந்த செவ்வேல்
கந்தவேள் புராணந் தன்னைக்
காதலித்(து) ஓது வோரே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

# கடவுள் வணக்கம்

(தெரிவு செய்யப்பெற்றவை)

### சிவபெருமான்

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய்(து) அறிதற்கு அரும்பெற்றி எய்தி
அருவந் தனையும் உருவத்தையும் அன்றி நின்றான்
ஒருவன் தனது பதந்தன்னை உளத்துள் வைப்பாம்.

### சிவசத்தி

செறிதரும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவறும் அரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.

### விநாயகப் பெருமான்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

### ஆறுமுகப் பெருமான்

ஈறுசேர் பொழுதினும் இறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வாழ்
ஆறுமா முகப்பிரான் அடிகள் போற்றுவாம்.

# 1. சிவபெருமான் வரம்

திருக்கைலாயத்திலே எல்லாம் வல்ல சிவபெருமான் தொண்டர்களும் பூதகணங்களும் சூழ உமாதேவியாருடனும் விநாயகப் பெருமானுடனும் வீற்றிருந்தார். அப்பொழுது அவரது இடப் பக்கத்திலே அமர்ந்திருந்த உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, "பெருமானே, தக்கன் மகளாகப் பிறந்த காரணத்தால் தாட்சாயணி என்னும் பெயரைப் பெற்றுவிட்டேன். அவன் தங்களை மதியாது வேள்வி செய்தான். தங்களை நிந்தித்தவனின் பெயரை இனிமேலும் வைத்துக்கொள்ள யான் விரும்பவில்லை. அதனால் இச் சரீரத்தை விட்டு நீங்க எனக்கு அருள் புரிய வேண்டும்" என்று வணங்கி நின்றார்.

அது கேட்ட சிவபெருமான், "தேவியே, உலகத்து உயிர்களின் ஈடேற்றம் கருதியே நீ இவ்விதம் வேண்டுகிறாய் என்பதை யான் அறிவேன். இமயமலை மன்னவன் உன்னைத் தன் மகளாகப் பெற்று எமக்கு மணஞ்செய்து தரக் கடுந்தவஞ் செய்கின்றான். அதனால் அவனின் குழந்தையாகச் செல்வாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

தேவியார் மகிழ்ந்து இறைவரை வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

இமயமலையில் பர்வதராசன் பராசக்தி தனக்கு மகளாக அவதாரம் செய்ய, பத்மை என்னும் தடாகத்துக்குப் பக்கத்தில் தவஞ் செய்துகொண்டிருந்தான். அந்தத் தடாகத்தில் தாமரை மலரின்மேல் அம்பிகை அழகிய குழந்தையாகத் தோன்றினார். குழந்தையைக் கண்டு மகிழ்ந்த பர்வதராசன் அன்போடு அதனை எடுத்துத் தன் மனைவி மேனையிடம் கொடுத்தான். அவர்கள் குழந்தைக்குப் பார்வதி என்று பெயரிட்டுப் பக்திசிரத்தையோடு வளர்த்து வந்தனர்.

பார்வதிக்குச் சிவசிந்தனை மேலிட்டது. சிவபெருமானைத் திருமணம் செய்துகொள்ளும் பொருட்டுத் தவஞ் செய்ய வேண்டும் என்னும் விருப்பமும் மிகுந்தது. விருப்பத்தைப் பெற்றோருக்குத் தெரிவித்தார். அப்பொழுது தாயார் மேனை உடலை வருத்தித் தவஞ் செய்வதற்கு இச் சிறுபருவம் ஏற்றதல்ல என்றும் தவஞ் செய்ய வேண்டாம் என்றுங் கூறித் தடுத்தார். (இதனால் தேவிக்கு உமா என்ற

பெயரும் வரலாயிற்று. உமா என்றால் தவம் வேண்டாதவள் என்று வடமொழியில் பொருள்.) தந்தையும் குழந்தை தவஞ் செய்து உடலை வருத்துவதை விரும்பவில்லை.

"உலகத்தைக் காக்கும் சிவபெருமான் என்னையும் காத்தருள்வார். நீங்கள் எனது உடல் வருத்தம் குறித்து அஞ்சவேண்டியதில்லை" என்று பார்வதியார் பெற்றோரைச் சமாதானப்படுத்தினார்.

தேவியார் விரும்பியவண்ணம் தவஞ் செய்வதற்குச் சகல வசதிகளோடுங்கூடிய தவச்சாலை ஒன்றை மலையரசன் அமைத்துக் கொடுத்தான். அவ்விடத்தில் தமது தனிப்பெரும் தலைவரை நாடிப் பராசக்தியார் நிகரற்ற தவத்தை மேற்கொண்டார்.

திருக்கைலாயத்தில் பிரமதேவரின் புதல்வர்களான சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமார் ஆகிய நான்கு முனிவர்களும் தமக்குச் சாந்தியை அளிக்கத் தக்க கல்வியை வேண்டிச் சிவபெருமானை நாடினர். சிவபெருமான் நந்திதேவரை அழைத்து மன்மதனைத் தவிர வேறு எவரையும் உள்ளே விடலாகாது என்று பணித்து, வந்த முனிவர்களுக்குச் சிவாகமங்களை உபதேசித்து அருளினார். பின்னர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தட்சிணா மூர்த்தியாக (தென்முகக் கடவுளாக இருந்து) மௌனமுத்திரை என்னும் சின்முத்திரை காட்டி ஞானோபதேசம் செய்தார்.

சிவபெருமானின் ஞானோபதேசம் நடந்துகொண்டிருக்கையில் தேவலோகத்துக்குப் பல யுகங்கள் ஆகிவிட்டன. அக்காலத்தில் சூரபன்மனின் கொடுமைகளைத் தாங்க முடியாது சிவபெருமானிடம் முறையிடுவதற்கு இந்திரன் இந்திராணியுடன் கைலாயத்துக்கு வந்தான். அங்கு சிவபெருமானைக் காணமுடியாது மேருமலையை அடைந்தான். அவ்வேளை சூரபன்மனது மகனாகிய பானுகோபன் தேவலோகத்தை அழித்து, இந்திரன் மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறையிலிட்டான். இச் செய்தி இந்திரனை வருத்தியது.

பின்னர் இந்திரன் மேருமலையிற் சிவபெருமானை நினைந்து பல நாட்களாகப் பெருந்தவம் புரிந்தான். அடியார்க்கு இரங்கும்

இயல்பினராய சிவபெருமான் இடபத்தின்மீது எழுந்தருளிக் காட்சி அளித்தார். இந்திரன் சூரன் இழைக்கும் கொடுமைகளைக் கூறி, அவனைக் கொன்று தேவலோகத்தைக் காத்தருளும் வண்ணம் வேண்டினான்.

சிவபெருமான் இந்திரனை நோக்கி, "பொய்ம்மையே பெருக்கும் தக்கன் யாகத்தில் நீங்கள் கலந்துகொண்ட பாவத்தால் இவ்வாறு துன்பமுற்றீர்கள். வருங்காலத்தில் எமக்கு ஒரு குமரன் தோன்றி அசுரர்களை அழித்து உங்களை எல்லாம் காப்பாற்றுவான்" என்று கூறி மறைந்தருளினார்.

அவ்விதம் அவர் கூறினாராயினும் இந்திரனுக்குக் கவலை போகவில்லை. சிவபெருமான் சனகர் முதலானோருக்கு ஞானம் அளிக்கும் வகையில் யோக நிலையில் இருக்கின்றார். பராசக்தியோ பார்வதியாகச் சிவபெருமானை அடையத் தவம் இருக்கின்றார். இவர்கள் ஒன்று சேர்வது எப்போது, குமரன் அவதரிப்பது எப்போது என்பதே அவனது கவலையாக இருந்தது.

இந்திரன் தனது கவலையைப் பிரமதேவர், திருமால் ஆதியோருக்குக் கூறி ஆலோசனை கேட்டான். திருமால் மன்மதனை அனுப்பிச் சிவபெருமானின் யோகநிலையைக் கலைத்தால் அவர் பார்வதியை மணந்து அசுரரை அழிக்கக் குமாரரைத் தந்து அருளுவார் என்று கூறினார்.

பிரமதேவர் தமது தம்பி மன்மதனை அழைத்துச் சிவபெருமானுக்குக் காம பாணத்தால் பார்வதியின் நினைவை ஊட்டும்படி கூறினார். அதனைக் கேட்ட மன்மதனுக்கு அச்சம் மிகுந்தது. அவனது மலர் அம்புகள் மனிதரிடமும் தேவரிடமுமே பலன் செய்யும். சிவபெருமானிடத்திற் செல்லாது என்பதனை அறிந்து பயந்தான். எனினும் பிரமனின் கட்டளையை மீற அஞ்சிச் சம்மதித்தான். அதனைக் கேட்டு அவனது மனைவி இரதிதேவி மிகுந்த வருத்தமடைந்தாள். அவளை ஒருவாறு தேற்றிக்கொண்டு அவளோடு திருக்கைலாயத்துக்கு மன்மதன் புறப்பட்டான். வழியிலே பல தீய சகுனங்கள் தென்பட்டன.

திருக்கைலாய வாயிலிற் காவல் தலைவர் நந்திதேவர் இருந்தார்.

மன்மதன் இறைவர் தரிசனத்துக்கு அனுமதி தருமாறு பணிந்து கேட்டான். நந்திதேவருக்கு எல்லாம் விளங்கும். இவன் வருவான் என்பது சிவபிரானுக்குத் தெரியுமாதலால் அனுமதி வழங்கினார்.

மன்மதன் சிவபெருமான் மௌனநிலையில் வீற்றிருந்த திருவிடத்தை அடைந்தான். நீறு பூத்த நெருப்புக் குன்றமென அவர் விளங்கிய காட்சி மன்மதனுக்கு அச்சத்தை அளித்தது. அடியற்ற மரம்போலத் தனது வில்லுடனே கீழே வீழ்ந்தான். யோகநிலையில் இருக்கும் சிவபெருமான்மீது காமக் கணைகளை விடுக்க நேர்ந்த விதியை நினைந்து வருந்தினான்.

மன்மதனின் செயலைக் காண்பதற்குப் பிரமதேவர் இந்திரன் ஆதியோருடன் திருக்கைலாயத்துக்கு வந்து, ஒரு பக்கத்திற் சிவபிரானைத் துதித்துக் கொண்டு நின்றார்.

மன்மதன் ஒருவாறு தேறி, மணம் மிக்க ஐந்து மலர்க் கணைகளைச் சிவபிரான்மீது ஏவினான். மலர்க்கணைகள் திருமேனியிற் பட்டதும் சிவபெருமான் விழித்துப் பார்த்தார். அப்பொழுது அவரது நெற்றிக்கண் நெருப்பு மன்மதனை எரித்துச் சாம்பராக்கியது. சிவபெருமான் மீண்டும் யோகநிலையில் ஆழ்ந்தார்.

பிரமதேவரும் இந்திரன் முதலிய தேவர்களும் தமது தவறை உணர்ந்து சிவபெருமானை வழிபடலாயினர். "முன்பு விடத்தை உண்டும் கங்கையைத் தலையில் அடக்கியும் நெற்றியில் நெருப்பைத் தாங்கியும் எம்மைக் காப்பாற்றிய பெருமானே! மெய்யன்பர்கள் குற்றம் செய்யினும் குணமாகக்கொண்டு அருள் புரிவீரன்றோ? தங்கள் மீது மன்மத பாணங்களை ஏவச் செய்த குற்றத்தை மன்னித்து, சூரனை வதைத்து எம்மைக் காத்தருள வேண்டுகின்றோம்" என்றெல்லாம் கூறித் தேவர்கள் வழிபட்டனர்.

சிவபெருமான் அவர்கள்முன் தோன்றி, "தேவர்களே! உங்கள் பொருட்டு இமயமலை சென்று பார்வதியைத் திருமணஞ் செய்துகொள்வோம். அஞ்சாதீர்கள்" என்று அபயம் அளித்தார். அப்போது இரதிதேவி தனது கணவன் செய்த பிழையைப் பொறுத்து அவனை உயிர்ப்பித்து அருள வேண்டும் என்று சிவபெருமானது திருவடிகளில் வீழ்ந்தாள். அவர் தாம் பார்வதியை

மணம்புரியும் வேளை மன்மதன் உயிர்ப்பான் என வரம் அளித்தார்.

பின்னர் சிவபெருமான் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களுக்கும் "மோனமே ஞானம். எம்மை மனத்தில் ஒருமையுடன் நினைத்திருப்பதே உமக்குச் சாந்தியைத் தரும்" என்று கூறி அவர்களை அனுப்பிவைத்தார்.

எம் பெருமான் தேவர்களின் துயர்களைத் துடைக்கவும் இமயமலையிலே தவஞ் செய்யும் பார்வதியாரைத் திருமணஞ் செய்யவும் திருவுள்ளங் கொண்டார்.

## 2. பார்வதி திருமணம்

சிவபெருமான் பார்வதியைக் காண இமயமலைக்குச் சென்றார். சக்தியின் தவத்தின் மகிமையை உலகுக்குக் காட்டுதற்பொருட்டு முதிய அந்தண வடிவம் தாங்கியவாறு தவச்சாலையை அடைந்தார். தேவியின் தோழியர் அவரை வரவேற்றனர்.

சிவபெருமான் உமாதேவியாரைப் பார்த்து, "அம்மா, இந்தச் சின்ன வயதில் எதற்காகத் தவஞ் செய்கிறாய்? உனது அழகு குன்றும் வகையில் நீ இவ்விதம் உன்னை வருத்தலாமா?" என்று கேட்டார்.

தேவி தவத்தில் இருப்பதால் விசயை என்னும் தோழி, "ஐயா, சிவபெருமானைத் திருமணஞ் செய்வதற்காக நம் தோழி தவம் இருக்கிறாள்" என்று பதில் அளித்தாள். அதனைக் கேட்ட சிவபிரான் பிரமனாலும் திருமாலினாலும் அறியமுடியாத சிவபெருமானைச் சாதாரண ஒரு பெண் காண்பது அரிது என்று கூறித் தவத்தைக் கைவிடுமாறு கூறினார். அது கேட்ட பார்வதியார், "என் தவத்துக்கு இரங்கிச் சிவபெருமான் வரவில்லையானால், மேலும் கடுந் தவஞ் செய்வேனேயன்றி ஒருபோதும் தவத்தைக் கைவிடேன்" என்று உறுதியாகக் கூறினார்.

பார்வதியாரின் மனவுறுதியைக் கண்ட சிவபெருமான் வேறோர் உத்தியைக் கையாண்டார். சிவன் பித்தன் என்றும் மிருகங்களின் தோல்களை உடுப்பவன் என்றும் பாம்பையும் தலைமாலையையும் அணிபவன் என்றும் மயானத்தில் வாழ்பவன் என்றும் மயானத்துச்

சாம்பலை மேனியிற் பூசுவதில் விருப்புடையவன் என்றும் கூறி அத்தகைய ஒருவனை மணக்க விரும்பும் பார்வதியின் புத்தியை இழித்து நகைத்தார்.

அவரின் பேச்சைத் தொடர்ந்தும் கேட்க விரும்பாது தேவியார் தமது காதுகளைப் பொத்திக்கொண்டார். நெற்றியில் விபூதியும் கழுத்தில் உருத்திராட்சமும் அணிந்திருக்கும் பெரியவர் சிவபெருமானைப் பற்றி அவ்விதம் கூறியது பார்வதிக்கு வியப்பாக இருந்தது.

சிவபெருமானின் பெருமைகள் அளவற்றவை. அவற்றின் சில தன்மைகளை அடியவர்கள் அன்பாலேனும் அறிவாலேனும் உணர்ந்துகொள்வார்கள். இந்தப் பிராமணருக்கு அன்பும் இல்லை அறிவும் இல்லை. அதனால் இவருக்குச் சிவபெருமான் சிறப்புக்களைச் சொல்லியும் பயனில்லை என்று அறிந்து பெரியவரை வெளியே செல்லுமாறு பார்வதியார் பணித்தார்.

பெரியவர் வெளியே செல்லாது தான் வந்ததெல்லாம் பார்வதியை முறைப்படி திருமணஞ் செய்துகொள்வதற்காகவே என்று கூறினார். அதனைக் கேட்கப் பொறுக்காது தேவியார் தாமே அவ்விடத்தை விட்டு அகலத் துணிந்தார்.

அவ்வேளை சிவபெருமான் தாம் மேற்கொண்டிருந்த முதியவர் வேடத்தைக் கலைத்து விடையின்மீது காட்சியளித்தார். தேவியார் தலைவர் திருக்கூத்தை நினைந்து வியந்து வணங்கினார். தலைவர் "நாளைக்கே இருவருக்கும் திருமணம் நடைபெறும்" என்று கூறித் திருக்கைலாயத்தை அடைந்தார்.

பார்வதியார் தமது தவம் பலித்தமை குறித்துக் களிப்பெய்தினார். அங்கு நடந்தவற்றை யெல்லாம் தோழியர்கள் வாயிலாக அறிந்த மலையரசன் மகிழ்ச்சி யடைந்தான்.

திருக்கைலாயத்தை அடைந்த சிவபெருமான் ஏழு முனிவர்களை அழைத்து இமயராசனிடம் பெண் கேட்டுவர அனுப்பினார். இமயராசன் மிகவும் மகிழ்ந்து உடனேயே சம்மதம் தெரிவித்துத் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை வெகு சிறப்பாகச்

செய்தான். தேவதச்சனை அழைத்துத் தனது தலைநகரான ஓச்சக்திப் பிரஸ்தத்தை அலங்கரிக்கச் சொன்னான். திருமணத்துக்கு வரவுள்ள யாவரும் வசதியாகத் தங்குதற்கேற்ற மாளிகைகளையும் உணவுச் சாலைகளையும் அழகுற அமைக்கப் பணித்தான்.

இவ்வாறு எல்லா ஏற்பாடுகளையுஞ் செய்த பின்னர் மலையரசன் தானே கைலாயத்துக்குச் சென்று சிவபெருமானை வணங்கி, ”ஐயனே, தேவரீர் பார்வதி தேவியாரைத் திருமணஞ் செய்தற்குப் பங்குனி உத்தரத் திருநாள் மிக உகந்த நாள் என்று சோதிட வல்லாளர் கூறுகின்றனர். அந்த நாள் இந்நாளாதலால் தேவரீர் எனது ஓசத்தி பிரஸ்தத்துக்கு மணக்கோலத்தில் எழுந்தருள்வீராக!" என்று வேண்டினான். இறைவரும் அதற்கு இசைந்தார்.

சிவபெருமான் தமது திருமணத்துக்கு உரியவர்கள் அனைவரையும் அழைக்கும் வண்ணம் நந்திதேவரைப் பணித்தார். அவ்விதமே நந்திதேவர் தம் உள்ளத்தில் நினைத்த அளவிலேயே காலாக்கினி, வீரபத்திரர், கூர்மன் முதலாய பலகோடி உருத்திரர்களும், திருமால், நான்முகன், இந்திரன் முதலாய முப்பது முக்கோடி தேவர்களும் திருக்கைலையை அடைந்தனர். இன்னும் எட்டுத்திக்குப் பாலகர்கள், சூரியர், சந்திரர், நட்சத்திரங்கள், சப்தமார், அட்டவசுக்கள், நாகர் முதலியோரும் வந்து சேர்ந்தனர். வேதங்கள், ஆகமங்கள், மந்திரங்கள், பஞ்ச பூதங்கள், மற்றுமுள்ள உலகங்கள், நகரங்கள் ஆகியனவும் தெய்வ வடிவங்களைப் பூண்டு திருமணத்தைக் கண்டு களிக்க எழுந்தன. எல்லோரையும் நந்திதேவர் முறைப்படி வரவேற்றார்.

சிவபெருமான் திருமணக் கோலம் பூண்டு தரு'மத்தின் சின்னமாகிய விடைமேல் ஏறி, திருக்கைலாயத்துக்கு வந்திருந்த உருத்திரர்கள், தேவர்கள் மற்றும் யாவரும் பின்தொடர இமயமலைக்கு எழுந்தருளினார். அவரது விவரிக்கவொண்ணா அற்புத அழகைக் கண்டு ஓசத்திப் பிரஸ்தத்து நகரத்தவர் மயங்கி நின்றனர்.

திருமண மண்டப வாசலில் தெய்வ மகளிர் பலரோடு நின்ற இமயவானின் மனைவி மேனை சிவபெருமானை வணங்கி வரவேற்று, அவரது திருவடிகளைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துப் பசுப்பாலினால் உள்ளம் உருகிக் கழுவினாள்.

அதன்பின் பிரமதேவரும் திருமாலும் சிவபெருமானைத் திருமண மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். வேதப் பொருளாய் மிக விளங்கும் சிவபெருமான் அங்கு மிக்கப் பொலிவுடன் வைக்கப்பெற்றிருந்த சிங்காசனத்தில் அமர்ந்தருளினார்.

அவ்வேளை இமயம் நடுங்கியது. திருமணத்தைக் காணவந்த பெருங் கூட்டத்தின் பாரத்தைத் தாங்காது இமயத் திருவிடம் கீழே பதிந்தது. அதனால் தென் திசை மேலே உயர்ந்தது. உலகின் சமன்பாடு நிலைகுலைந்தது கண்ட தேவர்கள் அஞ்சி சிவனே சிவனே என்று வணங்கினார்கள்.

சிவபெருமான் கடல்நீர் முழுவதையும் தன்னொரு கையில் அடக்கிய அகத்திய முனிவரைத் தென் திசைக்குச் சென்று பொதிகை மலையிலே தங்கும்படி பணித்தார். அவரோ திருமணத்தைக் காணாது தென் திசைக்குச் செல்லத் தயங்கினார். சிவபெருமான், "அகத்தியரே, கவலை வேண்டாம். எமது திருமணத்தை நீர் பொதிகை மலையிலேயே காணுமாறு செய்வோம்" என்று கூறி அனுப்பினார்.

அகத்தியர் பொதிகை மலைக்கு வந்ததும் புவி சமநிலைக்கு வந்தது. இமயத்தில் சிவபெருமானின் அருளை எண்ணி அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். திருமண நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறலாயின.

அழகே உருவான பார்வதி தேவியார் திருமண மண்டபத்துக்குத் தமது தோழியர்கள் புடைசூழ எழுந்தருளலாயினார். துர்க்கை காவலாக வரவும், இந்திராணி தாம்பூலத் தட்டை ஏந்தி வரவும், கங்காதேவி முதலியோர் சாமரைகள் வீசவும், காளிகள் வெண்கொற்றக் குடை பிடிக்கவும், கலைமகள் துதி பாடவும் திருமகளின் கரத்தைப் பற்றியவாறு பார்வதிதேவி திருமண மண்டபத்தை அடைந்து, சிவபிரானை வணங்கி, அவருக்கு முன்னால் இருந்த அழகிய சிம்மாசனத்தில் அமர்ந்தருளினார்.

அம்மையார் அமர்ந்ததும் பர்வதராசன் தன் மனையாள் மேனையுடன் வந்து சிவபிரானுக்குப் பாத பூசை செய்தான். பின்னர் தனக்கு மகளாகப் பிறந்த பராசக்தியின் பரிசுத்த கரத்தைச் சிவபெருமானின்

திருக்கரத்தில் வைத்துப் பெருமையுடைய வேத மந்திரங்கைள ஓதி "என்னுடைய பெண்ணாகிய இக் கன்னியைத் தேவரீருடைய திருக்கரங்களில் ஒப்படைக்கின்றேன்" என்று சொல்லிக் கன்னிகா தானம் செய்து கொடுத்தான்.

அத்தருணத்தில் தேவமாதர் நடனமாடினர்; சித்தரும் கந்தருவரும் கானம் இசைத்தனர்; தும்புருவரும் நாரதரும் கீதங்களை இசைத்தனர்; தேவர்களும் முனிவர்களும் வேதங்களை ஓதினர்; கலைமகள், திருமகள் முதலாய தேவ மாதர் மங்கல வாழ்த்துப் பாடல்களைப் பாடினர்; பூத கணங்கள் புடைசூழ்ந்து பலவிதமான வாத்தியங்களை இசைத்துக் குதூகலித்தனர்.

அக் கொண்டாட்டத்தினைத் தொடர்ந்து, பர்வதராசன் பால் பழங்களையும் தேன், கரும்பு முதலாய இனிப்புப் பண்டங்களையும் சிவபெருமான் திருமுன்பு வைத்து, "எம்பெருமானே இவற்றை அமுது செய்தருள்க" என்று வேண்டினான். சிவபெருமானும் அவற்றைத் தமது திருக்கரத்தினாலே தொட்டுப் பர்வதராசனுக்குப் பெருங்கருணை புரிந்தருளினார்.

அத் தருணத்திலே, பிரமதேவர் இறைவரைப் பணிந்து, "சகல உலகத்தவருக்கும் திருமணஞ் செய்துகொள்ளும் முறையைத் தேவரீர் காட்டியருள வேண்டும்" என்று வணங்கினார். சிவபிரானும் அதற்கு இசையவே, தேவகுருவாகிய பிரகஸ்பதியும் அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியாரும் மற்றும் முனிவர்களும் உடனிருக்கப் பிரமதேவர் திருமணச் சடங்குகளைச் செய்து முடித்தார்.

அதன்பின் உலக மாதாவாகிய பார்வதியையும் பரமேசுவரரையும் அனைவரும் வணங்கி அருள் பெற்றார்கள்.

இரதிதேவிக்கும் தனது கணவனைப் பெறும் அருள் கிடைத்தது. உயிர் பெற்று எழுந்த மன்மதன் சிவபெருமானை வணங்கித் தனது பிழையைப் பொறுக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தான். பெருமானும் "மகனே இரதிதேவியின் பொருட்டால் உனக்கு உயிர் தந்தோம். அதனால் இனிமேல் அவளின் கண்களுக்கு மட்டுமே நீ தெரிவாய். மற்றவர்களுக்கு நீ அனங்கனாகவே இருப்பாய்.

உன் ஆட்சி தொடர்வதாக” என்று கூறியருளினார்.

இவ்விதம் வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கும் சிவபெருமான் அனைவருக்கும் அருள் பாலித்து விடைகொடுத்து அனுப்பியபின் பார்வதியுடன் திருக்கைலாயத்துக்கு எழுந்தருளினார்.

## 3. முருகன் அவதாரம்

சிவபெருமான் பார்வதியாரை மணஞ்செய்து நாட்கள் பலவாகி விட்டன. எனினும் முருகன் அவதாரம் நடைபெறவில்லை. அது குறித்துக் கவலையுற்ற பிரமன், திருமால், இந்திரன் முதலாய தேவர்கள் கைலாயத்துக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டனர்.

“பெருமானே, வேண்டத் தக்கது அறிவோனும் நீயே! வேண்ட முழுதும் தருபவனும் நீயே! சூரபன்மனும் அவனது சகாக்களும் இழைக்கும் தீமைகளை எங்களால் இனியும் பொறுக்க இயலாது. தேவரீர் முன்பு எமக்குத் தந்த வரத்தின் பிரகாரம் எங்கள் துயரைத் துடைக்கத் தேவரீரை ஒத்த குமரன் ஒருவனைத் தந்தருள வேண்டும்” என்று இரந்து வணங்கினர்.

சிவபெருமான், “தேவர்களே, உங்கள் துன்ப காலம் முடிவுறும் வேளை வந்துற்றது. அதனால் குமரனைத் தருவோம்” என்று அருளிச் செய்து புதுமுகக் கோலம் பூண்டார். சிவபெருமானின் திருவருளைப் புரியாத தேவர்கள் வியந்தவாறு அவரையே தொழுத வண்ணம் இருந்தனர்.

சிவபெருமான் சத்தியோசாதம், வாமதேவம், தத்புருடம், ஈசானம், அகோரம் என்னும் ஐந்து முகங்களோடு ஞானிகள் மட்டுமே தியானஞ் செய்யும் ஆறாவது முகமாகிய அதோமுகத்தையும் சேர்த்து ஆறு திருமுகங்களோடுகூடிய திருக்கோலத்தை மேற்கொண்டார்.

அவ்வேளை அந்த ஆறு முகங்களின் நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் புறப்பட்டு வானிலும் நிலத்திலும் பரவின.

அவற்றைக் கண்டு தேவர்கள் அஞ்சினர்; சேயைக் கேட்கத் தீயைத் தந்துள்ளாரே என்று திகைத்தனர்.

தேவர் அச்சத்தை அறிந்த சிவபெருமான் ஆறுமுகக் கோலத்தைவிட்டு முன்புபோல ஒரே முகத்தோடு விளங்கினார். எங்கும் பரவித் திரியும் ஆறு தீப்பொறிகளையும் தம்முன் வருமாறு நினைந்தருளினார். தம்முன் வந்து நின்ற தீப்பொறிகளைக் கங்கையில் விடும்படி வாயுவையும் அக்கினியையும் பணித்து, அதற்கான வல்லமையையும் சிவபெருமான் அவர்களுக்கு அளித்தார். அவர்கள் தீப்பொறிகளைக் கங்கையிற் சேர்த்தனர். தீப்பொறிகளின் வெப்பத்தைத் தாங்காது கங்கை நீர் வற்றியது. கங்காதேவி சிவனை வணங்கி வற்றா வளத்தைப் பெற்றாள். பின் தீப்பொறிகளைத் தாங்கிச் சரவணம் என்னும் பொய்கையில் சேர்த்தாள்.

சரவணப் பொய்கையில் தீப்பொறிகள் சேர்ந்ததும் குமரக் கடவுளின் திரு அவதாரம் நிகழ்ந்தது. அருவமும் உருவமும் ஆனதும் ஆதியும் அந்தமும் இல்லாததும் ஒன்றாகவும் பலவாகவும் விளங்குவதும் பரப்பிரம்மமாக உள்ளதுமாகிய சிவசோதிப் பிழம்பானது ஒரு திருமேனியைப் பெற்று, கருணை நிறைந்த முகங்கள் ஆறும் திருக்கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒப்பற்ற அழகுடைய முருகனாக உலகம் உய்ய வந்து உதித்தது.

ஐசுவரியம், வீரியம், தேசு, செல்வம், ஞானம், வைராக்கியம் ஆகிய ஆறு குணங்களுமே முருகனுக்கு ஆறு முகங்களாக அமைந்தன என்பர் கச்சியப்ப சுவாமிகள்.

மனத்தினாலும் வாக்கினாலும் வேதங்களினாலும் அளக்கமுடியாத சிவபெருமானே ஆறு முகங்களைத் தாங்கிச் சரவணப் பொய் கையில் தாமரை மலரில் முருகக் குழந்தையாக வீற்றிருந்தார்.

வீற்றிருந்த குழந்தையைப் பாலூட்டி வளர்க்கும் வண்ணம் ஆறு கார்த்திகைப் பெண்களை நியமித்தார் திருமால். ஆறு பேரும் பாலூட்டுவதற்கு வசதியாக ஆறு குழந்தைகளாக மாறினார் முருகப் பெருமான்.

ஆறு குழந்தைகளும் அற்புதமாக விளையாடிக் கார்த்திகைப் பெண்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். ஒரு குழந்தை தவழ்ந்தது. ஒரு குழந்தை தளர்நடை பயின்றது. ஒரு குழந்தை எழுந்து விழுந்தது. ஒரு குழந்தை இருந்தவாறு கைகொட்டியது. ஒரு குழந்தை சரவண நீரைக் கலக்கியது. ஒரு குழந்தை தாயின் மடியில் சுகத்தை அனுபவித்துக்கொண்டிருந்தது. இவ்வாறு ஒருவனே பல குழந்தைகளாக விளையாடுவதைத் தேவர்கள் கண்டு மகிழ்ந்து, இவன் முழுமுதற் கடவுள் சிவபெருமானேதான் என்று போற்றினர்.

இது இவ்வாறிருக்க, குழந்தை அவதரித்த ஆனந்தத்தில் பார்வதிதேவியார் துள்ளிக் குதித்தபோது அவரது காற் சிலம்புகளிலிருந்து நவமணிகள் சிதறுண்டு சிவபெருமான்முன் கிடந்தன. அவற்றில் இறைவியின் எண்ணில்லாத வடிவங்களை அவர் கண்டார். சிவபெருமான் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களில் அமர்ந்திருந்ததுபோல் உலகநாயகியின் திருவுருவம் நவமணிகளில் பிரகாசித்தது. அவற்றை வாருங்கள் என்று சிவபெருமான் அழைத்தபோது, சக்தியின் வடிவங்கள் எல்லாம் ஒவ்வொரு மணிக்கும் ஒவ்வொன்றாகச் சேர்ந்து நவ (ஒன்பது) சக்திகளாயின.

மாணிக்கத்திலிருந்து மாணிக்கவல்லியும் முத்திலிருந்து முத்துவல்லியும் பவளத்திலிருந்து பவளவல்லியும் மரகதத்திலிருந்து மரகதவல்லியும் புஷ்பராகத்திலிருந்து புஷ்பராகவல்லியும் வைரத்திலிருந்து வைரவல்லியும் நீலமணியிலிருந்து நீலவல்லியும் கோமேதகத்திலிருந்து கோமேதகவல்லியும் வைடூரியத்திலிருந்து வைடூரியவல்லியும் தோன்றி இறைவன்முன் வந்து வணங்கினர்.

இறைவனின் திருவருளால் அவர்கள் ஒவ்வொருவரும் கருவுற்றுத் தமது நாவிகள் வழியாக (கொப்பூழ்கள்) ஒவ்வொரு குழந்தையைப் பெற்றனர். மாணிக்கவல்லியிடம் வீரவாகுவும் முத்துவல்லியிடம் வீரசேகரியும் புஷ்பராகவல்லியிடம் வீரமகேந்திரரும் வைடூரிய வல்லியிடம் வீரபுரந்தரரும் வைரவல்லியிடம் வீரராட்சதரும் மரகத வல்லியிடம் வீரமாத்தாண்டரும் பவளவல்லியிடம் வீராந்தகரும் நீலவல்லியிடம் வீரதீரரும் கோமேதகவல்லியிடம் வீரமகேசுவரரும் இறைவனது அருளாற் பிறந்தனர்.

நவவீரர்கள் தத்தம் அன்னையரின் நிறங்கொண்டு அழகுற விளங்கினர். சிவபெருமான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாளைப் பரிசாகக் கொடுத்து, "நீவிர் உங்களுக்குத் தலைவனாகிய முருகனைப் பிரியாது அவன் கட்டளைகளைத் தலைமேற்கொண்டு ஒழுகுவீராக!" என்று அருள்புரிந்தார்.

அதன்பின் சிவபெருமான் அவர்களைப் பராசக்திக்கு அறிமுகஞ் செய்தார். அவர்கள் தம் இருவரதும் குழந்தைகள் என்றும் வீரமும் மானமும் அறிவாற்றலும் உள்ளவர்கள் என்றும் நந்திகணத்தவர்கள் என்றும் கூறி, அவர்களை ஆசீர்வதிக்கச் சொன்னார்.

பராசக்தி அவர்களை ஆசீர்வதிக்கையில் அவரது கைவளையல் களின் பிரகாசத்திலிருந்து இறைவன் அருளால் சூரியர்களின் கூட்டம்போல் ஒரு இலட்சம் வீரர்கள் தோன்றினர். சிவபெருமான் அவர்களுக்குக் குன்றாத வலிமையை வழங்கி முருகனின் படைவீரர்களாகப் பணிபுரியும்படி பணித்தருளினார்.

பின்னர் சரவணப் பொய்கையில் வளர்ந்து வரும் முருகனை அழைத்துவரச் சிவபெருமான் உமாதேவியாரோடும் விநாயகப் பெருமானோடும் இடப வாகனத்தில் எழுந்தருளினார். சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக விளையாடிக் கொண்டிருந்த குமரப்பெருமான் அம்மையையும் அப்பரையும் கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். அம்மையார் அன்பு மேலிட ஆறு குழந்தை களையும் தழுவித் தூக்கியபொழுது அவர்கள் ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்ட ஓர் உருவாகினர். இவ்வாறு தேவியார் ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்தமையால் முருகப் பெருமான் கந்தன் என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

உமாதேவியார் தமது முலைப்பாலை மாணிக்கக் கிண்ணத்தில் நிறைத்து ஆறுமுகக் குழந்தைக்கு ஊட்டினார். பாலைப் பருகியவாறே குழந்தை விளையாட்டாகக் கிண்ணத்தைச் சரித்தது. அப்பொழுது பாலின் ஒரு பகுதி சரவணப் பொய்கையிற் கலந்தது.

அப்பொய்கையில் பரராச முனிவரின் சாபத்தால் அவரது புதல்வர்கள் ஆறுபேர் மீன்வடிவத்தில் வசித்து வந்தனர். பொய்கையிற் கலந்த அம்பிகையின் பாலை அவர்கள் பருகியதும்

சாபம் நீங்கப்பெற்றுச் சிவபிரானை வணங்கி நின்றனர். சிவபெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் அறுவரும் திருப்பரங்குன்றம் சென்று தவஞ் செய்யுங்கள். அங்கு குமரன் உங்களுக்கு அருள் செய்வான்" என்று கூறியருளிப் பரராச புத்திரர்களை அனுப்பிவைத்தார்.

பாலை ஊட்டிய அம்மையார் கந்தனைச் சிவபெருமான் முன்னே எடுத்துச் சென்றார். கந்தன் சிவபெருமானுக்கு வணக்கஞ் செலுத்தினார். வணக்கஞ் செய்த கந்தனோடு உமாதேவியார் சிவபெருமானின் இடது பக்கத்தில் அமர்ந்தார். சிவபெருமான் விநாயகப் பெருமானைத் தமது மடியில் இருக்கச் செய்தார். அதுவே சிவகுடும்ப மூர்த்தம் எனப்படும். சிவகுடும்ப மூர்த்தத்தை உள்ளம் உருக வணங்கிவருபவருக்கு மறுபிறவி இல்லாதுபோகும். சிவகுடும்பத்தைத் தேவர்கள் எல்லோரும் வீழ்ந்து வணங்கினார்கள். "எங்கள் துன்பங்களை எல்லாம் தீர்த்தருள வேண்டும்" என்று உள்ளம் உருக வேண்டினார்கள்.

அவ்வேளை கார்த்திகைப் பெண்களும் சிவபெருமானையும் உமாதேவியாரையும், அவர்களின் திருமடிகளில் வீற்றிருந்த விநாயகப் பெருமானையும் கந்தனையும் வணங்கினார்கள். சிவபெருமான் அவர்களை அருள் ஒழுகப் பார்த்து, "நீங்கள் கந்தனுக்குப் பாலூட்டி வளர்த்தமையால் அவன் கார்த்திகேயன் என்ற பெயராலும் அழைக்கப்படுவான். கார்த்திகை நட்சத்திர நாளில் நீங்கள் விரதம் இருந்து வேண்டிய நன்மைகளைப் பெறுவீர்களாக!" என்று கூறியருளினார்.

சிவபெருமான் கார்த்திகைப் பெண்கள், திருமால், பிரமா முதலிய தேவர்கள் அனைவருக்கும் விடைகொடுத்தருளியபின், உமையுடனும் விநாயகப் பெருமானுடனும் கார்த்திகேயனுடனும் திருக்கைலாயத்துக்கு எழுந்தருளினார்.

## 4. குழந்தையின் குறும்பு

### (1) விசுபரூப தரிசனம்

சின்னக் குழந்தை முருகன் பண்ணும் திருவிளையாடல்கள்

எண்ணில் அடங்கா. அவர் கைலாசத்திலிருந்து மேருமலைக்குப் பாய்வார்; மேருவின் சிகரத்தைப் பெயர்த்துக் கைலாசத்தில் எறிவார்; சில வேளை அமைதியாக இருப்பார்; சில வேளை பலவித வாத்தியங்களை இசைப்பார்; புல்லாங்குழலை வாசிப்பார்; வீணையை மீட்பார்.

குழந்தையின் விளையாட்டுக்களைச் சிவபெருமானும் பார்வதியும் கண்டு களிப்பதுண்டு. அவ்விதம் ஒருமுறை களித்திருந்தபோது சிவபெருமான் பார்வதியாருக்கு முருகன் பெருமைகளைப்பற்றி விளக்கினார். "நம் குழந்தையின் வல்லமைகள் சொல்லில் அடங்கா. நீயும் நானும் சேர்ந்த மொத்த உருவம் அவன். அவன் எங்கும் நிறைந்தவன், ஞான வடிவினன். எம்மைப் போலவே தன்னை வணங்கும் அடியார்களுக்குச் சகல நன்மைகளையுஞ் செய்ய வல்லவன்" எனக் கூறினார்.

ஒரு தினம் முருகன் மலைகளை இடம் மாற்றி வைத்தார்; பாதாள மலைகளைப் பாம்புகளாற் கட்டித் தேர்போல் இழுத்தார்; சில மலைகளைப் பிடுங்கி வேறு மலைகளோடு மோதினார். முருகனின் இவ்வித செயல்களைக் கண்டு தேவர்கள் அஞ்சினார்கள். முருகன் ஓர் அசுரக் குழந்தையாக இருக்க வேண்டும் என்று ஐயுற்று அவரோடு யுத்தஞ் செய்தனர். முருகன் எய்த கணைகளால் இந்திரன் முதலாய பல தேவர்கள் மயங்கி விழுந்தனர். தமது துன்பங்களைத் தீர்க்கப் பிறந்தவர் தமக்கே துன்பம் இழைக்கின்றாரே என்று தேவர்கள் அஞ்சினர்.

இந்த விபரீத நிலைமையை அறிந்த தேவகுரு பிரகஸ்பதி (வியாழ பகவான்) முருகப் பெருமானிடம் சென்று தேவர்கள் பிழையைப் பொறுத்தருள வேண்டினார்.

"நீங்கள் எல்லோரும் எம்மைக் குழந்தை என்று எண்ணி எம்மோடு போர் செய்தீர்கள். இப்போது எமது சுய வடிவத்தைக் காண்பீர்கள்" என்று கூறி முருகப் பெருமான் தேவர்களுக்கு விசுபரூப தரிசனம் அளித்தார். பெருமானின் முழு வடிவத்தையும் காணமுடியாது தேவர்கள் தத்தளித்தனர். முருகன் அவர்கள் மீது கருணை கொண்டு தமது மாபெரும் வடிவத்தை அவர்கள் கண்டு களிக்கும் வகை செய்தார். முருகனின் திருவுருவத்தில் எல்லா உலகங்களும்

உயிர்க்கூட்டங்களும் அடங்கியிருப்பதைக் கண்டு தேவர்கள் பெருமானை வணங்கி நின்றனர்; தங்கள் துயரைத் தீர்த்தருள வேண்டும் என்று வேண்டினர்.

முருகன் அவர்களைப் பார்த்து, "நீவீர் அனைவரும் எனக்குச் சேனைகளாக, நான் சேனாதிபதியாக இருந்து அசுரர்களை அழிப்பேன். கவலை வேண்டாம்" என்று கூறியருளினார்.

பின்னர் தேவதச்சனால் விசேடமாக அமைக்கப்பெற்ற அழகிய மண்டபத்தில் வீற்றிருந்து தேவேந்திரனின் பூசனையை முருகப் பெருமான் ஏற்று மகிழ்ந்தார். அதனால் அவ்விடம் கந்தவெற்பு எனப் பெயர்பெறலாயிற்று.

## (2) நாரதர் வேள்வி

கந்தவெற்பைவிட்டு நீங்கி முருகப் பெருமான் திருக்கைலைக்குச் சென்றார். நாரதர் சிவபெருமானை மகிழ்விக்க மேருமலையில் ஒரு யாகம் செய்தார். யாகத்திலிருந்து ஒரு சிவந்த ஆட்டுக்கடா தோன்றி எல்லோரையுங் கொல்லத் தொடங்கியது. நாரதரும் மற்றும் வேள்வியிற் கலந்துகொண்ட முனிவர்களும் தேவர்களும் அங்கு விளையாடிக்கொண்டிருந்த முருகப் பெருமானுக்கு முறையிட்டனர். முருகப் பெருமான் தமது தம்பி வீரவாகுத்தேவரை அனுப்பி ஆட்டை அடக்குவித்தார். அதனைத் தேவர்கள் வேண்டுதலுக்கேற்பத் தமது வாகனமாவும் ஏற்றுக்கொண்டார்.

## (3) பிரமனைச் சிறைசெய்தல்

ஒருமுறை திருக்கயிலையிற் சிவபெருமானைத் தரிசித்துவிட்டுப் பிரமதேவர் வந்து கொண்டிருந்தார். வழியில் இலட்சத்து ஒன்பது தம்பிமார்களுடன் விளையாடிக் கொண்டிருந்த முருகன் பிரமதேவருடனும் விளையாட விரும்பினார்.

முருகப் பெருமான் பிரமதேவரை அழைத்து படைத்தல் தொழில்பற்றியும் வேதங்கள்பற்றியும் பல கேள்விகளைக் கேட்டார்.

அவற்றுக்கெல்லாம் பிரமதேவர் பதில் சொல்லிக்கொண்டு வந்தார். ஒரு கட்டத்தில் தமது திருமுகங்களில் ஒன்றாகப் பிரணவ எழுத்தினைக் கொண்டுள்ள முருகன் ‘ஓம்’ என்ற பிரணவத்தின் பொருள் என்ன என்று பிரமதேவரிடம் வினவினார்.

‘ஓம்’ என்னும் பிரணவம் சிவபிரான் எழுந்தருளும் பீடம்; ஏனையோர் தோன்றுவதற்குரிய இடம்; எல்லா எழுத்துக்களுக்கும் வேதங்களுக்கும் ஆதியானது. காசியில் மரணம் அடையும் பேறு பெற்றவர்களின் செவிகளில் சிவபெருமான் ஓதும் தாரக மந்திரம் அது. அத்தகைய பெருமைக்குரிய ‘ஓம்’ என்னும் பிரணவப் பொருளைச் சிந்திக்கையில் பிரமதேவர் தன்னை மறந்தார். அவரிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. அதனையே சாட்டாகக்கொண்டு, வேதத்தின் முதல் எழுத்துக்கே பொருள் தெரியாதவர் படைத்தல் தொழில் செய்துவருவது குற்றத்துக்குரிய செயல் எனக்கொண்டு பிரமதேவரை முருகப் பெருமான் சிறையிலிட்டார். தாமே படைத்தல் தொழில் செய்யும் பொறுப்பையுந் தாங்கினார்.

## (4) தந்தைக்கு உபதேசம்

பிரமதேவர் சிறையிடப்பட்டுப் பலகாலமாகியும் விடுதலை செய்யப்படவில்லை. அவரைச் சிறையிலிருந்து விடுவிக்கும் வண்ணம் திருமால், இந்திரன் முதலாய தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானுக்கு விண்ணப்பித்தனர். சிவபெருமான் திருமாலும் தேவர்களும் பூத கணங்களும் புடைசூழ விடையேறி, தமது பிள்ளையைக் காணக் கந்தவெற்புக்கு எழுந்தருளினார். முருகப் பெருமான் எதிர்கொண்டு வணங்கி வரவேற்றுப் பின்வருமாறு பேசலானார்:

“எந்தையே! தாங்கள் வருகைதந்த காரணத்தை யான் அறிவேன். ஞானமாகிய பிரணவத்தின் பொருளை உணராத ஒருவர் உயிர்களைப் படைப்பது எவ்வாறு? தகுதியற்ற பிரமதேவருக்குத் தாங்கள் படைப்புத் தொழிலை வழங்கியதால் அவர் எவரையும் மதியாது நடக்கின்றார். தேவரீரைத் தினமும் வழிபட்டும் அவரது அகங்காரம் சிறிதும் ஒழியவில்லை. அத்தகையவரைச் சிறைமீட்க இப்பொழுது வந்திருக்கிறீர்கள். யான் அதற்கு உடன்படேன்.”

மைந்தன் விளக்கத்தைக் கேட்ட தந்தையார், "மகனே! காரணம் இன்றி நீ பிரமதேவரைச் சிறைசெய்திருக்க மாட்டாய் என்பதை யான் அறிவேன். எனது சார்பிலே இவ்விதமான தவறுகளை நிவர்த்தி செய்வதற்கென்றுதானே நீ அவதரித்திருக்கின்றாய்" என்று கூறி முருகப் பெருமானைத் தழுவி, உச்சிமோந்தார். பின்னர் மகனைத் தூக்கித் தமது மடியிலே இருத்தி, "நான்முகனும் அறியாத பிரணவத்தின் பொருளை நீ அறிவாயா? அறிந்தால் அதனை எனக்குக் கூறுவாயாக" என்று கேட்டருளினார்.

அதற்கு முருகப் பெருமான், "அனைத்தையும் ஒருங்கே உணரவல்ல முழுமுதற் கடவுளே! உலகம் அனைத்தையும் ஈன்றருளிய எமது அம்மையாருக்கு மிகவும் இரகசியமாகத் தாங்கள் முன்னர் உபதேசத்தருளிய முதன்மையான இம் மந்திரத்தை யான் பலரும் அறியும்படி கூறலாமோ?" என்று வினவினார்.

"சரி, இரகசியமாகவே அதை எனக்குக் கூறுவாயாக" என்று தமது திருச்செவியை மைந்தனின் திருவாய்க்கருகில் வைத்தலும் முருகப் பெருமான் 'ஓம்' என்னும் பிரணவத்தின் பொருளைத் தந்தையாருக்கு உபதேசித்தருளினார்.

தமது பிள்ளையின் அறிவாற்றல் குறித்துப் பெருமிதம் அடைந்த சிவபெருமான், "மகனே! இப்பொழுது சொல். பிரமதேவரிடம் நீ பிரணவத்தின் பொருளை இரகசியமாகக் கூறும்படியாகவா கேட்டாய்? இல்லையே. நீ கேட்டபோது நவவீரரும் இலட்சத்து வீரருமாக உன்தம்பியர் ஒரு லட்சத்து ஒன்பது பேர் உன்னுடன் இருந்துள்ளனர். அதனாற் பலரும் அறியப் பிரணவத்தின் பொருளைக் கூறலாகாது என்னும் கருத்தில் அவர் உனக்குப் பதில் சொல்லாமல் இருந்திருக்கலாம் அல்லவா?" என்று கேட்டருளினார்.

"தந்தையே! நான் தவறு செய்துவிட்டேனா? இதனை எனக்கு உணர்த்தவா என்னிடம் இரகசியமாகப் பிரணவத்தின் பொருளைச் செவிமடுத்தீர்கள். தங்களைப் பூசிப்பவருக்குத் தாங்கள் எதுவும் செய்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். தங்களை வணங்குபவர் என்னையும் வணங்குபவரல்லவா? இப்பொழுதே பிரமதேவரை விடுதலை செய்கிறேன். யான் செய்த பிழையைப் பொறுத்தருள

வேண்டுகிறேன்" என்று கூறி முருகப் பெருமான் பிரமதேவரை விடுவிக்கக் கட்டளையிட்டார்.

விடுதலை பெற்ற பிரமதேவர் சிவபெருமானையும் முருகப் பெருமானையும் வணங்கி நின்றார். சிவபிரான் "பிரமனே! நீ முன்பு செய்த சில தகாத வினைப்பயன்கள் உன்னைச் சிறையிருக்கச் செய்தன. நீ தொடர்ந்து உன் படைத்தல் தொழிலைச் செய்யக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பிரமதேவர் விடுதலை பெற்றமை குறித்துத் தேவர்கள் மகிழ் வெய்திச் சிவபிரானையும் முருகப் பெருமானையும் வாழ்த்தினர்.

## (5) அகத்தியருக்கு உபதேசம்

முருகப் பெருமான் தந்தைக்கு உபதேசம் செய்தமையை அகத்தியர் தமது தவவலியால் அறிந்துகொண்டார். அவரிடம் தாமும் பாடங் கேட்க விரும்பினார். கந்தவெற்பிற்குச் சென்று முருகப் பெருமானை வழிபட்டார். கந்தப் பெருமான் அகத்திய மாமுனிவருக்கு வேதங்களுக்கு முதன்மையும் எல்லாப் பொருள்களுக்கும் மேம்பட்டதுமான பிரணவத்தின் பொருளையும் சிவபிரான் அருளிய இருபத்தெட்டு ஆகமங்களையும் ஐயமற உபதேசித்தருளினார்.

## (6) 'பழம் நீ' ஆன கதை

ஒருமுறை திருக்கயிலாயத்திலே முருகப் பெருமான் விநாயகப் பெருமானுடன் விளையாடிக்கொண்டிருந்தார். சிவபெருமானும் உமாதேவியாரும் அவர்களது விளையாட்டைப் பார்த்த வண்ணம் இருந்தனர். அவ்வேளை பிரம்ம ஞானியாகிய நாரதமுனிவர் அங்கு தோன்றித் தாம் அரிதிற் பெற்ற மாதுளங்கனியைச் சிவபெருமானுடைய திருவடிகளில் வைத்து வணங்கினார். சிவபெருமான் அக்கனியை ஏற்று முனிவருக்கு அருள் புரிந்தார்.

அதனைக் கண்ட விநாயகப் பெருமானும் முருகப் பெருமானும் தந்தையாரை வணங்கி அந்தக் கனியைத் தமக்குத் தருமாறு

கேட்டனர். அவ்வேளை உலகத்தவருக்குச் சிவத்தின் ஒருமையையும் விரிவையும் உணர்த்தவேண்டி இறைவர் தமது பிள்ளைகளுக்கு ஒரு போட்டி வைத்தார்.

“உங்களில் எவர் முதலில் உலகத்தைச் சுற்றி வருகிறீர்களோ அவருக்கே இந்தக் கனி” என அறிவித்தார்.

முருகப் பெருமான் தமது மயில் வாகனத்தில் உலகம் முழுவதையும் ஒரு நொடிக்குள் சுற்றி வந்தார். அதற்குள் விநாயகப் பெருமான் அம்மை அப்பரே உலகம் என்று அவர்களைச் சுற்றிவந்து கனியை முதலிலே பெற்றுக் கொண்டார். பின்னர் தாம் பெற்ற கனியைத் தம்பி முருகனுக்குக் கொடுக்க முன்வந்தார். அப்பொழுது “அவனுக்கு எதற்குப் பழம்! அவனே ஒரு பழந்தானே” எனக் கூறிக் கருணையே வடிவமான உமாதேவியார் ஞானக் குழந்தை முருகனை அரவணைத்தார்.

## 5. ஆறுமுகனின் அறப்போர் முகம்

திருமாலின் கண்களினின்றும் பிறந்த அமிர்தவல்லி, சுந்தரி என்னும் இரு புதல்விகளும் முருகப் பெருமானைத் திருமணஞ் செய்தற் பொருட்டுச் சரவணப் பொய்கைக்குப் பக்கத்தில் தவஞ்செய்து வந்தனர். முருகப் பெருமான் அவர்களுக்கு இரங்கி அமிர்த வல்லியைத் தேவேந்திரன் மகளாக வளரும்படியும் சுந்தரியை சிவமுனிவன் குழந்தையாகி வேடுவ குலத்தில் வளரும்படியும் பணித்து, உரிய காலத்தில் தாம் அவர்களை மணஞ் செய்வதாகவும் கூறியருளினார்.

அமிர்தவல்லி சூரபன்மாவுக்குப் பயந்து மேருமலையில் தங்கியிருந்த இந்திரன்முன் அழகிய சிறு குழந்தையாகத் தோன்றினாள். இந்திரன் குழந்தையை அன்புடன் எடுத்துத் தனது யானையாகிய ஐராவதத்திடம் கொடுத்தான். ஐராவதம் குழந்தையை மனோவதி என்னும் நகரத்தில் அன்புடன் வளர்த்து வந்தது. அதனால் அமிர்தவல்லிக்குத் தெய்வயானை என்னும் பெயரும் வரலாயிற்று.

இளைய பெண் சுந்தரி முருகப் பெருமான் அருளியவாறு தொண்டைநாட்டிலுள்ள வள்ளிமலையில் தவஞ்செய்து கொண்டிருந்த சிவமுனிவனின் மகளாகும் பொருட்டுப் பூவுலகுக்குச் சென்றார்.

திருமாலின் புதல்விகளுக்கு அருள்பாலித்தபின் முருகப் பெருமான் திருக்கயிலைக்குச் சென்று பெற்றோருடன் தங்கியிருந்தார். அக்காலத்தில் இந்திரன் திருமாலையும் பிரமாவையும் ஏனைய தேவர்களையும் அழைத்துக்கொண்டு திருக்கயிலைக்குச் சென்றான். அங்கு பார்வதி, விநாயகர், முருகன் சகிதம் வீற்றிருந்த சிவபெருமானை எல்லோரும் வணங்கி, “ஐயனே! தேவரீர் சூரபன்மனின் கொடுமைகளிலிருந்து எம்மைக் காக்கும் நாள் எந்நாளோ? இனியும் காலதாமதஞ் செய்யாது முருகப் பெருமானைப் போருக்கு அனுப்பியுதவுமாறு வேண்டுகின்றோம்” என்று இரந்தனர்.

சிவபெருமான் முருகனை நோக்கி, “மகனே! நீ சென்று யாவர்க்கும் கொடுமைகள் புரியும் சூரபன்மாவை அவனுடைய கூட்டத்தோடு அழித்து, இந்திரனுடைய அரசை அவனுக்கு மீட்டுக் கொடுப்பாயாக” என்று பணித்தார். அத்துடன் பதினொரு உருத்திரர்களையும் பதினொருவகை ஆயுதங்களாக்கி முருகனுக்குக் கொடுத்தார். அவையே உலக்கை, கொடி, வாள், வச்சிரம், அம்பு, வில், அங்குசம், மணி, தாமரை, தண்டம், மழு என்பனவாகும்.

இப் பதினொரு ஆயுதங்களோடு எல்லா ஆயுதங்களுக்கும் மேலான வல்லமை படைத்த வேலாயுதத்தையும் சிவபிரான் தமது திருக்குமாரன் கையில் வழங்கினார்.

அத்துடன் முருகப் பெருமானுக்கென்றே ஏற்கனவே படைக்கப்பட்ட இலட்சத்து ஒன்பது வீரர்களுக்கும் பலவகையான ஆயுதப் படைகளை அவர் வழங்கினார்; அண்டாபரணன், நந்தி, உக்கிரன், சண்டன், தீக்கண்ணன், சிங்கன் முதலிய மேலான கணத் தலைவர்களை இரண்டாயிரம் வெள்ளம் பூத கணங்களுக்குப் படைத் தலைவர்களாக்கி முருகப் பெருமானின் படையைப் பலப்படுத்தினார்.

மேலும் தமது திருவுள்ளத்தால் ஒரு தேரையும் தமது மகனுக்கு உண்டாக்கினர். அது இலட்சம் குதிரைகளால் மனோவேகத்தில் இழுத்துச் செல்லத் தக்கதோர் அற்புதத் தேராகும்.

இவற்றை யெல்லாம் பெற்றுக்கொண்டு முருகப் பெருமான் முதலில் விநாயகப் பெருமானை வணங்கிப் பின்னர் தாய் தந்தையரை மூன்றுமுறை வலம் வந்து விடை பெற்றுக்கொண்டு சூரபன்மனை அழிக்கும் திருவுள்ளத்துடன் போருக்குப் புறப்பட்டார். சிவபிரான் திருவுள்ளப்படி, அங்கிருந்த திருமால், பிரமன், இந்திரன் ஆகியோரும் ஏனைய தேவர்களும் முருகப் பெருமானைத் தொடர்ந்து சென்றனர்.

திருமால் வாயுதேவரை முருகப் பெருமான் தேருக்குச் சாரதியாகப் பணித்தார். முருகப் பெருமானைச் சூழ்ந்து பூதகணங்கள் மற்றும் தேவர்கள் செறிந்து சென்றதால் தூசுகள் எழுந்து சூரியர்களை மறைத்து இருள்சூழச் செய்தன. அந்த இருளை முருகப் பெருமானின் பிரகாசம் நீக்கியது. அதனால் படைகள் தடையின்றிச் சேனாதிபதியாகிய முருகப் பெருமானைத் தொடர்ந்து சென்றன.

## தாரகன் வதம்

வழியில் கிரவுஞ்ச மலை தென்பட்டது. நாரத முனிவர் அங்கு வந்து அந்த மலையின் கதையை முருகப் பெருமானுக்குக் கூறினார்.

“இது ஒரு மாய மலை. கிரவுஞ்சன் என்னும் அசுரன் மலைவடிவில் இருந்துகொண்டு இங்கு வருபவர்களை யெல்லாம் மாயம் செய்து உள்ளே அழைத்துக் கொல்வது அவன் குணம். பின்னர் அகத்திய முனிவரின் சாபத்தால் இம் மலை வடிவாகவே கிடக்கின்றான். இந்த மலைக்குப் பக்கத்தில் உள்ள மாயாபுரியில் சூரனின் தம்பி தாரகன் ஆட்சி புரிகிறான். யானை முகத்தையுடைய அவன் ஒரு சமயம் திருமாலுடன் போர் செய்தபோது அவரால் ஏவப்பட்ட சக்கராயுதத்தைத் தனது மார்பிலே ஓர் ஆபரணமாகத் தாங்கிக் கொண்டவன். அத்தகைய வல்லமை படைத்த அசுரனை அழித்தால் சூரபன்மனை வெல்லுதல் எளிதாகும்” என்றார் நாரத முனிவர்.

அதனைக் கேட்ட முருகக் கடவுள் தம்பியார் வீரவாகுவிடம் தாரகாசுரனைக் கொன்றுவரும்படி பணித்தார். வீரவாகுத்தேவர் இலட்சத்தெண்மரும் ஆயிரம் வெள்ளம் பூதப் படைகளும் புடைசூழத் தாரகன் நகரத்தை அடைந்தார். அதனை அறிந்த தாரகன் தனது நால்வகைப் படைகளையும் திரட்டிக்கொண்டு வீரவாகுத்தேவரை எதிர்த்தான். அவரின் தம்பிமார்களைத் தோற்கடித்து அவர்களின் பூதப் படைகளையும் அழித்தான்.

தம்பியர்கள் தோல்வியுற்றதைக் கண்ட வீரவாகுத்தேவர் முருகப் பெருமானை உள்ளத்திலே நினைந்துகொண்டு தாரகன்மீது பல பாணங்களைச் செலுத்தி, அவன் ஏவிய ஆயுதங்களை எல்லாம் வீழ்த்தினார். அது கண்ட தாரகன் பல மாய வடிவங்கள் எடுத்துப் போர் புரிந்தான். வீரவாகுத்தேவர் வீரபத்திர பாணத்தைக் கையில் எடுத்தவுடன் அவனது மாயங்கள் எல்லாம் மறைந்து போயின. தாரகன் தனது தேரைவிட்டு இறங்கிக் கிரவுஞ்ச மலைக்குள் மறைந்தான்.

தாரகனைத் துரத்திக்கொண்டு வீரவாகுத்தேவரும் மலைக்குள் புகுந்தார். இருண்ட குகையின் பாதைகள் தெரியாது தடுமாறினார். பின்னர் மலையின் மாயத்தால் மயக்கமுற்றார். அவரைக் காணாது தேடிக் குகைக்குட் சென்ற வீரவாகுத்தேவரின் படைகளும் பலம் இழந்து மயங்கின.

நடந்தவற்றை எல்லாம் நாரதமுனிவர் முருகப் பெருமானுக்கு முறையிட்டார். அதனைக் கேட்ட முருகப் பெருமான் தானே போருக்குப் புறப்பட்டார்.

சோதிமயமான முருகனைப் பார்த்த அளவிலேயே அவருடன் போர்புரிய மனமில்லாத தாரகன், “மகனே! நீ எங்களுக்குப் பகைவன் அல்லவே. திருமால், இந்திரன் முதலாய தேவர்களுக்கும் எங்களுக்குமே பகை. சிவபெருமானிடம் எங்களுக்கு எவ்வித பகையும் இல்லையே! பின் எதற்காகப் போருக்கு வந்தாய்?” என்று கேட்டான்.

அதனைக் கேட்ட முருகப் பெருமான், நல்வினை புரிவாரைக் காத்தலும் தீவினை செய்வாரைத் தண்டித்தலும் சிவபெருமானின் அருட்செயல்கள். சிவபெருமானிடத்திற் பல வரங்களைப் பெற்றுப்

பெருவாழ்வு வாழும் நீங்கள் அறவழியில் நடக்கவில்லை. தேவர்களுக்குத் துன்பங்களைத் தொடர்ந்து செய்து, அவர்களைச் சிறையிட்டீர்கள். உங்களின் நீதியற்ற செயல்களுக்காக உங்களைத் தண்டித்துத் தேவர்களைச் சிறைமீட்கும் பொறுப்பை என்னிடத்தில் தந்திருக்கின்றார் என் தந்தை. இதனை முடிப்பதே என் கடமை" என்று கூறித் தாரகனுடன் போர் தொடுத்தார்.

போர் மும்முரமாக நடந்தது. முருகப் பெருமானின் தாக்குதலைத் தாங்காது அசுரன் போர்க்களத்திலிருந்து மறைந்து போனான். கிரவுஞ்ச மலையின் உதவியோடு பல மாயங்களைச் செய்து முருகப் பெருமானைத் தோற்கடிக்க முனைந்தான். முருகப் பெருமான் தமது வேற்படையால் தாரகனையும் கிரவுஞ்ச மலையையும் அழித்து வீரவாகுவையும் ஏனைய வீரர்களையும் மீட்டார். யுத்த களத்தில் இறந்து கிடந்த பூத கணங்கள் எல்லோரையும் எழுப்பினார்.

இவ்வாறு தாரகனை வதைசெய்தபின் முருகப் பெருமான் தேவர்களும் பூதப் படைகளும் புடைசூழப் போர்க்களத்தை விட்டு நீங்கித் தேவகிரியை அடைந்தார். அங்கு பிரமன், இந்திரன் முதலாய தேவர்கள் முருகப் பெருமானை முறைப்படி பூசித்து மேலும் அவரது திருவருளைப் பெற்று மகிழ்ந்தனர்.

தாரகனின் மகன் அசுரேந்திரன் தந்தைக்கு ஈமக் கடன்களைச் செய்தான். தாரகனுடைய மனைவி கற்பிற் சிறந்த சவுரியும் மற்றுமுள்ள மனைவிமாரும் துயரத்தால் உடன்கட்டை ஏறினர்.

அசுரேந்திரன் சூரபன்மாவின் தலைநகராகிய வீரமகேந்திரத்துக்குச் சென்று கதறி அழுது தந்தையின் மரணத்தைத் தெரிவித்தான். சூரபன்மன் உடனேயே தனது தம்பியைக் கொன்ற பகைவனை அழிக்க வேண்டும் என்று வெகுண்டு எழுந்தான். பின்னர் அவனது மந்திரி அமோகன் ஆலோசனைப்படி அமைதிகொண்டு, பகைவர் படைகளின் வலிமையை ஆராய்ந்து அறிய முற்பட்டான். அவ்விதம் அறியவல்ல சிறந்த ஒற்றர்களையும் அப்பொழுதே அனுப்பினான்.

முருகப் பெருமான் தேவகிரியிலிருந்து பூவுலகத்துக்குத் தமது

# 6. செவ்வேளின் சிவ வழிபாடு

பரிவாரங்களுடன் சென்றார். அங்கு தமது பெற்றோர் எழுந்தருளி யிருக்கும் தலங்களுக்கு யாத்திரை ஒன்றை மேற்கொண்டார்.

முதலில் அவர் சென்ற திருத்தலம் கேதாரம் என்பது. பார்வதி தேவியார் சிவபெருமானைப் பூசித்து அவரது இடப்பாகத்தில் சேர்ந்த தலம் கேதாரமாகும். திருக்கேதாரநாதரைத் தரிசித்தபின் காசியம்பதியை அடைந்து விசுவநாதப் பெருமானைத் தரிசித்தார். திருமாலுக்கும் சிவபிரானே பரம்பொருளாவார் என்பதை உணர்த்தும் உன்னதமான சிவத்தலமாகக் காசி காட்சி அளித்தது.

காசியிலிருந்து திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்) என்னும் தலத்துக்குச் சென்றார். அங்கு நந்திதேவர் மலையுருவாகிச் சிவபிரானை உச்சியில் தாங்கிக்கொண்டிருக்கும் சிறப்பைக் கண்டு களித்தார். பின்னர் தாம் முன்பு பாதாள உலகத்திலிருந்து ஒரு குகைவழியே வந்தேறிய திருவேங்கட மலையையும் தரிசித்தார்.

தென்கயிலாயம் எனப்படும் திருக்காளத்தி கண்ணப்ப நாயனார் முத்தியடைந்த திருத்தலம். காளியின் செருக்கு அழியும்படி சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவம் ஆடிய தலம் திருவாலங்காடு. கம்பமேவிய உம்பர் நாயகனை உமாதேவியார் உவந்து பூசித்துத் தழுவிய சிறப்புடையது காஞ்சி. இத் தலங்களை எல்லாம் தரிசித்துக்கொண்டு அருணாசல மலைக்கு எழுந்தருளினார். அடிமுடி தேடிக் களைத்த திருமாலுக்கும் பிரமதேவருக்கும் நடுவில் சிவபெருமான் சோதிப் பிழம்பாகத் தோன்றியருளியது அருணாசல மலையிலாகும். பின்பு சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்து ஆட்கொண்ட திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்று வணங்கினார்.

தொடர்ந்து சிவபெருமான் ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருக்கும் திருமுதுகுன்றத்துக்குச் சென்றார். அடுத்துக் கோயில்களுக்கெல்லாம் கோயிலாக விளங்கும் சிதம்பரத்துக்குச் சென்று நடராசப் பெருமானின் தாண்டவத்தைக் கண்டு களித்தார். அடுத்து, காவிரிக்கு வடக்கில் உள்ள மண்ணியாற்றுக்குக் குமரப் பெருமான் எழுந்தருளினார். பொழுது பட்டுக்கொண்டிருந்தது.

மண்ணியாறு வெண்மணலும் சோலைகளும் நிரம்பிய அழகான இடமாக இருந்தமையால் தேவர்கள் பெருமானை அவ்விடத்தில் தங்கும் வண்ணம் பிரார்த்தித்தார்கள். பெருமான் தேவதச்சனைக் கொண்டு அழகிய நகரம் ஒன்றை அங்கு அமைப்பித்து, அது தாம் தங்குதற்கு நல்ல இடமெனத் திருவாய் மலர்ந்தருளினார். அத் திருவார்த்தையைக் கேட்ட தேவர்கள் அந்நகரத்துக்குத் திருச்சேய்நலூர் என (தெய்வக் குழந்தைக்கு நல்ல ஊர் என்னும் பொருளில்) பெயர் சூட்டினர். திருச்சேய்நலூர் திருச்சேஞலூர் ஆகி, இப்பொழுது சேங்கனூர் ஆக வழங்கிவருகின்றது. குமரக்கடவுள் தங்கியதால் இத்தலம் குமாரபுரி என்றும் அழைக்கப்படும்.

அன்றிரவு எல்லோரும் அங்கு தங்கினார்கள். பொழுது விடிந்ததும் முருகப் பெருமான் சிவபெருமான் திருவடிகளைப் பூசிக்கத் தகுந்த பொருள்களைக் கொண்டு வருமாறு இந்திரனைப் பணித்தார். இந்திரன் வாசனை மலர்கள், பட்டுத்துணி, கங்கையின் புனித நீர், தூபம், தீபம், நைவேத்தியம் முதலியவற்றையெல்லம் வருவித்தான். முருகப் பெருமான் தேவதச்சனைக் கொண்டு அழகிய கோயில் ஒன்றை உருவாக்கி அதில் சிவபெருமானின் திருவுருவத்தை வைத்து உள்ளம் உருகப் பூசித்தார்.

சிவபெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளினார். கொடுமைகள் புரியும் சூரபன்மனின் வலிய ஆயுதங்கள் யாவற்றையும் அழிக்கவல்ல பாசுபதாஸ்திரம் என்னும் படைக்கலத்தை முருகப் பெருமானுக்குக் கொடுத்தருளினார். முருகப் பெருமான் அதனைப் பெற்றுக்கொண்டு பெற்றோரை வணங்கி நின்றார்.

அவர்கள் மறைந்தருளியதும் குமரக்கடவுள் குமாரபுரியைவிட்டு நீங்கி காவிரியாற்றுக்கு அப்பால் உள்ள திருவிடைமருதூர், திருப்பறியலூர், வீரட்டம் முதலாய பல சிவத்தலங்களைத் தரிசித்தபின், சிவபெருமானைத் திருமகள் வணங்கி வரம்பெற்ற திருவாரூர் என்னும் தலத்துக்கு எழுந்தருளினார்.

திருவாரூரையும் அதற்கு அணித்தாகவுள்ள பிற சிவத்தலங் களையும் முருகப் பெருமான் வணங்கித் தமது யாத்திரையைத் தொடர்ந்தபோது, வழியில் வெப்பம் மிகுந்த பாலைவனம் ஒன்று

குறுக்கிட்டது. முருகப் பெருமானும் அவரது பரிவாரங்களும் அதனை அடைந்த போது மழை பொழிந்தது. கொடிய வெப்பம் நீங்கி யாவருக்கும் உகந்த குளிர்ச்சி நிலவியது. உலகப்பற்று என்னும் வெப்பத்தால் வாடும் ஆன்மாக்கள் சிவபிரானின் கருணை மழையால் ஆனந்தம் அடைவது போன்று அப் பாலைவனம் முருகப் பெருமான் எழுந்தருளியதும் சோலைவனம் ஆகியது.

## பராசரர் புதல்வர் வரலாறு

முருகப் பெருமானின் வருகையைத் திருப்பரங்குன்றத்தில் தவஞ் செய்து கொண்டிருந்த பராசர முனிவரின் புதல்வர்களாகிய தத்தன், அனந்தன், நந்தி, சதுர்முகன், பரிதிப்பாணி, மாலி என்னும் ஆறுபேரும் தமது ஞானத்தால் அறிந்தனர். உடனேயே அவரைக் கண்டு வணங்கப் புறப்பட்டனர்.

முருகப் பெருமானின் பேரழகில் தமது உள்ளத்தைப் பறிகொடுத்த பராசர முனிவரின் புதல்வர்கள் அவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அப்போது இந்திரன் அவர்களது வரலாற்றைப் பெருமானுக்குப் பின்வருமாறு கூறலுற்றான்:

"இவர்கள் பராசர முனிவரின் பிள்ளைகள். சிறு பிள்ளைகளாக இருந்த காலத்தில் ஒரு நாள் சரவணப் பொய்கையில் குதித்து விளையாடினர். அதனால் அத் தடாகத்தில் இருந்த மீன் கூட்டங்கள் தத்தளித்துத் தனித்தனியாகப் பிரிந்து ஓடின. அவற்றைத் துரத்திப் பிடித்து ஆறு குழந்தைகளும் கரையிற் சேர்த்து விளையாடிக் கொண்டிருக்கையில் தந்தையார் பராசர முனிவர் அவ்விடம் வந்தார். தமது புதல்வர்கள் மீன்களை இம்சைப்படுத்தும் இழிவைக் கண்டு கோபித்து, அவர்களை மீன்களாகச் சபித்தார். பார்வதியின் திருமுலைப் பாலை உண்டால் பழைய உருவத்தை அடையலாம் என்று சாப விமோசனமும் அளித்தார். பெருமானே! சரவணப் பொய்கையில் உலக மாதாவாகிய எங்கள் அன்னையின் திருமுலைப் பாலைத் தேவரீர் உண்ணும்பொழுது ஊற்றிய பாலைப் பொய்கையில் மீன்களாக இருந்த இந்த ஆறுபேரும் உண்ண நேர்ந்தது. அதன்பின் இவர்கள் தமது இயற்கை வடிவத்தைப் பெற்றனர். சிவபிரான் இவர்களைத் திருப்பரங்குன்றத்தில் தவஞ்செய்யப் பணித்தார். தேவரீர் இங்கு

எழுந்தருளியதை அறிந்து தங்களை வணங்க வந்துள்ளனர்.”

இவ்வாறு இந்திரன் பராசரரின் மக்களின் முன்னைய கதையைக் கூறக்கேட்ட முருகப் பெருமான் அவர்களுக்கு இரங்கி அவர்களைத் தம்முடன் அழைத்துச் சென்றார்.

முருகப் பெருமான் பாலைவனத்தைக் கடந்து வழியில் உள்ள பல சிவத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருச்சீரலைவாய் எனப்படும் கடற்கரைத் தலமாகிய திருச்செந்தூரை அடைந்தார். அவ்விடத்தில் தேவதச்சனைக் கொண்டு ஆலயம் ஒன்றை அமைப்பித்து அதில் தேவலோகத்தவரும் பூலோகத்தவரும் துதி செய்ய வீற்றிருந்து அருளினார்.

அத் தருணத்தில் முருகப் பெருமானின் அனுமதியுடன் இந்திரன் வேண்ட, தேவகுருவாகிய பிரகஸ்பதிதேவர் (வியாழதேவர்) அங்கு கூடியிருந்த பிரமாதி தேவர்களும் பூதசைனியர்களும் படைத் தலைவர்களும் இலட்சத்து ஒன்பது வீரர்களும் பிறரும் அறியும் வகையில் அசுரர்களுடைய முழுமையான வரலாற்றைக் கூறலாயினார்.

## 7. சூரபன்மன் பிறப்பு

அறுபத்தாறு கோடி அசுரர்களுக்கு அரசன் அசுரேந்திரன். அவனுக்கும் அவனது மனைவி மங்கலகேசிக்கும் சுரசை என்னும் மகள் பிறந்தாள். சுரசைக்கு அசுரர்களின் குரு சுக்கிராச்சாரியார் கல்வியையும் பலவிதமான வித்தைகளையும் கற்பித்தார்.

சுரசையின் அளப்பரும் திறமைகளைக் கண்டு வியந்து மாயை என்று அவளுக்குப் பெயர் சூட்டிச் சில ஆலோசனைகளையும் வழங்கினார். “தேவர்களின் ஆதிக்கம் அதிகரித்துவிட்டது. அவர்கள் அசுரகுலத்துக்குப் பகைவர்கள். உன்னுடைய திறமையால் அசுரகுலம் பலம்பெற வேண்டும். நீ காசிப முனிவரின் தவத்தைக் கெடுத்து, அவருடன் கூடி அசுரகுலத்தை வாழ்விக்க வல்ல புதல்வர்களைப் பெற்று, அவர்கள் அளப்பரும் வளங்களைப் பெறத் தகுந்த வேள்வியையும் விரதங்களையும் போதித்து வருவாயாக” என்று உபதேசித்தார்.

அதுகேட்ட மாயை பேரழகு நிறைந்த கன்னி வடிவத்தில் காசிப முனிவரை மயக்கப் புறப்பட்டாள். காசிப முனிவர் மேரு மலையில் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தார். அந்த இடத்தை ஓர் அழகிய சோலையாக மாற்றினாள் மாயை. மகா வல்லமை பொருந்திய அம் மாமுனியைத் தனது இணையற்ற அழகினால் மயக்கி அன்றிரவே அவரோடு கூடினாள்.

அவர்களின் சேர்க்கையால் சூரபன்மன், சிங்கமுகன், தாரகன், அசமுகி என்னும் நால்வரும் பிறந்தனர். அவர்களின் மாய வடிவங்கள் வாயிலாகவும் வியர்வைகள் வாயிலாகவும் மேலும் இரண்டு இலட்சம் வெள்ளம் அசுரர்களும் தோன்றினர். அவர்களிற் பலர் சிங்கம், யானை, ஆடு, குதிரை, நரி, பன்றி முதலிய விலங்குகளின் தலைகளையுடையவராக விளங்கினர்.

விடிந்ததும் ஆரவாரித்து நிற்கும் தனது அசுரச் சந்ததியை மகிழ்ச்சியுடன் பார்த்தாள் மாயை. காசிபரும் தமது மக்கட் செல்வங்களின் தொகையைக் கண்டு வியந்தார். மூத்தவனாகிய சூரபன்மன் தன் தம்பியர் இருவருடன் முன்வந்து பெற்றோரை வணங்கி நின்றான். காசிபர் தமது பிள்ளைகளுக்குப் பின்வருமாறு உபதேசஞ் செய்தார்:

"உலகத்து உண்மைப் பொருள்கள் மூன்று. அவற்றைப் பெரியோர் பதி, பசு, பாசம் என்பர். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் புரிகின்ற சிவபெருமானே பதி என வேதம் கூறும். பாசம் ஆணவம், கன்மம், மாயை எனும் மூவகை மலங்களையுடையது. பாசத்திற் கட்டுண்டு பிறவிப் பெருங்கடலுள் மூழ்கும் உயிர் பசு எனப்படும். உயிர்கள் எண்ணிறந்தவை; அறிவற்றவை; அனாதியானவை.

இம்மை மறுமை என்னும் இருமையின் இன்பத்தையும் தருவது தருமமாகும். தருமத்தைச் செய்தால் அன்பு வளரும். அன்பு வளர்ந்தால் அருள் கிடைக்கும். அருளினால் தவஞ்செய்யும் தகைமை உண்டாகும். தவத்தினால் ஞானம் கிட்டும். ஞானத்தால் உயிர்கள் சிவனடியைச் சேரும். சிவன் திருவடியைச் சேரின் பிறவித் துன்பம் தீரும்.

மூவகை மலங்களினின்றும் நீங்கச் செய்து உயிருக்குப் பேரின்பத்தைப் பெற்றுக்கொடுக்கும் தவத்தின் மகிமை அளப்பரியது. ஆதலால் மைந்தர்களே, தரும நெறியைக் கடைப்பிடித்துச் சிவனைத் தியானித்துப் பெருந்தவஞ் செய்வீர்! உடலை ஒறுத்துத் தவம் புரிபவர் எண்ணியதை எய்துவர். இதனை விளக்க உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்.

## மார்க்கண்டேயர் வரலாறு

கவுசிக முனிவருக்கும் அவரது மனைவி விருத்தைக்கும் மிருகண்டு என்ற மைந்தன் பிறந்தான். மிருகண்டு வளர்ந்து முற்கலர் என்ற முனிவரின் புதல்வி மருத்துவதி என்னும் குணவதியை மணந்து இல்லற வாழ்க்கையைச் சிறப்புற நடத்தி வந்தார். எனினும் இவர்களுக்குப் பிள்ளைப் பேறு இருக்கவில்லை. அதனால் வருந்திய மிருகண்டு முனிவர் தமது மனைவியுடன் காசிக்குச் சென்று சிவபிரானை நோக்கிப் பிள்ளைப் பேறு வேண்டி ஓராண்டு காலம் கடுந்தவம் இயற்றினார்.

சிவபெருமான் அவரது தவத்துக்கு இரங்கிக் காட்சி தந்தருளி, “முனிவரே! உமக்குத் தீய குணங்களோடு நூறு வயதுவரை வாழக்கூடிய அறிவற்ற புதல்வனா அல்லது நல்ல குணங்களோடு பதினாறு வயதுவரை மட்டுமே வாழக்கூடிய அறிவிற் சிறந்த புதல்வனா வேண்டும்?” என்று கேட்டார்.

முனிவர் இறைவனை வணங்கி, “பெருமானே! நல்ல குணமுள்ள பிள்ளைதான் உங்கள்பால் அன்புடையவனாக இருப்பான். அத்தகைய பிள்ளையே எனக்கு வேண்டும்” என்றார். சிவபெருமானும் அங்ஙனமே வரமளித்து மறைந்தருளினார்.

முனிவர் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகையில் மருத்துவதி கருப்பமுற்றாள். பின்னர் ஒரு பங்குனி மாதத்தில் ரேவதி நட்சத்திரமும் மிதுன இலக்கினமும் கூடிய சுபவேளையில் அருமைக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். தந்தையார் அளவிலா மகிழ்ச்சி எய்திப் பலவகையான தான தருமங்களைச் செய்தார். குழந்தைக்கு மார்க்கண்டேயன் என்று பெயரிட்டுச் சிறப்புடன் வளர்த்து வந்தார்.

மார்க்கண்டேயர் வேதம் முதலிய நூல்களைக் கற்றுத் தெளிந்து சிறந்த சிவபக்தராகத் திகழ்ந்தார். அவர் பதினாறு வயதை அடைந்தபோது அவரது பெற்றோர் வருந்தி அழுது, மார்க்கண்டேயருக்கு வரப்போகும் மரணத்தைப் பற்றிக் கூறினர்.

அதற்கு அவர், "பெருமைக்குரிய தந்தையாரே, அருமைத் தாயாரே! வருந்தாதீர்கள்! எல்லாம் வல்ல சிவபிரானை வணங்கி எனது ஆயுளை நீடிப்பேன். உங்கள் கவலையைப் போக்குவேன். இது உறுதி" என்று கூறிக் காசியில் உள்ள மணிகர்ணிகை ஆலயத்துக்குச் சென்றார். அங்குள்ள இறைவனை வணங்கி அதற்குப் பக்கத்தில் ஒரு சிவலிங்கம் அமைத்து வேதவிதிப்படி பூசனை செய்து வந்தார்.

சிவபெருமான் இளைஞரின் பூசைக்கு இரங்கி எழுந்தருளினார். மார்க்கண்டேயர், "எந்தையே, கூற்றுவன் என்னுயிரைக் கவரா வண்ணம் அருள்பாலிக்க வேண்டும்" என்று சிவபெருமானை வீழ்ந்து வணங்கினார். சிவபெருமான் மார்க்கண்டேயருக்கு நீண்ட ஆயுளை அளித்து அவரது சென்னியிலே தமது திருவடியை வைத்துத் திருவடி தீட்சை செய்து மறைந்தார்.

மார்க்கண்டேயர் தொடர்ந்தும் தமது தவத்தில் ஈடுபட்டார். அவருக்குப் பதினாறு வயது நிரம்பிய நாளன்று இயமனது தூதுவன் ஒருவன் தோன்றினான். மார்க்கண்டேயரின் தவக் கனலுக்கு அஞ்சித் திரும்பிச் சென்று நிகழ்ச்சியை இயமனுக்குத் தெரிவித்தான்.

அதுகேட்டு இயமராசன் தானே தனது வாகனமாகிய எருமைக் கடாவில் ஏறி மார்க்கண்டேயர் தவஞ் செய்து கொண்டிருக்கும் காசியை அடைந்தான். சிவந்த கேசமும் கறுத்த மேனியும் உடைய இயமராசன் கைகளிற் பாசம், தண்டம், சூலம் ஆகியவற்றைத் தாங்கியவாறு மார்க்கண்டேயர்முன் தோன்றினான்.

"மைந்தனே! சிவபெருமான் உனக்கு அளித்த வயதெல்லை இன்றுடன் முடிந்தது. அதனால் நீ என்னுடன் வருவாயாக!" என்றான் இயமராசன்.

அதைக் கேட்ட மார்க்கண்டேயர், "சிவனடியார்கள் சிவலோகத்துக்கே செல்வார்கள். உனது உலகத்துக்கு வரமாட்டார்கள்" என்று பதில் அளித்தார்.

"மகனே! நான் வயதுபற்றிப் பேசுகிறேன். நீ உலகம் பற்றிப் பேசுகிறாய். எனது உலகம் தீய உலகம் அன்று. அது தருமலோகம். அங்குதான் ஆன்மாக்கள் செய்த பாவ புண்ணியங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவரவருக்குரிய உலகத்துக்கு அனுப்பப்படுகின்றனர். நீ சிறந்த சிவபக்தனாக இருக்கின்றாய். இருப்பினும் நான் பாரபட்சம் பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் அவரவருக்குரிய கால எல்லையில் அவர்களின் உயிர்களை எடுப்பதுதான் எனது தருமம். இது சிவபெருமானின் கட்டளை. அவர் கட்டளையை நிறைவேற்றுவதே எனது கடமை. நீ எனது கடமைக்குக் குறுக்கே நில்லாது இப்பொழுதே என்னுடன் வந்துவிடு" என்று தருமராசன் அழைத்தான்.

அதற்கு மார்க்கண்டேயர், "தருமராசனே! பக்குவம் நிறைந்த ஆன்மாக்களும் உமது உலகம் வந்துதான் பின்னர் சிவலோகஞ் செல்வார்களோ?" என்று கேட்டார்.

"மகனே! ஆன்மாக்களின் பக்குவ நிலையை அறியவல்லவர் சிவபெருமான் ஒருவரே! பக்குவம் பெற்ற ஆன்மாக்களைச் சிவபெருமான் நேராகவே தமது உலகத்துக்கு அழைத்துக் கொள்வார். அவரால் அவ்விதம் நேராக அழைக்கப்படாத அல்லது ஆட்கொள்ளப் படாதவர் எல்லோரும் எனது உலகத்துக்கு வந்தே ஆக வேண்டும். நீ வீணாக வாதம் புரிந்து காலத்தைக் கடத்துகிறாய்" என்று கூறியவாறு தருமராசன் தனது பாசக் கயிற்றை மார்க்கண்டேயர் கழுத்தில் வீசினான்.

மார்க்கண்டேயர் தாம் பூசித்துக்கொண்டிருந்த சிவலிங்கத்தை இறுகப் பற்றினார். அவ்வளவில் அந்த இலிங்கத்தினூடாகச் சிவபெருமான் தோன்றித் தமது இடதுகாலால் இயமராசனை மெதுவாக உதைத்து விழுத்தி, "இயமராசனே! மார்க்கண்டேயரின் ஆயுளை யான் சிலநாட்களுக்கு முன்னதாகவே நீடித்துவிட்டேன். நீர் அதனை அறியவில்லையா?" என்று கேட்டருளினார்.

விழுந்த இயமராசன் எழுந்து வணங்கி, "பெருமானே! எனது நிர்வாகத்தில் இவ்வித பிழை நேர்ந்தது இதுவே முதல் தடவை. இனிமேல் இவ்வித பிழை வராது பார்த்துக்கொள்வேன். யான் செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேன்" என்று இரந்தான்.

இறைவர் அவனை மன்னித்தருளி மறைந்தார். மார்க்கண்டேயர் மணிகர்ணிகை ஆலயத்துக்குச் சென்று தன் காரணமாகக் கவலைகொண்டிருந்த பெற்றோரின் துயரத்தைப் போக்கிய பெருமானை வழிபட்டார். மேலும் பல சிவாலயங்களைத் தரிசித்துச் சீவன் முத்தராகப் பலகாலம் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்."

இவ்வாறு மார்க்கண்டேயர் வரலாற்றைக் கூறிமுடித்த காசிப முனிவர் தமது மைந்தர்களையும் தவஞ் செய்யுமாறு வற்புறுத்தினார்.

அதனைக்கேட்ட மாயை நகைத்து, "முனிவரே! தங்கள் உபதேசம் எல்லாம் பேரின்பம்பற்றியதாக இருக்கின்றன. என் பிள்ளைகள் இந்த உலகத்தை ஆளவேண்டும்; சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும். அவர்களுக்கு வேண்டுவதெல்லாம் இளமை, இன்பம், செல்வம், ஆயுள், ஆற்றல், அதிகாரம். அவற்றைப் பெறும் வழிவகைகளைக் கூறுவீராக!" என்றாள். அதுகேட்ட முனிவர், "அதுவே உன் கருத்தாயின் நீயே அவர்களுக்கு அறிவுரைகளைச் சொல்" என்றார்.

மாயை தனது புதல்வருக்குச் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து அரசும் ஆணையும் மற்றுமுள்ள சுகபோகங்கள் அனைத்தையும் பெறமுயலும் வண்ணம் வலியுறுத்தி, தவஞ் செய்தற்குரிய முறைகளையும் மந்திரங்களையும் தந்திரங்களையும் கூறினாள். மேலும், தவத்துக்கு வேண்டிய உபகரணங்கள் அனைத்தையும் தான் தந்து உதவுவதாகவும் உறுதி அளித்தாள்.

அதுகேட்ட சூரபன்மனும் மற்றைய இரு தம்பிமாரும் பெற்றோரிடம் விடை பெற்றுக்கொண்டு தமது ஏனைய உடன்பிறப்புக்களுடன் உத்தரதிசை நோக்கித் தவம் இயற்றத் தகுந்த இடம் நாடிச் சென்றனர்.

பின்னர் மாயை காசிபரை நோக்கி, "நான் புதல்வர்களைக் காக்கச் செல்கின்றேன். நீர் உமது தவத்தை மேற்கொள்வீராக!" என்று கூறி அவரைப் பிரிந்து சென்றாள்.

## 8. அசுரர் யாகம்

மாயையின் உபதேசப்படி கடுந்தவம் இயற்றச் சென்றான் சூரபன்மன். அவனைச் சூழ்ந்து சென்ற சேனையின் பாரந் தாங்காது நிலமகள் வருந்தினாள். சேனையின் பெருந் தொகையைக் கண்டு அட்டதிக்கு யானைகளும் கலங்கின. புழுதி எழுந்து நான்முகன் உலகம்வரை வீசியது.

அவர்களின் வருகையை அறிந்த அசுரகுலக் குருவாகிய சுக்கிராச்சாரியார் சூரபன்மனைக் காணச் சென்றார். அவன் தவஞ் செய்யுங் காலத்து எவ்வித தீமைகளும் அணுகாதவாறு மகாமிருத்தியுஞ்சய மந்திரத்தை அவனுக்கு உபதேசித்தார்.

சூரபன்மன் சுக்கிராச்சாரியாரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு வடபுலத்தில் உள்ள ஓர் ஆலவனத்திற் பெரிய தவச்சாலை ஒன்றை அமைத்தான். எல்லைகளில் அசுர சேனையைக் காவலாக வைத்தான். மேலும் மந்திரங்களால் துர்க்கை, காளி முதலிய தெய்வங்களையும் வைரவ கணங்களையும் அழைத்து வணங்கிக் காவல் அமைத்தான்.

தவச்சாலையில் பிரமாண்டமான ஓமகுண்டம் ஒன்றை அமைத்தான். அதைச்சூழ நூற்றெட்டுக் குண்டங்களும் அவற்றைச் சுற்றி ஆயிரத்தெட்டுச் சிறுகுண்டங்களும் நிறுவினான். பின்னர் வேள்விக்குப் பொருட்கள் வேண்டித் தாயை நினைத்தான். மாயை அனைத்துப் பொருட்களையும் வழங்கினாள்.

இவ்விதம் எல்லா ஒழுங்குகளும் செய்தபின் சூரபன்மன் வேள்வியை ஆரம்பிப்பதற்கு விண்ணளவு உயரமான வச்சிரத் தம்பத்தைத் தானே தனது வலிமையால் எடுத்து நிறுத்தினான். சகல காவல் தெய்வங்களுக்கும் பலிகளைக் கொடுத்து, ஆயிரத்தெட்டுக் குண்டங்களிலும் தீ மூட்டி ஊன் அவி முதலியன இட்டு, அவற்றில் தொடர்ந்து வேள்வியை இயற்றுமாறு தாரகனைப் பணித்தான்.

அடுத்து நூற்றெட்டுக் குண்டங்களிலும் வேள்வியைச் செய்யுமாறு சிங்கமுகனை ஏவினான்.

அதன்பின் பிரதான குண்டத்தில் தான் வேள்வியை இயற்றத் தொடங்கினான். அதனை மந்திரத்தால் அருச்சித்து, அதில் நச்சு விறகால் தீ மூட்டி நெய், ஊன், இரத்தம், சோறு, எண்ணெய், பால், தயிர் என்பவற்றை ஆகுதிகளாகச் சொரிந்து சிவபெருமானை நினைத்து வீரயாகம் செய்யலுற்றான்.

வேள்வித் தீ யாவரும் அஞ்சும் வகையில் ஓங்கி எழுந்து எங்கணும் பரவிற்று. சூரன் பெரும் வளம் பெறவிரும்பிச் செய்யும் வேள்வியால் என்ன நேருமோ என்று இந்திரனும் ஏனைய தேவர்களும் வருந்தினர்.

இவ்வாறு சூரபன்மன் தனது தம்பியருடன் பதினாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் செய்தும் சிவபெருமான் காட்சி தரவில்லை. அதனால் சூரபன்மன் மேலும் தனது உடலை வருத்த எண்ணினான். வானத்தில் நின்று தனது உடல் தசையை அறுத்து அறுத்து குண்டத்துள் அவியாகப் பெய்தான். குருதியை நெய்யாகச் சொரிந்தான். பயன் கிடைக்கவில்லை. கடைசியில் குண்டத்தில் விழுந்து தன்னையே பலியாகக் கொடுத்தான். வேள்வித் தீயில் தமது தமையன் வெந்து சாம்பராகியதைக் கண்டு அருகில் இருந்த சிங்கமுகனும் தாரகனும் அழுது புலம்பினர். அச்செய்தியை அறிந்த இந்திரன் மகிழ்ச்சியடைந்தான்.

சூரபன்மனின் பிரிவைத் தாங்காது சிங்கமுகனும் தாரகனும் தத்தம் குண்டங்களில் வீழ்ந்து சாகத் துணிந்தனர். அவர்கள் வேள்வித் தீயில் விழுகையில் அடியார்க்கு அருளும் சிவபெருமான் வேதியர் வடிவில் வந்து அவர்களைத் தடுத்தார். பின்னர் சூரபன்மனையும் உயிர்ப்பித்தார். அசுரர்கள் அளவற்ற மகிழ்ச்சியினால் ஆரவாரித்தனர். அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாருடன் விடைமீது அவர்களுக்குக் காட்சி கொடுத்தார். எல்லையற்ற ஆனந்தம் பெற்றவனாகச் சூரபன்மன் தனது தம்பியருடன் அம்மை அப்பரை வீழ்ந்து வணங்கினான்.

"சூரபன்மனே! நீ நெடுங்காலமாகக் கடுந் தவஞ்செய்து உன் உடலை வருத்தினை. வேண்டிய வரங்களைக் கேட்பாயாக!"

என்று சிவபெருமான் கூறியருளினார்.

உடனே சூரபன்மன், "எம்பெருமானே! அண்டங்களுக் கெல்லாம் நான் அரசனாக வேண்டும். அவைகளைக் காக்க ஆணைச் சக்கரத்தையும் நினைத்த மாத்திரத்தில் அவ் வண்டங்களுக்குச் செல்வதற்கு ஊர்திகளையும் திருமால் முதலிய தேவர்கள் அனைவரையும் வெல்லும் ஆற்றலையும் வல்லமை மிக்கப் படைகளையும் தந்தருள வேண்டும். மற்றும் எப்பொழுதும் அழியாதிருக்கும் வரத்தையும் அருளல் வேண்டும்" என்று கேட்டான்.

சிவபெருமான், "அடியானே! ஆயிரங்கோடி அண்டங்களிலே நீ ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்கள் ஆள்வாயாக!"என்றருளி, ஆயிரத்தெட்டு அண்டங்களைக் காக்கும் ஆணைச் சக்கரத்தையும் அவ் அண்டங்களுக்குச் செல்லத்தக்க இந்திரசாலம் என்னும் இரதத்தையும் பலவகையான படைக்கலங்களையும் வழங்கியருளினார். மேலும் தம்மை வணங்கி நின்ற சூரபன்மனின் தம்பியர்க்கும் பெரும் வரங்கள் அளித்துத் தமது சக்தியின்றி வேறெவரும் அவர்களை வெல்ல வியலாது என்றும் கூறி மறைந்தருளினார்.

சூரபன்மன் கருணைக் கடவுள் சிவபெருமானிடத்தில் அளப்பரும் வரங்கள் பெற்றமை குறித்து அரசகுலம் ஆனந்த பரவசத்தில் மூழ்கியது. தந்தை காசிப முனிவரை அடைந்து தான் பெற்ற பேறுகள்பற்றிக் கூறி, அடுத்துச் செய்ய வேண்டியவை யாவை எனச் சூரபன்மன் வினவினான். அது கேட்ட காசிப முனிவர் தேவர்க்கும் மறையவருக்கும் ஏனைய உலகத்தவருக்கும் துன்பம் சூழும் காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்து தமக்குள் வருந்தினர். தாமாக எதுவும் சொல்லாது அசுரர் குரு சுக்கிராச்சாரியாரிடம் சென்று ஆலோசனை கேட்குமாறு அனுப்பி வைத்தார்.

சூரபன்மன் தந்தையாரை வணங்கித் தம்பிமாருடன் சுக்கிராச்சாரியாரை அடைந்தான். அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் பின்வருமாறு உபதேசம் செய்தார்:

"பதி, பசு, பாசம் என்றும் புண்ணிய பாவங்கள் என்றும் கூறிக் காலத்தை வீணாக்காதே. கிடைத்த சுகத்தை உலகில்

அனுபவிப்பவனே அறிவாளி. தேவரிலும் உயர்ந்த அரசும் ஆணையும் செல்வமும் உனக்குக் கிடைத்துள்ளன. நீயே பிரம்மம் என்று உணர்ந்துகொள். எப்பொழுதும் தேவர்கள் உங்களுக்குப் பகைவர்கள் என்பதையும் மறவாதே. தேவர்கள் தலைவன் இந்திரன் கணக்கற்ற அசுரர்களைக் கொன்றவன். அவன் செல்வத்தை அழித்து அவனைச் சிறையில் அடைப்பாயாக. சிவபெருமான் உனக்குத் தந்த ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் திக்கு விசயம் சென்று உனது ஆணையை நிலைநிறுத்துவாயாக!''

இவ்விதம் சுக்கிராச்சாரியார் கூறிய கெட்ட வழிமுறைகளை எல்லாம் நல்லுரைகளாகக் கொண்டு அவரை வணங்கி விடைபெற்றான் சூரபன்மன். தனது தம்பியருடன் திக்கு விசயம் செய்வதுபற்றி யோசித்தான். அப்பொழுது மாயை அவர்கள் முன் தோன்றி, சிவபெருமான் உங்களுக்கு அளித்த வலிமையைக்கொண்டு இந்திரன் முதலிய தேவர்களை வென்று நெடுங்காலம் அரசு செய்வீர்களாக!" என்று ஆசீர்வதித்துச் சென்றாள்.

அதன்பின் சூரபன்மன் சிங்கமுகன், தாரகன் ஆகியோருடன் பெரும் படைகளுடன் முதல் விசயமாக குபேரனுடைய நகரமாகிய அழகாபுரிக்குச் சென்றான். அவர்களை வெல்ல முடியாது என்று அறிந்த குபேரன், "நான் உங்களுக்கு அடியன்" என்று கூறச் சூரனும் மகிழ்ந்தான். அங்கு பெருஞ் செல்வங்களைப் பெற்றுக்கொண்டு இந்திரன் ஆட்சிக்குட்பட்ட கிழக்குத் திசை நோக்கிச் சென்றான். இந்திரன் சூரன் வருவதை அறிந்து பயந்து ஓடிப் பதுங்கினான். அசுரர்கள் அவனது நகரைத் தீயிட்டுக் கொளுத்தியபின் அடுத்த திசையில் இருக்கும் அக்கினி புரத்துக்குச் சென்றனர். அக்கினிதேவன் அசுர சேனையை எரித்து நாச மாக்கினான். அதுகண்ட தாரகன் சிவபிரான் கொடுத்த பாசு பதாஸ்திரத்தால் அக்கினி உலகை அழிக்க முயன்றான். அக்கினிதேவன் சிவபிரானின் படைக்கலத்துக்கு எதிர்ப்படை இல்லை என்பதை உணர்ந்து தாரகனிடம் அடிபணிந்தான். அசுரர்கள் அக்கினிதேவனின் செல்வங்கள் அனைத்தையும் கொள்ளையடித்தனர்.

இவ்வாறே சூரபன்மன் இயமன், நிருதி, வருணன், வாயு முதலானோரின் உலகங்களையும் தனது ஆணைக்குட்படுத்திப்

பாதாள உலகத்துக்குச் சென்று ஆதிசேடன் வாழும் நாகர்கள் உலகத்தையும் அடிபணிய வைத்தான்.

பின்பு பாற்கடலிற் பள்ளிகொள்ளும் திருமாலின்மீது படை யெடுத்தான். திருமால் எதிர்த்து அசுர படைகளை அழித்தார். அது கண்டு ஆத்திரம் அடைந்த தாரகன் பல மாயங்கள் புரிந்து அவருடன் கடும்போர் புரிந்தான். திருமால் தனது சக்கராயு தத்தைத் தாரகன்மீது ஏவினார். தாரகன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தால் சக்கராயுதம் அவனை அழிக்க முடியாமல் அவனது கழுத்தில் ஒரு செம்பொன் ஆரமாகச் சேர்ந்தது. அது கண்ட திருமால் அவனது வரத்தின் மகிமையை உணர்ந்து அவனைப் புகழ்ந்து பாராட்ட அவன் பின்வாங்கினான்.

அசுரர்கள் மீண்டும் தேவலோகம் சென்றனர். இந்திரன் அவர்கள் வருகையை அறிந்து தனது மனைவியுடன் குயில் உருக்கொண்டு மறைந்து போயினன். அடுத்துப் பிரமதேவரின் சத்தியலோகம் சென்றபோது பிரமதேவர் அவர்களை வரவேற்றுப் பல படைக்கலங்ளை அளித்து வாழ்த்தி அனுப்பினார். பின்னர் அவர்கள் சிவலோகம் சென்றனர். வாயிலிலே அவர்கள் எல்லோரையும் நிறுத்திவிட்டு சூரபன்மன் நந்திதேவர் அனுமதி பெற்று உள்ளே சென்றான். அங்கு சிவபிரானையும் உமாதேவி யாரையும் வணங்கி அவர்களின் கருணையைப் பெற்றுக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் மீண்டான்.

மேலும் தனக்குச் சிவபெருமானாற் கிடைத்த அண்டங்களுக்குச் சென்று ஆங்காங்கு தனது ஆணையை நிலைநிறுத்திப் பொருத்தமான அசுரர்களை மன்னர்களாக நியமித்தான். வழியிலே தன்னைக் காணவந்த மாயையின் தந்தையும் தனது பாட்டனுமாகிய அசுரேந்திரனை வரவேற்று உபசரித்து வணங்கித் தனது வெற்றிப் பயணங்களின் மகிழ்ச்சியை அவனோடு பகிர்ந்துகொண்டான்.

பின்பு சூரபன்மனும் தம்பியரும் பூவுலகை அடைந்தனர். அதனை அறிந்த தேவர்கள் திருமாலிடஞ் சென்று முறையிட்டனர். அவர் இதெல்லாம் அற்பனாகிய தக்கன் வேள்வியில் கலந்துகொண்டதால் நேர்ந்த வினையென்றும் சிவபிரானின் வரபலத்தாற் சூரனை

வெல்வது இயலாத காரியம் என்றுங் கூறினார். ஆதலால் அவனைச் சென்று காண்பதே நல்லது என்று அவர் ஆலோசனை வழங்க, எல்லோருஞ் சென்று அவனை இடைமறித்து, ஆசிகூறி நின்றனர். தேவர்கள் கூட்டத்தில் நின்ற பதினொரு கோடி உருத்திரர்களைக் கண்ட சூரன், "இவர்கள் சிவபெருமானின் சாரூபம் பெற்றுக் காணப்படுகின்றனர். இவர்கள் யாவர் என்று வினவினான். அவர்களுடைய வரலாற்றைத் திருமால் சூரனுக்குப் பின்வருமாறு கூறினார்:

"படைப்புத் தொழிலில் மூழ்கிச் சிவபிரானை மறந்திருந்த பிரமன் தனது தவறை உணர்ந்து சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தார். பல நாட்களாகியும் பலன் ஏதுங் கிடையாது பரிதவித்து அழுதார். அவரது கண்ணீர்த் துளிகள் எல்லாம் பேய்களாகிப் பெருகின. அதனால் துன்புற்றுப் பிரமன் மயங்கிக் கீழே விழுந்தார். படைப்புத் தொழில் தடைப்பட்டது. அப்பொழுது சிவபெருமான் பிரமதேவருக்கு உணர்வு வரச் செய்து, அவருக்கு அறிவூட்டும் வகையிற் பதினொரு உருத்திர கணத்தவரைத் தமது நெற்றியிலிருந்தும் தோற்றுவித்தார். அவர்கள் தங்களைப் போலவே பதினொரு கோடி உருத்திரர்களைப் படைத்தனர். அதுகண்ட பிரமன் "உயிர்களின் வினைகளுக்கேற்பப் படைத்தலேயன்றி நீவீர் இவ்வாறு படைத்தல் முறையன்று" என்று கூறினார். அவ்வாறாயின் நீரே தொடர்ந்து படைப்புத் தொழிலைச் செய்யும்" என்று கூறித் தாம் படைத்த பதினொரு கோடி உருத்திரர்களையும் தேவர்கள் கூட்டத்திற் சேர்த்துவிட்டுச் சென்றனர். பிரமதேவரும் சிவபெருமானின் பேராற்றலை மறவாது தமது கடமையைத் தொடர்ந்து செய்யலானார்."

இவ்வாறு உருத்திரர்களின் வரலாற்றைத் திருமால் கூறக்கேட்ட சூரன் அடுத்துத் தனது அரசியல்பற்றிய நடவடிக்கைகளில் ஈடுபடலாயினான்.

## 9. சூரன் அரசியல்

சூரபன்மன் தனது இராச்சியத்துக்கு ஒரு தலைநகரை அமைக்கத் திட்டமிட்டான். அவனது ஆணைப்படி தேவதச்சன் தென்கடலின்

மத்தியிற் பலவகை வசதிகளையுங் கொண்ட அழகிய மாநகரம் ஒன்றை அமைத்தான். அதற்கு வீரமகேந்திரபுரம் என்று பெயரிட்டான். அதன் எட்டுத் திக்குகளிலும் ஏமபுரம், இமயபுரம், இலங்கைபுரம், நீலபுரம், சோமபுரம், அவுணர்புரம், வாமபுரம், பதுமபுரம் என்னும் எண்வகை நகரங்களையும் கட்டி எழுப்பினான்.

வீரமகேந்திரபுரம் போன்று மற்றுமொரு பெரிய நகரத்தைச் சிங்க முகனுக்கு வடகடலின் மத்தியில் அமைத்தான். மேரு மலைக்குத் தெற்கிலுள்ள நாவலந்தீவைச் சேர்ந்த ஏமகூடப் பக்கம் மாயாபுரம் என்னும் நகரத்தைத் தாரகனுக்கு நிறுவினான். மற்றுமுள்ள கடல்களின் நடுவே அமைந்த தீவுகளில் அசுரசேனைகள் சுற்றத்தோடு தங்குவதற்குப் பல நகரங்களை ஆக்கினான்.

இவ்வாறு தேவதச்சன் அழகிய பல நகரங்களை அமைத்துச் சூரபன்மனுக்குக் கையளித்தான். சூரபன்மன் முதலில் தனது நகரமாகிய வீரமகேந்திரத்துக்குச் சென்றான். அங்கு நான்முகன், திருமால் முதலியோர் சூரபன்மனுக்கு முடிசூட்ட ஆயத்தஞ் செய்தார்கள். அவனை உரிய ஆசனத்தில் அமர்த்திப் புண்ணிய தீர்த்தங்களால் நீராட்டினார்கள். அதன்பின் அவன் பொன்னாடையையும் அணிகலன்களையும் மலர் மாலைகளையும் அணிந்து அழகுறக் காட்சியளித்தான்.

அரசகோலத்தில் இருந்த சூரபன்மன் அசுரர்கள் போற்றவும் இருமருங்கிலும் தம்பியர் இருவரும் வரவும் சுக்கிராச்சாரியாரும் முனிவர்களும் வாழ்த்தவும் இந்திரன் மனத்தளர்ச்சியுடன் பின்தொடரவுஞ் சென்று சிங்காசனத்தில் வீற்றிருந்தான். அச்சமயத்தில் நான்முகன் இந்திரத் திருமாமுடியை எடுத்து அவனது தலையில் அணிந்து முடிசூட்டுஞ் சடங்கை நிகழ்த்தினார். தேவர்களும் முனிவர்களும் மலர்மாரி சொரிந்து வாழ்த்தினர். அசுரர்கள் அன்புடன் அவன் அடியில் வீழ்ந்து வணங்கினர்.

சூரபன்மன் தனது அரியாசனத்தின் இருமருங்கிலும் திருமால், பிரமன் ஆகிய இருவரையும் நிறுத்தினான். அவன் கட்டளைப்படி குபேரன் வெற்றிலைப் பையையும் இந்திரன் வெற்றிலை உமிழைத் துப்பும் களாசியையும் தாங்கி நின்றனர். அசுரேந்திரன் உடைவாளை ஏந்தி நின்றான். சூரியனும் சந்திரனும் குடை பிடித்தார்கள்.

வருணனும் அவன் புதல்வர்களும் ஆலவட்டம் வீசினர். இயமனும் அக்கினியும் கூட்டத்தை நெறிப்படுத்தினர். கருடர், கந்தருவர், சித்தர் ஆகியோர் யாழ் இசைத்தனர். அரம்பை, ஊர்வசி, மேனகை முதலிய தேவ மாதர் நடனம் ஆடினர். இவ்விதம் தேவர்களும் பிறரும் பலவகைப் பணிகளைச் செய்ய சூரபன்மன் பெருமிதத்தோடு அரியாசனத்தில் வீற்றிருந்தான்.

முடிசூட்டு விழா இனிதே நடைபெற்றதைத் தொடர்ந்து, சூரன் தேவர்களுக்கும் தமது ஆட்களுக்கும் பலவிதமான பணிகளைப் புரியும்வண்ணம் ஆணையிட்டான். அவர்களும் அஞ்சி அவன் இட்ட கட்டளை எல்லாவற்றையும் பணிவுடன் நிறைவேற்றி வருவாராயினர். தனது தம்பிமாருக்கும் முடிசூட்டு விழாக்களை நடத்தி அவரவர் நகரங்களில் இருந்து அரசியற்றுமாறு பணித்தான்.

இவ்விதம் அரசு புரிந்துவரும் நாளிலே சூரபன்மன் தேவதச்சனின் மகள் பதுமகோமளை என்னும் குணவதியை முறைப்படி மணம்புரிந்தான். இயமனது மகள் விபுதையைச் சிங்கமுகனும் நிருதியின் மகள் சவுரியை தாரகனும் திருமணஞ் செய்தனர். இவர்கள் மூவரும் தேவர், அசுரர், இயக்கர் குலத்து அழகிய வேறுபல கன்னியர்களையும் அவ்வப்போது கடிமணம் புரிந்து மனம் போன போக்கில் இன்பம் துய்த்து வரலாயினர்.

ஒருநாள் சூரன் இந்திரன் முதலிய தேவர்களுக்குக் கடலிலுள்ள மீன்களைத் தினந்தோறும் பிடித்துவந்து குவியுங்கள் என்று கட்டளையிட்டான். அவர்கள் மச்சம் மாமிசம் புசிக்காதவர்கள். இருப்பினும் சூரனுக்குப் பயந்து கடல்மீன்களைப் பிடித்து அசுரர்களுக்கு வழங்கும் மீனவர் தொழிலைச் செய்தனர்.

சூரபன்மன் இயற்றிய தவத்தின் பயனாக பதுமகோளைக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. பிள்ளை பிறந்ததைப் பெரிய விழாவாகக் கொண்டாடினான் சூரன். பிள்ளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஒரு நாள் தொட்டிலிலே துயிலும்பொழுது சாளரம் வழியாகச் சூரிய கிரகணம் குழந்தை மீது பட்டது. குழந்தை கோபங்கொண்டு விண்ணிலே பாய்ந்து சூரியனைப் பற்றிக்கொண்டு வந்து தொட்டிற் காலிற் கட்டிவைத்துவிட்டு நிம்மதியாகத் தூங்கிற்று.

வானத்தில் சூரியன் இல்லாததால் உலகம் இருண்டது. அதுகண்டு பிரமதேவர், இந்திரன் முதலானோர் சூரனிடம் முறையிட்டனர். சூரன் மகனிடமே சென்று கேளுங்கள் என்றான். பிரமதேவர் தொட்டிலிற் கிடந்த மகனிடம் சென்று சூரியனை விடுதலை செய்யுமாறு கேட்டார். அதற்குக் குழந்தை "உனது பிரம்மாஸ் திரத்தைத் தருவாயானால் விடுவிப்பேன்" என்றது. அங்ஙனமே பிரமன் தனது படையைக் கொடுக்கக் குழந்தை சூரியனை விடுதலை செய்தது. சூரியனும் அக் குழந்தையின் ஆற்றலை வியந்து தன் மோகனப் படையினைக் கொடுத்தான்.

பானுவை (சூரியனை)க் கோபித்துச் சிறைசெய்தமையால் அப் புதல்வன் பானுகோபன் என்று அழைக்கப்பட்டான். பானுகோபன் மாதர் மயங்கும் அழகினையுடையவனாக வளர்ந்து திருமாலையும் போரிலே வெற்றிகொண்டு வீறுடன் விளங்கிவருங் காலத்து அவனுக்குத் தம்பிமார்களாக அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்னும் மூவரைப் பதுமகோமளை பெற்றெடுத்தாள். சூரனின் மற்றைய மனைவியரிடமும் மூவாயிரம் மக்கள் பிறந்தனர். சிங்கமுகாசுரன் அதிசூரன் என்னும் மகனையும் தாரகன் அசுரேந்திரன் என்னும் மகனையும் பெற்று மகிழ்ந்தனர். இவர்களது மற்றைய மனைவியரும் பலநூறு மக்களைப் பெற்றெடுத்தனர்.

சூரபன்மன் தங்கை அசமுகி என்பாள் முறையான வாழ்க்கையை நடத்தாது அவ்வப்போது தான் விரும்பிய ஆடவரோடு கூடுவதும் முனிவர்களின் தவத்தைக் கெடுப்பதும் தேவர்களுக்கு இடர் புரிவதுமாய தீமைகளைச் செய்து வந்தாள். ஒருநாள் துருவாச முனிவருடன் பலாத்காரமாகக் கூடி வாதாபி, வில்வலன் என்னும் இரு புதல்வர்களைப் பெற்றாள். வாதாபி தாயினைப் போன்றும் (ஆட்டு உருவத்தோடும்) வில்வலன் தந்தையைப் போன்றும் பிறந்தனர். அவர்கள் தந்தையை வணங்கி "உமது தவம் எல்லாம் நாங்கள் பெற அருள வேண்டும்" என்றனர். முனிவர் அதற்கு மறுக்கவே அவர்கள் கோபங்கொண்டு அவரைக் கொல்லுவதற்கு முனைந்தனர். முனிவர் "நீவிர் அகத்திய முனிவரால் மாளக் கடவீர்" என்று சாபமிட்டு மறைந்தார்.

பின்னர் இருவரும் வேறு ஒரு வனத்துக்குச் சென்று முனிவர்களைக் கொல்லுதல் வேண்டி நான்முகனைக் குறித்துத் தவம் இயற்றினர்.

நான்முகன் இவர்களது கெட்ட எண்ணம் குறித்துக் காட்சி அளிக்காதிருந்தார். வில்வலன் வாதாபியை வாளால் அறுத்து அவனது தசையை நெய்யுடன் அவியாக்கி வேள்வி செய்தான். வாதாபி மாண்டது குறித்து மகிழ்ந்து நான்முகன் அவன்முன் தோன்றி வேண்டுவது யாது என்று வினவினார். வில்வலன் அவரைத் தொழுது வாதாபி உயிர்பெற வெண்டும் என்றான். நான்முகன் வேறுவழியின்றி "வாதாபி எழுக!" என்றார். உடனேயே வாதாபி ஆரவாரித்தவாறு எழுந்தான். அதுகண்டு மகிழ்ந்த வில்வலன் "வாதாபி பிற்காலத்தில் காயமுற்று இறக்க நேரிட்டாலும் நான் எழுக என அழைத்ததும் அவன் உயிர்பெற்று வரவேண்டும்" என்று மற்றும் ஒரு வரமும் கேட்டான். நான்முகன் அந்த வரத்தையும் அளித்து மறைந்தார்.

பின்னர் இருவரும் சூரபன்மனை அடைந்து தம்மை அறிமுகஞ் செய்து நான்முகனிடம் தாம் பெற்ற வரத்தைப் பற்றிக் கூறினர். சூரன் மகிழ்ந்து அவர்களைத் தழுவி வாழ்த்தினான். அவர்கள் சிலகாலம் அங்கு தங்கியிருந்து பின் மேற்குத் திசை சென்று ஒரு வனத்தில் ஆச்சிரமம் அமைத்து, அப்பகுதி முனிவர்களைக் கொல்லும் தொழிலை மேற்கொண்டனர்.

வில்வலன் முனிவர் உருக்கொண்டு வழியாற் செல்லும் முனிவரை எதிர்கொள்வான். தனது இல்லத்தில் பகல் உணவு உண்ணும்படி அன்புடன் அழைப்பான். உணவில் வாதாபியை வெட்டிச் சமைத்த ஆட்டு இறைச்சி உணவையும் வைப்பான். முனிவர் உண்டபின் "வாதாபி வருக" என அழைப்பான். வாதாபி முனிவரின் உடலைக் கிழித்துக்கொண்டுவர முனிவர் இறப்பார். பின் இருவருமாக முனிவரின் உடலை உண்டு களிப்பர்.

இவ்விதம் முனிவர்களைக் கொன்று தின்னும் சூரபன்மனின் ஆட்சியிலே மேலும் பல கொடுமைகள் நடந்தன. ஒருநாள் சூரன் இந்திரனைச் சிறை வைக்கும்படி கட்டளையிட்டான். பின்னர் இந்திரனின் மனைவி இந்திராணியைப் பற்றி வாருங்கள் என்று ஆற்றல் மிக்க அசுரப் பெண்களை அனுப்பினான். இக் கட்டளைகளைக் கேள்விப்பட்ட இந்திரன் இந்திராணியுடன் மாயமாக மறைந்து பூவுலகை அடைந்தான்.

இந்திரனையும் இந்திராணியையும் காணாத சூரனின் ஏவலாளர்கள் தேவர்களை அடித்தும் இடித்தும் பலவிதமாகத் துன்புறுத்தி இந்திரன் இருக்கும் இடத்தை அறியமுயன்றனர். கடைசியில் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாது திரும்பிச் சென்று சூரனுக்குச் செய்தியைச் சொன்னார்கள். சூரன் இந்திரனும் இந்திராணியும் இருக்கும் இடத்தை அறிந்துவர ஒற்றர்களை அனுப்பினான்.

இது இவ்வாறாக, வைகுந்தம் சென்றிருந்த இந்திரனின் மகன் சயந்தன் தந்தை தாயாரைக் காணவில்லை என்னும் செய்தி கேட்டு வருந்தித் தனது நகருக்குத் திரும்பினான். நகரின் சீர்கேட்டையும் தேவர்கள் படும் துயரையுங் கண்டு மிகவும் வேதனை அடைந்தான். அத்தருணத்தில் நாரதமுனிவர் அங்கு தோன்றிச் சயந்தனைத் தேற்றினார்.

“மகனே! வருந்தாதே. ஒருவனுக்கு நன்மையும் தீமையும் அவனவன் வினைப்பயனால் வருவது. அறிஞர் எனப்படுவோர் நன்மை வரும்போது துள்ளிக் குதிப்பது இல்லை. துன்பம் வரும்போது அழுது புலம்புவதும் இல்லை. இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் இயல்பானதே என்று உணர்ந்து அமைதியாக இருப்பர். உமது தாழ்வும் அசுரர் உயர்வும் நிலைத்து நிற்பனவன்று. தந்தை இல்லாதவிடத்து தனயன் தந்தையின் கடமைகளைச் செய்யக் கடவன். நீ கவலையை விடுத்து உனது மக்களின் நலன்களைக் கவனிப்பாயாக!” என்று ஆறுதல் கூறி மறைந்தார்.

# 10. அகத்தியர் ஆற்றல்

சூரபன்மனுக்கு அஞ்சி மனைவியோடு பூலோகத்துக்கு ஓடிச்சென்ற இந்திரன் சீர்காழியை அடைந்து, நந்தவனம் ஒன்றை அமைத்துச் சிவபெருமானைப் பூசித்து வந்தான். சூரபன்மனின் ஒற்றர்கள் சிலர் இந்திரனையும் இந்திராணியையும் தேடிச் சீர்காழியை அடைந்தார்கள். அதனை அறிந்த இந்திரனும் மனைவியும் மூங்கில் வடிவந் தாங்கி மறைந்து வாழ்ந்தனர். மூங்கில் வடிவத்தில் சிவபிரானைப் பூசித்து வரும் நாளில் அசுரர்களின் ஆணையால் மழை பெய்யாதிருந்தது. அதனால் வறட்சி ஏற்பட்டு இந்திரன் சிவபிரானைப் பூசிப்பதற்கு அமைத்த நந்தவனமும் வாடலாயிற்று.

இந்திரன் கவலைகொண்டு சிவபிரானைத் தியானஞ்செய்ய, 'இந்திரனே! வருந்தாதே. உனது நந்தவனம் வாடினாலும் அழியாது. இத்தலத்தில் ஆறு ஒன்று பாயப்போகிறது' என்ற அசரீரி வாக்கு ஒன்று எழுந்தது.

அக்காலத்தில் மேருமலையில் அகத்திய முனிவர் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருந்தார். சிவபெருமான் தவத்தின் மிக்க அக் குறுமுனிவர்முன் தோன்றி அவருக்கு மேலும் பலவகை ஆற்றல்களை அளித்துத் தென்திசை சென்று பொதிகை மலையில் தவத்தை மேற்கொள்ளும் வண்ணம் கூறியருளினார்.

அகத்தியர் சிவபெருமானை வணங்கி, "பெருமானே! தங்களை இடைவிடாது பூசிப்பதற்குத் தென்திசையில் ஒரு புனித தீர்த்தம் தந்தருள்வீர்" என்று வேண்டினார். சிவபெருமான் திருக்கயிலா யத்தில் உள்ள ஏழு புண்ணிய நதிகளில் ஒன்றாகிய காவிரி நதியை அங்கு வரவழைத்து அதனைக்கொண்டு செல்லுமாறு பணித்தார். முனிவரும் இறைவரைத் தொழுது காவிரியைத் தமது கமண்டலத்தில் அடக்கிக்கொண்டு தென்திசை நோக்கிப் புறப்பட்டார்.

அகத்திய முனிவர் தாரகன் அரசு புரியும் மாயாபுரியை அண்மித்த வேளை கிரவுஞ்சன் என்னும் கொடிய அசுரன் அவரைக் கண்டான். அவன் பெரும் பெரும் மாயங்கள் செய்வதில் வல்லவன். அகத்தியரைத் திசைதிருப்பிக் கொல்லும் எண்ணத்துடன் அவர் செல்லும் வழியில் மலையுருக்கொண்டு நின்றான். அம் மலைக்கிடையே செல்லுதற்குரிய ஒரு வழி தெரிந்தது. முனிவர் அவ்வழியாற் செல்ல, அவ்வழி மறைந்து மற்றொரு வழி தோன்றியது. அப்பொழுது கிரவுஞ்சன் மாயத்தைத் தனது ஞானசக்தியால் உணர்ந்து கொண்ட அகத்தியர், "கொடியவனே நீ உன் அசுரவடிவம் நீங்கி, இந்த மலையாகவே என்றும் நிற்பாய். முடிவில் சிவகுமாரனது வேற்படையால் அழிவாய்!" என்று சாபமிட்டார். அன்று முதல் கிரவுஞ்சன் வேறு வடிவங்கள் எதுவும் எடுக்கமுடியாது மலை வடிவாகவே நின்றான்.

அகத்தியர் செல்லும் வழியிற் சிறந்த சிவத்தலமாகிய காசி தென்பட்டது. அங்கு சென்று விசுவநாதப் பெருமானை வணங்கி

விட்டுத் தொடர்ந்து செல்கையில் வழியில் மேருமலைக்குப் போட்டியாக ஓங்கி வளர்ந்துள்ள விந்திய மலை குறுக்கிட்டது. அதனைப் பார்த்துத் தான் செல்வதற்குச் சிறிது வழிவிடும்படி முனிவர் கேட்டார். விந்திய மலை, "சூரிய சந்திரர் வழிகளையே மறித்துத் திருமால்போல நீண்டு நிற்கும் நான் குறுகிய உனக்கு அஞ்சி விலகி நிற்பதோ?" என்று ஆணவத்துடன் கூறியது.

அகத்தியர் சிவபெருமானை மனத்தில் எண்ணித் தமது கையை உயர்த்தினார். கை விந்திய மலையின் உயரம்வரை நீண்டது. நீண்ட தமது கையை மலையின் உச்சியில் வைத்து ஊன்றி அமர்த்தினார். விந்திய மலை தாழ்ந்து பாதாளத்தில் அழுந்தியது. சூரியன், சந்திரன், மற்றும் தேவர்கள் எல்லோரும் முனிவரைத் தொழுதனர். விந்திய மலையும் அறிவு பெற்று, "என் குற்றம் பொறுத்திடுவீர்" என்று அகத்தியரைத் தொழுதது. தான் எப்பொழுது எழுவது என்றும் கேட்டது. அதற்கு முனிவர் தாம் பொதிகைமலை சென்று திரும்பும்பொழுது அதுவும் எழும்பும் என்று பதில் அளித்து அப்பாற் சென்றார்.

அவரின் வருகையை முனிவர்களைக் கொன்று தின்னும் வில்வலனும் வாதாபியும் கண்டனர். வில்வலன் வழக்கம்போல முனிவர் வேடந் தாங்கி அகத்தியரை அணுகித் தனது இல்லத்துக்கு அழைத்தான். அகத்தியரும் அவ்விதமே செய்ய, அவரை நன்கு உபசரித்து, விருந்துண்ண வேண்டினான். விருந்தில் வாதாபியாகிய ஆட்டை வெட்டி அதன் இறைச்சியையும் உணவாக்கிப் படைத்தான். முனிவர் அவன் அன்போடு பரிமாறிய உணவை உண்டு ஒரு பக்கத்தில் இளைப்பாறினார்.

அச்சமயம் அவரைக் கொல்லும் எண்ணத்துடன் வில்வலன் அவர் பக்கம் வந்து "வாதாபி எழுக" என்றான். வாதாபி வெளிவரமுன், "இந்த முனிவன் செய்யும் செயல் இன்னது என்று அறியாது முன்பு கடலைக் குடித்தான். இன்று எனது ஊனை உண்டான். இத் தீயவனின் உடலைக் கிழித்துக்கொண்டு வருகிறேன் அண்ணா" என்று சிங்கம்போலக் கர்ச்சித்தான். இவர்கள் சூழ்ச்சியை உணர்ந்து கொண்ட முனிவர் "வாதாபி சீரணிப்பாயாக" என்று சொல்லித் தமது வயிற்றைத் தடவினார். அவ்வளவில் அவன் மாண்டு ஒழிந்தான். அதனை அறிந்த வில்வலன் தனக்குரிய

அசுர வடிவத்தை எடுத்துக்கொண்டு முனிவரைக் கொல்ல முயன்றான். முனிவர் தமது கரத்தில் தருப்பைப் புல் ஒன்றை எடுத்து அதனைச் சிவப்படையாக நினைந்து அவன்மீது ஏவினார். அவ்வளவில் வில்வலனும் மாண்டான்.

துருவாச முனிவரின் மைந்தர்களான வில்வலனையும் வாதாபியையும் கொன்ற பாவம் அகத்தியரைத் தொடர்ந்தது. அவர் கொங்கு நாட்டை அடைந்ததும் அங்கு ஓரிடத்தில் சிவலிங்கத்தை அமைத்து அப்பாவத்தைப் போக்கச் சிவபிரானைப் பூசித்தார்.

## கணபதி கவிழ்த்த காவிரி

இந்திரன் மறைந்து வாழும் சீர்காழிக்கு நாரதமுனிவர் வந்தார். அவரது வருகையை அறிந்த தேவேந்திரன் சூரனுடைய ஒற்றர் அறியாவண்ணம் தான் கொண்டிருந்த மூங்கில் வடிவத்தை நீக்கி முனிவரை வரவேற்றான். முனிவர் இந்திரனின் அரசும் வாழ்வும் அரன் அருளால் விரைவில் அவனுக்கு வந்தடையும் என்று கூறி, அகத்திய முனிவர் தென்திசை நோக்கி வரும் செய்தியையும் வழியில் நடந்த சம்பவங்களையும் தெரிவித்தார். அச்சமயம் அகத்தியர் கொங்கு நாட்டில் தங்கியிருக்கின்றார் என்றும் விநாயகப் பெருமானை வழிபட்டால் அவரது கமண்டலத்தில் அடங்கியிருக்கும் காவிரி இந்திரனின் நந்தவனத்தைச் செழிக்கச் செய்யும் என்றும் ஆலோசனை வழங்கிச் சென்றார்.

அது கேட்டு இந்திரன் மகிழ்ந்து விநாயகப் பெருமானை நினைத்துப் பூசித்தான். விநாயகப் பெருமான் அவன்முன் தோன்றி அவன் விருப்பத்தை நிறைவேற்றுவதாகக் கூறிக் கொங்கு நாட்டுக்கு எழுந்தருளினார். அங்கு அகத்தியர் சிவபிரானைப் பூசிக்கும் திருவிடத்துக்கு ஒரு காகத்தின் வடிவிற் சென்று அவரது கமண்டலத்தில் அமர்ந்தார்.

காகத்தைக் கண்ட முனிவர் அதனைக் கையால் துரத்தினார். காகம் கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டுப் பறந்தது. கமண்டலத்தில் அடங்கிக் கிடந்த காவிரி நீர் கட்டுமீறிப் பாய்ந்தது.

விநாயகர் காகவுரு நீங்கி அழகிய ஒரு சிறுவனாகக் காட்சி

யளித்தார். கமண்டல நீரைத் தட்டி ஊற்றிய மாயச் சிறுவனைப் பிடித்துக் குட்ட வேண்டும்போல இருந்தது முனிவருக்கு. கையை உயர்த்திக்கொண்டு சிறுவனை நோக்கிச் சென்றார். சிறுவன் கிட்ட நிற்பதுபோல எட்டவும் எட்ட நிற்பதுபோலக் கிட்டவுமாகக் காட்சியளித்து முனிவரை அலைக்களித்தான். முனிவர் தளர்ச்சியுற்று ஓர் இடத்தில் அமர்ந்தார்.

அப்பொழுது விநாயகப் பெருமான் தமது சுயவடிவத்தைக் காட்டி, "முனிவரே! தேவேந்திரன் என் தந்தையின் பூசையின்பொருட்டு வைத்த நந்தவனம் மழையின்றி வாடியதால் எம்மை வழிபட்டான். அவனுக்கு உதவும் வகையில் நீர் தந்தையின் அருளால் இங்கு கொண்டுவந்த காவிரியைப் பாயவிட்டோம். வேண்டியதைக் கேட்பீராக!" என்று கூறியருளினார்.

"ஐயனே! அறியாமையால் தங்கள் தலையிற் குட்ட வந்தேன். அந்தப் பிழையைப் பொறுத்தருளி, வருங்காலத்தில் தேவரீரைத் தங்கள் தலையிற் குட்டிக் கும்பிடுவாரின் குறைகளைப் போக்கியருள வேண்டும்" என்றார். பிள்ளையார் அவ்வண்ணமே ஆகுக என்றருளினார். முனிவர் தொடர்ந்து, கமண்டல நீர் முழுவதையும் தாங்கள் ஊற்றிவிட்டமையால் அடியேன் பூசைக்குப் புனித நீரும் வேண்டும்" என்று கேட்டார். கணபதியார் தமது திருக்கரத்தை நீட்டிக் காவிரி நீரைச் சிறிது அள்ளிக் கமண்டலத்தில் நிரப்பி, இந்த நீர் வற்றாது உமக்கு என்றும் உதவும் என்றருளி மறைந்தார்.

## ஐயனார் வரலாறு

கணபதி கவிழ்த்தருளிய காவிரி பாய்ந்து தேவேந்திரனின் நந்தவனத்தைச் செழிக்கச் செய்தது. அதனைக் கண்ட இந்திரன் விநாகப் பெருமானின் திருவிளையாடலை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைந்தான். நந்தவன மலர்களைக்கொண்டு சிவபிரானை முறைப்படி பூசித்து வந்தான்.

அங்ஙனம் பூசித்துவரும் நாளில் அசுரர்களின் கொடுமைகளைத் தாங்காத தேவர்கள் சீர்காழிக்கு வந்து, "எங்கள் அரசே தேவலோகத்தை நீத்துப் பூவுலகத்தில் நீ தனித்து இருப்பது முறையோ. எங்கள் துயரைப் போக்கும் நினைவு உமக்கு

இல்லையோ?" என்று முறையிட்டனர்.

அதற்கு இந்திரன் சிவபிரானிடத்து அளப்பரும் வரங்களைப் பெற்ற சூரன் தன்னைச் சிறையில் வைத்து இந்திராணியைக் கவர்ந்து செல்ல நினைத்தான் என்றும் அதனால் இந்திராணியுடன் தப்பியோடும் நிலை வந்ததென்றும் அவர்களுக்கு விளக்கி, தேவர்களின் நலனுக்காகவே சீர்காழியில் தான் சிவபிரானைப் பிரார்த்திப்பதாகவுஞ் சொன்னான்.

பின்னர், இந்திரன் தேவர்களையும் அழைத்துக்கொண்டு திருக்கயிலைக்குச் சென்று இறைவரிடம் அசுரர்களின் கொடுமைகள் பற்றி முறையிடத் தீர்மானித்தான். அதனை இந்திராணிக்குத் தெரிவித்தபோது, அவள் அங்கு தனித்து இருக்க அஞ்சித் தானும் கூடவருவதாகக் கூறினாள். அதற்கு இந்திரன் ஐயனார் காவலாக இருக்கையில் அஞ்சவேண்டியதில்லை என்றான். அந்த ஐயனது சிறப்பு என்னவென்று இந்திராணி வினவ, இந்திரன் அரிகர புத்திரனது வரலாற்றைப் பின்வருமாறு கூறினான்:

"முன்னொரு காலத்திலே தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமுதுண்ணும் ஆசையாற் பாற்கடலைக் கடைந்தனர். விநாயகப் பெருமானை வணங்காத குற்றம் அவர்களைத் தொட்டது. அமுதுக்குப் பதிலாகப் பாற்கடலிலிருந்து கொடிய நஞ்சு திரண்டு அனைவரையும் வருத்தியது. எல்லோருஞ் சென்று சிவபிரானுக்கு முறையிட்டனர். கருணையே வடிவமாகிய சிவபெருமான் நஞ்சைத் தாமே உண்டு தமது கண்டத்தில் அடக்கிக்கொண்டார். தொடர்ந்து கடைந்தால் அமுதம் எழும் என்றும் அவர்களுக்குக் கூறியருளினார். அவர்கள் மீண்டும் கடைந்தபோது அமுதம் எழுந்தது. அதனைப் பங்கிடுவதில் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையிற் கருத்து வேறுபாடு தோன்றவே அவர்கள் போர் செய்யத் துணிந்தனர்.

அவர்களது பிரச்சனையைத் தீர்த்தற்பொருட்டுக் காக்குந் தெய்வமாகிய திருமால் ஓர் அழகிய மோகினியைத் தோற்றுவித்து அவர்கள்முன் அனுப்பினார். மோகினி அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு அமுதம் வேண்டுமா அல்லது நான் வேண்டுமா" என்று கேட்டாள். உடனே அசுரர்கள் அனைவரும் முந்தியடித்துக் கொண்டு எங்களுக்கு நீதான் வேண்டும் என்று அவள் பக்கம்

சென்றனர். அது கண்டு திருமால் அமுதினைத் தேவர்களுக்கு வழங்கினார்.

மோகினியுடன் முதலில் யார் கூடுவது என்னும் போட்டியில் அசுரர்கள் தம்முட் சண்டையிட்டு ஒருவரை ஒருவர் கொன்றனர். அந்தக் குழப்பத்தைப் போக்கத் திருவுள்ளங்கொண்ட சிவபிரான் ஒரு மோகனனைத் தோற்றுவித்து அங்கு அனுப்பினார். மோகினி அந்த மோகனனுடன் கைகோத்து நடந்தாள். அதனைக் கண்ட அசுரர்கள் மோகனனைக் கொல்லத் துணிந்தனர்.

அவ்வேளை மோகினியும் மோகனனனும் மாயமாய் மறைந்து போய் நாவலந் தீவில் உள்ள சோலை ஒன்றிற் கூடினர். அதன் விளைவாக, கரிய நிறமும் சிவந்த கேசமும் சவுக்கு ஆயுதமும் தாங்கிய ஐயனாரை மோகினி பெற்றெடுத்தாள். அரி தோற்றுவித்த பெண்ணுக்கும் அரன் தோற்றுவித்த ஆணுக்கும் பிறந்தமையால் ஐயனார் அரிகர புத்திரன் என்று அழைக்கப்பட்டார். திருமாலும் சிவபிரானும் இணைந்து ஐயனாருக்குப் பல வரங்களை நல்கி, தேவலோகத்தாரும் பூவுலகத்தாரும் தொழுது ஏத்தும் மேன்மை யையும் அளித்தனர்.

அத்தகைய ஐயனார் உன்னைக் காத்தருள்வார். "நீ எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை" என்று இந்திரன் கூற இந்திராணியும் அமைதியுற்றாள்.

அதன்பின் இந்திரன் ஐயனாரை மனத்தில் நினைத்துப் போற்றினான். ஐயனார் யானை வாகனத்தில் பூரணை, புட்கலை என்னும் தமது இரு தேவியருடன் பூதப்படை புடைசூழ இந்திரன்முன் தோன்றினார். "ஐயனே! நான் திருக்கயிலை சென்று திரும்பும்வரை இந்திராணிக்கு எவ்வித துன்பமும் நேராதவகை காத்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தான். ஐயனார் அவ்விதமே செய்வதாகக் கூறியருளி, தமது வீரர்களில் வாட்போரில் வல்ல மாகாளனை இந்திராணிக்குக் காவலாக நியமித்துவிட்டுச் சென்றார்.

அதன்பின் தேவர்களுடன் இந்திரன் திருக்கயிலைக்குச் சென்றான். அங்கு நந்தி தேவருக்குத் தான் வந்த காரணத்தைக் கூறிச் சிவபிரானைக் காண அனுமதி கேட்டான். நந்திதேவர் இறைவர்

சனகர் முதலானோருக்கு ஞானோபதேசம் செய்து கொண்டிருப் பதால் அவரைக் காணமுடியாது என்று கூறினார். அதனால் ஞானோபதேசம் முடியும்வரை இந்திரன் முதலானோர் திருக்கயிலாயத்திலேயே தங்கி இருக்க முடிவு செய்தனர்.

# 11. அசமுகி ஆணவம்

இந்திரன் திருக்கயிலை சென்று அதிக நாட்களாகியும் திரும்பி வரவில்லை. அது குறித்துச் சீகாழியில் இந்திரனின் நந்தவனத்தில் தவக்கோலத்தில் இருந்த இந்திராணிக்குக் கவலை மிகுந்தது. அத்துடன் அவளுக்கு வேறொரு சோதனையும் வந்தது.

சூரனின் தங்கை அசமுகி தோழி துன்முகியுடன் சீர்காழியில் உள்ள நந்தவனத்துக்கு வந்து சேர்ந்தாள். அவளை இனங்கண்டு கொண்ட வீரமாகாளர் மறைந்திருந்து அவள் செய்கைகளைக் கவனித்தார். நந்தவனத்திலே தவஞ் செய்துகொண்டிருந்த இந்திராணியை அசமுகி கண்டாள்.

‘‘அயிராணி!(இந்திராணிக்கு மற்றொரு பெயர்) எனது அண்ணன் சூரபன்மன் உன்னை அடைய விரும்புகிறான். அவன் உனக்கு இணையான அழகுடையவன். பல அண்டங்களுக்கு அரசன். அவனுக்குப் பயந்து ஒளித்திருக்கின்ற இந்திரனை விட்டு என்னுடன் வா. நான் உன்னை எனது அண்ணனிடம் சேர்ப்பேன்” என்றாள். ஆட்டு முகத்தவள் கூறிய அடாத சொற்களைக் கேட்டுப் பதைபதைத்த இந்திராணி காதுகளைக் கைகளாற் பொத்திக் கொண்டாள். பின்னர் ஒருவாறு தெளிந்து, “பிரமதேவரின் மகன் காசிபமுனிவரின் மகளாகிய நீ இவ்வாறு பேசலாமா? தருமத்துக்கும் ஒழுக்கத்துக்கும் மானம் மரியாதைக்கும் ஒவ்வாத தீய சொற்களைக் கூறலாமா? கற்புடைய மகளிர் கட்டிய கணவனையன்றி வேறெவரையும் மனத்தாலும் நினைக்க மாட்டார் என்பதனை நீ அறியாய்போலும். உனது பேச்சு உனக்கே அழிவைத் தரத்தக்கது. அதனால் நல்லதையே நினைத்து, நல்லதையே பேசி, நல்லதையே செய்வாயாக’’ என்றாள்.

அது கேட்ட அசமுகி சினமுற்று, “சரியாகவே சொன்னாய். உனது

நல்வாழ்வையே நினைத்தேன். நீ நன்றாக வாழவேண்டும் என்றே சொன்னேன். உன்னை நல்ல இடத்திலே சேர்ப்பேன், காண்பாயாக" என்று இந்திராணியின் கையைப் பற்றி இழுத்தாள். உடனே அசமுகிக்கு எதிரில் வீரமாகாளர் வாளோடு பாய்ந்து நின்று இந்திராணியை விடும்படி கூறினார்.

அசமுகி சற்று வியந்து, "மூவரும் தேவரும் மற்றும் எவரும் என்னை எதிர்க்க அஞ்சுவர். அஞ்சாது என்முன் நிற்கும் நீ யார்" என்று கேட்டாள். அதற்கு மாகாளர், "மூவுலகங்களையும் காப்பவனும் கருமேகம் போன்ற நிறத்தவனும் வெள்ளை யானையை வாகனமாக உடையவனுமாகிய ஐயன் இந்திராணியைக் காக்கும் பணியை என்னிடம் தந்துள்ளான். என்பெயர் வீரமாகாளன்" என்றார்.

அவர் கூறியவை ஐயனாருக்கும் பொருந்தும்; இந்திரனுக்கும் பொருந்தும். அசமுகி மாகாளரை இந்திரனின் ஏவலாள் எனக்கொண்டு, மிக வெகுண்டு தனது சூலத்தை அவர்மீது எறிந்து போர் தொடுத்தாள். சிறிது நேரத்திலேயே அவரைப் போரில் வெல்வது கடினம் என்பதையும் உணர்ந்துகொண்டாள். ஒரு கட்டத்தில் இந்திராணியை இழுத்துக்கொண்டு தப்பியோட முயன்றாள். மாகாளர் இந்திராணியைத் தொட்ட அவளது கரத்தை வெட்டி இந்திராணியை விடுவித்தார். அவளுக்கு உதவி செய்யத் துன்முகி ஓடிவந்தாள். அவளது கையையும் மாகாளர் வெட்டினார்.

அசமுகி அவமானத்தால் வருந்தி அழுதாள். பின்னர் கொதித்து எழுந்தாள். இந்திராணியைப் பிடித்து உண்பேன் என்று இடிபோல் முழங்கினாள். இந்திராணியையும் இந்திரனையும் மற்றுமுள்ள தேவர்களையும் சிறைப்படுத்துவேன். அதைச் செய்யேனாயின் நான் சூரபன்மனின் தங்கையே அல்லள்" என்று சபதஞ் செய்து அவ்விடத்தைவிட்டு அகன்றாள்.

நாரதமுனிவர் திருக்கயிலைக்குச் சென்று நந்தவனத்தில் நடந்தவை அனைத்தையும் அங்கு சிவபிரானைத் தரிசிக்கக் காத்திருந்த இந்திரனுக்கு உரைத்தார். இந்திரன் கவலையுற்றுத் தன்னையே நொந்துகொண்டான். தனது தீவினையால் இறைவரைக் காணவும் தனக்குக் கருணை கிட்டவில்லை என்பதை உணர்ந்தான். பின்னர் நந்திதேவரிடம் விடைபெற்றுக்கொண்டு சீர்காழியை அடைந்தான்.

அங்கு அசமுகியின் சபதத்தைப் பற்றி இந்திராணியுடன் ஆலோசித்து, அவ்விடத்தைவிட்டு நீங்குவதே நல்லதென முடிவு செய்தான். அதன் பிரகாரம் இந்திராணியை அழைத்துக் கொண்டு மேருமலை சென்று அங்கு தேவர்களுடன் மறைந்திருந்தான்.

வீரமாகாளரால் கை துண்டிக்கப்பட்ட அசமுகி தன் தோழி துன்முகியுடன் தனது தமயன் சூரபன்மனைக் காணச் சென்றாள். அவன் சிறப்போடு அரசுபுரியும் வீரமகேந்திரபுரத்துக்கு மூதேவியைப்போலச் சென்று சேர்ந்தாள். தெருவெல்லாம் பலவிதமாகப் புலம்பியவாறு அவள் செல்வதைக் கண்ணுற்ற அசுரர்கள் அவளதும் துன்முகியினதும் துண்டிக்கப்பட்ட கைகளைக் கண்டு சீறி எழுந்தனர்.

சூரபன்மன் அவைக்களத்துட் சென்று அசமுகி தாயாகிய மாயையையும் வலிமை மிக்கத் தமயன்மார்களையும் உறவினர்களையும் எண்ணிக் கதறி அழுதாள். பின்னர் சூரபன்மனை நோக்கி, "அண்ணாவோ! இந்திராணியைப் பூவுலகிற் கண்டு அவளை உனக்குக் கொண்டுவந்துதர எடுத்தோம். அப்பொழுது ஒரு தேவன் வந்து எங்கள் கரங்களை வெட்டி இந்திராணியை மீட்டான்" என்று கூறிப் புலம்பினாள்.

அதனைக் கேட்ட சூரனின் நெஞ்சம் விம்மியது; விழிகள் கனல் கக்கின; பற்கள் நறநறத்தன; தோள்கள் புடைத்தன; உடல் வியர்த்தது. அவனது பயங்கரக் கோபத்தைக் கண்டு பலரும் நடுங்கினர். சூரன் சிங்கம்போற் பின்வருமாறு கர்ச்சித்தான்:

"நம் ஏவலில் மீன் பிடித்துத் திரிந்த இந்திரன் காட்டிலே மறைந்து ஒரு காளானைக் கொண்டு இவர்கள் கரங்களைத் துணித்தான் என்றால், இனி மனிதர்களும் நம்மை அழிப்பாரன்றோ! இந்திரனைச் சிறியனென்று முன்னரே சிறைசெய்யாதது என் குற்றம். சரி, நான்தான் தவறு செய்துவிட்டேன் என்றால், என் தம்பியர் எங்கே போனார்கள்? என் மக்கள் எங்கே போனார்கள்? நிகரில்லாத் தேரும் அளவில்லாப் படைகளும் இருந்தென்ன? சூரன் என்னும் பெயர்தான் இருந்தென்ன? இவ்வளவு பெருமைகளும் இருந்தென்ன? என் தங்கையின் கையை வெட்டிவிட்டானே ஒரு பாதகன்! யாரும் அற்றவள்போல் அவள் அவமானப்பட நேர்ந்ததே! நன்று நன்று

என் வீரம்! நன்று நன்று என் அரசியல்!"

இவ்விதம் சூரபன்மன் இடிமின்னலோடு கூடிய நெருப்பு மழையெனப் பொழிந்துநிற்க, அவனது மைந்தன் பானுகோபன் அவ்விடம் ஊழித் தீயென குதித்து, "தந்தையே! தங்கள் வெகுளியை யான் தீர்ப்பேன்! இம்மாதர் கரங்களைத் துணித்த மாகாளனையும் இந்திரனையும் அவனது மனைவியையும் மற்றுமுள்ள தேவர்களையும் விரைவிற் பிடித்துக்கொண்டு வருவேன். அவர்களைக் காணேனாயின் தேவர் உலகைத் தீக்கிரையாக்கி, எஞ்சியுள்ள தேவர்களையும் அவரது குடும்பங்களையும் ஒரு நாழிகைப்பொழுதில் இழுத்துவருவேன். விடைதருக!" என்று வீரம் பேசினான்.

அதுகேட்ட சூரபன்மன் மனந்தெளிந்து பானுகோபனுக்கு விடை கொடுத்தான். அதன்பின் பிரமதேவரை அழைத்து அசமுகியினதும் துன்முகியினதும் கைகளை முன்புபோல் முழுமை பெறச் செய்வித்தான். பின்னர் தனது தங்கையின் கரம் வெட்டப்பட்டதைக் கண்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது வறிதே இருந்த சூரிய சந்திரர்களையும் மற்றுமுள்ள கோள்களையும் சிறையிலிட்டான். அதையறிந்த நான்முகன் அங்குவந்து, "சூரியன், சந்திரன், கோள்கள், நட்சத்திரங்கள், திசைக்காவலர்கள் ஆகியவர்கள் உனது ஏவலில் நிற்பவர்கள். அவர்கள் இல்லாது உலகம் நடவாது. ஆதலால் அவர்களின் பிழைகளைப் பொறுத்து விடுதலை செய்வாயாக!" என்று கூற, சூரனும் அவ்வாறே அவர்களை விடுதலை செய்தான்.

தந்தையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு சென்ற பானுகோபன் போர்க்கோலம் பூண்டு படைகள் சூழப் பூவுலகை அடைந்தான். அங்கு துன்முகியின் உதவியுடன் நந்தவனத்தை அடைந்து வீரமாகாளரையும் இந்திரனையும் இந்திராணியையும் தேடினான். அவர்களைக் காணாத கோபத்தினால் நந்தவனத்தையும் அதனைச் சூழ்ந்த இடங்களையும் அழித்தான். நிலவுலகம் எங்கும் தேடியும் அவர்களைக் காணவில்லை. அதனால் அவன் தனது படைகளுடன் தேவலோகத்துக்குச் சென்று அதன் தலைநகரான அமராவதியை முற்றுகையிட்டான்.

அதனை அறிந்த இந்திரனின் மகன் சயந்தன் செய்வதறியாது திகைத்தான். தந்தை தாயரும் மற்றும் தேவர்கள் பலரும் சிவபிரானைக் காணச் சென்றுவிட்டார்கள். இன்னும் பலர் சூரனுக்குப் பயந்து ஒளித்து வாழுகின்றனர். அவர்களைப் போன்று பயந்தோடிப் பதுங்க அவன் விரும்பவில்லை. மேலும் தந்தையில்லாத இடத்துத் தேவலோகத்தைக் காக்கும் ஒரு பொறுப்பும் அவனுக்கு உண்டு. அதனால் தனித்தேனும் போராடித் தனது கடமையைச் செய்யத் துணிந்தான். அவனது துணிவைக் கண்ட தேவர்கள் அவனைப் பாராட்டி அவனுக்கு உதவியாகப் படைகளைத் திரட்டினர்.

சயந்தன் ஐராவதத்தை நினைத்தான். அது வந்து நின்றது. அதன்மீது ஏறிக்கொண்டு படைகள் புடைசூழப் பானுகோபனை எதிர்கொண்டான். தமக்குப் பயந்து முன்னர் அடங்கியிருந்த தேவர்கள் போருக்கு வருவதைக் கண்ட அசுரர்கள் வியப்பெய்தினர்.

இரு பகுதியினருக்குமிடையிற் பெரும்போர் நடந்தது. சயந்தன் தனது வில்லால் ஆயிரக்கணக்கில் அசுரர்களைக் கொன் றொழித்தான். அவனது ஊர்தியான ஐராவதமும் பகைவர்களைத் துதிக்கையால் மோதியும் காலால் தேய்த்தும் தந்தத்தினால் குத்தியும் கடும்போர் செய்தது. எனினும் அசுரர் படைகள் முன்னேறியவண்ணம் இருந்தன. அதனைக் கண்ட சயந்தன் மாயப்போர் புரிந்தான். அவனின் மாயங்களைத் தாங்கவொண்ணாது அசுரப் படைகள் அழிந்து பின்வாங்கின. அசுரர் படைகள் அழிவதைக் கண்ட பானுகோபன் அதற்கான காரணம் சயந்தனின் மாயங்களே என்பதை உணர்ந்தான். அவன் மாயங்களை அழிப்பதற்குத் தனக்கு முன்னர் சுக்கிராச்சாரியார் சொல்லிக் கொடுத்த மூலமந்திரத்தை ஓதினான். அவ்வளவில் சயந்தனின் மாய வடிவங்கள் நீங்க ஐராவதத்தின்மீது அவன் தனியாகத் தோன்றினான்.

பானுகோபன் தனது சேனைகளுடன் தனித்து நின்ற சயந்தனை வளைத்துக் கணைகளை எய்தான். சயந்தன் உடல் முழுவதையும் அம்புகள் தைத்தன. அதனால் அவன் மூச்சிழந்து விழுந்தான். அதுகண்ட ஐராவதம் கடுஞ் சினமுற்றுப் பானுகோபனின் படைகளைக் கலக்கி அழித்தது. அதன் தந்தங்கள் முறியும்வரை

உக்கிரமாகப் போர் செய்தது. ஒரு கட்டத்திற் பானுகோபன் அத்தெய்வக் களிற்றின் கன்னத்தைக் கடுமையாகத் தாக்கவே அதுவும் கதறி வீழ்ந்தது.

ஈற்றில் பானுகோபன் மூச்சுத் தெளிந்த சயந்தனையும் மற்றுமுள்ள தேவர்களையும் கைது செய்தான். தனது ஆட்களைக் கொண்டு பொன்னகரைத் தீக்கிரையாக்கினான். அழியாத அமராவதியும் அழிந்தது. செல்வம் மிகுந்த பொன்னகரம் சுடலைக் காடாயிற்று. அமரர்கள் சிறைக் கைதிகளாயினர். இந்திரன் வறுமை அடைந்தான். செல்வம் நிலையில்லாதது என்னும் ஆன்றோர் கூற்று உண்மையாயிற்று.

பானுகோபன் வீரமகேந்திரம் சென்று, "தந்தையே! எங்கு தேடியும் மாகாளனையும் இந்திரனையும் இந்திராணியையும் காணமுடிய வில்லை. அமராவதி நகரை அழித்து சயந்தனையும் மற்றுமுள்ள தேவர்களையும் சிறைசெய்து இதோ கொண்டுவந்துள்ளேன்!" என்று சூரபன்மனுக்குப் பெருமிதத்தோடு கூறினான். அதனைக்கேட்ட சூரன் மகிழ்ச்சிப் பெருக்கால் மகனை மார்போடு அணைத்துத் தழுவினான்.

பின்னர் சூரன் வாள்வீரர்களை நோக்கி அங்கு கைதிகளாகக் கொண்டுவரப்பட்ட தேவர்களுடைய உடல் உறுப்புகளைத் துண்டு துண்டாக வெட்டும்படி கட்டளையிட்டான். அவ்விதமே அவ்வீரர்களும் அசமுகி மகிழும்படி தேவர்களுடைய கை கால்களை யெல்லாம் வெட்டினார்கள். எனினும் தேவர்கள் அமுதம் உண்டவர்களாதலால் வெட்ட வெட்ட உறுப்புகள் உடனுக்குடன் பொருந்திநின்றன. அது கண்டு சூரன் வியந்தான். அவர்களைக் கொல்லுதலும் அரிது என்பதை உணர்ந்தான். நரகத்துக்கு ஒப்பான சிறைச்சாலையில் அவர்களை அடைத்துக் காவல் செய்யும் வண்ணம் பணித்தான்.

பானுகோபனோடு போரிட்டுத் தந்தங்கள் ஒடியப்பெற்ற ஐராவதம் பூவுலகஞ் சென்று அங்கு ஒரு காட்டில் சிவலிங்கத்தை வைத்துப் பூசித்து வந்தது. அதன் பயனாக அது தன் மருப்புகளை மீளப் பெற்று மகிழ்ச்சியடைந்தது. அத்திருவிடம் இன்று திருவெண்காடு என்னும் தலமாக விளங்குகிறது.

அமராவதி அழிவுற்றதையும் தனது மைந்தன் சயந்தனும் தேவர்களும் சிறைப்பட்டதையும் அறிந்து இந்திரன் கவலை கொண்டான். எனினும் உறுதியோடு மேருமலையிற் பலகாலம் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தான். அவன் தவத்துக்கு இரங்கிய சிவபிரான் தாம் இமயவன் மகளாகப் பிறந்து தவஞ் செய்துகொண்டிருக்கும் உமையை மணந்தபின் ஒப்பற்ற குமரன் ஒருவனைத் தருவதாகவும் அக்குமரன் அசுரர்களை அழித்துத் தேவருக்கு வாழ்வு அளிப்பான் எனவுங் கூறியருளினார்.

எனினும் அசுரர் கொடுமைகளைப் பொறுக்க முடியாத தேவர்கள் அவசரப்பட்டு மன்மதனை அனுப்பி இறைவரின் யோகநிலையைக் கலைக்க முயன்றனர். இறைவர் மன்மதனை எரித்தார். அதுகண்டு தேவர்கள் மீண்டும் குறையிரந்து நிற்க, இறைவரும் அவர்கள் பொருட்டு உமாதேவியாரை மணந்து பின் நெற்றிக் கண்ணால் தேவரீரைத் தந்தருளினார்.

இவ்வளவும் இந்த அண்டத்தில் மட்டும் நடந்தவை. ஏனைய ஆயிரத்தேழு அண்டங்களில் நடந்த சூரனின் அட்டூழியங்களை யாம் அறியோம். அவற்றையெல்லாம் தேவரீரல்லாது வேறு யார் அறியவல்லார்? பிரமதேவர் நித்தமும் சூரனின் அவைக்குச் சென்று பஞ்சாங்கம் வாசித்து வருகின்றார். திருமாலோ அவனுடன் போர் செய்து அடங்கியுள்ளார். சிவபெருமானோ அவனுக்கு எல்லையற்ற வரங்களை அளித்துள்ளமையால் தாமே வந்து அவனை அழிக்கமாட்டார். அதனால் தேவரீரே அவனைக் கொல்ல வேண்டும்; அவன் தம்பியரையும் புதல்வர்களையும் அழிக்க வேண்டும்; சிறையிலுள்ள சயந்தன் முதலாய தேவர்களை மீட்க வேண்டும்; இந்திரனுடைய அரசை அவனுக்கு மீட்டுக் கொடுப்பதோடு ஏனைய தேவருக்கும் அவரவர் பதவிகளை முன்புபோல வழங்கிக் காத்தருள வேண்டும்.

இவ்வாறு தேவகுருவாகிய வியாழபகவான் அசுரர் வரலாற்றை ஆறுமுகப் பெருமான் முன்னிலையில் அங்கிருந்த அனைவருக்கும் உரைத்து முடித்தார். அதுகேட்ட முருகப்பெருமான், "தேவகுருவே! அசுரர் திறம் அனைத்தையும் அறிந்து வைத்துள்ள உமது திறத்தை மெச்சினோம்" என்று அவரைப் பாராட்டினார். அதற்குக் குருவானவர், "பெருமானே தங்களுக்குத் தெரியாதது ஒன்று

உண்டா? இதனை இங்குள்ள மற்றவர்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே கூறினேன். கூறியதைத் தாங்களும் திருவுள்ளம் கொண்டு கேட்டது யான் பெற்ற பேறு. பிழை இருந்தாற் பொறுத்தருள்க" என்று வேண்டினார். அதற்கு முருகப் பெருமான், "எம்முறை கொண்டு கூறினீர். பிழையேதும் இல்லை" என்று அருள்செய்ய வியாழகுரு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

பின்பு முருகப் பெருமான் இந்திரனைப் பார்த்து, "நீ எதற்கும் அஞ்சேல்! உனது குறைகளை எல்லாம் விரைவில் நீக்குவேன்" என்று கூறியருளலும் இந்திரன் அவரை அன்புடன் வணங்கினான். தேவர்களும் முருகப் பெருமானைப் போற்றி மகிழ்வுற்றிருந்தனர்.

# 12. வீரவாகுத்தேவர் தூது

முருகப் பெருமான் திருச்செந்தூரில் வீற்றிருந்து போர்முறைபற்றிச் சிந்திக்கலானார். "சூரர்களும் ஏனையோர் போன்று சிவபிரானின் மக்களேயாவர். கொடியவரைக் கொல்லுதல் நீதியாயினும் சூரபன்மனுடன் உடனடியாகப் போர்தொடுத்தல் முறையாகாது. அவனிடம் தூதுவன் ஒருவனை அனுப்பி சயந்தன் ஆதியோரை விடுதலை செய்யக் கேட்போம். அவன் அங்ஙனம் விடுவானாயின், அவன் வாழட்டும். மறுப்பானாயின் அவனை அழிப்போம். இதுவே அறநெறி" என்று தமக்குள் எண்ணினார்.

யாரைத் தூதாக அனுப்பலாம் என்று பெருமான் மந்திராலோசனை நடத்தினார். நான்முகன் வீரவாகுவே மிகவும் பொருத்தமானவர் என்றுரைத்தார். பெருமானும் வீரவாகுவை அழைத்து, "நீ மகேந்திரபுரம் சென்று சயந்தன் முதலாய தேவர்களை விடுதலை செய்து அறநெறியிலே வாழ்வாயாக என்று சூரபன்மனுக்குச் சொல். அவன் மறுப்பானாயின் நாளையே அவனை அழிக்க நாம் வருவதாகத் தெரிவித்து மீள்வாயாக!" எனக் கூறியருளினார்.

உடனேயே வீரவாகுத்தேவர் முருகப் பெருமானை வணங்கிக் கொண்டு புறப்பட்டார். வெளியிற் கடற்கரை மருங்கில் இருந்த கந்தமாதனம் என்னும் மலையின்மீது நின்று முருகப் பெருமானின் திருவுருவை நினைத்துப் பெரியதோர் வடிவங் கொண்டார். அந்த

விசுவரூபத்தைக் கண்டு திருமால், நான்முகன், இந்திரன் முதலாய தேவர்கள் வியந்தனர். கந்தமாதனம் பாரந் தாங்காது தாழ்ந்தது. அந்த வடிவத்துடன் சென்றால் உயிர்கள் இறந்துவிடும் என்று எண்ணி எடுத்த வடிவத்தைச் சிறிது சுருக்கினார். சுருக்கியதும் கந்தமாதனம் முன்புபோல் மேல் எழுந்தது.

பின்பு வீரவாகுத்தேவர் வான்வழியாக வீரமகேந்திரபுரம் நோக்கிச் சென்றார். வழியில், வீரமகேந்திரபுரிக்கு வடக்கில், யாளிமுகன் என்னும் அவுணனால் (அசுரனால்) காக்கப்பட்டுவரும் இலங்கை தென்பட்டது. யாளிமுகன் அப்பொழுது சூரபன்மனைக் காணச் சென்றிருந்தமையால் அவனது புதல்வன் அதிவீரன் இலங்கையைக் காவல் செய்து வந்தான். வீரவாகுத்தேவர் தனது காவற் பகுதிக்கு வருவது கண்டு அதிவீரன் சினங்கொண்டு பெரும் படைகளோடு அவரை எதிர்த்தான். வீரவாகுத்தேவர் அசுரனின் படைகளை அழித்து அவனையும் கொன்றபின் தமது பயணத்தைத் தொடர்ந்தார்.

வீரமகேந்திரம் வந்தது. அதன் மதிலையும் நாற்புறக் கோபுரங்களையும் வீரவாகு பார்த்தார். அப்பொழுது தென்திசை வாயிலைக் காவல் செய்து கொண்டிருந்த கயமுகன் என்னும் அசுரன் வீரவாகுவைக் கண்டான். ஆயிரம் ஆனை முகங்களையும் இரண்டாயிரம் கரங்களையும் உடைய அக்கொடிய அசுரன் தன் படைகளுடன் வீரவாகுத்தேவரை வளைத்துப் போர் தொடுத்தான். வீரவாகுத்தேவர் தனது வாளால் அவன் உயிரைப் போக்கினார்.

மேலும் அங்கு தங்கினாற் பெரும்போர் நிகழக்கூடும் என்று கருதி முருகப் பெருமானை நினைத்து யாரும் காணாத அணு வடிவம் ஒன்றை அவர் பெற்றார். பின்பு விண்ணில் எழுந்து கீழ்த்திசைக் கோபுரத்தின்மீது அமர்ந்து வீரமகேந்திரத்தின் வளங்களைக் கண்டு களித்தார்.

சூரபன்மன் தனக்கு இறைவர் அளித்த ஆயிரத்தெட்டு அண்டங்களிலிருந்தும் பெற்ற செல்வங்களை எல்லாம் எண்பதினாயிரம் யோசனைப் பரப்பில் (1 யோசனை = 4 குரோசம்; 1 குரோசம் = 2¼ மைல்.) குவித்து வைத்திருந்தான். கணக்கற்ற தேர்கள் தங்கும் இடங்களும் ஏனைய படைகள் தங்கும் இடங்களும் அளவற்ற யோசனைப் பரப்புகளை அடக்கியிருந்தன.

இந்நகரில் அவுணர்களுக்கு என்னதான் இல்லை? தேவர்கள் குற்றேவல் செய்கிறார்கள். வருணன் அரிசி களைந்து குவிக்கிறான். அக்கினி தேவன் சமையல் செய்து கொடுக்கிறான். தேவமாதர்கள் உணவைப் பரிமாறுகிறார்கள். அவுணர்கள் அவற்றை மறுசிகை நீக்கி உண்கிறார்கள். (மறுசிகை என்பது உணவை ஒரு பிடி உண்டபின் மிகுதியை எச்சில் என்று எறிந்து, வேறு பாத்திரத்தில் உணவிட்டு உண்ணும் முறை.)

இத்தகைய செல்வ வாழ்வு சூரபன்மனின் தவத்தின் பயனென உணர்ந்து அவனின் தவவலிமையை எண்ணி வியந்தார் வீரவாகு. அமராவதியைப் பானுகோபன் தீயிடவில்லை. வீரமகேந்திரத்தின் சிறப்பினைக் கண்டு அமராவதி நகர் அடைந்த நாணமாகிய தீயே அதனை எரித்திருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டார். பின்னர் "எம்பிரான் எனக்கு இட்ட பணியினைச் செய்யாது இந் நகரத்து வளங்களைப் பார்த்துக்கொண்டிருப்பது முறையாகுமோ" என்று எண்ணி நகரத்தினுட் சென்றார்.

அங்கு பானுகோபன், அக்கினிமுகன், இரணியன் ஆகியோரதும் அவர்களது பிற உடன்பிறப்புக்களதும் மனைகளைக் கடந்து தலைமை அமைச்சனாகிய தருமகோபனது மாளிகைச் சிகரத்தில் தங்கினார். அதில் இருந்தவாறே இந்திரன் மகன் சயந்தனையும் தேவர்களையும் அரக்கர் காவல் செய்யும் சிறைக்களத்தைக் கண்டார்.

சயந்தன் கரங்களில் விலங்கு மாட்டப் பெற்றவனாகவும் துன்பம் மிகுந்தவனாகவும் இருப்பதை அவர் அவதானித்தார். அப்பொழுது கொடிய அரக்கர்கள் வந்து, "எங்கே இந்திரன்? எங்கே இந்திராணி? சொல்! சொல்!" என்று அவனையும் மற்றைய தேவர்களையும் கேட்டு அடித்தும் இடித்தும் உதைத்தும் தள்ளி விழுத்தியும் அவர்களைத் துன்புறுத்துவதையும் அவர் கண்டார்.

அவுணர் சிறையில் இருந்து துன்புற வேண்டிய அவமானம் சயந்தனை வாட்டியது. தற்கொலை செய்திருப்பான். ஆனால், அமுதம் உண்டதால் உயிர் போகாது என்பதை உணர்ந்து, துன்பக் கடலில் தொடர்ந்து வேதனைப்பட்டான். ஒரு சமயம் தனது பழைய சிறப்பை எண்ணிப் பெருமூச்செறிவான். மறுசமயம்

தாய்தந்தையருக்கு என்ன நேர்ந்ததோ என்று ஏங்குவான். தன்னுடன் பானுகோபனை எதிர்த்து யுத்தம் செய்த ஐராவதத்தை எண்ணி வருந்துவான். தன்னால் தேவர்களும் சிறைப்பட்டுத் துன்பங்களை அனுபவிக்கிறார்களே என்று கலங்குவான்.

“தருமம் தாழ்ந்து விட்டதோ? பாவங்கள் ஓங்கிவிட்டனவோ? தவப்பயன் அழிந்ததோ? நன்னெறி குலைந்ததோ? சிவனை மறந்தேனோ? சிவன் என்னை மறந்தாரோ? என்ன குற்றம் செய்தேனோ?” என்றெல்லாம் கூறிப் புலம்புவான். அவனைப் போலவே மற்றைய தேவர்களும் தங்கள் விதியை நொந்து வருந்தினர்.

பின்னர் சிவபெருமான் கருணை கிடைத்தாற் கரையேறலாம் என்று நினைத்து மற்றைய தேவர்களுடன் சிவபிரானைப் பிரார்த்தித்து முறையிட்டான்.

“சிவபெருமானே! எங்கள் உயிருக்குள் உயிராயிருக்கும் பரம்பொருளே! தேவரீர் கரிக்குருவிக்கும் யானைக்கும் நாரைக்கும் பாம்புக்கும் சிலந்திக்கும் மற்றுமுள்ள உயிர்களுக்கும் பேரருள் புரிந்திருக்கின்றீர். அடியேங்களுக்கு இன்னமும் அருள் செய்யாதிருப்பது ஏனோ?

“நீலகண்டப் பெருமானே! முன்னர் பாற்கடலில் எழுந்த நஞ்சினை உண்டு தேவர்களையும் ஏனையவர்களையும் காத்தருளினீர். தேவர்களை அழிக்க வந்த அந்தகாசுரனை முத்தலைச் சூலத்தால் கொன்றீர். திருக்கயிலாயத்தில் புகலிடமாக வந்த அமரர்களைக் கொல்லவந்த சலந்தரனைச் சக்கர ஆயுதத்தால் இரு கூறாக்கினீர். அவ்விதமாகப் பலமுறை தேவர் குலத்தை அசுரர்களின் கொடுமையிலிருந்து காத்த தேவரீர் இப்பொழுது திருவருள் புரியாது இருப்பது நியாயமோ?

“முப்புரத்தை எரித்த முக்கண்ணனே! இப்புரத்தையும் அழித்துத் தேவர்களைக் காத்தருள வேண்டுகின்றோம்.

“ஒன்றாகியும் பலவாகியும் தேவரீர் நின்றருளுவ தெல்லாம் உயிர்க் கூட்டங்களின் குற்றங்களை நீக்கி அவற்றுக்கு இன்பஞ்

செய்வதற்கன்றோ? எனது குற்றங்களை நீக்கி, விண்ணரசில் மோகங் கொள்ளாது, பெருந்தவம் இயற்றிப் பெறுதற்கரிய பேரின்பத்தை அடையச் செய்வீராக!''

இவ்வாறெல்லாம் புலம்பிச் சயந்தன் சங்கரனைத் தொழுதான். அவரது கருணை இல்லையேல் தனக்கும் தன்னால் துன்புறும் தேவர்களுக்கும் ஈடேற்றம் இல்லை என்று எண்ணிச் சோர்ந்தான்; சோர்ந்து விழுந்தான்.

இவ்விதம் வருந்தும் சயந்தனின் துயரைத் துடைக்கக் கந்தப் பெருமான் கருணை கொண்டார். உயர்வான கொடி, வச்சிராயுதம், அங்குசம், அம்பு, வேல், அபயாத்தம் (அடைக்கலம் அருளும் திருக்கரம்) ஆகியவற்றை வலப்புறத்திலும் வரதாத்தம் (வரம் அருளும் திருக்கரம்), தாமரை, மணி, மழு, தண்டு, வில் ஆகியவற்றை இடப்புறத்திலும் தாங்கியவராக, பன்னிரண்டு கரங்களும் ஆறு முகங்களும் கொண்ட ஒப்பற்ற திருக்கோலத்தில் சயந்தனின் கனவிலே தோன்றினார்.

சயந்தன் அந்த அழகு ஒளிருங் காட்சியைத் தனது நுண்ணுடலில் இருந்த கண்களாற் கண்டு தொழுது, "அடியேன் துயரைத் துடைக்கச் சிவபெருமானின் அருளினால் என்முன் தோன்றிய உம்மை அறிகிலேன். நீர் யாவர்?'' எனக் கேட்டான்.

ஆறுமுகப் பெருமானின் அவதாரத்துக்கு முன்னதாகவே சயந்தன் பானுகோபனால் சிறைசெய்யப்பட்டு விட்டதால் சயந்தன் அவரை அறியான். எனவே ஆறுமுகப் பெருமான் தம்மைச் சிறிது அறிமுகப்படுத்தி, "கிரவுஞ்சன், தாரகன் ஆகியோரைக் கொன்றபின் யாம் திருச்செந்தூரிலே தங்கியுள்ளோம். எம்முடன் திருமால், நான்முகன், இந்திரன் முதலானோரும் கூடவே இருக்கின்றனர். உனது தங்கை மேருவில் வசிக்கின்றாள். சூரன்பால் உங்களை எல்லாம் விடுவிக்க வீரவாகுவைத் தூது அனுப்பியிருக்கின்றோம். எனினும் சூரன் அதற்கு உடன்படான் என்பதையும் அறிவோம். நாளையே நாம் இந்நகர்ப் புறத்தில் வந்து தங்கிப் பத்து நாட்களிற் சூரரை அழித்து உங்கள் எல்லோருக்கும் வாழ்வு அளிப்போம். உனது துயரத்தை விடுவாயாக" என்று கூறியிருளினார்.

கருணைக் கடவுள் திருவாய் மலர்ந்தவற்றைக் கேட்ட சயந்தனின் மயக்க இருள் நீங்கியது; மகிழ்ச்சி ஓங்கியது. பலமுறை முருகப் பெருமானின் சேவடிகளைத் துதித்தான். முருகப் பெருமான் மற்றைய தேவர்களின் கனவிலும் அவ்வாறே தோன்றி அவர்களுக்கும் அபயம் அளித்து மறைந்தருளினார்.

மறைந்ததும் சயந்தனும் தேவர்களும் கண் விழித்துத் தாம் கண்ட கனவினைத் தமக்குட் கூறி வியந்து, ஆறுமுகப் பெருமானின் அருளையும் சிவபெருமானின் பெருங்கருணைத் திறத்தையும் போற்றித் தொழுது ஆறுதல் அடைந்தனர்.

இது இவ்வாறாக, சயந்தனும் மற்றைய தேவர்களும் அசுரர் கொடுமையாற் படுந் துன்பங்களைக் கண்ணுற்ற வீரவாகுத்தேவர் கந்தப் பெருமானை நினைந்து, அப்பெருமானின் மந்திரம் ஒன்றை மனத்தில் ஓதினார். மறுகணமே சிறைக் காவலர் மயங்கி வீழ்ந்தனர். வீரவாகுத்தேவர் சிறைச் சாலைக்குள் தமது சுயவடிவிலே புகுந்தார். அவரைக் கண்ட சயந்தனும் தேவர்களும் தாம் கனவிலே தோன்றிய கந்தப் பெருமானின் தூதுவரே அவர் எனத் துணிந்தனர். தூதுவரும் தம்மை அறிமுகப்படுத்திப் பின்வருமாறு பேசலுற்றார்:

“தன்னிகரின்றிப் பேரொளியாகவும் நினைத்தற்கு அரியதாகவும் விளங்கும் பரம்பொருளே ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களுங் கொண்டு, பாலகன்போலத் தோன்றி, கந்தன் என்னும் நாமம் பெற்று, அனைவருங் காணும்வண்ணம் காட்சி தந்தருளுகின்றார்.

‘‘அன்று தக்கன் சிவனை அவமதிக்கும் வகையிற் செய்த வேள்வியிற் சென்று தேவர்கள் அவிர்ப்பாகத்தை உண்ட கொடிய பாவம் வீரபத்திரரால் அன்றே தண்டிக்கப்பட்டாலும் முற்றிலும் நீங்காது உங்களை இதுகாறும் வருத்தி வருகின்றது. அதனை ஆறுமுகப் பெருமான் நீக்கியருளுவார். இது உறுதி. சூரனை அழிப்பது அவருக்கு ஒரு விளையாட்டேயாகும். நீங்கள் அமைதி கொள்வீர்களாக” என்று ஆறுதல் கூறினார்.

அதுகேட்ட சயந்தன், “ஐயனே! வாழ்க! எங்களுக்கு நல்ல காலம் பிறந்துள்ளதை நாங்கள் ஏற்கனவே அறிந்துள்ளோம். தாங்கள்

கூறும் கந்தன் எங்களுக்குக் கனவிலே தோன்றிக் கருணை செய்வதாகக் கூறியுள்ளார். அக்கணமே எங்கள் துன்பம் எல்லாம் நீங்கி நல்வாழ்வைப் பெற்ற பேற்றினை அடைந்துவிட்டோம். இப்பொழுது நீங்களும் வந்து எமக்கு உறுதிமொழி கூறியுள்ளீர்கள். இனி எமக்கு ஏது குறை? தங்களுக்கு வெற்றி உண்டாகுக!" என்று உரைத்தான்.

வீரவாகுத்தேவரும் மகிழ்ந்து விடைபெற்றார். அவ்வேளை சயந்தன், "எமது நிலைமையை எல்லாம் கந்தப் பெருமானோடு தங்கி இருக்கும் எமது தந்தையிடம் கூறுவீராக" என்று வேண்டினான். வீரவாகுத்தேவர் அவ்விதமே செய்வதாகக் கூறினார். பின்னர் மீண்டும் அணு வடிவத்தைத் தாங்கிக்கொண்டு சிறைக்காவலர் மயக்கத்தைத் தெளியச் செய்து அங்கிருந்து அகன்றார்.

# 13. சூரனும் வீரனும்

சிறைச்சாலையை விட்டுச் சென்ற வீரவாகுத்தேவர் சூரபன்மனின் அரச மாளிகைக்குள்ளே சென்று ஒரு கோபுரத்தின் உச்சியில் தங்கினார். சூரன் தவஞ் செய்து சிவபிரானிடத்திற் பெற்ற அளப்பருஞ் செல்வச் சிறப்புகளைக் கண்டு வியந்தார். "சூரனைப்போலக் கடுந் தவம் புரிந்தாருமில்லை, அவனைப்போலச் சிவபிரானிடத்திற் பெருவரங்கள் பெற்றாருமில்லை. எனினும் தன்வினை தன்னைச் சுடும் என்பதுபோல, தேவர்களுக்கு இவன் இழைத்த கொடுமைகளே இவனைக் கொல்லப் போகின்றன" என்று எண்ணியவாறு சூரன் வீற்றிருக்கும் அத்தாணி மண்டபத்துட் சென்றார்.

சென்றதும் தமது அணு உருவத்தை நீக்கிச் சுய உருவத்தை அச்சபையில் உள்ளவர் யாவருங் காணும்படி காட்டினார். அவ்வேளை அழகிய மணிகள் பதிக்கப்பெற்ற தங்கச் சிம்மாசனம் ஒன்று அவர் பக்கம் வந்தது. அதனைக் கண்ட வீரவாகுத்தேவர் அது தமது தலைவராகிய ஆறுமுகப் பெருமான் அனுப்பியது என்று எண்ணி அவரைத் தொழுது அதன்மேல் ஏறி அமர்ந்தார். அரியாசனத்திற் சூரபன்மன் எவ்வளவு சிறப்புடன் வீற்றிருந்தானோ அவ்வளவு சிறப்புடன் வீரவாகுத்தேவரும் வீற்றிருந்தார். அவர்

அவ்விதம் வீற்றிருந்ததைக் கண்ட அவையோர் வியப்பெய்தி அவர் யாராக இருக்கலாம் என்று தத்தமக்குள் விசாரணை நடத்தினர்.

வீரவாகுத்தேவர் தன்முன் அவ்விதம் இருப்பதைக் கண்ட சூரனின் கண்கள் கோபத்தால் தீப்பொறிகளைக் கக்கின; உதடுகள் துடிதுடித்தன; உடம்பு வியர்த்தது. கொதிக்கும் அவனது உள்ளம் வினாக்குண்டுகளை வீசின. வீரவாகுத்தேவரும் அவற்றுக்குப் பதற்றம் எதுவும் இன்றிப் பதில் அளித்தார்.

**சூரன்:** அற்பனே! காட்டினில் விலங்குகள்போல அலைந்து திரியும் சிற்றறிவுடைய மனிதர்கள் செய்யும் சித்து விளையாட்டை நீயும் கற்றனைபோலும். பேதையே! எனது நகரில் உள்ள மகளிரும் இதனைச் செய்வர். கருவில் உள்ள குழவிகளும் இதனைச் செய்யும். அறிவற்ற மலைகளும் செய்யும். விலங்குகளுஞ் செய்யும். அதனால் நீ புரிந்த மாயம் எமக்கு ஒன்றும் புதியது அன்று.

என்னை மதியாது என்னெதிரில் இருந்த உன்னைக் கொல்வேன். கொல்லமுன் நீ யார் என்பதை அறிய வேண்டும். இந்திரன் ஓடி ஒளிந்தான். திருமால் இவ்விதம் என்முன் இருக்க மனத்தாலும் நினையான். பிரமதேவன் எனக்கு ஆசிகள் கூறித் திரிபவன். அனைவர்க்கும் மேலாகிய பரமேசுவரர் என்னிடம் வரமாட்டார். ஆதலால் நீ யார்? சொல்!

**வீரன்:** அசுரனே! இந்திரன் இந்திராணியுடன் மறைந்துறையவும் அவர்கள் புதல்வன் சயந்தன் தேவர்களோடு சிறையில் வாடவும் செய்தாய். அவர்களது அமராவதி நகரைத் தீக்கிரையாக்கினாய். இவ்விதம் பல துன்பங்களைச் செய்யும் உன்னைக் கொல்லுதல் வேண்டித் தேவர்கள் பிரார்த்திக்க, அவர்களுக்கு உதவும் திருவுள்ளத்தோடு ஆறுமுகப் பெருமான் திருச்செந்தூரிலே எழுந்தருளியுள்ளார். அந்த அண்ணலுக்கு அடிமையானவன் யான்; நந்திக் கணத்தைச் சேர்ந்தவன்; வீரவாகு என் பெயர்.

**சூரன்:** அடிமைத் தொழில் செய்பவனே! நீ சாவதற்கு இன்னும் சில நிமிடங்களே உள்ளன. அதற்குமுன் நீ இங்கு வந்த

காரணத்தைக் கூறி முடி.

**வீரன்:** கந்தப் பெருமான் உன்மீது கொண்ட கருணையினால் என்னைச் சில நல்லுரைகள் உனக்குக் கூறும் வண்ணம் அனுப்பியுள்ளார். பூரணச் சந்திரனைப் பாம்பு கவர்தல் போலத் தேவர்களைச் சிறையிட்டு வருத்துகின்றாய். இச் செயல் அரசர்க்கு முறையன்று; வீரர்களது செய்கையும் அன்று. வானவருக்குத் தந்தை முறையில் உள்ளவர் காசிப முனிவர். அவரின் மைந்தனாகிய நீ வேதநெறியினின்றும் விலகினாய். தோள் வலிமை மிக்க சலந்தராசுரன், அந்தகாசுரன், முப்புரத்து அசுரர் ஆகியோர் அழிந்தொழிந்த தெல்லாம் தேவர்களுக்குச் செய்த துன்பத்தினால் அன்றோ.

பேதையே! அமரரைச் சிறைசெய்த காரணத்தால் நீ அல்லற்படுவது மட்டுமன்றி ஆயுளையும் இழப்பாய். தாரகனைக் கொன்ற நெடுவேல் உள்ளது. அதனால் யான் வந்தபோதே உன்னைக் கொன்றிருக்க முடியும். அறநெறி கருதி அதனைச் செய்யாது விடுத்தேன்.

தேவர்களை விடுதலை செய்வாயேல் நீ உய்வாய்! மறுப்பாயேல் மாள்வாய்! நெடுங்காலமாகக் கடுந் தவஞ் செய்து கருணைக் கடவுள் சிவபெருமானிடத்திற் பெற்ற நிகரற்ற வரங்களை எல்லாம் நெறி தவறிய புன்செயல்களாற் போகவிடுவது புத்தியோ? ஆதலால் நீ பெற்ற செல்வத்தோடு நீயும் உன் சுற்றமும் உய்ய வேண்டின் தேவர்களை விடுதலை செய்வாயாக! இவ்விதம் உனக்கு உரைக்கும்படி கிரவுஞ்ச மலையைப் பிளந்த வேலினைத் தாங்கிய ஆறுமுகப் பெருமான் என்னை இவ்விடம் தூதாக அனுப்பினார்.

**சூரன்:** அறிவில்லாதவனே! ஆயிரத்தெட்டு அண்டங்களை அரசாளும் எனக்குப் பல் முளைக்காத ஒரு பாலகன் அறிவுரை கூறமுற்பட்டானா? தேவர்கள் அவுணர்களுக்குச் செய்த கொடுமைகளை அவன் அறிவானா? தேவர்களுக்கு ஒரு நீதி அவுணர்களுக்கு ஒரு நீதியா? தாரகனை அவன் கொன்றது கேட்டு அவனைக் கொல்லத்தான் புறப்பட்டேன். ஆனால் பாவம் ஒரு சிறுவனுடன் போர் செய்தல் இழுக்கு என எனது அமைச்சர்கள் தடுத்துவிட்டனர்.

அண்டங்கள்தோறும் உள்ள எண்ணற்ற அரிகள், இந்திரர், சுரர்கள் ஆகியோர் என்முன் போருக்கு ஆற்றாது அடங்கிப் போயினர். அங்ஙனமிருக்க உனது தலைவனாகிய சிறுபிள்ளை என்முன் நிற்பானோ. பற்பல பேசிப் பயனில்லை. அவுணர்களைப் பல காலமாக வதைத்து வறியவர்களாக்கிய தேவர்களை நான் ஒரு போதும் விடமாட்டேன். நீ பேதையாதலால் ஒன்றும் அறியாத ஒரு குழந்தையின் சொல்லைக் கேட்டு இங்கு வந்தாய். அதனால் உன் உயிரை உனக்குத் தந்தேன். பிழைத்துப் போ!

**வீரன்:** உய்யும் வழியறியாது உழலும் அறிவிலியே, கேள்! எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவிழிகளிலிருந்து பிறந்த முருகப் பெருமானின் மேன்மையை அறியாது பாலன் என்று பரிகசித்தாய். சிவபிரான் வேறு முருகன் வேறு அல்லர். ஆதியும் அந்தமும் இல்லாத சிவபிரானே தமது திருவிளையாட்டினாலே தாமே தமக்கு மகனாயினார். அதனை அவரது ஆறு திருமுகங்கள் உண்மையினாலே அறிந்து கொள். ஒளிபொருந்திய மணியிலிருந்து கிரணங்கள் உண்டாகும் தன்மைபோலக் குமரக்கடவுள் சிவபிரானிடத்தில் உண்டாகினார். அதனால் முருகனும் சிவனும் ஒருவரே என்னும் உண்மையை உணர்வாயாக!

யாவற்றுக்கும் முதலாகிய பிரணவமும் ஐம்பொறிகளும் நால்வகை வேதங்களும் எல்லா ஆகமங்களும் ஆயகலைகளும் அவற்றின் உட்கருத்தாகிய ஞானமும் ஆகிய இவையெல்லாம் குமரக் கடவுளின் ஒப்பற்ற திருவுருவம். எங்கும் நிறைந்து அருள்செய்யும் எம் ஆறுமுகத்து இறைவனுக்கு எவ்விடங்களிலும் திருமுகங்கள், எவ்விடங்களிலும் திருவிழிகள், எங்குந் திருச்செவிகள், எங்குந் திருக்கரங்கள், எல்லா இடங்களிலும் அழகிய வீரக் கழல்களை அணிந்த திருப்பாதங்கள், எங்கும் அவரது திருவுருவங்களேயாம். முக்கட் பெருமானும் அவரே, நான்முகன், திருமால் ஆகியோரும் அவரே. மற்றுமுள்ள யாவரும் அவரே, யாவரினும் மிக்கவரும் அவரே! உயிர்கள் ஈட்டும் நல்வினை தீவினை ஆகியவற்றின் பயன்களைக் கூட்டுவிப்பவரும் இருவினையொப்பு உண்டாயின் முத்தியின்பத்தை வழங்குபவரும் அவரே என்பதை அறிந்துகொள்.

அப்பெருமான் சிறுவன்போன்றும் இருப்பர்; குருவைப்போலவும் இருப்பர்; ஒருவராயும் இருப்பர்; பலராயும் இருப்பர்; புதியவர்

போலும் இருப்பர்; பழையவர் போலும் இருப்பர். அவரின் திருவிளையாடலை முழுமையாக யாவரே அறிவர்? எம்பெருமானின் பேருருவத்தின் தன்மையை அவரே காட்டியருள ஒரு சிறிது தேவர்கள் கண்டார்கள். நீ அதனைக் காணக் கொடுத்து வைக்கவில்லை! அன்று கந்தவேள் காட்டிய பேருருவத்தில் உண்டான உரோமத்தில் ஒன்றிலே பொருந்தியிருந்த அண்டங்களுக்கு நீ இப்பொழுது ஆளுகின்ற ஆயிரத்தெட்டு அண்டங்களும் சம மாகாது.

இவற்றையெல்லாம் அறியாது எம்பெருமானைச் சிறுவன் என்று எள்ளி நகைத்தாய். போனாற் போகட்டும் என்று உனது குற்றத்தைப் பொறுத்தேன். ஆதலின் உன் உயிரை உனக்கு அளித்தேன். மீண்டும் கூறுகிறேன், நீயும் உன் சுற்றமும் உயிருடன் இருக்க வேண்டுமானால் தேவர்களை விடுதலை செய்து எம்பெருமானின் திருவடிகளைச் சரணடைவாயாக!

**சூரன்:** அடேய், பாதகா! மழலை மொழி பேசும் அச்சிறுவன் யாவர்க்கும் மேலான முதல்வனே ஆயினும் நான் அஞ்சப் போவதில்லை! தேவர்களை விடுதலை செய்யப் போவதுமில்லை! யாரங்கே! இவன் தூதுவன் ஆகையால் இவனைக் கொல்லாது சிறையில் இடுங்கள்!

இவ்வாறு சூரன் கட்டளை இட்டதும் ஆயிரம் வீரர்கள்வரை வீரவாகுத்தேவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் அனைவரையும் ஒரு கையாற் கூட்டிப் பிடித்துத் தரையில் அடித்து உயிரை வாங்கி, உடல்களைச் சூரபன்மன் எதிரிற் சென்று விழும்படி எறிந்தார் வீரவாகுத்தேவர். “இனி, எம் ஐயனது நெடுவேல் உன்னைக் கொல்வது திண்ணம். நான் சென்று வருகிறேன்” என்று கூறிப் புறப்பட்டார். அவர் சென்றதும் அவரது அரியாசனமும் ஆகாயத்தில் எழுந்து மறைந்தது.

ஆயிரம் வீரர்களும் ஒரு கணப்பொழுதில் அழிந்ததைக் கண்டு சூரபன்மன் ஆத்திரம் அடைந்தான். வீரவாகுவைப் பிடித்துவரும்படி சதமுகன் என்னும் வீரனை ஏவினான். சதமுகன் இலட்சம் வீரர்களுடன் வீரவாகுவை எதிர்த்தான். அவர்கள் அனைவரையும் வீரவாகு அழித்தார். அதன்பின் சினம் மிக்கவராய் உலகளந்த

திருமாலைப்போல நெடியதோர் உருவந் தாங்கி நின்றார். அப் பேருருவத்தைக் கண்ட மகேந்திரபுரத்து அசுரர்கள் அச்சங் கொண்டனர்.

அத்தாணி மண்டபத்துக் காவலாளர்கள் வீரவாகுத்தேவரைத் தொடர்ந்து தாக்கினர். வீரர் அவர்கள் அனைவரையுந் தன் காலால் மிதித்தும் தரையிலே தேய்த்தும் அழித்தார். பின்னர் பெரிய சூளிகை (செய்குன்று) ஒன்றைப் பிடுங்கி அரச மாளிகைமீது எறிந்து ஆரவாரித்தார். அதனால் அத்தாணி மண்டபத்தின் பெரும்பகுதி தரைமட்டமாகியது. அது கண்ட சூரன் திகைத்து அருகில் இருந்த ஆயிரம் புயங்களையும் ஐந்நூறு சிரங்களையும் உடைய சகத்திரவாகுகள் என்னும் வீரர்கள் ஆயிரம்பேரை ஏவினான். வீரவாகுத்தேவர் பெரியதொரு மாமரத்தைப் பிடுங்கி அவர்களை அடித்துக் கொன்றார்.

சகத்திரவாகுகள் இறந்ததை அறிந்த சூரன் கோபத்தால் கொதித்து எழுந்தான். அவனது கோபத்தைக் கண்ட மைந்தன் வச்சிரவாகு தான் சென்று வீரவாகுவைப் பற்றிக்கொண்டு வருவதாகக் கூறினான். சூரபன்மன் மகிழ்ந்து மகனுக்கு விடைகொடுத்து அனுப்பினான்.

பத்துத் தலைகளும் இருபது கைகளும் உடைய வச்சிரவாகு போர்க்கோலம் பூண்டு பெரும் படைகளொடு வீரவாகுத்தேவர் ஆரவாரித்து நகரை அழித்துக்கொண்டிருக்கும் களத்தை அடைந்தான். வீரவாகுத்தேவர் முதலில் அவனது படைகளை அழித்துப் பின்னர் அவனது பத்துத் தலைகளையும் அறுத்து எறிந்தார். அவ்வளவில் சூரியனும் மறைந்தான்.

அன்று மாலையே அண்ணல் ஆறுமுகப் பெருமானைத் தரிசனஞ் செய்ய வேண்டும் எனக் கருதி வீரவாகுத்தேவர் விண்ணில் எழுந்து திருச்செந்தூர் நோக்கி விரைந்தார். வழியில் இலங்கையைக் காவல்புரியும் யாளிமுகன் பெரும்படைகளுடன் வீரவாகுத்தேவரை எதிர்த்துப் போரிட்டான். வீரர் அவனது படைகளை வீழ்த்தி, யாளிமுகனின் ஆயிரந் தலைகளையும் வாளினால் அறுத்துக் கொன்றார்.

இலங்கையைவிட்டு வீரவாகுத்தேவர் கடலைத் தாவித் திருச்

செந்தூரை அடைந்தார். அங்கு பூதகணங்கள் பெருமகிழ்ச்சியினால் ஆரவாரஞ் செய்து அவரை வரவேற்றன. பின்னர் தம்முன் வந்து நின்ற இலட்சத்தெண்மரையும் தழுவி அவர்களுடைய துன்பத்தையும் போக்கினார். அவர்கள் அனைவருஞ் சூழ்ந்து பின்செல்ல ஆறுமுகப் பெருமான் வீற்றிருக்கும் சந்நிதியை அடைந்தார்.

ஆறுமுகப் பெருமானைக் கண்டதும் வீரவாகுத்தேவர் உள்ளம் உருகவும் கண்ணீர் சொரியவும் உடல் புளகமடையவும் பேரன்புடன் வணங்கினார். பின்னர் தமது தூதுப் பணியில் நடந்தவற்றை எல்லாம் விவரித்தார். அவற்றைக் கேட்ட ஆறுமுகப் பெருமான், "சூரபன்மன் செருக்கை நீக்க நாளையே இங்கிருந்து புறப்படு வோம்" என்று கூறியருளினார். அச் செய்தியால் தேவர்கள் பெரிதும் மகிழ்ந்து செந்தூர் முருகனைத் தொழுது திளைத்தனர்.

அப்பொழுது வீருவாகுத்தேவர் அங்கிருந்த இந்திரனுக்கு மகேந்திரபுரியிற் சயந்தனையும் அவனைச் சார்ந்த தேவர்களையும் சிறைச்சாலையிலே தான் கண்டதையும் மற்றைய செய்திகளையுங் கூறி அவனது துயரைத் துடைத்தார்.

# 14. அசுரனின் ஆலோசனைக் கூட்டம்

வீரவாகுத்தேவரின் வீரவிளையாட்டுகள் சூரபன்மனைத் துயரத்தில் ஆழ்த்தியன. அவனது மனைவி பதுமகோமளை மகன் வச்சிரவாகு இறந்தது கேட்டு வருந்திப் புலம்பினாள். தருமகோபன் என்னும் அமைச்சன் சூரபன்மனைப் பலவாறு தேற்றினான். ஓரளவு தேற்றம் பெற்ற பின்னர் சூரன் பிரமதேவரை அழையுங்கள் என்றான். அதுகேட்ட ஏவலாளர் அவன் பூவுலகிலே திருச்செந்தூரிற் சிவன் மகனுடன் இருக்கிறான் என்றனர். சூரன் எரியென விழித்து மற்றோர் அண்டத்துப் பிரமனை அழையுங்கள் என்றான். ஏவலாளரும் உடனே வேறோர் அண்டத்திற் படைப்புத் தொழில் புரியும் பிரம்மன் ஒருவனைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

சூரன் அப் பிரமாவை நோக்கி அழிந்து கிடக்கும் தனது நகரை

முன் இருந்ததுபோல் அமைக்கும் வண்ணம் பணித்தான். அவனும் மகேந்திரபுரத்தை அழகுறப் புனரமைப்புச் செய்தான். சூரன் அவனது ஆற்றலைப் புகழ்ந்து, முன்புபோல் அரியணையில் வீற்றிருந்தான்.

அப்பொழுது கந்தப் பெருமானின் படைப்பலத்தை அறியச் சூரன் முன்பு அனுப்பிய ஒற்றர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களில் தலைமை சான்றவன் ஒருவன் முன்னே வந்து சூரனை வணங்கி, "அரசே! சிவபிரான் மைந்தன் செந்திற் பதியில் தங்கியுள்ளான். அளப்பரும் படைகளைக் கொண்டுள்ள அவன் கடல் கடந்து இங்கு வந்து போர்புரியவுள்ளான். இதில் ஐயம் வேண்டாம்" என்று தெரிவித்தான்.

அதனைக் கேட்ட சூரன் தனது தம்பியாகிய சிங்கமுகனையும் அறிவுமிக்க அமைச்சர்களையும் பானுகோபன் முதலிய மைந்தர்களையும் சேனைத் தலைவர்களையும் ஒரு கணப்பொழுதில் வரவழைத்தான். வந்தவர்கள் அனைவரும் சூரனை வணங்கி அவையில் அமர்ந்தனர். அவர்களை நோக்கிச் சூரன் தனது நிலையை எடுத்துரைத்தான்.

"சிவனின் சிறு குழந்தை கந்தனின் தூதுவனாக வந்த ஒருவனால் இத்திருநகர் சிதைந்தது; அளவற்ற சேனைகள் அழிந்தன. அவனை அடிக்கவும் முடியவில்லை; பிடிக்கவும் முடியவில்லை; முடிக்கவும் முடியவில்லை. என் ஆணையும் மேன்மையும் குன்றியது. அதனாற் பழிக்கு ஆளாயினேன். மேலும் அந்தப் பரமசிவனின் பாலகன் கடல் கடந்து வந்து எம்மோடு போர் செய்யவுங் கருதியுள்ளானாம். இனி நாம் செய்யத் தக்கது என்ன என்று உங்களைக் கேட்கின்றேன்."

இவ்வாறு தமது மன்னன் கூறக் கேட்டதும் அமைச்சர், படைத் தலைவர், மைந்தர் முதலானோர் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாயினர்.

**அமைச்சர் மகிடன்:** கிரவுஞ்ச மலையையும் உமது வீரத் தம்பியையும் கணப்பொழுதில் அழித்த வீரனைப் பாலன் என்று கருதுதல் தவறு. திருமாலை வென்ற உமது தம்பியைக்

கொன்றபோதே சிவகுமாரன்மீது போர் தொடுத்திருக்க வேண்டும். அதனைச் செய்யாதிருந்தீர். இனியுங் காலத்தைக் கழியாது போருக்குப் புறப்படுவீராக!

**அமைச்சர் துர்க்குணன்:** (நன்று நன்று என்று நகைத்து) அரசே! கடுந் தவமியற்றி அளப்பருஞ் செல்வங்களையும் ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆளும் ஆணையையும் பெற்றதெல்லாம் ஒரு சிறுவனிடம் போர் செய்யத்தானோ? நீர் போர்செய்யப் போவது நன்றன்று. முதலிற் பெரும் படைத் தலைவர்களைப் போருக்கு அனுப்புவீர். அவர் கணப்பொழுதில் பூதகணங்களையும் பாலகனையும் வென்று வருவர்.

**அமைச்சர் தருமகோபன்:** அரசே! அமைச்சர் துர்க்குணன் கருத்தை யான் அனுமதிக்கிறேன். தாங்கள் போர் புரியச் செல்வது அழகல்ல. தங்கள் மைந்தர் பானுகோபன், அக்கினிமுகன், இரணியன் ஆகியோரின் ஒருவருக்கேனும் ஆறுமுகனும் அவனது படைகளும் எதிர்நிற்க மாட்டார்கள். நகத்தாற் கிள்ளியெறியத் தக்கதை வாளால் வெட்டுவாரும் உண்டோ? வலிமைமிக்க ஒருவனைக் கொண்டு முடிக்கக்கூடிய பகைவரை வெல்லத் தாங்கள் போர்க்கோலம் பூண்டு செல்வதோ? அதனால் ஒப்பற்ற அசுரவீரன் ஒருவனைத் தகுந்த படைகளோடு முதலில் அனுப்புக!

**அமைச்சர் காலசித்து:** (நகைத்து) முன்பு திருமாலை, பிரம தேவனை, இந்திரனை, இன்னும் மற்றைய அண்டத்துத் தேவர்களை எல்லாம் வென்ற காலத்தில் எங்களுடன் ஆலோசனை செய்தீரா? இன்று பாலகன் ஒருவனை வெல்லப் பெரியதொரு மந்திரா லோசனை நடத்துவது ஏன்? தேவர்கள் ஒடுங்கினர்; அரக்கர்கள் நடுங்கினர்; திக்குப் பாலகர்கள் எண்மரும் அடங்கினர். இன்று அசுரரை விடப் பூதர்கள் வலியராகி விட்டனரோ? இது என்ன கலிகாலத்தின் கோலமோ? ஒருவரும் வேண்டாம், என்னைப் போருக்கு அனுப்புங்கள். கந்தனைக் காலபாசத்தாற் கட்டி இழுத்து இங்கு கொண்டு வருவேன்!

**படைத்தலைவன் சண்டன்:** அரசே! என்னை அனுப்புவீராக! நான் விரைந்து சென்று மும்மூர்த்திகள் முருகனுக்குக் காவலாக இருப்பினும் அவனையும் அவன் படைகளையும் வெற்றிகொண்டு

வருவேன்!

**அசுரவீரன் அனலி:** (சினத்துடன்) மன்னா! ஒரு சிறுவன்பொருட்டு இவ்விதம் ஆலோசனை நடத்துவது எமது வலிமைக்கு இழுக்கு! வேண்டுவது விற்போரே, சொற்போர் அல்ல.

**அசுரவீரன் சிங்கன்:** அரசே! என்னை அனுப்புங்கள்! இப் பொழுதே சென்று பகைவரை வென்று வருவேன்!

**மூத்த மகன் பானுகோபன்:** எந்தையே! பகைவரை வென்றுவர நான் இருக்கையில் யோசனை எதற்கு? என்னைப் போருக்கு அனுப்பாது இவ்விதம் ஆலோசனை செய்து காலத்தைக் கடத்தல் சிறப்பன்று!

**மகன் இரணியன்:** தந்தையே இன்று இரவே என்னை அனுப்புக! வெற்றியோடு மீள்வேன்!

**மகன் அக்கினிமுகன்**: என் தம்பி வச்சிரவாகுவைக் கொன்ற தூதனையும் அவன் தலைவன் முருகனையும் கொன்றாலன்றி இப்பெரும் நகருக்கு நான் வரமாட்டேன்!

**தம்பி சிங்கமுகன்:** மன்னர் மன்னனே! அமைச்சரும் படைத்தலை வரும் மைந்தரும் உன் சிறப்பையும் தத்தம் வீரத்தையும் பேசினரேயன்றி உனக்குத் தக்க அறிவுரை கூறினாரல்லர். நான் கூறுவதைக் கேட்பாயாக!

அரசனுக்கு அந்தரம் நேருங் காலத்து நல்ல அறிவுரைகளைக் கூறித் தெளிவு படுத்துதல் வேண்டும். அரசர் விரும்பாது போனாலும் துணிவுடன் நீதி நியாயங்களை எடுத்து உரைப்பவரே அமைச்சராவர். உனது அமைச்சர் உன் எண்ணக் கருத்தை ஒட்டியே நிற்கின்றனர். மீன் ஒன்று மயக்க உணர்வினால் தூண்டில் முள்ளில் இருக்கும் உணவினைக் கவ்வித் துன்புறுதல்போல, நீயும் பின்னால் வருவதை நினையாது மயங்கினை.

முன்பு இந்திரன் முதலிய தேவர்களைத் துன்புறுத்திய கொடியவர்கள் பெருஞ் செல்வத்தோடு அழிந்தனரேயன்றித்

தப்பினார் இல்லை. அதனை அறிந்துகொள்.

மச்ச உணவு உண்ணாத தேவர்களைக் கடல்மீன்கள் பிடிக்க விடுத்தாய். இந்திரனின் அரசை எடுத்தாய். அவனது மனைவியை அடையத் துடித்தாய். அவன் மகனையுந் தேவர்களையுஞ் சிறையில் அடைத்தாய். அவர்களது செல்வங்களைச் சூறை யாடினாய். அமராவதியைத் தீயிட்டு அழித்தாய். இத்தகைய அக்கிரமங்களாலேதான் இந்த நிலை வந்துற்றது என்று நினையாது பித்தேறியவன்போல் பிதற்றலுற்றாய்.

உனக்கு வரங்களை அளித்த பிஞ்ஞகப் பெருமான் நூற்றெட்டு யுககாலப் பெருவாழ்வுதான் உனக்குத் தந்தார். அக்கால எல்லை நெருங்கி வருவதை உணர்ந்தாயில்லை. “எத் திறத்தவரும் உங்களை வெற்றிகொள்ள வல்லவரல்லர். நமது சக்தி ஒன்றே வென்றிடும்” என்று கண்ணுதற் கடவுள் கூறினார். அவரது சக்திதான் குமரவேள் என்பதையும் அறிந்தாயில்லை.

அமரர்களை விடுதலை செய்வாயேல் குமரக் கடவுள் போர் குறித்து இங்கு வரமாட்டார். நமது குற்றத்தையும் மன்னித்து அருள் புரிவார். இல்லையேல் அவர் நமது குலத்தை அழித்து உன்னையும் கொல்வார். இது நடக்கும் காண்பாயாக!

இவ்வாறு சிங்கமுகன் கூறிய நல்லுரைகளைக் கேட்டுச் சூரபன்மன் கடுங் கோபங் கொண்டு, “மூவராலும் வெல்ல முடியாத வலிமையை உடையவனே! நமக்குக் குற்றேவல் செய்து இன்னமும் மறைந்து உறையும் இந்திரனுக்கும் அவனுக்குத் துணையாகவுள்ள பாலகனுக்கும் அஞ்சினையோ? கண்ணுதற் பெருமான் என் ஆயுளுக்கு எல்லை கூறியதையும் “நமது சக்தி ஒன்றே உங்களை வெல்லும்” என்று சொன்னதையும் நான் இதுவரை கேட்டதில்லை. நீ வஞ்சத்தால் இவற்றைக் கற்பனை செய்தாய் போலும். சரி, அவ்விதமே அவர் கூறியிருப்பினும் “எமது சக்தி” என்று அவர் கூறியதன் உண்மைப் பொருளை நீ அறிந்தாயில்லை. அவர் வேறு சக்தி வேறு அல்லர். சக்தியும் சிவமும் ஒருவரே என்பதை நீ அறியாயோ? அந்த ஒருவர் தான் கொடுத்த வரத்தை ஒருபோதும் எடுக்க மாட்டார்.

“என்னைப்போலப் பழுதில்லாத வேள்வி செய்யாமையால் அழியா வரம்பெறாது தாரகன் மாண்டான். வச்சிரவாகுவும் அறிவு நிரம்பாத இளமைப் பருவத்தினன் ஆதலால் இறக்க நேர்ந்தது. அவர்களைப்போல் நானும் மாள்வேன் என்று நீ நினைத்தால் அது உன் சிற்றறிவையே காட்டுகின்றது.

“அந்தச் சிறுவன் என்னைக் கொல்வான் என்று சொல்வது ஆகாயத்தில் இருக்கும் சூரியனை ஒரு பழம் என்று குருடன் கூற, கையில்லாத முடவன் ஒருவன் பேராசையுடன் அதனைத் தின்னப் பிடிக்கும் தன்மைக்கு ஒப்பாகும்.”

சூரபன்மன் இவ்வாறு கூறலும் சிங்கமுகன், “அண்ணலே! நான் இன்னமும் ஒன்று சொல்வேன். உன் உயர்வுக்காகச் சொல்வேன். அதனைக் கோபிக்காது கேட்பாயாக! சீலமில்லாதார் உணர முடியாத சிற்பர முதல்வனைச் சிறுவன் என்று கூறினாய். சிறியதொரு ஆலம் வித்தில் பெரிய ஆலமரம் முழுமையும் ஒடுங்கியிருந்து மீண்டும் முளைத்து வளர்வதுபோல் அப் பெருமானிடத்தில் இருந்தே முன்னாளில் எல்லாப் பொருள்களும் தோன்றின. மறைகளுக்கும் எட்டாத அத் தலைவன் பரஞ் சோதியாகிய சிவபிரானது நெற்றியில் உதித்தவன்.

“அவன் ஞானமே வடிவான நாயகன். அவனது தன்மையை நானும் நீயும் பேசுவது எளிதன்று. கருவியாகிய புலன்களும் காட்டுவானும் காண்பவனும் காட்சிப்பொருளும் எனப்படும் நால்வகைப் பொருள்களும் ஐம்பொறிகளும் இருவகையான வினைகளும் காலமும் இடமும் முறைப்படியே முற்றுகின்ற பயனுமாக நிற்பவர் அக் கடவுளேயாவர். இத்தன்மை வாய்ந்த முதல்வரைப் பாலன் என்று இகழ்ந்தனை. அப்பெருமான் கணப்பொழுதில் உன்னைக் கொல்வார். போர் செய்வதும் அவரின் பேரருளின் திறன்களில் ஒன்று.

“ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வச்சிர சரீரத்தையும் அளப்பருஞ் செல்வத்தையும் அழியா வரத்தையும் எல்லாம் பெற்றோம் பெற்றோம் என்று பெருமிதம் கொள்கிறாய். அவற்றின் உண்மையான சொந்தக்காரன் சிவபெருமானே என்பதை அறியாய். அவற்றை யெல்லாம் உனக்கு அளித்த அந்தப் பரம்பொருளே, வானவர்களை

நீ துன்புறுத்திய குற்றத்துக்காக நீக்கிவிடுவாராகில் ‘ஏன் அவ்வாறு செய்தனை’ என்று அவரைக் கேள்வி கேட்குந் தகுதியுடையாரும் உளரோ?

“அழியாத செல்வத்தோடு நீயும் உன் சுற்றமும் தொடர்ந்து வாழ வேண்டும் என்னும் நல்ல எண்ணத்தோடு இவற்றைக் கூறினேன். தேவர்களை இன்றே சிறையினின்றும் விட்டுவிடுவாயாக!”

சிங்கமுகனின் சீரிய அறிவுரைகளைப் பொருட்படுத்தாது சூரபன்மன் சினந்து மேலும் இவ்வாறு கூறினான்:

“காற்றினால் தள்ளப்பட்டு, நெருப்பினாற் சுடுபட்டு, கங்கையால் தாக்குண்டு, சரவணப் பொய்கையில் அலைப்புண்டு, வேற்று மாதரின் முலைப்பாலை உண்டு, முறையின்றி வளர்ந்த பாலனையா பரம்பொருள் என நினைத்தாய்?

“நமது முன்னோர்களைத் தேவர்கள் கொன்று குவித்தனர். அதனால் அவர்களைச் சிறையில் அடைத்தேன். தவறு செய்தவர்களைத் தண்டித்தல் முறையே என்று மனுதர்மம் முதலிய அறநூல்கள் கூறும். ஆதலின் அமரரை விடுதலை செய்யேன். இந்திரனையும் பிடித்து அடைப்பேன். முழுமுதற் கடவுளான சிவபெருமானே வந்து எதிர்த்தாலும் போர் புரிவேன்.

“அறிவில்லாது நீ இத்தகைய புன்மொழிகளைப் பேசினாய். என்னுடன் ஒரு தாய் வயிற்றில் பிறந்த நீ எனது பகைவர் பக்கம் சார்ந்தாய். இதைவிட எனக்கு வேறு பகையும் வேண்டுமோ? ஆயிரம் சிங்க முகங்களையும் இரண்டாயிரம் தோள்களையும் கொண்ட என் தம்பி இவ்வளவுக்குப் பயந்தவன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அவுணருக்குரிய வீரத்தை, மானத்தை எல்லாம் இழந்து தேவரைப் போன்று கோழையாகி விட்டாய். கையில் உள்ள ஆயுதங்களை வீசி எறிந்துவிட்டு நான்முகனைப் போல பஞ்சாங்கம் ஒன்றைக் கையில் கொண்டு திரிவாய்.

“உன் இளமைப் பருவத்தில் இயமனையும் வருணனையும் சிறைப்படுத்தினாய். தேவர்களையும் வருத்தினாய். இப்பொழுது அறிவு நிரம்பிவிட்டதாற் போலும் பெண்டிர்போல அஞ்சுகிறாய்.

தம்பியே! சிவகுமாரனையும் பூத கணங்களையும் நான் வென்று வருவேன். நீ வருந்தாதே. உனது பெரிய நகருக்குச் சென்று எமது குலத்தைப் பற்றிக் கவலைப்படாது சிறப்போடு வாழ்வாயாக!”

சூரபன்மன் இவ்விதம் சொல்லும்போதே சிங்கமுகன் தமயனுக்குப் புத்தி சொல்லிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான். அவன் குமரக் கடவுளின் கையால் இறப்பது உறுதி என்றும் கூடப் பிறந்த குற்றத்துக்காக அவனுக்குமுன் தான் உயிர்விடுதல் கடமை என்றும் தனக்குள் எண்ணிக்கொண்டு சூரபன்மனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, “அண்ணலே! சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும். நான் இப்பொழுதே போர்மேற் சென்று பகைவரை அழித்து வருவேன். விடை தருவாயாக!” என்றான்.

அவ் வார்த்தைகளைக் கேட்ட சூரபன்மனின் உள்ளம் குளிர்ந்தது. மிகுந்த மகிழ்ச்சியோடு தம்பியைத் தழுவி, “எனது அருமைத் தம்பியே! நீ இதுவரை பேசியது எனது உள்ளக் கிடக்கையையும் மனத் துணிவையும் அளவிட்டு அறிவதற்கேயன்றி வேறில்லை. உனது ஆற்றலை நான் அறியேனோ? நீ பகைவரை அழிக்குஞ் சிங்கமன்றோ. நன்று. நீ உன் ஊருக்குச் சென்று உனது படைகளைத் திரட்டுக. சிவகுமாரன் போர்மேல் இங்கு வந்தால் உன்னை அழைக்கிறேன்” என்று சிங்கமுகனை அனுப்பினான்.

பின்னர் அங்கிருந்த அமைச்சர், படைத்தலைவர், மக்கள் ஆகியோருக்கும் மற்றையோருக்கும் விடைகொடுத்து அனுப்பி விட்டுச் சூரபன்மன் நிம்மதியுடன் இருந்தான்.

## 15. சூரன் போர்

சிவபெருமானின் திருக்குமாரர் சூரபன்மனைக் கொன்று தேவர்களைச் சிறைமீட்கத் திருவுள்ளங் கொண்டார். வாயுதேவரைச் சாரதியாகக் கொண்ட அவரது தேரை வீரவாகுத்தேவர் அவர்முன் கொண்டுவந்து நிறுத்தினார். கந்தப் பெருமான் அத்தேரில் ஏறித் திருச்செந்தூரிலிருந்து விண்வழியாக வீரமகேந்திரபுரி நோக்கிச் சென்றார். திருமால் முதலிய தேவர்களும் இலட்சம் வீரர்களும் வீரவாகு முதலாய ஒன்பது வீரர்களும் அவரவர் ஊர்திகளில்

ஏறிக் கந்தப் பெருமானைத் தொடர்ந்து சென்றனர். இரண்டாயிரம் வெள்ளப் பூதப் படைகள் கடல்வழியாகச் சென்றன.

கந்தப் பெருமான் மகேந்திரபுரத்தை அண்மித்து அதன்புறத்தே தேவதச்சனைக் கொண்டு அழகிய நகரம் ஒன்றை அமைப்பித்தார். அதற்கு ஏமகூடம் எனப் பெயரிட்டுத் தமது படைகள்சூழ அங்கு தங்கியிருந்தார்.

பரமசிவன் மைந்தனும் படைகளும் ஏமகூடத்திற் பாசறை கொண்டிருப்பதைச் சூரபன்மன் ஒற்றர்கள்மூலம் அறிந்தான். வருணனை அழைத்து அவர்களை வரவிட்டது ஏன் என வினாவினான். வருணன் வணங்கி, "ஐயனே! ஆறுமுகனும் தேவர்களும் விண்வழியாகச் சென்றார்கள். பூதப்படைகள் என் வழியாகச் சென்றன. அவர்கள் கால்களாற் கலக்குண்டு சேறாக வருந்தினேன். அந்நிலையில் அவர்களை எவ்வாறு நான் தடுக்க முடியும்?" என நடுக்கத்தோடு கூறினான்.

## பானுகோபன் தோல்வி

சூரன் தீயைப் போலச் சீறிப் பானுகோபனைப் போருக்கு அனுப்பினான். பானுகோபனின் வீரத்தையும் அவனது படைத் திறத்தையும் உணர்ந்த ஆறுமுகப் பெருமான் அவனை எதிர்க்க வல்லவன் வீரவாகுவே எனக் கருதி அவரைப் போருக்கு அனுப்பினார். இரு பகுதிக்குமிடையிற் கடும்போர் நிகழ்ந்தது. அனலி, சண்டன், ஆகிய அசுரவீரர் மாண்டனர். பானுகோபனும் வீரவாகுவும் மாறி மாறி அம்புமழை பொழிந்தனர். அவர்களின் அம்புகள் பூமியைக் கிழித்தன; அண்டங்களைத் துளைத்தன. ஈற்றில் பானுகோபன் மோகப் படையினால் வீரவாகுவினதும் பூதப் படைகளின் பெரும்பகுதியினரதும் உடல்களைப் புண்படுத்தி அவர்களை வலுவிழக்கச் செய்தான். அதனை அறிந்த முருகப் பெருமான் அமோகப்படை ஒன்றை அனுப்பிப் பூதப் படைகள் தெளிவுபெறவும் அசுரப் படைகள் வலிமை இழக்கவுஞ் செய்தார்.

அப்பொழுது வீரவாகுத்தேவர் பானுகோபனைக் கொல்லும் நோக்கத்துடன் சிவன் படையைக் கையில் எடுத்தார். அதனைக் கண்ட பானுகோபன் ஓடி மறைந்தான். பூதர்கள் ஆரவாரித்தனர். சூரியன் மறைந்தான்.

பகைவரை வெல்லாது போரின் இடையிற் பானுகோபன் ஓடிவந்த செய்தியை அறிந்த சூரபன்மன் கொதித்து எழுந்தான். இரண்டாம் நாட் காலை தானே போருக்குப் புறப்பட்டான். சிங்கமுகன் புதல்வன் அதிசூரனையும் தாரகன் மைந்தன் அசுரேந்திரனையும் படைத்தலைவர்களாக நியமித்தான். உயர்ந்தவோர் இரதத்தில் ஏறி நால்வகைப் படைகளுஞ் சூழ்ந்துவரச் சூரன் போர்க்களத்தை நோக்கி வந்தான்.

அவனை எதிர்க்க முருகப் பெருமானும் படைகள் சூழப் போர்க்களத்தை அடைந்தார். பூதப் படைகளின் தாக்குதல்களால் அசுரப் படைகள் மிகுதியாக இறந்தன. அதுகண்ட அதிசூரன் பூதசேனைகளைத் தீவிரமாகத் தாக்கினான். அவனுக்கும் பூத சேனாதிபதி உக்கிரனுக்கும் பெருஞ்சண்டை நடந்தது. ஈற்றில் உக்கிரன் அதிசூரனைக் கொன்றான். அதனால் தாரகன் மகன் அசுரேந்திரன் ஆத்திரங்கொண்டு கனகன், உன்மத்தன், மந்தன், சிங்கன் முதலிய பூத வீரர்களைத் தோற்கடித்து முன்னேறினான். அச்சமயம் வீரவாகுத்தேவர் ஆறுமுகப் பெருமானை மனத்தில் நிறுத்தி வில்லை வளைத்து அவனைக் கொன்றார்.

## வீரவாகுத்தேவர் வீழ்ச்சி

தனது படைத் தலைவர்கள் இறந்தது கண்டு சூரன் ஊழித் தீயைப்போலச் சீற்றங் கொண்டு எழுந்தான். வில்லை வளைத்து நாணைச் சுண்டி ஒலி எழுப்பினான். அந்த ஒலியைக் கேட்ட பூதப் படைகள் நிலைகுலைந்தன. பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் அஞ்சினர். அவனை எதிர்த்த இலட்சம் வீரர்களும் வீரமார்த்தாண்டன், வீரராச்சதன் முதலிய வீரர்கள் எண்மரும் அவனது அம்புகளுக்கு ஆற்றாது தளர்ந்து வீழ்ந்தனர்.

தமது படையும் தம்பியரும் வீழ்ந்தது கண்ட வீரவாகுத்தேவர் சூரன்முன் தோன்றினார். அவரைக் கண்ட சூரன் சினங்கொண்டு, "நீ தூதுவனாக வந்ததால் பிழைத்தாய். இல்லையேல் உயிர் இழப்பாய்" என்றான். அதற்கு வீரவாகுத்தேவர், நான் ஆறுமுகக் கடவுளுக்குத் தூதுவனும் ஆவேன், அமைச்சனும் ஆவேன், போர் வீரனும் ஆவேன். அவர் எப்பணிகளைச் செய்யச் சொல்கிறாரோ அவை அனைத்தையுஞ் செய்வேன். நீ விரும்பிய போரைச் செய்வாயாக" என்றார்.

அதனைத் தொடர்ந்து இருவருக்குமிடையிற் போர் மூண்டது. வீரவாகுத்தேவர் ஏவிய தெய்வப் படைகள் சூரனை ஒன்றுஞ் செய்யாது திரும்பின. வீரவாகுத்தேவர் வியப்புற்றார். பின்னர் சிவபெருமானை வணங்கித் தமது சிவப்படையை ஏவினார். சூரனும் அதற்கு நிகராக, தனக்குச் சிவபெருமான் முன்பு வழங்கிய சிவாயுதத்தை அருச்சித்து ஏவினான். இரு படைகளுஞ் செய்த போரினால் உலகம் அழியக் கூடுமென்று அஞ்சித் தேவர்கள் சிவனைப் பிரார்த்திக்க, அப்படைகள் விட்டவர்களிடமே திரும்பிச் சென்றன.

பின்பு நடந்த போரிலே சூரன் எறிந்த வலிய கதை ஒன்றின் தாக்கத்தால் வீரவாகுத்தேவர் தளர்ச்சியுற்றுத் தேரில் வீழ்ந்தார். அவரைத் தேற்றுதற்பொருட்டு விசாலி என்னும் தேர்ப்பாகன் காற்றிலும் விரைவாகத் தேரைச் செலுத்தி வேறொரு பக்கஞ் சென்றான்.

## முருகப் பெருமான் காட்சி

அப்பொழுது முருகப் பெருமான் தமது தேரிலே சூரன்முன் தோன்றினார். சூரன் கோடிக்கணக்கான சூரியர்கள் திரண்டு ஒன்றாகி, இருளை நீக்கியவாறு வானத்தை விட்டு இறங்கிப் போர்க்களம் வந்து அடைந்ததுபோன்று குமரக்கடவுள் தன் முன் நிற்பதைக் கண்டான். தாமரை மலர்களைப் போன்ற ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருவிழிகளும் குண்டலங்களின் வரிசையும் செம்மையான பொற்கிரீடமும் அழகிய மார்பும் பன்னிரண்டு திருக்கரங்களும் விளங்குகின்ற படைக்கலங்களும் தண்டையுஞ் சிலம்பும் முழங்கும் திருவடிகளும் தெரியக் கண்டான் சூரன்.

சூரபன்மன் காணும் வண்ணம் முருகப்பெருமான் காட்சி கொடுத்தருளியதைக் கண்ட இந்திரன் முதலாய தேவர்கள் “சூரபன்மன் முன்னாளில் தவஞ் செய்ததுவும் பலயுகங்கள் இருந்ததுவும் வேதங்களாலும் அறியமுடியாத ஆறுமுகப் பெருமானின் அழகிய தோற்றத்தைப் பார்த்துப் பயன்பெறத்தானோ” என்றும் “முனிவர்களுக்கும் எமக்கும் பிறருக்கும் அரிதான குமரவேளைச் சூரபன்மன் தனது இரண்டு கண்களாலும் கண்டான் என்றால் அவன் செய்த தவத்தின் பேற்றை யாவரே அறியவல்லார்”

என்றும் தமக்குட் பேசி வியந்தார்கள்.

## சூரன் மாயம்

தன்னை மறந்து நின்ற சூரபன்மன் பின்னர் சுயநினைவு பெற்றான். கோபம் பொங்கப் பெருமானைப் பார்த்துப் பேசலுற்றான். "உனக்குப் படையாக வந்தவர்கள் வலியிழந்து திசைதோறும் சிதறி ஓடினார்கள். என்னை எதிர்த்த பூதவீரர்களும் ஏனையோரும் இறந்தார்கள். உனது தூதுவனும் வீழ்ந்தான். இவற்றையெல்லாம் கண்டபின்னும் ஒரு சிறுவனாகிய நீ என்னை வெல்ல வந்திருப்பதைக் காணச் சிரிப்புத்தான் வருகின்றது" என்று சினத்தோடு சிரித்து முருகப் பெருமானை எதிர்த்தான்.

முருகப் பெருமான் அவனது தேரையும் அவனைச் சூழ்ந்து நின்ற பதினாறு இலட்சம் சேமத் தேர்களையும் அழித்து, அவனது குடையைத் துணித்து, மகுடம் முதலிய அணிகளையும் அறுத்து வீழ்த்தினார். அதனைக் கண்ட அசுரப் படைகள் பலவகையான படைக்கலங்களைப் பெருமான்மீது வீசி ஆரவாரித்தன. முருகப் பெருமான் தமது சக்கராயுதத்தால் அவர்களை அழித்தார்.

தனது சேனைகளை இழந்த மயக்கத்தில் நின்ற சூரன் இச் சிறுவன் எனது படைகளைச் சிவாஸ்திரத்தால் அழித்தானோ அன்றி இப்படை முழுவதும் மாளக் கடவது என்னும் ஒரு வார்த்தையால் அழித்தானோ" என்று வியந்தான். பின்னர் பிரம்மாஸ்திரம் முதலாய பல தெய்வப் படைகளை ஏவினான். அவற்றை எல்லாம் முருகப் பெருமானின் வேலாயுதப் படை விழுங்கி நின்றது. கடைசியாகச் சிவபிரான் கொடுத்தருளிய பாசுபதாஸ் திரத்தைப் பூசனை செய்து விடுத்தான். அது திக்கு யானைகள் நடுங்கவும் மேகக் கூட்டங்கள் இடி இடிக்கவும் பூமி பிளக்கவும் விரைந்து சென்றது. குமரக் கடவுள் "இது எனது தந்தையின் படையாகும்" என்று எண்ணி, கொடுத்தவன் வாங்கிக் கொள்வதைப் போலத் தமது ஒரு கரத்தால் அதனைப் பிடித்துக் கொண்டார்.

அந்தக் காட்சி சூரனைத் திகைக்க வைத்தது. அப்பொழுது, "இப்பொழுதேனும் தேவர்களை விட்டுவிடுவாயானால் நீ பிழைத்துக் கொள்வாய்" என்னுமோர் அசரீரி வாக்கு அவனுக்குக் கேட்டது. சூரன் அதனைப் பொருட்படுத்தாது, "இவனை நாளை பெரும்

படைகளோடு வந்து கொல்வேன்” என நினைத்துக்கொண்டு மாயமாக மறைந்து பதுமகோமளை இருக்கும் இடத்தை அடைந்தான்.

சூரபன்மனால் அழிந்த பூதப் படைகளையும் மயங்கிய வீரர்களையும் முருகப் பெருமான் எழுப்பியருளினார். அவர்கள் ஆரவாரித்துச் சூரனது நகரத்தை அழிக்கச் சென்றனர். எதிர்த்துப் போரிட்ட அதிகோரன் என்பவனையும் அவனது படைகளையும் கொன்று, நகரத்துட் புகுந்து பல மாளிகைகளைச் சிதைத்தனர். அதற்குள் சூரியன் மறையவே எல்லோரும் திரும்பிவந்து முருகப் பெருமானைச் சூழ்ந்து வணங்கி நின்றனர். அவர்களோடு முருகப் பெருமானும் பாசறை புகுந்து யாவரும் போற்ற அரியணையில் வீற்றிருந்தார்.

தந்தை மாயமாய்த் திரும்பி வந்ததை ஒற்றர்கள் வாயிலாக அறிந்த பானுகோபன் பெருந்துயர் அடைந்து அவனைக் காணச் சென்றான். “தந்தையே! நேற்றைய தோல்வியால் உள்ளம் நொந்து உன் முகத்தில் விழியாதிருந்தேன். இன்னுமொரு சந்தர்ப்பம் தருக. பகைவரை அழித்து மீள்வேன்” என்றான்.

சூரன் மகிழ்ந்து, “மகனே! ஆறுமுகனை வெற்றிகொள்ள என்னையன்றி வேறு எவராலும் முடியாது. நீ நாளை வீரவாகுவை வென்று வருவாய்” என்று விடைகொடுத்தான்.

மூன்றாம் நாட் போரில் பானுகோபனின் படைகள் அனைத்தையும் வீரவாகுத்தேவர் அழித்து வெற்றிகொண்டார். அது கண்ட பானுகோபன் மாயத்தால் அருவமாகி வானத்தில் மறைந்து நின்றான். அப்பொழுது சூரியனும் மறைந்தான். அவ்வேளை பானுகோபன் அன்று காலை தனக்கு மாயை அளித்த மாயாஸ்திரத்தை எடுத்துப் பூசித்து, “நீ யாரும் அறியாது சென்று பகைவர்களின் உயிரை வாங்கி அவர்களைக் கடலில் இடக் கடவாய்” என்று ஏவினான். அதுவும் விரைந்து போர்க்களத்தை அடைந்தது. வீரவாகுவையும் அவரது படைகளையும் கொல்ல முடியாது வருந்தியது. எனினும் அவர்களது அறிவை மயக்கி, அவர்களை விண்வழியாக எடுத்துச் சென்று ஆறு சமுத்திரங்களையுங் கடந்து ஏழாவதான நன்னீர்க் கடலில் வைத்துக் காவல் புரிந்தது.

பானுகோபன் தந்தையிடஞ் சென்று தான் வீரவாகுவையும் பூதப் படைகளையும் அழித்த செய்தியைச் சொல்லி மகிழ்ந்து, "நாளை ஆறுமுகனையும் திருமால் பிரமனோடு இந்திரனையும் பற்றி வருவேன்" என்று உரைத்தான். சூரன் எல்லையில்லாத மகிழ்ச்சியால் மகனைக் கட்டித் தழுவினான்.

## வேலாயுதப் பெருமான்

இதற்கிடையில் தமது படைகளின் நிலைமையை அறிந்த முருகப் பெருமான் அவர்களை மீட்கத் தமது வேற்படையை அனுப்பியருளினார். அது நன்னீர்க் கடலை அடைந்து மாயப் படையின் வலிமையை அழித்து வீரர்களைத் தெளிவுறச் செய்தது.

வேற்படையைக் கண்ட வீரவாகுத்தேவர், "வேலாயுதப் பெருமானே! உன்னிற் கந்தக் கடவுளைக் கண்டு கவலை தீர்த்தோம்" என்று வணங்கி நின்றார்.

ஆறுமுகப் பெருமானைப் போலவே அவரது வேலாயுதமும் எல்லையற்ற ஆற்றல் உடையது. அவருக்கு ஆறு முகங்கள் இருப்பதைப் போலவே அதற்கும் ஆறு பட்டைகள் உண்டு. முருகன் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவர். அதுபோலவே வேலாயுதமும் சிவபெருமானால் உண்டாக்கப்பட்டது. முருகன் சிவனது சக்தியாவர். வேலாயுதமும் சக்திவேல் என்று அழைக்கப்படும். இத்தகைய ஒற்றுமைகளால் வீரவாகுத்தேவர் வேற்படையில் கந்தப் பெருமானைக் கண்டு வணங்கினார்.

முருகப் பெருமான் இட்ட பணியை முடித்த வேற்படை தான் முன்சென்று அவரது திருக்கரத்தில் அமர்ந்தது. அதனைத் தொடர்ந்து படைகளுடன் சென்ற வீரவாகுத்தேவர் வழியில் மகேந்திரபுரியைக் கண்டு, "வஞ்சனையால் விண்ணில் மறைந்து மாயத்தால் எம்மை வென்ற பானுகோபனைக் கொல்லாது உயிரோடு இருக்கமாட்டேன்" என்று சபதஞ் செய்தார். அதனை மற்றைய வீரர்களும் ஆமோதித்தனர்.

உடனேயே மகேந்திரபுரத்தைத் தாக்கினர். புலிமுகன் என்னும் அசுரன் அவர்களை எதிர்த்தான். அவனையும் அவனது படைகளையும் அழித்து நகருக்குட் சென்று தீயிட்டனர். தீயை

அணைக்கச் சூரபன்மன் மேகங்களை ஏவினான். அதையறிந்த நாரதமுனிவர் வீரவாகுத்தேவருக்கு வடவாமுகாக்கினி அஸ்திரத்தை ஏவும்படி ஆலோசனை கூறினார். வீரவாகுத்தேவரும் அவ்வண்ணமே செய்ய அதுபோய் மேகங்களின் ஆற்றலை அழித்தது. அதனைக் கண்ட சூரபன்மன் தானே வீரவாகுவைக் கொல்வதாகக் கூறிப் போருக்கு எழுந்தான்.

போருக்கு எழுந்த சூரபன்மனைத் தடுத்து அவன் மகன் இரணியன் தேவர்களை விடுதலை செய்யும்படி தந்தைக்கு நல்லுரைகள் கூறினான். தந்தை தன் உரைகளை மதிக்காததால் அவனின் அனுமதியுடன் தானே போருக்குச் சென்றான்.

அதனால் மூன்றாம் நாள் இரவும் போர் நடந்தது. அந்தப் போரில் வீரவாகுத்தேவரின் போருக்கு ஆற்றாது இரணியன் ஒரு மந்திரத்தை உச்சரித்து மீன் உருவாக மாறிக் கடலுட் சென்று மறைந்தான்.

நான்காம் நாள், சூரபன்மனின் மற்றொரு மகனான அக்கினிமுகன் மாயையாற் கொடுக்கப்பட்ட வில்லை ஏந்தியவாறு போர்க்களம் அடைந்தான். அவன் தன்னை எதிர்த்த வீரவாகுத்தேவரின் சகோதரர் எட்டுப்பேரையும் கொன்றான். அதனைக் கண்டு வீரவாகுத்தேவர் வெகுண்டு எழுந்து கொடும்போர் புரிந்தார். அப்போரில் இரணியனும் சூரபன்மனின் ஏனைய மூவாயிரம் மைந்தர்களும் சூரபன்மனின் அமைச்சன் தருமகோபனும் மாண்டொழிந்தனர். முருகப் பெருமானின் திருவருளினால் மாண்டுபோன வீரவாகுத்தேவரின் சகோதரரும் பூதப் படைகளும் மீண்டு எழுந்தனர்.

## பானுகோபன் வதை

தனது மகன் அக்கினிமுகனும் ஏனைய மூவாயிரம் மக்களும் அமைச்சன் தருமகோபனும் ஒரேநாளில் இறந்தமை குறித்துப் பெருங்கவலை கொண்டிருந்தான் சூரபன்மன். அதனை அறிந்த பானுகோபன் தந்தையிடம் சென்றான். அவனது பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "தந்தையே! பாட்டி மாயை எனக்கு அளித்த படையினால் பகைவரை மயங்கச் செய்து நன்னீர்க் கடலில் இட்டேன். முருகன் தனது வேற்படையால் அவர்களை மீட்டான்.

அத்தகையவனை வெல்லுதல் கனவிலும் முடியாத காரியமாகும். அவன் உன்னுடன் இன்னும் சினங்கொள்ளவில்லை. சினங் கொண்டால் அதனை அனைத்து அண்டங்களுங்கூடத் தாங்க மாட்டா. அதனால் தேவர்களை விடுதலை செய்து அசுரர் குலத்தைக் காப்பாயாக” என்று கூறினான்.

அதனைக் கேட்ட சூரபன்மன் வெகுண்டு “நீயும் அச்சமுற்றாயோ” என்று மகனைப் பரிகசித்தான். பானுகோபன் விதியை யாரே வெல்வர் என்று கருதி, “தந்தையே! என் மீது கோபங்கொள்ள வேண்டாம். பிழையைப் பொறுத்து, என்னைப் போருக்கு அனுப்புவாயாக” என்றான். சூரனும் மகிழ்ந்து அவனுக்கு விடையளித்தான்.

ஐந்தாம் நாள் பானுகோபனுக்கும் வீரவாகுத்தேவருக்கு மிடையிற் கடும்போர் நிகழ்ந்தது. பானுகோபன் வீரவாகுத்தேவரை வீழ்த்திவிடுவானோ என்று தேவர்கள் அஞ்சும் அளவுக்குப் பானுகோபன் வீரப்போர் புரிந்தான். அப்பொழுது வீரவாகுத்தேவர் ஆறுமுகப் பெருமானது திருவடிகளைச் சிந்தித்த வண்ணம் தமது வாட்படையை வீசிப் பானுகோபனைக் கொன்றார். சூரனது அதிவீர மைந்தன் இறந்தது கண்டு தேவர்களும் முனிவர்களும் ஆரவாரஞ் செய்து வீரவாகுத்தேவரைப் புகழ்ந்தனர்.

வீரவாகுத்தேவர் தமது சபதத்தை நிறைவேற்றிய மகிழ்ச்சியிற் கந்தப் பெருமானைக் கண்டு தொழுதார். கந்தப் பெருமானும் “வீரனாகிய சூரன் மகனை வென்றாய். வேண்டுவதைக் கேள்” என்றார். வீரவாகுத்தேவர், “ஐயனே! என் செயல் யாவும் நின்னருளேயாம். அடியேனுக்கு நீ அல்லாது உலகில் வேறொன்று இல்லை. அதனால் நினது திருவடிகளை என்றும் மறவாத அன்பையே வேண்டி நிற்கின்றேன்” என்றார். கந்தப் பெருமான், “அதனை உனக்குத் தந்தோம்” என்று அருள் புரிந்தார்.

## சிங்கமுகன் வதை

இது இவ்வாறிருக்க, வீரமகேந்திரபுரியில் பானுகோபன் மாண்ட செய்திகேட்டுச் சூரபன்மன் ‘ஓ’ வென்று அலறிக் கீழே விழுந்து புரண்டு தவித்தான். அதற்குள் சில தூதுவர்கள் மைந்தனின் உடலைக் கொண்டுவந்து சூரன்முன் வைத்தார்கள். தாய்

பதுமகோமளை வயிற்றில் அடித்துக்கொண்டு மகன்மீது விழுந்து புலம்பினாள்.

அப்பொழுது சூரன் சிறிது தேறி, "பகைவரைக் கொன்று அவர்களின் இரத்தத்தைக் கொண்டு ஒரு யாகஞ் செய்து என் மைந்தனை உயிர்பெறச் செய்வேன். அதுவரை அவனது உடலைப் பாதுகாத் திருங்கள்" என்று கட்டளையிட்டான். பின்னர் ஆசுரம் என்னும் நகரில் அரசுபுரியும் தனது தம்பி சிங்கமுகனுக்கு அழைப்பு விடுத்தான்.

சிங்கமுகன் தனது தேரில் ஏறி விண்வழியாக மகேந்திரபுரம் வந்தடைந்தான். அவனை வரவேற்றுச் சூரபன்மன் சோகத்தோடு நடந்தவற்றைச் சொன்னான். அவற்றையெல்லாம் கேட்ட சிங்கமுகன் சூரபன்மனை வணங்கி, "ஐயனே! மூலமும் முடிவும் இல்லாத இறைவனைப் பாலன் என்று நினைத்தாய். இப்பொழுது துன்பம் அனுபவிக்கின்றாய். எனது நல்லுரைகளை முன்பு கேட்டாயில்லை. விதியை யாரே வெல்வர். உன்பொருட்டு இன்று போர்மேற் செல்கின்றேன். கந்தவேளை வென்றால் உன்னை மீண்டும் காண்பேன். இல்லையேல் அனைவரும் இறப்பது திண்ணம். பின் உனது மனத்துக்குத் தகுந்ததைச் செய்வாயாக!" என்று கூறினான்.

பின்னர் தன் இருப்பிடஞ் சென்று போர்க்கோலம் பூண்டான். இணையற்ற ஆயிரம் மலைகளின் உச்சிகள்தோறும் இளஞ் சந்திரர்கள் உதித்தன போன்று தனது ஆயிரம் நெற்றிகளிலும் திருநீறு தரித்தான். சிவபெருமான் வழங்கிய ஆயுதங்கள், தாய் மாயை கொடுத்த ஆயுதங்கள் மற்றுமுள்ள தெய்வப் படைகள் அனைத்தையும் தாங்கிப் பத்துநூறாயிரம் குதிரைகள் பூட்டிய அழகிய தேரில் ஏறிப் போர்க்களம் அடைந்தான்.

சிங்கமுகனைக் கண்ட தேவர்கள் அஞ்சி முருகப் பெருமானைத் தொழுதனர். முருகப் பெருமான் வீரவாகுத்தேவரைப் போருக்கு அனுப்பினார்.

ஆறாம் நாட்போர் ஆரம்பமாகியது. ஆற்றல் மிக்க பூதவீரர் அனேகர் சிங்கமுகனின் வாளினாற் கைகள் அறுபட்டும் தோள்கள்

வெட்டுப்பட்டும் மாண்டனர். அழற்கண்ணன், சுமாலி, தண்டி முதலிய பூதவீரர்கள் சிங்கமுகனுக்கு ஆற்றாது தளர்ந்து வீழ்ந்தனர். அதனைக் கண்ட ஏனைய பூதவீரர்கள் அஞ்சி ஓடினர். பூதர்கள் பின்வாங்கியதைக் கண்ட இலட்சத்தெட்டு வீரர்களும் சிங்கமுகனை எதிர்த்தனர். அவன் அவர்களின் இரதங்களை அழித்து வீழ்த்தினான். இலட்சத்தெண்மரும் வலியிழந்து புறமுதுகிட்டு ஓடினர்.

அதுகண்ட வீரவாகு அம்புகளைப் பெருமழைபோற் பெய்து அசுரர் படைகளை நிலைகுலையச் செய்தார். சதவீரர் எனப்படும் சிங்கமுகனின் மைந்தரையும் கொன்றார். பின்னர் சிங்கமுகனைக் கொல்லப் பல அம்புகளையும் தெய்வப் படைகளையும் ஏவினார். அவை அவனை ஒன்றுமே செய்யாது துண்டுகளாக விழுந்தன. அதனைக் கண்ணுற்ற வீரவாகுத்தேவர், “இவனைக் கொல்ல நம்மாலாகாது. குமரக் கடவுளின் வேற்படைதான் இவனைக் கொல்ல வல்லது” என்று நினைத்து அவனது தேர், மற்றும் சேனைகளை அழித்தார். சிங்கமுகன் செய்வது அறியாது, தாய் கொடுத்த மாயாபாசத்தை ஏவினான். அது வீரவாகுவையும் ஏனையோரையும் கட்டி, அவர்களை மயக்கி உதயகிரியில் வைத்துக் காவல் புரிந்தது.

சிங்கமுகன் ஆரவாரஞ் செய்து “எங்கே அச்சிறுவன்? இனி அவனையும் முடிப்பேன்” என்று முருகப் பெருமானின் திருவிடம் நோக்கி முன்னேறினான். முருகப் பெருமானும் புன்முறுவலுடன் போர்க்களத்துக்கு எழுந்தருளினார். போர்த்தொழில் புரியும் திருவிளையாடலில் தமது வில்லை வளைத்து நாணோசை செய்தார். அதைக் கேட்ட அசுரப் படைகள் நடுங்கிய நடுக்கத்தில் அவர்களின் ஆயுதங்கள் கீழே விழுந்தன. சிங்கமுகனும் திகைத்தான். பின்னர் ஒருவாறு தெளிந்து, “சிவபிரான் உனக்குத் தந்த வேலின் ஆற்றலை நான் அறிவேன். தாரகனைப் போல என்னைக் கருதாதே. விரைந்து போர் செய்வாய்” என்றான். அவன் கூறிமுடிக்க முன்னரே முருகப் பெருமான் வயிரவாளி ஒன்றால் அவனது உடலில் துவாரங்களை உண்டு பண்ணினார். அத் துவாரங்களின் வழியாக அவன் போரில் விழுங்கிய பூதர்கள் வெளியே வந்தனர்.

அடுத்துப் பெருமான் ஓர் அம்பினைச் செலுத்தி உதயகிரியில் மயங்கிக் கிடக்கும் வீரர்களை அழைத்துவரப் பணித்தார். அது சென்று அவர்கள் அனைவரையும் மீட்டு வந்தது. வந்தவர்கள் யாவரும் முருகப் பெருமானைத் தொழுது நின்றனர்.

அத்தருணத்தில் முன்பு முருகப் பெருமானின் வில்லின் நாணொலியால் சோர்வுற்று வீழ்ந்த அசுரப் படைகள் பெருமானின் திருவருளால் எழுந்தன. எழுந்து அவரைச் சூழ்ந்துகொண்டு போர்செய்யத் தொடங்கின. முருகப் பெருமான் அவர்களை நோக்கிக் கணைமாரி பொழிந்தார்.

அவர் விட்ட கணைகள் ஒன்று கோடியாகி, கோடி பல கோடிகளாகிப் பெருகின. பெருகியது மட்டுமன்றிச் சூலம், ஆலம், வேல், வச்சிரம் என்று பலவித படைகளாகவும் மாறின. அவரின் கணைகள் அழிந்துபோன தருமத்தை உண்டாக்கலின் பிரமன் போன்றிருந்தன; அகில உலகத்தையும் அன்போடு காத்தலின் திருமால் போன்றிருந்தன; உயிர்க் கூட்டங்களைத் துன்புறுத்தி உண்ணுகின்ற அசுரர்களை அழித்தலாற் சிவனே போன்றிருந்தன.

முருகப் பெருமானின் கணைகளால் அசுரப் படைகள் முற்றிலும் அழிந்து சிங்கமுகன் மட்டுமே எஞ்சி நின்றான். அதுவும் தான் மாயையாற் கொண்ட பெருவடிவம் நீங்கிச் சுயவடிவத்துடன் நின்றான். தனது படைகள் முற்றாக அழிந்தமை கண்டு மிகவுஞ் சினந்து தன் இரண்டாயிரம் கரங்களாலும் முருகப் பெருமானைப் பற்றச் சென்றான். முருகப் பெருமான் அவனது கரங்கள் அனைத் தையும் அறுத்து வீழ்த்தினார். அவை மீண்டும் முளைத்தன. சிரங்களை அறுத்தார். அவையும் முளைத்தன. அது கண்டு இது முன்பு ஆலவனத்திற் செய்த வீரயாகத்தில் அவன் கரங்களையும் சிரங்களையும் அறுத்து ஓமத்தீயில் இட்ட பயனால் வந்ததெனத் திருவுள்ளங் கொண்டார்.

அப்பொழுது சிங்கமுகன் மிகுந்த சினத்தோடு, “நீ எத்தனை முறைதான் என் உடல் உறுப்புகளை அறுத்தாலும் அவை மீண்டும் முளைக்கும். என் ஆற்றலை அறியாது நீ போருக்கு வந்தாய். நாம் தேவர்களை விடப்போவதும் இல்லை. நீ என்னைக் கொல்லப் போவதும் இல்லை. நீ திரும்பிப் போவாய்” என்றான்.

முருகப் பெருமான் முறுவலித்து "இவன் உறுப்புகள் மீண்டும் முளையாதிருக்க" எனத் திருவுள்ளங் கொண்டு தனது குலிசம் என்னும் படையால் (வச்சிராயுதத்தால்) அவனைக் கொன்றொழித்தார். அதுகண்ட இந்திரன் முதலியோர் ஆடிப்பாடி மகிழ்ந்து முருகப் பெருமானைச் சூழ்ந்து வாழ்த்தினர்.

போர் நிகழ்ச்சிகளைக் காணச் சூரபன்மன் மலைச் சிகரம் ஒன்றில் ஏறினான். அவ்வேளை அந்தக் கொடிய செய்தி அவனை வந்தடைந்தது. தனது தம்பி மாண்ட செய்தியைக் கேட்ட சூரபன்மன் ஆற்றாது அழுதான். அடியற்ற மரம்போலச் சிகரத்தினின்றும் விழுந்து கண்ணீர்க் கடலில் தத்தளித்தான். பின்னர் சற்றுத் தேறித் தானே சிவகுமாரனுடன் போர் புரிவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டான்.

## சூரன் வதை

ஏழாம் நாள் காலை சூரபன்மன் தனது ஆணையிலுள்ள அண்டங்களில் எல்லாம் இருந்து சேனைகளைத் திரட்டினான். அவைகளின் பரப்பும் கணக்கும் அளவிட முடியாத அளவில் இருந்தன. படைகளின் பெருக்கத்தைக் கண்டு தேவர்கள் அஞ்சினர். பிரமனும் திருமாலும் திகைத்தனர். நவவீரர்கள் ஏங்கினர். பூதப் படைகள் கலங்கின.

ஆயிரத்தெட்டு அண்டத்துச் சேனைகளும் ஆயுதங்களைத் தாங்கிய ஆயிரங்கோடி தேர்களுஞ் சூழ, வெற்றி பொருந்திய சிங்கவாகனம், அழிவில்லாத இந்திரஞாலம் (தேர்) ஆகியவற்றோடு எழுபதினாயிரம் சிங்கங்கள், எழுபதினாயிரம் குதிரைகள், எழுபதினாயிரம் கூளிகள் பூட்டப்பட்ட அழகிய இரதத்தில் ஏறிச் சூரபன்மன் போர்க்களத்தை அடைந்தான்.

முருகப் பெருமானும் புன்முறுவலுடன் தமது பூதப் படைகள், இலட்சவீரர், நவவீரர் சூழ, வாயுதேவன் செலுத்தும் தேரினில் ஏறிப் போர்க்களம் வந்தார்.

போர் மூண்டது. வானமும் பூமியும் நிரம்பி வளிந்த அவுணப் படையாற் பூத வீரர்கள் சிதறி ஓடினர். இலட்சத்து எட்டு வீரர்களும் பின்வாங்கினர். அவற்றைக் கண்ட வீரவாகுத்தேவர் தமது

வில்வித்தையால் அசுரர்களின் தலைகள் தரையில் உருளும்படி போர் செய்தார். அழிக்க அழிக்க அசுரப் படைகள் வந்துகொண்டே இருந்தன. அது கண்டு மனம் வருந்தி வீரவாகுத்தேவர் எல்லாம் வல்ல முருகப் பெருமானைச் சென்றடைந்தார்.

அப்பொழுது முருகப் பெருமான் தமது கணைகளால் அசுரப் படைகளை அழித்தார். அவர்கள் பிற அண்டங்களிலிருந்து வரும் வழிகளையும் அடைத்தார். சூரன் பொங்கி எழுந்து பூதப் படைகளைச் சிதைத்தான்; இலட்சத்தெட்டு வீரர்களையும் வதைத்தான்; வீரவாகுத்தேவரைக் கையால் தூக்கி வானில் எறிந்தான்; முருகப் பெருமானின் தேர்க் கொடியை அறுத்து வீழ்த்தினான். பதிலுக்கு முருகப் பெருமான் சூரனின் தேர்க் கொடியை முறித்துக் கடலில் வீசினார்.

முருகப் பெருமானின் தேரிலே கொடி இல்லாமையால் அக்கினிதேவன் சேவற் கொடியாகி அவரின் தேர்மீது நின்று அண்டங்கள் எல்லாம் அதிரும்படி கூவினான். தேவர்கள் ஆரவாரஞ் செய்தனர். அவர்களின் ஆரவாரத்தைக் கேட்டு ஆத்திரங்கொண்ட சூரன் தேவலோகஞ் சென்று அவர்களைக் கணைகளால் தாக்கினான். முருகப் பெருமான் அக்கணைகளுக்கு மாற்றுக் கணைகளை விடுத்துத் தேவர்களைக் காத்தருளினார்.

தேவலோகத்திலிருந்து சூரன் பிரமதேவர் முதலானவர்களின் உலகங்களுக்குச் சென்றான். அவன் செல்லும் இடங்களைத் தொடர்ந்து முருகப் பெருமானும் போர் செய்தார். இவ்விதம் இவர்கள் தமது இரதங்களில் உலகத்துக்கு உலகம் தாவியும் அண்டங்களைச் சுற்றியும் போர் புரிகையில் முருகப் பெருமான் சூரனின் தேரை ஒடித்துக் குதிரைகளையுங் கொன்றார். அதற்குங் கலங்காது சூரபன்மன் தனியனாக நின்று கடும்போர் புரிந்தான்.

பின்னர் முருகப் பெருமானின் கணைகளுக்கு ஆற்றாது மாயமாக வெவ்வேறு இடங்களில் மறைந்து நின்றான். அவன் மறைந்து நிற்கும் இடங்களிலும் முருகப் பெருமான் தோன்றினார். சூரன் செய்வது அறியாது இந்திரஞாலத் தேரை அழைத்து, அதில் ஏறி அண்டங்களுக்குத் தாவித் தனக்குப் படைகள் வராதவாறு முன்பு முருகப் பெருமான் அடைத்து வைத்த வழிகள் பலவற்றைத்

திறந்து படைகளைக் கூவி அழைத்தான். அவை பெரும் வெள்ளமாக வந்து பெருமானைச் சூழ்ந்து கொண்டன. அவர் ஒரு பார்வையால் அவற்றையெல்லாம் எரித்தார்.

சூரன் அச்செயலைக் கண்டு "இச்சிறுவனை இப்பொழுதே முடிக்கிறேன்" என்று சிவபெருமான் தனக்கருளிய சக்கரத்தை எடுத்து வணங்கிக் காற்றினுங் கடிய வேகத்திற் கந்தவேள் மீது செலுத்தினான். அவர் அதனைத் தமது திருக்கையாற் பற்றிக்கொண்டார். சூரன் மீண்டும் மாயங்களால் வடிவேலரை மயக்க முயன்றான். அவர் தமது ஞானப் படையால் அவனது மாயங்களை நீக்கினார்.

கோடானுகோடி சேனை வெள்ளத்தைச் சிவபாலர் பார்வையாலும் உயிர்ப்பாலும் புன்முறுவலாலும் எரித்தபின், தனித்து நின்ற சூரன் தாயை நினைத்தான். மாயையும் உடனே அவன் முன் தோன்றினாள். அவளைக் கண்ட சூரன் மகிழ்ந்து "தாயே இறந்த எனது சேனையை எழுப்ப வேண்டும்" என்று கேட்டான். அவள் புறக்கடலின் ஒரு பக்கத்தில் உள்ள அமுதசீத மந்தர மலையைக் கொண்டுவந்தால் அவர்கள் எழும்புவார்கள் என்று கூறி மறைந்தாள். சூரனும் உடனே இந்திரஞாலத் தேரை அனுப்பி அம்மலையை எடுப்பித்தான். அந்த மலைக்காற்று வீசியதும் போர் தொடங்கியநாள் முதல் இன்றுவரை இறந்தவர் எல்லோரும் எழுந்தார்கள். சிங்கமுகன், பானுகோபன் முதலியோர் சிவகுமாரரைச் சூழ்ந்துகொண்டு போர் தொடுத்தனர்.

சிவகுமாரர் உயிர்கள் அனைத்தையும் அழிக்கும் சர்வசங்கார மூர்த்தியின் படைக்கலத்தை எடுத்து உயிர்பெற்று எழுந்த அவுணக் கூட்டங்கள் அனைத்தையும் அழித்து வருவாய் என்று பணித்தார். அதுவும் நொடியினில் அவ்வாறே செய்து, இந்திரஞாலத்தில் இருந்த அமுதசீத மந்தர மலையையும் துகளாக்கி மீண்டு வந்து அவரின் திருக்கரத்தில் திகழ்ந்தது.

அதனைக் கண்டு சூரபன்மன் முருகனது படை முழுவதையும் மயக்கி மூதண்டப் பகுதியில் வைத்துக் காவல் செய்யும்படி இந்திரஞாலத்தை ஏவினான். இந்திரஞாலமும் அவ்விதமே செய்தது. முருகப் பெருமான் ஒரு கணையால் தமது படைகள்

முழுவதையும் வரவழைத்ததோடு இந்திரஞாலம் சூரனிடம் திரும்பிச் செல்லாதவாறும் தடுத்தார்.

சூரன் சினங்கொண்டு தான் சிவனிடத்தில் தவஞ்செய்து பெற்ற சூலத்தை ஏவினான். அதனை முருகப் பெருமான் தனது வச்சிராயுதத்தாற் தடுத்துப் பிடித்துக்கொண்டார். மேலும் அவன் ஏறிவந்த சிங்கத்தையும் தொலைத்தார்.

அதன்பின் சூரன் ஒரு சக்கரவாகப் பறவை வடிவங்கொண்டு முருகனின் படைகளை விழுங்கப் பறந்து திரிந்தான். ஒரு பறவையுடன் தேரில் இருந்து போர்செய்வது முறையன்று எனக் கருதி, குமரக் கடவுள் இந்திரனை நோக்கினார். அவன் அவரின் குறிப்பை அறிந்து ஒரு மயிலாகி அவர் முன் நின்றான். அவர் மயிலில் ஏறிச் சக்கரவாகப் பறவையுடன் போர் புரிந்து, அதனை வாளினால் வெட்டி இரு துண்டுகளாக்கினார்.

சளைக்காத சூரன் நிலம், நீர், நெருப்பு, காற்று என்னும் வடிவங்களில் நின்று நான்கு நாட்கள்வரை விடாது போர் புரிந்தான். கந்தப் பெருமான் அம்புகளால் அவ் வடிவங்களை எல்லாம் மாய்த்தார்.

சூரன் விடாது மும்மூர்த்திகள் போலவும் தேவர்கள், அசுரர்கள் போலவும் கூற்றுவன் போலவும், பேய்கள் பிசாசுகள் போலவும் இறந்த தனது தம்பியர், மைந்தர் போலவும் விதம்வித வடிவங்கள் எடுத்து விண்ணிலும் மண்ணிலும் மற்றுமுள்ள உலகங்களிலும் திரிந்து திரிந்து வடிவேலனுடன் போர் இயற்றினான். அவனது வடிவங்களை எல்லாம் வடிவேலர் முழுமையாக அழித்தார். அழிக்கவும் சூரபன்மன் செயலிழந்து சினத்துடன் தனித்து நின்றான். சிறிதுநேரம் எங்கும் அமைதி நிலவியது.

அந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு ஆகாயத்தில் அசரீரி ஒன்று எழுந்து, “சூரனே! மேகத்து மின்னலைப்போல உனது மாயா உருவங்கள் அனைத்தையும் சிவகுமாரர் அழித்தார். இனி அவரது அழியாத பேருருவத்தைக் காண்பாயாக” என்று கூறலும் கடல்களும் திசைகளும் புவனங்களும் அண்டங்களும் தேவர்களும் மற்றைய உயிர்களும் இன்னுமுள்ள யாவும் தமது திருமேனியில்

அமைந்தனவன்றி வேறில்லை என்னும்படியாக ஒப்பற்ற தமது பேருருவத்தை முருகப் பெருமான் சூரபன்மனுக்குக் காட்டியருளினார்.

ஆயிரம் ஆயிரம் சூரியர்கள் ஒன்றாக உதயமானவை போன்ற பேரொளியோடு விளங்கிய அத் திருவுருவத்தைக் கண்டு வானவர் அஞ்சினர். "அஞ்சேல்" என்று அவர்களுக்கு அபயம் அளித்தார் ஆறுமுகப் பெருமான். ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானின் அற்புதக் குமாரனின் திருவுருவத்தைக் கண்டு சூரன் அதிசயித்து நின்றான். அப்பொழுது ஐயன் அவனுக்குச் சிறிது நல்லுணர்வு அருளியதும் அவன் இவ்வாறு கூறலுற்றான்:

"கணக்கற்ற அசுரர்களைக் கணப்பொழுதிற் கொன்று, அண்டங்கள் தோறும் கடும்போர் புரிந்து, என்னை அடைந்தவர்கள் அனைவரையும் அறவே அழித்து, பரமசிவன் எனக்கு அளித்த இந்திரஞாலத்தையும் பறித்து, எனது மாயங்கள் யாவற்றையும் மாய்த்து, அண்டமும் புவனமும் அமரரும் பிறவும் ஆகிய அனைத்தையும் தன்பால் காட்டிடும் அளப்பரும் உருவங்காட்டி என்முன் இவன் நின்றான்.

"கோலமா மஞ்ஞை (மயில்) தன்னிற் குலவிய குமரன் தன்னை அந்நாளிற் பாலன் என்றிருந்தேன். இவனின் இவ் வியல்புகளை அறிந்திலேன். திருமாலுக்கும் நான்முகனுக்கும் மற்றுமுள்ள வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாக நின்ற மூர்த்தி இவனன்றோ!

"முன்பு இவனின் தூதுவனாக வந்தவன் இவனை விருப்பு வெறுப்பற்ற பராபர முதல்வன் என்று கூறினான். அதனை நான் அப்பொழுது நம்பவில்லை. இப்பொழுது இவன் ஈசனே என்னும் உண்மையைத் தெரிந்துகொண்டேன். என்ன ஆச்சரியம்! நான் பெற்ற அண்டங்கள் அனைத்தும் இவனது உரோமங்களிலே தோன்றி நிற்கின்றன. பலகாலம் பார்க்கினும் தெவிட்டாத பேரழகுடைய இப் பெருவடிவினை யாரே நின்று காணவல்லார்? அழிவில்லாத பெருவரம் பெற்றதால் நான் இதனைக் காண்கின்றேன்.

"ஆயிரங் கோடி மன்மதர்களின் அழகெல்லாம் ஒன்றாகத் திரண்டு

வரினும் செவ்வேளாகிய இவனது தூய திருவடிகளின் பரிசுத்த அழகுக்கு இணையாகாது என்றால், இந்த ஆதியான பெருமானின் மாபெரும் வடிவம் முழுவதற்கும் எவர் உவமை கூறவல்லார்?

“முன்பு எனது இளவலும் இளைய மகனும் இப்பெருமானின் பேரியல்புகளை எல்லாம் எடுத்துக்கூறி இம் மூர்த்தியைச் சிறுவன் என்று எண்ண வேண்டாம் என்றனர்.” அவர்கள் கூறிய யாவும் உண்மையே அன்றோ!

“என் கோபம் தீர்ந்தது. போர் செய்வதில் உள்ள ஊக்கம் குறைந்தது. உரோமங்கள் சிலிர்த்தன. விழிகள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. இவன்மீது அன்பு பிறந்தது. எனது உள்ளமும் உயிரும் உருகின. அகந்தை அகன்றது. ஞானம் புகுந்தது. எனது வலத் தோளும் கண்ணும் துடிக்கின்றன. உலகம் எங்குமுள்ள பொருள்கள் யாவும் தோன்றுகின்ற நாயகன் வடிவத்தைக் கண்டேன். நல்ல தவத்தினால் அடையும் பயன் இதுவேயல்லவா?

“இப் பெருமானை எனது தாள்கள் வலம் வரவேண்டும்; கைகள் தொழவேண்டும்; சென்னி தாழுதல் வேண்டும்; நா துதித்திடல் வேண்டும். எனது தீமை அகன்று இவனுக்கே நான் ஆளாக வேண்டும். ஆயினும் இவ்வாறு செய்யவிடாது என்னைத் தடுத்தது மானம் ஒன்றே!

“குற்றமற்ற தேவர்களை நான் சிறைசெய்தது குற்றம் என்று பலருங் கூறினர். அவ்வாறு செய்தபடியாலன்றோ வேதங்களும் நான்முகனும் மற்றுமுள்ள அமரர்களும் காணாத ஒரு முதல்வனை நான் இங்கு நேரிலே காணக்கூடியதாக இருக்கின்றது.”

இவ்வாறு சூரன் கூறி நிற்கையில், முருகப் பெருமான் நினைத்தற்கரிய தமது பெரிய உருவத்தை நீக்கித் தமது சுயவடிவத்தில் நின்றார். அத்துடன் சூரனுக்கும் தாம் அளித்த நல்லுணர்ச்சியைப் போக்கிச் சுய அறிவை வரச் செய்தார். அதனால் அவனது முன்னைய ஆணவமும் சினமும் அவனை முற்றும் ஆட்கொண்டன.

அதனால் "இச்சிறு கள்வன் என்னை மாயத்தால் மயக்கினான். இவனைக் கொல்லுமுன் இக்கொடிய பகையை மூட்டிவிட்ட தேவர்களின் உயிர்களைக் குடிப்பேன்" என்று கூறிக்கொண்டு, பல தலைகளையும் கணக்கற்ற கரங்களையும் உடைய பேரிருள் வடிவம் ஒன்றை எடுத்துத் தேவர்களை விழுங்க விண்ணில் எழுந்தான். தேவர்கள் அஞ்சி நடுங்கித் திசையெங்கும் சிதறி ஓடினார்கள்.

"அண்டினார்க்கு இனியனே ஓலம்! ஞானநாயகனே ஓலம்! வேற்படை விமலனே ஓலம்! மூவருமான முதல்வனே ஓலம்! இந்தச் சூரன் எம்மை விழுங்க வந்துள்ளான்! காக்க! காக்க! கடிதினிற் காக்க!" என்று கந்தப் பெருமானை நினைத்துக் கதறினார்கள்.

அப்பொழுது கந்தப் பெருமான் தனது திருக்கரத்தில் திகழும் வேலை ஏவினார். அது அவனது மாய வடிவத்தை நீக்கியதும் அவன் கடலின் நடுவிற் சென்று பெரியதொரு மா மர வடிவாக நின்றான். செம்மணிகள் போன்ற பழங்களைத் தாங்கியவாறு மேகம் போல நெருங்கிய பல கிளைகளுடன், ஒரு நூறாயிரம் யோசனை அளவு பருத்த அடிமரம் உடையதாய், கடல், வான், நிலம் ஆகிய இடங்கள் எல்லாம் நிழலைப் பரப்பிக் கொண்டு நின்ற சூரன் தனது உடலை அசைத்தான். அப்பொழுது உலகங்கள் இடிந்தன. உயிர்க் கூட்டங்கள் இறந்தன. அக் கொடிய மாமரத்தின் அடியை வள்ளல் விடுத்த வடிவேல் வெட்டி வீழ்த்தியது. அண்டங்கள் எல்லாம் அஞ்சத் தக்க பெருஞ் சத்தத்துடன் வீழ்ந்தும் முன்பு செய்த தவத்தின் வலிமையாற் சூரன் இறக்காது எழுந்தான்.

எழுந்ததும் தனது சுய வடிவத்தை எடுத்துக்கொண்டு மிகவும் வெகுண்டு, கூரிய உடைவாளை உருவிக்கொண்டு இடிபோல ஆர்த்து மீண்டும் முருகப் பெருமானுடன் போர் தொடுத்தான். முருகப் பெருமானின் கூர்வேல் அவனது மார்பை இரண்டு துண்டுகளாகப் பிளந்து கடலில் வீழ்த்தியது. பின்னர் மறைகள் முழங்கக் கங்கையாடிக் கந்தப் பெருமான் கரத்தை வந்து அடைந்தது.

சிவபெருமானின் வரத்தினால் சூரபன்மன் இறவாது மீண்டும் எழுந்தான். அவனது பிளவுபட்ட உடற் கூறுகள் இரண்டும்

சேவலும் மயிலுமாகிப் போர் புரியுஞ் சினத்தோடு சிவகுமாரர் முன் தோன்றின. அப்பொழுது பெருமான் சேவலும் மயிலுமாய சூரனை அருட்கண்ணோடு பார்த்தருளினார். அவ்வளவிற் சூரனும் நல்வினைப் பயனாற் பகைமை நீங்கித் தெளிவு பெற்று நின்றான். இதுநாள்வரையும் கடும்போர் செய்த சூரன் கந்தப் பெருமானின் எல்லையற்ற கருணையினால் நல்வாழ்வு பெற்றான். தீமைகளையே செய்தவராயினும் செவ்வேள் முன் வந்துற்றால் தூயவராகி நற்கதி அடைவர் என்பதற்குச் சூரன் அனுபவம் நல்ல சான்று.

அப்பொழுது கந்தப் பெருமான் தமது கருணையால் உணர்வு பெற்ற சேவலைப் பார்த்து, "நீ நம் தேர் மீது கொடியாக நிற்பாய்" என்று அருள, அதுவும் தேர்மீது நின்று அண்டங்கள் அதிரக் கூவி ஆரவாரித்தது. அதன் பின் அவர் தாம் ஏறி இருந்த இந்திரனாகிய மயிலை விட்டு இறங்கி, அறிவு பெற்ற சூரனாகிய மயிலை நோக்கி, "நீ எம்மைச் சுமப்பாய்" எனக் கூறி அதன்மீது எழுந்தருளினார். பின்னர் அங்கு மயிலாக நின்ற இந்திரனையும் சேவலாக நின்ற அக்கினியையும் தங்களது சுயவடிவங்களைத் தாங்கப் பணித்தருளினார்.

சூரபன்மனை அழித்து, மரகதம்போலும் அழகு பொருந்திய மயில்மீது எழுந்தருளிய முருகப் பெருமானைப் பூதர்களும் படைத் தலைவர்களும் இலட்சம் வீரர்களும் நவவீரர்களும் சூழ்ந்து வணங்கினர். தேவர்களும் முனிவர்களும் பெரும் மகிழ்ச்சி பொங்கத் தொழுது போற்றினர்.

## தேவர்கள் சிறை மீட்பு

சூரபன்மன் இறந்ததை அறிந்த பட்டத்தரசியான பதுமகோமளை இடியுண்ட அரவம் போல் துடி துடித்து வீழ்ந்து இறந்தாள். அவனது மற்றைய மனைவிமாரும் அழுது புலம்பி அழற்குண்டம் ஒன்றை அமைத்து, அதிற் பதுமகோமளையின் சடலத்தை இட்டுத் தாமும் விழுந்து இறந்தனர். மகேந்திரபுரம் சோகக் கடலில் தவித்தது. அதுவரை அந்நகரில் இருந்த திருமகளும் அதனைவிட்டு வெளியேறினாள்.

இரணியன் தனது தந்தையின் கதியை அறிந்து விழுந்து புலம்பினான். சுக்கிராச்சாரியார் சொற்படி இறந்த தாய் தந்தைக்கும்

ஏனையோருக்கும் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடித்தான். பின்னர் செல்வம் நிலையில்லாதது மட்டுமல்ல, துன்பத்தையும் தரவல்லது என்று தெளிந்து நற்கதியை நாடித் தவம் இயற்றலாயினான்.

கந்தப் பெருமான் வீரவாகுத்தேவரை அனுப்பி, வீரமகேந்திரபுரத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த சயந்தன் முதலான தேவர்களை மீட்பித்தார். விடுதலை பெற்ற விண்ணவர் அனைவரும் வந்து ஆனந்தக் கண்ணீர் சொரிய ஆறுமுகப் பெருமானை மும்முறை வலம் வந்து வணங்கி அவரது பேரருளைப் பெற்று உய்தனர்.

அதன்பின் எல்லோரும் இந்திரனை வணங்கினர். தன்னை வணங்கிய மகன் சயந்தனை இந்திரன் தழுவி ஆசீர்வதித்தான். அவ்விதமே ஏனைய தேவர்களையும் அன்போடு வரவேற்றான்.

கந்தப் பெருமான் போரில் இறந்த பூதப் படைகள் அனைவரையும் உயிர்ப்பித்தார். அவர்களும் ஆரவாரத்துடன் எழுந்து வந்து அவரைச் சூழ்ந்து வணங்கினர். பின்னர் பெருமான் வருணனை அழைத்து மகேந்திரபுரத்தை அழிக்கப் பணித்தார். அவனும் அவ்விதமே அந்நகரத்தை அழித்தான். அதன்பின் பெருமான் தமது பரிவாரங்களோடு திருச்செந்தூரை அடைந்தார். அப்பொழுது கதிரவனும் மேலைக் கடலை அடைந்தான்.

திருச்செந்தூரிலே தேவர்கள் திருமுருகனுக்குப் பூசை செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். முருகப் பெருமானும் அவர்கள் அன்போடு செய்த பூசையை உவந்து ஏற்று, “வேண்டுவது யாது” என வினவினார். அவர்கள் யாவரும் ஏகோபித்த குரலில், “நினது திருவடிகளுக்குத் தலையாய அன்பு பூண்டிருக்க வேண்டும்” என்று வேண்டவே பெருமானும் அவ்வாறே அருள்புரிந்தார்.

மறுநாட் காலையில் முருகப் பெருமான் சிவபூசை செய்ய விரும்பி, தேவதச்சனைக் கொண்டு ஆலயம் ஒன்றை அமைப்பித்தார். அதில் சிவலிங்கத்தை நாட்டி எல்லா உலகத்துக்கும் இறைவராக விளங்கும் சிவபெருமானுக்குப் பூசனை செய்து மகிழ்ந்தார்.

# 16. தெய்வயானை திருமணம்

திருச்செந்தூரிலிருந்து முருகப் பெருமான் தமது பரிவாரங்களுடன் திருப்பரங்குன்றம் வந்து சேர்ந்தார். அங்கு தேவதச்சனால் அழகுற அமைக்கப்பெற்ற நகரத்திற் கோயில் கொண்டிருந்தகாலை, பராசரன் மைந்தர் அறுவரும் வந்து அருச்சித்து நின்றனர். பெருமான் அவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்தருளினார்.

இந்திரன் தன் பகையை அழித்துத் துன்பத்தை நீக்கிய பெருமானுக்கு நன்றி செய்யும் வகையிலே தனது மகள் தெய்வயானையை மணஞ்செய்து கொடுக்க எண்ணினான். அவனது எண்ணத்தைப் பிரமதேவரும் திருமாலும் மகிழ்ந்து வரவேற்றனர். இந்திரன் மேருமலையில் இருக்கும் இந்திராணி யையும் மகளையும் வரவழைத்தபின், பரிவாரங்களுடன் சென்று பெருமானுக்குத் தனது விருப்பத்தைத் தெரிவித்தான். அதனைக் கேட்ட முருகப் பெருமான், “முன்னரே இப்பெண் எம்மை மணக்க வேண்டிப் பெருந்தவம் புரிந்துள்ளாள். அதனால் நீ விரும்பியவாறே நாளை மணம் புரிந்து கொள்வோம்” என்று கூறியருளினார்.

இந்திரனும் மகிழ்ந்து ஒற்றர்கள் மூலம் முசுகுந்தன் முதலிய புவி மன்னருக்கும் விண்ணுலகத்தோருக்கும் திசைக் காவலருக்கும் முனிவர் முதலானோருக்கும் அழைப்பு விடுத்தான். தேவதச்சனைக் கொண்டு அழகிய திருமண மண்டபமும் விருந்தினர் தங்கு வதற்கான மாளிகைகளையும் அவர்கள் விரும்பியதைப் பெற்று இன்புறத் தக்க சோலைகளையும் வாவிகளையும் நீர்ச் சுனைகளையும் அமைப்பித்தான்.

திருமணத்துக்குப் பிரமதேவர் நேரங் குறித்தார். இந்திரன் தேவர்களும் முனிவர்களும் புடைசூழச் சென்று முருகப் பெருமானைத் திருமண மண்டபத்துக்கு எழுந்தருளுமாறு விண்ணப்பித்தான். முருகப் பெருமானும் மணவாளக் கோலம் பூண்டு மயில்மீது அமர்ந்து பிரமதேவர் ஆதியோர் மலர் தூவியவாறு சூழ்ந்துவரத் திருப்பரங்குன்றத்தின் வீதிவழியால் திருமண மண்டபத்துக்கு எழுந்தருளினார். சூரியன், சந்திரன், வாயு, வருணன் முதலிய தேவர்கள் வெண்கொற்றக் குடை பிடித்தும் கவரி வீசியும் ஆலவட்டம் அசைத்தும், வாளினை ஏந்தியும் உடன் வந்தனர்.

தேவர்களும் முனிவர்களும் இலட்சத்து ஒன்பது வீரர்களும் பூதர்களும் ஆர்த்தனர். தண்டு, பேரிகை, தண்ணுமை முதலிய வாத்தியங்களைப் பூதர்கள் இசைத்தனர். அரம்பை ஊர்வசி முதலிய தேவமாதர் நடனம் ஆடினர்.

இவ்வித சிறப்புக்களுடன் திருமண மண்டபத்தை அடைந்த பெருமானை அருந்தவ முனிவர்கள் எதிர்கொண்டு நிறைகுடத்தில் தோய்ந்த தருப்பையின் தூய நீரைத் தூவி ஆசிகூறி ஏத்தினர். தேவ, முனிவ மாதர்கள் அட்டமங்கலப் பொருள்களையும் தீபத் தட்டுகளையும் ஏந்திப் பெருமானை வரவேற்று வணங்கினர். பெருமான் அவர்களுக்கு அருளி, மயிலைவிட்டு இறங்கி, திருமண மண்டபத்துப் பிரதான வாயிலை அடைந்தார்.

அவ்விடத்தில் இந்திராணி காமதேனுவின் பால்கொண்டு வள்ளலின் திருவடிகளைக் கழுவி பல்சுடர் கொண்ட தீபக் கலத்தினை மும்முறை சுற்றிப் பூசனை செய்தாள்.

பெருமான் அப் பூசனையை உவந்து ஏற்றருளி, மண்டபத்துட் புகுந்து ஒளிவீசும் உயர்ந்த பீடத்தில் அமர்ந்தார். அதன்பின் திருமால், பிரமன் முதலிய தேவர்களும் பிறரும் தத்தம் இடங்களில் அமர்ந்தனர்.

அச்சமயம் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உமாதேவியாருடன் திருமண மண்டபத்துக்கு எழுந்தருளினார். அவர்களைக் கண்ட திருமால் முதலிய தேவர்களும் மற்றையோரும் எழுந்து மகிழ்ச்சியால் வணங்கி நின்றனர். முருகப் பெருமானும் தாய் தந்தையைக் கண்டு பேருவகை கொண்டு விரைந்து தன் பீடத்திலிருந்து இறங்கி, அவர்களது திருவடிகளை வீழ்ந்து வணங்கினார். தங்கள் அருமைக் குமாரனை அவர்கள் தனித்தனி எடுத்து மார்போடு அணைத்து உச்சி மோந்தனர்.

அப்பொழுது இறைவரது ஆணையால் விண்ணிலிருந்து மணியாசனம் ஒன்று வந்து இறங்கியது. அம்மையும் அப்பரும் அவ்வாசனத்தில் எழுந்தருளினர். பின்னர் இறைவர், “இனி இத் திருமணத்துக்கு உரியவற்றைச் செய்க” என்று திருவாய் மலர்ந்தார். திருமாலும் நான்முகனும் மிக்க மகிழ்ச்சியடைந்து இந்திரனைப்

பார்த்து "உன் புதல்வியை அழைத்து வருவாய்" என்று கூறினர். அவனும் உடனே மகளை அழைத்துவர எழுந்தான்.

தெய்வயானை தேவர்களும் முனிவர்களும் வாழ்த்தவும் திருமகளும் கலைமகளும் ஏத்தவும் திருவடிகளில் நூபுரம் அரற்றவும் சிற்றிடையில் மேகலை ஒலிக்கவும் நடந்து, இந்திரனோடு திருமண மண்டபத்தை அடைந்தார். முதலிற் சிவபிரானையும் உமாதேவியாரையும் வணங்கிப் பின் முருகப் பெருமான் பக்கஞ் சென்று நாணத்துடன் நின்றார். அவர்கள் இருவரையும் அம்மையும் அப்பருமான உமாதேவியாரும் சிவபிரானும் மணவறைப் பீடத்தில் ஒன்றாக இருத்தினர். ஒப்பற்ற அழகுடன் விளங்கிய அந்த மணவறையில் அம்மை அப்பரின் பிரதி பிம்பம்போல மணமக்கள் வீற்றிருந்தனர்.

இந்திராணி மஞ்சனம், மலர் முதலியவற்றைக் கொண்டுவந்து குமரப் பெருமானின் திருப்பாதங்களுக்குப் பூநீரால் அபிடேகஞ் செய்ய, இந்திரன் பாதபூசை செய்தான். அந்த நல்ல வேளையில் இந்திரன் பெருமானின் திருக்கரங்களில் தெய்வயானைப் பிராட்டியின் திருக்கரங்களை வைத்து, "தேவரீரது அடியவனாகிய நான் எனது மகளைத் தேவரீருக்குத் தந்தேன்" எனக் கூறிக் கமண்டல நீரைத் தாரையாக வார்த்தான். பெருமானும் கருணைகொண்டு தெய்வயானையை ஏற்றருளினார். அதன்பின் நான்முகன் அழகிய திருமங்கல நாணை வழங்க, அதனைப் பெற்றுத் தெய்வயானையின் கழுத்தில் அணிந்து, கூந்தலில் மலர்களையும் சூட்டினார்.

அவ்வேளை பலவகைக் கனிகள், கரும்பு, தேன், பால் ஆகியவற்றை இந்திரன் ஏந்தி மணமக்களை நுகர்வித்தான்.

பின்னர் நான்முகன் அக்கினி வளர்த்து வேதச் சடங்குகளைச் செய்தான். உலகத்தவர்பொருட்டு ஆறுமுப் பெருமானும் தமது தேவியோடு அக்கினியை வலம்வரல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் முதலியவற்றை எல்லாம் முறைப்படி செய்தார். அதன்பின் அம்மை அப்பரை வலம்வந்து மும்முறை அவர்களின் திருவடிகளை வணங்கி நின்றார். பெற்றோர் அவர்களை வாழ்த்தி, "எமது தலைமையை உங்களுக்குத் தந்தனம்" என்று கூறியருளித் திருக்கயிலைக்குச் சென்றருளினர்.

திருமண மண்டபத்தில் உமையோடு சிவபிரான் எழுந்தருளிய மணியாசனத்தில் மணமக்கள் இருந்தனர். அவர்களை அங்கு கூடியிருந்த யாவரும் வணங்கி வாழ்த்தினர். அவர்கள் அனைவருக்கும் முருகப் பெருமான் அருள்பாலித்து, விடை கொடுத்தருளி, தேவியாரோடு தமது கோயிலுக்கு எழுந்தருளினார்.

காமதேனு நல்கிய பலவகையான உணவுகளைக்கொண்டு முசுகுந்தன் முதலிய நிலவுலகத்து அரசர்களை இந்திரன் உபசரித்து, பட்டு, பொன்னாடை முதலிய பரிசுகளைக் கொடுத்து அனுப்பினான்.

## இந்திரனுக்கு முடிசூட்டுதல்

இவ்விதம் எல்லையற்ற சிறப்புக்களோடு தெய்வயானையை முருகப் பெருமானுக்குத் திருமணஞ் செய்துகொடுத்த மகிழ்ச்சியில் இந்திரன் இந்திராணியோடு பலநாட்கள் இன்புடன் இருந்துவந்தான். முருகப் பெருமான் ஒருநாள் தெய்வயானையுடன் அமராவதிக்கு எழுந்தருளினார். அவரைத் தொடர்ந்து திருமால், நான்முகன், இந்திரன் முதலாய தேவர்களும் வீரர்களும் பூதர்களும் முனிவர்களுஞ் சென்றனர்.

அசுரர்களால் முன்பு அழிக்கப்பட்ட அமராவதியை முருகப் பெருமான் தேவதச்சனைக் கொண்டு முன்னையதிலும் பன்மடங்கு சிறந்ததாக அமைப்பித்தார். பின்னர் திருமால், பிரமன் முதலானோரைக் கொண்டு இந்திரனுக்கு முடிசூட்டிவித்து, “இந் நகரிலிருந்து நீ முன்புபோல் அரசு செலுத்துவாயாக” என்றருளினார். இந்திரனும் ஏனைய தேவர்களும் வணங்கி நின்றனர். அவர்கள் அனைவருக்கும் அருள்பாலித்துப் பெருமான் தேவியாரோடு திருக் கயிலையை அடைந்தார். அங்கு பரமனையும் அம்பிகையையும் வலம் வந்து வணங்கினார். பின் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, கந்தகிரி சென்று தமது கோயிலில் தேவியாரோடும் யாவரும் ஏத்த வீற்றிருந்தருளினார்.

இந்திரன் தேவர்கள் மகிழும் வண்ணம் தேவலோகத்தை அரசுபுரிந்து வரும் நாளில், தான் முன்பு பட்ட துன்பங்களை நினைத்து அரசியலில் வெறுப்புற்றுத் துறவறம் பூண்டு தவஞ் செய்து வீடுபேறு அடைய விரும்பினான். அதனை அறிந்த

தேவகுருவாகிய வியாழன் அவனை அவ்விதம் செய்யவிடாது தடுக்கும் எண்ணத்துடன் உலோகாயத சமயத்தில் நின்றும் (பெண்களிடம் இன்பம் அனுபவித்தும்) வீடுபேறு அடையலாம் என்று உபதேசித்தார்.

வியாழபகவானின் தந்திர உரையை மந்திரமாக ஏற்றுக்கொண்ட இந்திரன், தனது விண்ணுலக அரசை மைந்தன் சயந்தனிடம் ஒப்படைத்து, இந்திராணியுடன் சேர்ந்து சிற்றின்ப வாழ்க்கையில் திளைத்து வாழ்வானாயினான்.

இந்திரன் ஆணைப்படி அரசு புரிந்துவரும் சயந்தன் ஒருநாள் வியாழபகவானைப் பார்த்து, "குருவே! எந்தையும் பிரமன் முதலாய தேவர்களும் சூரபன்மனால் துன்பம் அனுபவித்து இழிவுற்றமைக்கான காரணம் யாதோ?" என்று வினவினான். அதற்கு வியாழபகவான், "முப்புரம் எரித்த சிவபிரானை விலக்கித் தக்கன் செய்த வேள்வியில் தேவர்கள் கலந்துகொண்டதே காரணம்" என்று பதில் அளித்தார். "அங்ஙனமாயின் தக்கன் வாழ்க்கையையும் அவன் செய்த வேள்விபற்றிய விவரத்தையும் சிறியேன் அறியும் வண்ணம் உரைத்தருள வேண்டும்" என்று சயந்தன் கேட்க, வியாழதேவரும் தக்கனது சரித்திரத்தைக் கூறலானார்.

# 17. தக்கன் தவம்

பிரமதேவருக்கு உபப்பிரமர்கள் எனப்படும் பத்துப் புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவனும் சிறந்த அறிவாளியுமான தக்கன் ஒருநாள் பிரமதேவரிடம் முழுமுதற் கடவுள்பற்றிப் பல கேள்விகளைக் கேட்டான். அவனது கேள்விகளும் பிரமதேவரின் பதில்களும் பின்வருமாறு அமைந்திருந்தன:

**தக்கன்:** தந்தையே! உலகங்கள் அனைத்துக்குந் தலைவரும் அழிவற்றவரும் உயிர்கள் தோறும் உயிராய் இருப்பவரும் எங்கும் உள்ளவரும் எல்லாம் அறிபவரும் எல்லாம் வல்லவருமாகிய முழுமுதற் கடவுள் யாவர்?

**பிரமா:** மகனே! திருமாலும் யானும் அடிமுடி தேடி அறியாது சோர்ந்தபோது எமக்கிடையே எவர் சோதிப்பிழம்பாகத் தோன்றினாரோ, எவர் அனைத்து உலகங்களையும் படைத்து, காத்து, அழித்து, மறைத்து மீண்டும் அருள் செய்கின்றாரோ, எங்கள் இருவருக்கும் எவர் தலைவரோ, அவரே சம்பு என்றும் சங்கரன் என்றும் வேதங்களிற் கூறப்படும் சர்வேசுவரர். அவரே முழுமுதற் கடவுளாவர்.

**தக்கன்:** தந்தையே படைத்தலைச் செய்யும் தங்களுக்கும் காத்தல் தொழிலைச் செய்யும் திருமாலுக்கும் அழித்தல் தொழிலைச் செய்பவர் எங்ஙனம் தலைவராக முடியும்?

**பிரமா:** உயிர்களை முடிவில் அழிப்பவர் சிவனே என்றால் முதலில் அனைவரையும் தோற்றுவித்ததும் அவரேயன்றோ? சிவபெருமான் என்னைத் தனது வலது தோளினின்றும் திருமாலை இடது தோளினின்றும் படைத்து எங்களுக்கு இத் தொழில்களைக் கொடுத்து, எம் உயிருக்கு உயிராய் நின்று அவரே அனைத்துத் தொழில்களையுஞ் செய்து வருகின்றார். எள்ளில் எண்ணெய் போலவும் மணிக்குள் ஓசை போலவும் மலரில் மணம்போலவும் இரத்தினத்தில் ஒளிபோலவும் உலகெங்கும் உள்ளும் புறமுமாகி எங்குஞ் செறிந்து நிற்பவர் சிவபெருமான்.

**தக்கன்:** சிவபிரானால் அருளிச்செய்யப்பட்ட வேதம் எல்லோரையும் பிரமம் என்று கூறுவது ஏன்?

**பிரமா:** தக்கனே! எல்லாப் பொருள்களையும் யான் படைப்பதனால் ஓர் உபசாரமாக அவை பிரம்மத் தன்மை வாய்ந்தனவென்று சொல்லப்படுகின்றது. அது உலகிலுள்ள அந்தணர்கள் என்னிலும் வேறல்லர் என்று சொல்வதைப் போன்றது. மற்றும்படி வேதங்கள் அந்த மகாதேவனையே பரப்பிரமம் என்றும் ஆதியும் அந்தமும் இல்லாதவர் என்றும் நித்தியமானவர் என்றும் அருவமும் உருவமும் ஆனவர் என்றும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் என்றும் கலியாண குணங்கள் நிரம்பியவர் என்றும் உயிர்க் கூட்டங்கள் அனைத்துக்கும் பதியாகவுள்ள பசுபதி என்றும் போற்றுகின்றன.

பரமேசுவரனே பதி. நாம் அனைவரும் பசுக்கள் என வேதங்கள்

கூறுகின்ற உண்மையைத் தெளியவேண்டுமாயின், நாங்கள் எங்கள் பதவிகளைப் பெறுவதற்கு அப்பரமனைப் பூசித்த பல ஆலயங்களைக் காண்பாயாக.

மேலும் வீடு பேறு அடைய விழைபவர்களுக்கு அப்பேரின்பப் பேற்றினை வழங்க வல்லவரும் சிவபெருமானே என்பதை அறிவாயாக. சிவபெருமானது அருளைப் பெறாது வீடுபேறு அடைந்தவர் எவரும் இல்லை. அவரது அருள் கிடைத்துவிட்டால் பின்னர் பெறவேண்டியதும் வேறொன்றில்லை. அவரையன்றிக் கடவுள் வேறில்லை. மகனே! நீ அவரையே சரணடைவாய்!

இவ்விதம் பிரமதேவர் சொல்லிய நல்லுரைகளைத் தக்கன் செவிமடுத்து, மானசம் என்னும் தடாகத்தின் கரையில் அமர்ந்து சிவபெருமானைத் தியானித்துக் கடுந்தவம் புரிந்தான். தக்கன் தவத்தை மதித்துச் சிவபெருமான் உமாதேவியாரோடும் அவன் முன்தோன்றி, “வேண்டும் வரங்களைக் கேட்பாயாக” எனக் கூறியருளினார்.

தக்கன், “தேவாதி தேவனே! சகல உலகங்களிலும் எனது ஆணை செல்லுமாறு அருள வேண்டும். தேவரீரை வணங்கும் உயிர்கள் அனைத்தும் என்னையும் வந்து வணங்க வேண்டும். நான் தேவரீரைத் தவிர வேறு எவரையும் மனத்தாலும் வணங்காத தன்மையைத் தந்தருள வேண்டும். தேவர்களும் அசுரர்களும் நான் ஏவியவற்றைச் செய்ய வேண்டும். எனக்கு நல்ல பிள்ளைகளும் அழகிய பெண்களும் பிறக்க வேண்டும். தேவரீரது பாதியான சதிதேவி எனக்கு மகளாகப் பிறக்க, தேவரீர் மறையவனாகி வந்து அவளைத் திருமணஞ் செய்துகொள்ள வேண்டும்” என்று பல வரங்களைக் கேட்டான்.

அவன் கேட்ட வரங்களைச் சிவபெருமான் அளித்து, அவன் நன்னெறியில் நின்றால் அவை நிலைத்து நிற்கும் என்று கூறி மறைந்தருளினார்.

பரமேசுவரன் அளித்த வரங்களினால் பெருமகிழ்ச்சியடைந்த தக்கன் தந்தை பிரமதேவரைக் கொண்டு தக்கமாபுரி என்னும் அழகிய நகரத்தை அமைத்து அதிலிருந்து தன் ஆணை உலகனைத்தும்

செல்லுமாறு ஆட்சி செய்தான்.

தக்கன் வேதவல்லி என்னும் அழகுடைய மங்கை நல்லாளைத் திருமணஞ் செய்து அவள்பால் ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களை நன்கு வளர்த்து, பரமசிவனைக் குறித்துத் தவஞ் செய்து, படைத்தல் தொழிலைச் செய்யும் வல்லமையை வரமாகப் பெற்றுவருமாறு ஏவினான். அவ்விதமே அவர்களும் மானசத் தடாகத்துக்குப் பக்கமாக இருந்து தவஞ் செய்தனர். அவர்கள் படைப்புத் தொழிலைச் செய்ய நேர்ந்தாற் பெரும் ஆபத்துக்கள் வரக்கூடும் என்றுணர்ந்த நாரத முனிவர் அவர்கள்முன் தோன்றி, அவர்களது எண்ணத்தை மாற்றி வீடுபேறு அடைதற்குரிய நெறிகளைக் கற்பித்துச் சென்றார். அவர்களும் முனிவர் சொன்ன வண்ணம் இறைவனை வேண்டி முத்திப் பேறு அடைந்தனர்.

தக்கன் அதனை அறிந்து வருந்தி மேலும் ஆயிரம் புதல்வர்களைப் பெற்று வளர்த்து அவர்களையும் படைப்புத் தொழிலைப் பெறச் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்ய அனுப்பினான். அவர்களையும் நாரதமுனிவர் பேரின்ப வீட்டைப் பெற வைத்தார். நாரதர் சூழ்ச்சியைத் தக்கன் அறிந்து கடுஞ் சினங்கொண்டு நாரதரை உலகெங்கும் உழன்று திரிவானாக எனச் சபித்தான்.

பின்னர் புதல்வர்களைப் பெறவிரும்பாது, இருபத்துமூன்று புதல்விகளைப் பெற்றான். அவர்கள் வளர்ந்து பருவம் எய்தியதும் தகுந்தவர்களுக்குத் திருமணஞ் செய்துகொடுத்தான். அவர்கள் பல குழந்தைகளைப் பெற்றெடுத்தனர்.

இவ்விதம் தனக்குப் பெண்கள் வழியாகச் சந்ததி வளர்வதைக் கண்டு மகிழ்ந்த தக்கன் மேலும் அச்சுவினி முதல் ரேவதி வரையுள்ள இருபத்தேழு நட்சத்திரப் பெண்களைப் பெற்றான். அவர்களை நன்கு வளர்த்து, அனைவரையும் சந்திரனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான்.

சிலகாலஞ் சென்றபின் சந்திரன் அதிக அழகுடைய கார்த்திகை, உரோகினி ஆகிய இருவரிடமும் பெருங் காதல்கொண்டு மற்றைய மனைவியரைப் புறக்கணிக்கலானான். அதனால் மற்றைய பெண்கள் வருந்தித் தக்கனிடம் முறையிட்டனர். தக்கன் கோபங் கொண்டு

சந்திரனுடைய கலைகள் அனைத்தும் தேய்ந்துபோகச் சாபம் இட்டான்.

தக்கன் இட்ட சாபத்தாற் சந்திரனுடைய கலைகள் நாள்வீதம் குறைந்து பதினைந்தாம் நாள் ஒரே ஒரு கலைமட்டும் எஞ்சியிருந்தது. சந்திரன் மயங்கி மெலிந்து நாணமுற்று இந்திரனிடம் தனது கவலையைத் தெரிவித்தான். இந்திரன் அவனைப் பிரமனிடம் அனுப்பினான். பிரமன் சிவபெருமானிடத்தில் அனுப்பினான். கருணையே உருவான சிவபெருமான் சந்திரனைத் திருக்கரத்தால் எடுத்துத் தமது திருச்சடைமீது வைத்தருளி, "உனது தேய்ந்த கலைகள் இனி வளரும். வளர்ந்த கலைகள் தேயும். ஆயின் நீ என்றைக்குமே அழியமாட்டாய்" என்று கூறியருளினார்.

அதனை அறிந்த தக்கன் பெருஞ் சினங் கொண்டு சிவபெருமானைப் பலவாறு இகழ்ந்து பேசினான். தக்கனது மருகர்களில் ஒருவரான புலகர் என்பவர் அவனை அடைந்து "கண்ணுதற் கடவுளை இகழ்ந்தால் நின்னையும் எல்லோரும் இகழ்வதுடன் நின்செல்வமும் அழிந்துவிடும். மேலும் நின் சாபத்தைப் பெருமான் முற்றாக நீக்கவில்லை. சந்திரன் தேய்ந்து தேய்ந்துதானே வளரப் போகின்றான். அதனால் நின் கோபத்தை விடுத்துப் பெருமானைத் தியானித்து நலம் பெறுவாயாக" என்று அறிவுறுத்தினார். அவ்வளவில் தக்கனும் சினம் நீங்கித் திருமால், பிரமன் முதலிய தேவர்கள் துதித்து நிற்கத் தன் இராச்சியத்தை நடத்திவந்தான்.

## 18. தாட்சாயணி திருமணம்

திருக்கயிலாயத்திலே சிவபிரான் உமாதேவியாரோடு வீற்றிருந்த காலத்தில் உமாதேவியார் ஒருநாள் சிவபெருமானை நோக்கி, "எம்பெருமானே! தங்களுடைய அருள் நான் என்று சிலர் பூலோகத்தில் கூறிவருகிறார்கள். அது உண்மையா? உண்மையானால் என்னிடத்தில் இருந்துகொண்டுதான் உலகங்கள்

அனைத்தையும் அதனதன் இயல்புக்கேற்ற வகையில் இயக்குகிறீர்களா?" என்று கேட்டார்.
சிவபிரான், "உன்னிடத்திலும் பிற உயிர்களிடத்திலும் ஏககாலத்தில் இருந்து கொண்டே யாம் அவற்றை இயக்குகின்றோம். அந்நிலை தவிர்ந்தால் உயிர்கள் அனைத்தும் சடமாகி மாயும். அதனை நீ உணருமாறு இப்பொழுதே காட்டுகின்றேன்" என்று கூறிப் பிரமன் முதலாகவுள்ள அனைத்து உயிரினுள்ளும் பொருந்தி உணர்வு அளித்திடும் தமது இயல்பைக் கணப்பொழுது நீக்கினார்.

சிவபிரானின் கணப்பொழுது உயிர்களுக்குக் கணக்கற்ற யுகங்களாகின. அக்காலம் முழுவதும் அவை செயலற்றுச் சடங்களாகி வீழ்ந்தன. அந்நிலை கண்ட தேவியார், "எனது நாதரே! யான் தங்கள் இயல்பைப் புரிந்துகொண்டேன். இனி எல்லோரையும் எழுப்பியருளுக" என்று தொழுதார். இறைவரும் கருணை கொண்டு பதினொரு உருத்திரர்களை எழுப்பி யருளினார்.

அவர்கள் எழுந்து, யாவும் சிவபிரானின் செயலே என உணர்ந்து பூவுலகில் உள்ள திருவிடைமருது என்னும் ஊரையடைந்து சிவபெருமானைப் பூசித்தனர். கருணைக் கடலாகிய கண்ணுதற் பெருமான் அவர்கள் வேண்டியபடி பிரமன், திருமால் முதலிய தேவர்களையும் மற்றுமுள்ள எல்லா உயிர்க் கூட்டங்களையும் எழுப்பியருளினார்.

பின்னர் சிவபெருமான் உமாதேவியாரை நோக்கித் தக்கன் மகளாகித் தவஞ் செய்யுமாறும் தாம் வந்து மணந்து கொள்வதாகவும் கூறியருளினார். தேவியாரும் தம் தலைவரை வணங்கி விடைபெற்று, யமுனை நதியை அடைந்தார். நதியில் வலம்புரிச் சங்கின் வடிவுகொண்டு தாமரை மலரில் அமர்ந்து சிவமந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார்.

மாசிமக நன்னாளில் யமுனை நதிக்கு நீராட வந்தான் தக்கன். வலம்புரிச் சங்கைக் கண்டு அதனைக் கையில் எடுத்தான். அது உடனே அழகியதொரு பெண்குழந்தையாக மாறியது. தக்கன் மகிழ்ந்து, சிவபிரான் அளித்த வரத்தின்படி தேவியே தனக்கு மகளாக வந்தனர் என உணர்ந்து, குழந்தையை அன்போடு தனது மனைவி கையிற் கொடுத்தான்.

தக்கனும் வேதவல்லியும் குழந்தைக்குத் தாட்சாயணி என்று பெயர் சூட்டிச் சீரோடும் சிறப்போடும் வளர்த்து வந்தனர். அம்பிகை ஐந்து வயதை அடைந்ததும் பெற்றோரின் அனுமதியுடன் சிவபெருமானைப் பதியாக அடையத் தவஞ் செய்யத் தொடங்கினார். ஏழு வருடங்கள் அம்பிகை தொடர்ந்து தவஞ் செய்தார். ஒருநாள் சிவபெருமான் அவரைத் திருமணஞ் செய்யத் திருவுள்ளங் கொண்டு மறையவர் வேடந் தாங்கித் தவச்சாலையை அடைந்தார். தேவியார் அவரை வரவேற்று வணங்கி நின்றார். மறையவர், “நின்னைத் திருமண முறையால் மனைவியாக அடைய வந்தேன்” எனக் கூறலும் அம்பிகை தனது கரங்களாற் செவிகளைப் பொத்தியவாறு மனம் நொந்து பெருமூச்சுவிட்டு, “நீர் இவ்வாறு கூறியது தகாது. நான் சிவபெருமானைக் கணவனாக அடையத் தவஞ் செய்கின்றேன்” என்று கூறினார்.

அதற்கு மறையவர், “யாராலும் அறிய முடியாத ஆதி முதல்வன் உன்னை மணப்பதென்பது முடியாத செயல். அதனாற் கடுமையான தவங்கைளச் செய்து வருந்தாதே” என்று கூறினார்.

அது கேட்ட அம்மையார், “பரமன் விரும்பி வந்து என்னை மணஞ் செய்யும்வரை அரிய தவங்களைச் செய்வேன்“ இல்லையேல் எனது உயிரை விடுவேன். இது உறுதி. நீர் இவ்விடத்தை விட்டு நீங்குவீராக!” என்றார்.

இவ்வாறு கூறித் தேவியார் வேறொரு பக்கஞ் செல்ல, பெருமான் பெரிதும் மகிழ்ந்து தமது சுய வடிவத்தை அம்மையாருக்கு மட்டும் காட்டியருளினார். அம்மையார் தமது தலைவரைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, “தேவரீர் என்று அறியாது யான் பேசியதைப் பொறுத்தருள வேண்டும்” என்று கைகூப்பி வணங்கினார்.

தவச்சாலையில் நடந்த சம்பவத்தைத் தேவியின் தோழியர் மூலம் அறிந்த தக்கன் வந்தவர் சிவபிரானே என்று தீர்மானித்துச் சிந்தை மகிழ்ந்தான். உடனேயே தவச்சாலைக்குச் சென்று இறைவரை வணங்கி, “எந்தையே! எனது மாளிகைக்கு எழுந்தருளித் தாட்சாயணியை மணந்தருள வெண்டும்” என்று இரந்து, மகளையும்

மகேசனையும் தனது மாளிகைக்கு அழைத்துச் சென்றான்.

தக்கன் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகைள எல்லாம் விரைவாகச் செய்வித்தான். அழைக்க வேண்டியவர்களுக்கு அழைப்பு விடுத்தான். அவர்கள் வந்துகூடியபின் ஆதிமுதல்வராகிய மறையவரைத் திருமண மண்டபத்துக்கு அழைத்து வந்தான். வேதவல்லியும் தாட்சாயணியை அலங்கரித்து இறைவர் பக்கத்தில் அமரச் செய்தாள். அவர்கள் இருவரும் உயர்ந்த அரியணை மீது பிரமன், திருமால் முதலிய தேவர்கள் போற்ற வீற்றிருந்தனர்.

வேதவல்லி நீரை ஊற்ற, தக்கன் இறைவரது திருவடிகளைக் கழுவிப் பாதபூசை செய்தான். பின்னர் அவரது திருக்கரங்களில் அருள்வடிவாய தேவியின் திருக்கரங்களை வைத்து, “ஐயனே! இவளை நினக்குத் தந்தனன். செவ்வனே காத்தருள்வாயாக!” எனக் கூறித் தாரைவார்த்துக் கொடுத்தான்.

ஆதிமுதல்வனதும் அம்பிகையினதும் திருமணக் கோலத்தைக் கண்டு தேவர் அனைவரும் பூரணச் சந்திரனைக் கண்டு பொங்கியெழும் கடல்போல் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரித்தனர். பிரமதேவர் திருமணச் சடங்குகளைச் செய்ய, திருமால் முதலியோர் வேதங்களை ஓதிய வண்ணம் இருந்தனர். அந்தச் சமயத்தில் உயிரும் உணர்வும் உருவமும் அருவமும் ஞானமும் மோனமும் ஆகிய உலகத்துக்குப் போகம் அருளும் சிவபெருமான் தமது அந்தணக் கோலத்தை மறைத்தருளினார்.

தலைவர் மறைந்தது கண்டு தேவியார் துயர் தாங்காது வாடினார். தக்கன் சினங்கொண்டு சிவன் தன்னை அவமதித்தான் என்று இறைவரை இகழ்ந்து பேசினான்.

தேவியார் முன்புபோலச் சிவபிரானை நினைத்துத் தவஞ் செய்திருந்த காலத்தில் ஒருநாள் சிவபிரான் தவமுனிவர் வேடத்திற் தவச்சாலைக்குச் சென்று தமது உண்மையான உருவத்தை அம்பிகைக்குக் காட்டி, இடப வாகனத்தில் அவரை அழைத்துக் கொண்டு திருக்கயிலையை அடைந்தார். அதனைத் தேவியின் தோழியர் மூலம் அறிந்த தக்கன் இறைவரை மேலும் வெறுத்து நிந்தனை செய்தான்.

இறைவரை மதியாத தக்கனின் பணிகளைச் செய்வதால் தாமும் அழிய நேரும் என்று எண்ணிய பிரமன், திருமால் முதலிய தேவர்கள் தக்கனை அடைந்து, "திருமண முறையில் ஏதோ பிழை நடந்திருக்க வேண்டும். அல்லது உனக்குச் சிவபிரான் மருகனாக வந்தாரே என்று நீ செருக்குற்றிருத்தல் வேண்டும். அதனாலேயே இறைவர் இத்திருவிளையாடலைச் செய்திருக்க வேண்டும். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று அறிவுரை கூறினர்.

தக்கனும் ஒருவாறு சினம் நீக்கித் தன் மகளையும் மகாதேவனையும் காண்பதற்குத் திருக்கயிலைக்குச் சென்றான். அங்கு காவலராக இருந்த பூதர்கள் "சிவபெருமானை நிந்தனை செய்யும் நீ அவரைக் காணலாகாது" என்று தடுத்தனர். அதனால் கடுஞ் சினங்கொண்ட தக்கன் தனது நகருக்குத் திரும்பி வந்து, "இந்நாள் முதலாக நீங்கள் சிவனை மதிக்கலாகாது" என்று தேவர்களுக்கு ஆணையிட்டான்.

## வேதஞானியின் வேள்வி

தேவர்கள் அனைவரும் தக்கன் ஆணைப்படி நிற்க, பிரமதேவர் அவனுக்கு அஞ்சாது சிவபெருமானை முன்னிட்டு ஒரு வேள்வி செய்ய எண்ணினார். திருமால் முதலிய தேவர்களுக்குத் தன் மைந்தர்கள் மூலம் அழைப்பு விடுத்தார். பின்னர் திருக்கயிலை சென்று தன் விருப்பத்தைத் தெரிவித்து, வேள்விக்கு எழுந்தருள வேண்டும் என்று சிவபிரானைப் பிரார்த்தித்தார். சிவபிரான் தமது உருவமான நந்திதேவரை அனுப்புவோம் என்று கூறியருளினார்.

வேதங்களை நன்கு அறிந்த பிரமதேவர் வேள்வியைச் செவ்வனே நடத்தத் தொடங்கினார். திருமால் முதலிய தேவர்கள் தக்கனோடு வந்து ஒருபக்கத்தில் அமர்ந்தனர். அவ்வேளை சிவபெருமானின் ஆணையால் நந்திதேவரும் பூதர்கள் புடைசூழ அங்கு எழுந்தருளினார். பிரமதேவர் எழுந்து நந்திதேவரை வணங்கி அவர் அமர்ந்திருக்க உயர்ந்த ஆசனம் ஒன்றை வழங்கினார்.

தந்தையின் செயலைக் கண்ட தக்கன் வெகுண்டு, "வேள்விக்குச் சிவனை அழைத்தும் அவன் வராது நந்தியை அனுப்பியது

எங்களை எல்லாம் அவமதிக்கவே. அதனை உணராது நந்தியைப் பெருமதிப்போடு நீ உபசரித்தாய். எனது தந்தை என்று உன்னைக் கொல்லாது விடுத்தேன். இவ்வாறு நீ செய்வது முறையன்று. சாம்பலைப் பூசித் திரியும் பித்தன் வேள்வியில் அவி பெறுவதற்கு அருகதையற்றவன். அவனை விடுத்துத் திருமாலை முதன்மையாகக் கொண்டு வேள்வியைச் செய்து அவருக்கே அவியைக் கொடுப்பாயாக!" என்று கனல் கக்கக் கர்ச்சித்தான்.

தக்கனின் கொடிய சொற்களைக் கேட்ட நந்திதேவர் தமது செவிகளைப் பொத்திக் கொண்டார். இப் புன்மொழிகளைக் கேட்கவோ ஐயன் தன்னை அங்கு அனுப்பினார் என்று வருந்தினார். பின்னர் தேவர் நடுங்கவும் ஏனையோர் ஒடுங்கவும் பெருஞ் சினங்கொண்டு எரியென விழித்து, தக்கனை நோக்கி, "மாதொரு பாகனை நீ இகழ்ந்தனை. வேள்வியில் எம்பிரானுக்கு அவி இல்லை என்று விலக்கினை. தக்கனே! சிவநிந்தனை செய்த நின் செல்வம் எல்லாம் விரைந்து அழிக! உனது தலைபோய் வேறு இழிவான தலையை நீ பெறுவாயாக! உன்னைச் சார்ந்த தேவர்கள் அனைவரும் ஒருநாள் இறந்து, மீண்டும் எழுந்து சூரன் என்னும் அசுரனால் அலைக்கப்பட்டு பல யுகங்கள் துயரில் மூழ்குவாராக!" என்று சபித்து அவ்விடத்தை விட்டு அகன்றார்.

நந்திதேவர் தமது கணங்கள் சூழத் திருக்கயிலைக்குச் சென்று, சிவபிரானை வணங்கி நிகழ்ந்தவற்றை முறையிட்டார்.

வேதஞானியாகிய பிரமதேவர் வேள்வியைத் தொடராது நிறுத்தினார். தக்கன் நந்திதேவரின் சாபத்தால் வந்த சோகத்துடன் தனது நகருக்குத் திரும்பினான். தேவர்கள் அஞ்சியவாறு தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

## 19. தக்கனின் தகாத வேள்வி

தக்கன் சிவபிரானைத் தவிர்த்துத் தானே ஒரு வேள்வி செய்யத் தீர்மானித்தான். தேவதச்சனைக் கொண்டு பூலோகத்தின்

வடபகுதியில் உள்ள கனகலம் என்னும் இடத்தில் வேள்விச்சாலை ஒன்றை அமைப்பித்தான். வேள்விக்குச் சிவபெருமானைத்தவிர மற்றைய யாவருக்கும் அழைப்பு விடுத்தான். அனைவரும் வந்து சேர்ந்தபின் தக்கன் ஒற்றர்களை அழைத்து, “அழைக்கப்பட்டவர் களில் இங்கு வராதவர்களும் உளரோ?” என்று வினவினான். ஒற்றர்கள், “அகத்தியர், சனகன் முதலானோர், அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி, துருவாசர், பராசரர் ஆகிய முனிவர்கள் உங்கள் யாகத்தை இகழ்ந்து வரமாட்டார்கள் போலத் தெரிகிறது” என்றார்கள்.

அப்பொழுது முனிவர்கள் புடைசூழப் போரிலே வல்ல ததீசி முனிவர் வேள்விச் சாலையை வந்தடைந்தார். அவரைக் கண்ட தக்கன் அவர் சிவனை மதியாதவர் என்றும் தனது ஆணைக்குப் பணிந்து வந்துள்ளார் என்றும் கருதி அவரை வரவேற்று ஆசனம் அளித்தான். ஆசனத்தில் அமர்ந்துகொண்டு ததீசி முனிவர் தக்கனை நோக்கி, “என்னை எதற்காக அழைத்தனை” என்று வினவினார்.

தக்கன் தனது மகள் திருமணத்தில் சிவபிரான் மறைந்தது முதல் நந்திதேவர் சாபம்வரை எல்லாவற்றையும் கூறினான். மேலும், “நந்திதேவரின் சாபத்துக்கு அஞ்சிப் பலரும் வேள்வி செய்வதை நிறுத்திக் கொண்டனர். அதனால் நான் ஒரு வேள்வியைச் செய்யத் துணிந்தேன். இதனை நான் எந்தப் பலனையும் பெறும் எண்ணத்துடன் செய்யவில்லை. சிவனுக்கு அவிர்ப்பாகம் கொடுப்பதைத் தடுப்பதே இந்த யாகத்தின் நோக்கமாகும்” என்றும் கூறினான்.

தக்கன் சொல்லியவற்றைக் கேட்ட முனிவர், “தக்கனே! உனது புண்ணியங்கள் யாவும் பாவங்களாகிவிட்டனபோலும்” என்று நகைத்துச் சிறிதுநேரம் மௌனமாக இருந்தார். தக்கன் சினந்து, “நீர் சிவனின் அடியவர் போலும். அதனாலேயே என்னை மதியாது நகைக்கின்றீர்!” என்றான்.

அறிவிற் சிறந்த ததீசி முனிவர் தக்கனுக்கு அறிவுரை செய்யலானார். “தக்கனே! தேவதேவன், மகாதேவன், சிறப்புடைய ஈசுவரன், மூவரின் முதல்வன், ஏகன், உயிருக்கு உயிரானவன், அந்தணன், ஆதி அந்தம் இல்லாதவன் என்று வேதங்கள் போற்றும்

சிவபிரானை விலக்கி ஒரு வேள்வி செய்கின்றாயா? அனைவருக்கும் மேலான சிவபெருமானை நிந்தித்து நீ அடையப்போகும் நன்மை எதுவுமில்லை! அவருக்கு அவிர்ப்பாகம் அளிக்காது நீ நடத்தும் வேள்வியால் உனக்குப் பாவங்களே வந்துசேரும்!"

தக்கன் கோபத்துடன் கேட்டான், "திருமால், பிரமா ஆகியோருக்கு மேலாக, அழித்தல் தொழிலைச் செய்யும் உருத்திரன் முதன்மை பெறுவது எவ்வாறு?"

அதற்குத் ததீசி முனிவர், "தோற்றமும் முடிவும் இல்லாத சிவபிரானுக்கு ஊரும் பேரும் உருவமும் இல்லை என்று வேதங்கள் உரைக்கும். எனினும் அவ் வேதங்களே துன்பக் கடலில் அழுந்தியவர்களை அத் துன்பத்திலிருந்து நீக்குந் தன்மையால் சிவபிரானை உருத்திரன் என்னும் பெயரால் அழைக்கின்றன. உருத்திரன் என்னும் பெயர் ஒப்பற்ற சிவபிரானுக்கு மட்டுமன்றி அவரது மைந்தர்கள், சிவகணங்கள், அவரது சாரூபம் பெற்றவர்கள், அக்கினிதேவர் ஆகியோரையும் குறிக்கும் என்பதையும் அறிவாயாக.

"பிரமதேவரே முன்பு ஒருமுறை மயக்கம் அடைந்த முனிவர்களுக்கு உருத்திரனே பரம்பொருள் என்று கூறியிருக்கின்றார். தம்மையும் திருமாலையும் படைத்து, தமக்குப் படைத்தல் தொழிலையும் திருமாலுக்குக் காத்தல் தொழிலையும் கொடுத்தவர் அந்த முழுமுதற் கடவுளே என்றும் உரைத்திருக்கின்றார். பிரமதேவரின் போதனையைக் கேட்ட முனிவர்கள் சிவமே பரம்பொருள் என்று தெளிந்தனர்.

"தக்கனே, உனக்கும் பிரமதேவர் சிவனார் பெருமையை முன்னர் உபதேசித்திருக்கின்றார். அவற்றை யெல்லாம் நீ ஏற்றுக்கொண்டு அரிய தவஞ்செய்து சிவபிரானிடத்திற் பல வரங்களைப் பெற்றுப் பொருட் சிறப்பும் ஆட்சிச் சிறப்பும் அடைந்துள்ளாய். உனக்கு அழிவுகாலம் வந்துவிட்டதால் அவற்றை யெல்லாம் மறந்தனை போலும். நீ உயிரோடு இருந்து உனது செல்வங்களை எல்லாம் அனுபவிக்க வேண்டும் என்று கருதுவாயேயானால், சிவபிரானுக்கு உரிய அவிர்ப்பாகத்தை அளித்து இந்த வேள்வியை இயற்றுவாயாக!" என்று கூறி முடித்தார்.

## தக்கனின் வினாக்களும் ததீசி முனிவரின் விடைகளும்

சிவபிரானே முழுமுதற் கடவுள் என்று ததீசி முனிவர் சொல்லக் கேட்ட தக்கன் நகைத்து அவரை மேலும் பல கேள்விகள் கேட்டான். அவனது வினாக்களும் அவற்றுக்கு முனிவர் அளித்த விடைகளும் பின்வருமாறு:

### சிவன் எலும்பையும் தலைமாலையையும் அணிவது ஏன்?

எலும்பும் மண்டையோடும் அழிவின் சின்னங்கள். ஊழிக் காலத்தில் எல்லாம் அழிந்த நிலையில் தாமே தனித்து நிற்கும் தன்மையையும் தமது திருவடியை அடைந்த உயிர்கள் அனைத்துக்கும் வீடுபேறு வழங்கி உய்யச் செய்யும் செயலையும் குறிக்கும் வகையில் சிவபெருமான் எலும்பையும் தலைமாலையையும் அணிகின்றார்.

### பன்றியின் கொம்பை அணிவது ஏன்?

முன்னொரு காலத்தில் வாழ்ந்த இரணியாக்கன் என்பவன் பூவுலகத்தைத் தன் வயிற்றில் வைத்துக்கொண்டு பாதாள உலகத்தில் மறைந்திருந்தான். அதனால் உயிர்கள் துன்புற்றன. சிவபிரானின் ஏவலால் திருமால் ஒரு பன்றி வடிவம் எடுத்துப் பாதாளத்துக்குச் சென்று தமது கூர்மையான கொம்பினால் இரணியாக்கனைக் கொன்று பூமியை முன்புபோல் வைத்தார். அப்பொழுது பன்றியின் கொம்பு ஒன்று முறிந்து உலகம் முழுவதும் அழியுமாறு கடும் வேகத்தில் விழுந்து பூமியைக் கிளறத் தொடங்கியது. அதனைச் சிவபெருமான் அடக்கி அணிந்துகொண்டார்.

### ஆமை ஓட்டை அணிவது ஏன்?

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த சமயத்தில் மந்தர மலையான மத்துக் கவிழ்ந்ததால் திருமால் விரைவாக நீரில் மூழ்கி ஆமையாகி முதுகைக் கொடுத்து அம் மலையைத் தாங்கினார். அவரின் அச்செயலைப் பாராட்டுமுகமாகச் சிவபெருமான் ஆமை ஓட்டை அணிந்தார்.

### பிச்சை எடுத்தது ஏன்?

முன்பு தாருகவனத்து முனிவர்கள் வேள்விகளாற் பரமுத்தி

அடையலாம் என்று எண்ணிச் சிவபிரானைப் புறக்கணித்திருந்தனர். அதுகுறித்து அவர்களது மனைவிமார் வருந்திச் சிவபெருமானை நினைந்து வணங்கினர். சிவபெருமான் பிச்சைக்கார வடிவத்தில் ஓடேந்தி அவர்களின் வீடுகளுக்குச் சென்றார். பிச்சையிட வந்த முனிவர்களின் மனைவிமாரைத் தமது அழகால் மயக்கித் தமக்குப் பின்னால் காந்தம்போல் ஈர்த்துச் சென்றார். அதுகண்ட முனிவர்கள் பிச்சைக்காரனைத் துரத்திச் சென்றனர். சிவபிரான் முனிவர்கள் நன்றாகக் களைக்கும்வரை ஓடிப் பின் மறைந்தருளினார்.

## புலித்தோல் உடுத்தது ஏன்?

முனிவர்கள் தமது மனைவியரை மயக்கியவர் சிவனே என்று அறிந்து, அவர்மீது வெறுப்புற்று, அவரை அழிக்க ஒரு வேள்வி செய்தனர். அந்த வேள்வியினின்றும் ஒரு கொடிய புலி தோன்றிச் சிவபெருமானைக் கொல்லச் சென்றது. அவர் புலியைத் தமது திருக்கரத்தாற் பற்றி அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்து கொண்டார்.

## மழுப் படையை ஏந்துவது ஏன்?

புலி இறந்ததும் முனிவர்கள் தமது வேள்வி மூலம் ஒரு மழு ஆயுதத்தைத் தோற்றுவித்து, அதனைச் சிவன்மீது ஏவினர். அவர் அதனைப் பிடித்துத் தமது திருக்கரத்தில் ஒரு படையாக வைத்துக்கொண்டார்.

## மானை ஏந்துவது ஏன்?

மழுவை அடுத்து வேள்வியிலிருந்து ஒரு மான் தோன்றி வானில் எழுந்து சராசரங்களை எல்லாம் அழித்துச் சென்றது. சிவபெருமான் அதனை அடக்கித் தமது இடது திருக்கரத்தில் ஏந்தி நின்றார்.

## பாம்புகளை அணிவது ஏன்?

தொடர்ந்து முனிவர்களின் வேள்விக் குண்டத்திலிருந்து பாம்புகள் தோன்றிச் சிவபிரானைத் தாக்கச் சென்றன. அவற்றையுஞ் சிவபெருமான் தமது அணிகலன் ஆக்கிக்கொண்டார்.

## பூதகணங்களைப் படையெனக் கொண்டது ஏன்?

பின்பு முனிவர்கள் தமது வேள்வியால் அளவற்ற பூதகணங்களைத் தோற்றுவித்து அவற்றையுஞ் சிவபிரான் மீது ஏவினர். அவை

அண்டங்கள் நடுங்கும் வண்ணம் பேரொலி செய்து சிவபிரானை நோக்கி விரைந்தன. இறைவர் அவற்றை நோக்கி, "நீவிர் என்றும் எமது சேனைகளாக இருப்பீர்" என்று அருளினார். அவ்வளவிற் பூதகணங்களும் சேனைகளாகிப் பெருமானைச் சூழ்ந்து நின்றன.

## தீயை ஏந்துவது ஏன்?

சிவபிரான் அழிவில்லாதவர் என்பதை அறியாத முனிவர்கள் அவரை அழிக்க மேலும் வேள்வி செய்தனர். அதிலிருந்து முயலகன் என்னும் ஒரு பூத உருவம் தோன்றியது. அந்தப் பூதத்தை வேள்வித் தீயோடு சேர்த்துச் சிவபிரான் மீது முனிவர்கள் ஏவினர். இறைவர் தீக்கடவுளும் அஞ்சும் வகையில் வந்த வேள்வித் தீயைத் தமது திருக்கரத்தில் தாங்கி, முயலகனைத் தமது திருவடியால் மிதித்து நின்றார்.

## உடுக்கையை ஏந்துவது ஏன்?

தமது வேள்வியால் சிவபிரானை அழிக்க முடியவில்லையே என்று வருந்திய முனிவர்கள் தமக்குத் தெரிந்த மந்திரங்களை எல்லாம் பெரும் உடுக்கை வடிவமாக்கி அவரைத் தாக்கிக் கொல்லும்படி விடுத்தனர். சிவபெருமான் அதனை ஏந்தித் தமது திருச்செவியில் ஒலித்துக்கொண்டு இருக்குமாறு பணித்தார்.

## கூத்து ஆடுவது ஏன்?

உடுக்கை முழங்கச் சிவபெருமான் தாண்டவம் என்னும் கூத்தை முயலகன்மீது நின்றவாறே ஆடினார். கூத்தின் வேகத்தைக் கண்டு முனிவர்கள் யாவரும் அஞ்சி வீழ்ந்தனர். அப்பொழுது பெருமான் அவர்களுக்குச் சிறிது நல்லறிவு நல்கினார். நல்லறிவு பெற்ற முனிவர்கள் அழிவில்லாத சிவபிரானை அழிக்க முயன்றதற்கு வருந்தி அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி மன்னிக்க வேண்டினர். இறைவரும் அவர்களை மன்னித்தருளினார்.

## யானைத் தோலைப் போர்த்தியது ஏன்?

முன்னொரு காலத்தில் கயாசுரன் என்பவன் பிரமதேவரிடம் வரங்களைப் பெற்றுப் பல அட்டூழியங்களைப் புரிந்துவந்தான். ஒருமுறை பூவுலகு சென்று மக்களை அழிக்கலானான். அது கண்ட நல்ல தவமுடைய முனிவர்கள் மணிகர்ணிகையை அடைந்து விசுவநாதப் பெருமானை வணங்கிக் கயாசுரனிடமிருந்து பூமியைக்

காப்பாற்றும்படி விண்ணப்பித்தனர். அச்சமயத்தில் கயாசுரன் முனிவர்களைக் கொல்ல அவ்விடம் வந்தான். தம்மைச் சரணடைந்தவர்களைக் காத்தருளும் பரமேசுவரர் யானை வடிவங் கொண்ட அந்த அசுரனைக் கொன்று அவனது தோலை உரித்துத் தமது திருமேனியிற் போர்த்துக்கொண்டார்.

## பிரம கபாலம் ஏந்தியது ஏன்?

சிவபெருமான் பிரமதேவரை முதலில் ஐந்து தலைகளுடனேயே படைத்தார். ஐந்து தலைப் பிரமதேவர் தமது படைப்புத் தொழில் குறித்துச் செருக்குற்றவராக இருந்தார். அவரது செருக்கையும் அவரது கூற்றுக்களை நம்பிய முனிவர்கள், தேவர்கள் ஆகியோரின் ஆணவத்தையும் போக்கச் சிவபிரான் வைரவக் கடவுளைப் படைத்தார். ஒளி பொருந்திய நீலநிறத் திருமேனியையுடைய வைரவக் கடவுள் பிரமனின் உச்சித் தலையைக் கிள்ளி அவருக்கு மீண்டும் உயிர் அளித்தார். உயிர் பெற்ற பிரமன் நல்லறிவு பெற்றவராய் வைரவரை வணங்கி, தனது தலையை அவரது திருக்கரத்தில் தாங்கியருள வேண்டும் என்று வேண்டினார். வைரவரும் அவ்விதமே தாம் கிள்ளிய தலையைத் தமது திருக்கரத்தில் தாங்கி அருள் புரிந்தார்.

உலகத்தவருக்கு ஆணவத்தால் வரக்கூடிய ஆபத்தை உணர்த்தும் பொருட்டு இறைவர் இத் திருவிளையாடலைப் புரிந்தருளினார்.

## வேற்றுருக் கொள்ளுவது ஏன்?

ஆன்மாக்களின் செருக்கை அடக்க இறைவர் அவர்களுக்கு ஏற்ற வகையில் வேற்று வடிவங்கள் கொள்வது வழக்கம். இந்திரனின் செருக்கைப் போக்க அவர் ஒருமுறை பூத உருவந் தாங்கினார்.

## இடபத்தை வாகனமாகக் கொண்டது ஏன்?

பிரமதேவர், திருமால் முதலான தேவர்களும் ஏனைய பிறரும் இறந்து எல்லாம் அழிந்தபோது, தருமதேவதை இடபத்தின் வடிவம் எடுத்துக்கொண்டு, சிவபெருமானை வணங்கித் தனக்கு அழியாத வரத்தையும் இறைவரைச் சுமக்கும் பேற்றையும் வழங்கும் வண்ணம் கேட்டது. பெருமானும் அதுகேட்ட வரங்களை அளித்து இடபத்தைத் தனது வாகனமாக ஏற்றருளினார்.

## சிவபிரான் நஞ்சை உண்டது ஏன்?

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலில் இருந்து அமுதைப் பெற விரும்பினர். மந்தர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்தனர். அப்பொழுது அக்கடலில் இருந்து கொடிய நஞ்சு திரண்டு எழுந்தது. அத்துடன் வாசுகியும் வலி தாங்காது தனது ஆயிரம் வாய்கள் மூலம் நஞ்சைக் கக்கியது. இருவகை நஞ்சும் இணைந்து ஆலகால விடமாகி எங்கும் பரவியது. அதனைத் தாங்காது தேவர்களும் அசுரர்களும் தப்பி ஓட முயன்றனர். திருமால் நஞ்சினைத் தடுக்க முயன்றார். அதனால் அவரது மேனி முழுவதும் நீல நிறம் ஆயிற்று. ஆனால் நஞ்சு அடங்கவில்லை.

பின்னர் எல்லோரும் சிவபெருமானிடஞ் சென்று தங்களைக் காக்கும் வண்ணம் வேண்டினர். அவர் தமது தொண்டராகிய சுந்தரரை அனுப்பி விடத்தை எடுப்பித்தார். உலகெங்கும் பரந்து பயமுறுத்திய விடம் சிவபெருமான்முன் ஒரு துளியாக ஒடுங்கியது. சிவபெருமான் அதனை உண்டு தேவர்களையும் அசுரர்களையும் காத்தருளினார். உண்ட நஞ்சைத் தமது கண்டத்தில் வைத்துக் கொண்டதால் அவரது கண்டம் நீல நிறமாயிற்று. அதனால் அவருக்குத் 'திருநீலகண்டன்' என்னும் பெயரும் உண்டாயிற்று.

## சுடலையில் நடனமாடுவது ஏன்?

ஊழிக் காலத்தில் உலகமும் உயிர்க் கூட்டமும் ஒடுங்கும் இடமே சுடலை எனப்படும். யாவும் அழிந்தபின் தானே ஒருவராய்ச் சுடலையில் நின்று இறைவர் நடனம் ஆடுவது மீண்டும் அண்ட சராசரங்கள் இயங்குதற்கு வேண்டிய சக்தியை உண்டு பண்ணுவதற்கேயாம். ஒடுங்கிய அண்டங்களை முதலில் இயக்கி, பின் உயிர்க் கூட்டங்களை இறைவர் படைத்தருளுவார்.

## சாம்பரை மேனியிற் பூசிக்கொள்வது தகுமோ?

ஊழிக் காலத்தில் அனைத்தையுஞ் சுட்டெரித்து அவற்றின் சாம்பரை இறைவர் தமது மேனியிற் பூசிக்கொள்வது அவை யாவும் தன்னிடத்தில் அடக்கம் என்பதைக் காட்டவேயாம்.

## தலையில் பெண்ணைச் சுமப்பது ஏன்?

முற்காலத்தில் பூவுலகத்தில் வாழ்ந்த பகீரதன் என்னும் மன்னன்

தனது மூதாதையோர் உய்தற்பொருட்டுப் பிதிர்க் கடன்கள் செய்ய விழைந்தான். அதற்கு அவனுக்குப் புனித கங்கை ஒன்று தேவைப்பட்டது. பிரமதேவரை நோக்கிக் கடுந் தவஞ் செய்து, பிரமலோகத்துப் புனித கங்கையைப் பூலோகத்துக்கு வரவழைத் தான். கங்கை வானுலகத்திலிருந்து இறங்குகையில் அதன் வெள்ளத்தையும் வேகத்தையும் கண்டு தேவர்களும் அசுரர்களும் அஞ்சினர். சிவபிரானிடஞ் சென்று தம்மைக் காத்தருளும் வண்ணம் வேண்டினர். இறைவர் கங்கையின் வேகத்தைத் தணித்து அதனைத் தமது சடையில் தாங்கிக் கொண்டார். பின்னர் பகீரதனின் வேண்டுதலுக்கு ஏற்பக் கங்கையின் ஒரு சிறுபகுதியைப் பூலோகத்திற் சென்று பாயும்படி பணித்தருளினார்.

## மற்றுமொரு பெண்ணை இடப்பாகத்தில் வைத்திருத்தல் நியாயமோ?

இறைவர் தமது திருச்சடையிற் சூடியிருப்பது கங்காதேவியை, இடப்பாகத்தில் வைத்திருப்பது தமது சக்தியை. தான் பாதி சக்தி பாதியாக (அர்த்தநாரீசராக) இறைவர் திகழ்வது எப்பொருளும் இயங்குவதற்குச் சக்தி அவசியம் என்பதை உணர்த்துவதற்கேயாம். இதனாற் சிவம் இன்றிச் சக்தியில்லை என்பதும் சக்தியின்றிச் சிவமில்லை என்பதும் புலப்படும். மேலும் பெண்ணுக்குச் சமவுரிமை வழங்கிய முதல்வராகவும் இறைவர் விளங்குகின்றார்.

## பரம்பொருள் மகவும் பெறுமோ?

பரம்பொருள் ஏனைய ஆன்மாக்களைப் போன்று இச்சையால் மக்களைப் பெறுவதில்லை. தேவை கருதித் தமது பணிகள் சிலவற்றைச் செய்யத் தம்மையொத்த மகவை இறைவர் படைத் தருளுவார். வைரவக் கடவுளை இறைவர் படைத்தமை பற்றி உனக்குக் கூறினேன். இனி, அதற்குமுன் விநாயகப் பெருமானை இறைவர் படைத்தருளிய காரணத்தைக் கூறுவேன், கேட்பாயாக.

வசிட்டர் மரபில் வந்த மாதகர் என்னும் மாமுனிவருக்கும் விபுதை என்னும் அசுரப் பெண்ணுக்கும் ஒரு மகன் பிறந்தான். யானை முகத்துடன் பிறந்தமையால் அவன் கயமுகாசுரன் என அழைக்கப்பட்டான்.

கயமுகாசுரன் சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பல

வரங்களைப் பெற்றான். மதங்கபுரம் என்னும் நகரத்தை அமைத்து அதிலிருந்து ஆட்சி புரிந்தான். அசுரகுல அதிபன் அசுரேந்திரன், அசுரகுல குரு சுக்கிராச்சாரியார் போன்றோர் அவனுக்கு மந்திரிகளாக இருந்தனர். அசுரேந்திரன் மகள் விசித்திரகாந்தியை அவன் மணம் புரிந்து சிறப்போடு வாழ்ந்தான்.

சிவபிரான் அளித்த வரங்களாற் செருக்குற்ற கயமுகாசுரன் இந்திரனை வென்று, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருங் கொடுமைகள் விளைத்துவந்தான். அவனாற் படுந் துன்பங்களைப் பொறுக்கமாட்டாது திருமால், நான்முகன், இந்திரன் முதலாய தேவர்கள் சிவபிரானிடஞ் சென்று முறையிட்டனர். சிவபிரான் அவர்களுக்கு அபயம் அளித்து, ஒரு மகனைப் படைத்து அவன் மூலம் கயமுகனைக் கொல்வதாகக் கூறியருளினார்.

கயமுகன் சிவபிரானிடம் கேட்டுப் பெற்ற வரங்களில் தேவர்களாலும் மனிதர்களாலும் விலங்குகளாலும் தனக்கு அழிவு நேரக் கூடாது என்பதுவும் ஒன்று. அதனால் இம் மூன்று வர்க்கத்துள்ளும் அடங்காத ஒரு மகவைப் படைக்கும் திருவுள்ளத்துடன் இறைவர் உமாதேவியாருடன் சித்திரகூடத்துக்கு எழுந்தருளினார். அங்குள்ள சித்திரங்களின் நடுவில் விளங்கிய பிரணவத்தை இறைவரும் தேவியாரும் உற்று நோக்கினர். அவ்வளவில் பிரணவத்தினின்றும் விநாயகப் பெருமான் அவதரித்தார்.

யானை முகமும் தும்பிக்கையோடு கூடிய ஐந்து கரங்களும் மூன்று கண்களும் சந்திரகலை அணிந்த சிவந்த சடையுங் கொண்டு தம்முன் வந்து வணங்கி நின்ற பிள்ளையாரை அகிலநாயகி தமது திருக்கரங்களால் வாரி அணைத்து முத்தமிட்டார். இறைவரும் தமது குழந்தையைத் தழுவி, "மகனே! எவராயினும் நல்ல கருமங்களைச் செய்யத் தொடங்குமுன் உனது பாதங்களை வணங்கித் தொடங்குவாரேயானால் அவர்களின் முயற்சிகளை முட்டின்றி முடித்து வைப்பாயாக. பல்வகைக் கணங்களுக்கும் பதியாக விளங்குவாயாக. மேலும் கயமுகனின் ஆற்றலை அழித்துத் தேவர்களினதும் ஏனையவர்களினதும் துன்பத்தைத் துடைப்பாயாக" என்று கூறியருளினார்.

விநாயகப் பெருமானும் தமது தாய் தந்தையரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, கயமுகனைக் கொல்லப் பூதப் படைகள்

புடைசூழப் புறப்பட்டார். அசுரனும் அதனை அறிந்து தன் படைகளுடன் பெருமானை எதிர்த்தான். ஆயுதங்களால் அவன் அழியாவரம் பெற்றவனாதலால், விநாயகப் பெருமான் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அவன்மீது எறிந்தார். அது அசுரனின் மார்பைப் பிளந்து, நன்னீரில் மூழ்கிப் பெருமானின் திருக்கரத்தைச் சென்றடைந்தது.

மார்பு பிளந்து வீழ்ந்த கயமுகன் சிவபிரானின் வரத்தால் இறவாது, ஒரு பெருச்சாளியின் உருவங்கொண்டு விநாயகரைத் தாக்கச் சென்றான். பெருமான் அதன் முதுகின்மேல் அமர்ந்து தமது அருள் நோக்கினால் அதனை நற்குணப் படுத்தினார். இந்திரன் முதலிய தேவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டு ஆரவாரித்து விநாயகப் பெருமானைச் சூழ்ந்து வணங்கினர். பெருமான் அவர்களுக்கு அருள்புரிந்து திருச்செங்காட்டங்குடி சென்று அங்கு சிவலிங்கத்தை அமைத்துப் பூசனை புரிந்தார். விநாயப் பெருமான் தமது தந்தையாரைப் பூசித்து மகிழ்ந்த திருச்செங்காட்டங்குடி இன்று கணபதீச்சரம் என வழங்கப் படுகின்றது.

## தாமத குணம் தலைவருக்குத் தகுந்ததோ?

சிவபெருமான் சாத்துவிகம், இராசதம், தாமதம் ஆகிய முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டவர். அவர் காத்தலுக்கு உகந்த சாத்துவிகத்தைத் திருமாலுக்கும் படைத்தலுக்கு உகந்த இராசத குணத்தைப் பிரமதேவருக்கும் வழங்கியுள்ளதால் எஞ்சிய தாமத குணத்தைத் தாமேகொண்டார் என்பது பொருந்தாது. சங்காரத் தொழிலை மேற்கொள்கையில் தாமதகுணம் அவரிடத்துப் பொருந்துமேயன்றி அது அவருக்கு இயல்பான குணம் அன்று. இறைவர் எல்லாக் கலைகளுக்கும் முதல்வர் என்று வேதம் கூறுகின்றது. அத்தகையவர் தாமத குணத்தவராக இருக்க முடியாது.

இவ்வாறு ததீசி முனிவர் தக்கன் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் ஒரு தந்தை மகனுக்கு உரைப்பது போன்று விளக்கங்களை அளித்தும், முழுமுதற் கடவுளும் ஞானவடிவானவரும் எல்லா உயிர்களுக்கும் உயிராக உள்ளவருமான சிவபிரானை முன்வைத்து வேள்வியை இயற்றி உய்யுமாறும் அறிவுறுத்தினார்.

# 20. தக்கனைச் சார்ந்த சாபங்கள்

ததீசி முனிவரின் அறிவுரைகளைச் சிறிதேனும் மதிக்காத தக்கன், "முனிவரே! உமது சிவபெருமான் பரம்பொருள்தான் என்றாலும் எனது வேள்வியில் அவருக்கு இடம் இல்லை. நீரும் இவ்விடத்தை விட்டுச் செல்லலாம்" என்றான்.

அதனைக் கேட்ட முனிவர் கடுஞ் சினங் கொண்டாரேனும் அதனை ஒருவாறு அடக்கிக் கொண்டு, "தக்கனே! வேதநாயகனை விலக்கி நீ இன்று செய்யும் வேள்வி அழியட்டும். உன்னுடன் இங்கிருக்கும் தேவர்களும் அழியட்டும்" என்று சாபமிட்டார்.

பின்னர் அங்கிருந்த வேதியர்களைப் பார்த்து, "அந்தணர்களில் அலிகள் போலானீர்கள். உங்களுடைய குலத் தலைமையைக் கைவிட்டீர்கள். எந்நாளும் பிராமணர்களாய்ப் பிறந்து இறந்து முத்தியடையாது உழலக் கடவீர்கள்" என்றும் சபித்து, முனிவர்கள் புடைசூழ அவ்விடம் விட்டு நீங்கிச் சிவபிரானைத் தியானித்தவாறு தமது இருப்பிடஞ் சேர்ந்தார்.

முனிவர் சாபத்தால் தக்கனின் பெருமையும் புகழும் செல்வமும் வலிமையும் அவனை விட்டுப் போயின. அவற்றை அவன் அறியவில்லை. பல தீய சகுனங்களும் தோன்றின. அவற்றை அவன் பொருட்படுத்த வில்லை. அழிவு நெருங்கும்பொழுது அறிவு வேலை செய்யாது என்பது தக்கனைப் பொறுத்த அளவில் உண்மையாயிற்று. மிகுந்த ஆணவத்தோடு சிவபிரானை விடுத்துத் தனது வேள்வியைத் தொடர்ந்து முடிக்கத் துணிந்தான்.

திருமாலையும் நான்முகனையும் வணங்கி, ஆகவனீயம், தட்சணாக்கினி, காருகபத்தியம் என்னும் மூவகை அக்கினிகளையும் குண்டங்களில் உண்டாக்கி வேள்வியைச் செய்து, தேவர்கள் அனைவருக்கும் வரிசையாக மந்திரங்களைச் சொல்லி ஆகுதிகளைக் கொடுத்தான்.

நாரதமுனிவர் திருக்கயிலைக்குச் சென்று, சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கித் தக்கன் செய்யும் வேள்வியைப்

பற்றிக் கூறினார்.

தேவியார் தந்தை செய்யும் வேள்வியைக் காண விரும்பி இறைவரின் அனுமதியை வேண்டினார். தக்கன் தான் பெற்ற வரங்களால் அகந்தை கொண்டுள்ளான் என்றும் தனது மகளாயினும் வேள்வியில் வரவேற்க மாட்டான் என்றும் இறைவர் கூறினார்.

அதைக் கேட்ட தேவியார், "என் தலைவரே! தக்கன் அறிவற்றவன். தேவரீர் அவன் பிழையைப் பொறுத்தருள வேண்டும். அடியேன் விரைவாகவே திரும்பிவிடுவேன்" என்றார். தலைவரும் இசைந்து பூத கணங்களைத் தேவியுடன் செல்லப் பணித்தருளினார்.

தேவியார் சிவபிரானை வணங்கி விடை பெற்றுக்கொண்டு தோழியரோடு பூதகணங்கள் புடைசூழ வேள்விச் சாலையை அடைந்து, தந்தை இருக்கும் இடஞ் சென்றார். பாடறிந்து ஒழுகும் பண்பில்லாத தக்கன் வந்திருப்பவர் மகள் என்றும் பாராது, மகளின் தகுதியையும் ஓராது, "உனக்கு அழைப்பு விடுக்கவில்லை. அப்படி இருக்க நீ ஏன் இங்கு வந்தாய்? உடனே திரும்பிச் செல்" எனச் சீறினான்.

உலகம் அனைத்துக்கும் தாயான தயாபரி தக்கனை நோக்கி, "நீ எங்களை மறந்தாய். இருந்தும் உன்னையும் உன் யாகத்தையுங் காண வந்த என்னைச் சினக்கின்றாய். இது தகாது" என்றார்.

தக்கன் மேலும் சினந்து, "உனது கணவன் கொடிய தாமத குணம் படைத்தவன். பேயோடு ஆடும் பித்தன். அவனுக்கு வாழ்க்கைப்பட்டு நீயும் அவனின் குணங்களைப் பெற்றுவிட்டாய். அதனால் உன்னை இகழ்ந்தேன். உனது தங்கையரும் அவர்கள் கணவரும் எனக்கு இனியவராகையால் அவர்களை அழைத்துச் சிறப்புச் செய்தேன். திருமாலும் நான்முகனும் என்னை மதிப்பவர்கள். அதனால் அவர்களுக்கு அவிர்ப்பாகம் அளித்தேன். என்னை மதியாத சிவனுக்கும் உனக்கும் இங்கு இடமில்லை. இன்றைக் கல்ல என்றைக்கும் உங்களை மதியேன்" என்றான்.

அதற்குத் தேவியார், "தக்கனே! என்னை இகழ்ந்ததை யான் பொருட்படுத்தவில்லை. ஆனால் ஞான நாயகரான என் பதியை இகழ்ந்ததை என்னாற் பொறுக்க முடியாது. 'சிவ' என்னும் இரண்டு எழுத்துக்களை உச்சரிப்போர் நற்கதியடைவர். நீ அத்தகைய நற்கதிக்குத் தகுதியற்றவனாக இருக்கின்றாய். வேத முதல்வனை இகழ்வார்க்குத் தண்டனை கிடைக்கும் என்று வேதங்கள் உரைக்கும். உனக்கும் தண்டம் வந்து அடைவதாக!" என்று சாபமிட்டார்.

பின்பு தேவியார் தமது பரிவாரங்களுடன் திருக்கயிலைக்குத் திரும்பித் தமது தலைவரை வணங்கி, அவரின் இடப்பாகத்தில் அமர்ந்து கொண்டார். தலைவியின் சினத்தை உணர்ந்த தலைவர் அவரோடு சிறிது விளையாடக் கருதி, "மகள் தந்தையைச் சபித்தல் தகுமோ?" என்று கேட்டருளினார். அதற்கு அம்மையார், "தந்தையாயினும் தனது உத்தம கணவரைத் தாழ்த்திப் பேசினால் எந்தப் பெண்தான் பொறுப்பாள்?" என்று கூறித் தலைவரைப் பார்க்க நாணித் தலைகுனிந்தார்.

அது கண்டு மகிழ்ந்த தலைவர், "தாழ்த்திப் பேசுகின்றவர் எல்லோரும் தாழ்ந்தவரும் அல்லர். உயர்த்திப் பேசுகின்றவர் எல்லோரும் உயர்ந்தவரும் அல்லர் என்பதை நீ அறிவாயன்றோ" என்று தொடர்ந்தார். அதற்கு அம்மையார், "பெருமானே! தக்கன் உண்மையாகவே தாழ்ந்தவன். அவனது மகள் என்ற வகையில் அது எனக்கு நன்றாகவே தெரியும். எனினும் அதனைப் பொருட்படுத்தாது இன்று அவனிடம் சென்றபோது அவன் இன்னமும் திருந்தவில்லை என்பதை நேராகவே கண்டு கொண்டேன். தாங்கள் அவனைத் திருத்தியருள வேண்டும்" என்று கூறினார்.

"எங்ஙனம் திருத்த வேண்டும் என்று கருதுகிறாய்?"

"அதனைத் தேவரீரே தீர்மானித்தருள வெண்டும்."

"தண்டம் வந்து அடைவதாக என்று நீயே அவனுக்குக் கூறிவிட்டாய். அதனால் அவனைத் தண்டனையால் திருத்துவோம்."

இவ்வாறு இறைவர் கூறியருளலும் அவரது நெற்றிக் கண்ணில்

இருந்து வீரபத்திரர் தோன்றினார். ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் கரங்களையுங் கொண்டு சிவபிரானைப் போன்ற வடிவுள்ளவராக அவர் விளங்கினார்.

அப்பொழுது தேவியார் வீரபத்திரருக்குத் துணையாகத் தமது சீற்றத்தினின்றும் பத்திரகாளியை உண்டாக்கினார். அவர் ஆயிரம் முகங்களும் இரண்டாயிரம் கரங்களும் கொண்டு அம்மையாரின் அழகுடன் பொலிந்து திகழ்ந்தார்.

வீரபத்திரரும் பத்திரகாளியும் தமது அம்மை அப்பரை வணங்கி நின்றார்கள். அவ்வேளை சிவபெருமான் வீரபத்திரரை நோக்கி, "மகாவீரனே! தக்கன் எம்மை விலக்கிச் செய்யும் யாகத்துக்குச் சென்று எமக்குரிய அவிர்ப்பாகத்தைக் கேட்பாயாக. அதனை அவன் கொடுத்தாற் பெற்று வருக. இல்லையேல் அவனது தலையை அறுத்து, யாகத்தையும் யாகத்துக்கு வந்தவர்களையும் அழிப்பாயாக. அத் தருணத்தில் யாமும் அங்கு வருவோம்" என்று பணித்தருளினார்.

## 21. வீரபத்திரர் வீரதீரம்

வீரபத்திரர் தந்தையார் இட்ட பணியை முடிப்பதற்குத் தயாரானார். தமக்குத் துணையாக ஆயிரக் கணக்கான பூதர்களை உண்டாக்கினார். அவ்வாறே பத்திரகாளியும் ஆயிரம் ஆயிரம் காளிகளை உருவாக்கினார். அவர்கள் யாவரும் புடைசூழ் வீரபத்திரரும் பத்திரகாளியும் தக்கனின் யாகசாலையை அடைந்தனர்.

வீரபத்திரர் வேள்விச் சாலையிலிருந்து எவரும் தப்பிச் செல்லாதவாறு வாயிலைச் சூழ்ந்து காவல் புரியும் வண்ணம் தமது பூதப் படைகளுக்குக் கட்டளை இட்டார். அவர்களும் அவ்வாறே காவல் செய்கையில், தாக்க வந்த தக்கன் சேனைகளைக் கொன்று ஆர்ப்பரித்தார்.

வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளிதேவியும் வேள்விச் சாலைக்குள்ளே சென்றனர். அவர்களைக் கண்ட திருமால், பிரமன் முதலிய தேவர்கள் அஞ்சி நடுங்கினர். பின்னர் தக்கன்

இருக்கும் இடத்தை அடைந்து வீரபத்திரர் இடிபோற் சிரித்து, கொம்பு வாத்தியத்தை ஊதிக் கொடிய பேரொலியை எழுப்பினார். அவ்வொலியால் தக்கன் நிலை தளர்ந்து தடுமாறினான். தேவர்களும் முனிவர்களும் பயந்து பதைத்துத் தப்பியோட முயன்று, முடியாது திரும்பினர்.

அவிர்ப்பாகம் உண்டவர்களின் அல்லலைக் கண்டு தக்கன் அஞ்சி அவலமுற்றான். பின்னர் ஒருவாறு தெளிந்து வீரபத்திரர் முன் வந்து, "நீ யார்? இங்கு ஏன் வந்தாய்?" என்றான். வீரபத்திரர், "யான் சிவபிரானின் மைந்தன். நீ செய்யும் யாகத்தில் அவருக்குரிய அவிர்ப்பாகத்தைப் பெற்றுக்கொள்ள வந்திருக்கிறேன்" என்றருளினார். அதற்குத் தக்கன், "உனது தந்தைக்கு உலகம் அவிர்ப்பாகத்தை அளிக்காது" என்று கூறினான். அப்பொழுது அங்கிருந்த வேதங்கள் நான்கும் பிரணவமும் சேர்ந்து, "உயிர்கள் அனைத்துக்கும் ஒப்பற்ற இறைவன் சிவபிரானே. அவரே வேள்விக்கு முதல்வர். ஆதலின் அவருக்கு உரிய அவிர்ப்பாகத்தை உடனே வழங்குவாயாக" என்றன. தக்கன் மறுக்கவே அவை சிவபிரான் புகழைப் பாடியவாறு அவ்விடத்தை விட்டு அகன்றன.

அப்பொழுது வீரபத்திரர் அங்கிருந்த திருமால், பிரமன் முதலிய தேவர் கூட்டத்தை நோக்கி, "சிவபிரானை மதிக்காத தக்கனின் செய்கை உங்களுக்கு எல்லாம் சம்மதந்தானோ?" என்று வினவினார். அவர்கள் குற்ற உணர்வாற் பதில் சொல்லாது பயந்து ஊமையர்போற் குறுகினர்.

வீரபத்திரர் வேள்வியைச் சிதைக்கத் திருவுள்ளங் கொண்டார். முதலிலே தகுதி அறியாத தக்கனின் மார்பில் ஒரு தண்டத்தினால் அடித்தார். அடிபட்ட தக்கன் திருமாலின் எதிரில் விழுந்தான். பின்னர் பிரமனின் தலையில் தமது கரத்தாற் குட்டினார். அவர் வீரபத்திரரின் காலடியிற் குப்புற வீழ்ந்தார். வீழலும் அவரது மூக்கை அறுத்தார். ஊழிக்கால உருத்திரரையொத்த வீரரின் செயலைக் கண்ட தேவர்களும் பிறரும் பதறிச் சிதறினர். சிதறிக் கதறினர். அவர்களை எல்லாம் வீரபத்திரரும் பத்திரகாளியும் அழித்தனர்.

தப்பி ஓட முயன்ற சந்திரனை வீரபத்திரர் காலால் மிதித்துத் தடுத்தார். பூசா என்னும் சூரியனின் பற்கள் விழும்படி கன்னத்தில் அடித்தார். பகன் என்ற பெயருடைய மற்றொரு சூரியனது விழிகளைக் கெடுத்தார். இயமனின் உயிரையும் எடுத்தார். இந்திரன் குயிலுருவங் கொண்டு பறந்து செல்ல முயன்றபோது வாளினால் அவனையும் முடித்தார்.

சிவபெருமானது திருவுருவத்தைப் பெற்ற ஈசானரும் உருத்திர கணங்களும் வீரபத்திரரை அச்சத்தால் வணங்கி மன்னிக்க வேண்டினர். வீரபத்திரர் அவர்களைக் கொல்லாது எச்சரித்து அனுப்பினார். அதிவிரைவாக ஓடிய அசுரேந்திரனை வாளால் வெட்டிக் கொன்றார். வேள்வித் தெய்வம் மானுருவங் கொண்டு பயந்து ஓடுதலும், அதன் தலையை ஓர் அம்பினாற் கொய்தார்.

இவ்விதம் பிரமதேவரின் மகனான தக்கன் மிக மகிழ்ச்சியுடன் ஆரம்பித்த வேள்வி வீரபத்திரராலும் பத்திரகாளியாலும் அவர்களது பூதப் படைகளாலும் தயிர்க் கடலைப் பல மத்துக்கள் கடைந்தவாறு சின்னாபின்னம் ஆக்கப்பட்டது.

வீரபத்திரரால் அடியுண்டு விழுந்த தக்கன் தெளிவுபெற்று, “என் கண்முன்னே யான் செய்த வேள்வி அழிந்தது. அதுவும் என்னால் அழிந்தது. நான் செய்த பிழைகள் ஒன்றா இரண்டா? என் தந்தை கூறிய அறிவுரைகளை மதித்திலேன். ஒப்பற்ற செல்வங்களைத் தந்த சிவபிரானை இகழ்ந்தேன். ததீசியின் உண்மையான வார்த்தைகளை உதாசீனஞ் செய்தேன். அழையாதபோதும் அன்புடன் தானே வந்த என் மகளை அவமானப்படுத்தினேன். வீரபத்திரர் கேட்டபோதும் அவியைக் கொடுத்திலேன். பிரமா முதலிய தேவர்களுக்கும் ஏனையவருக்கும் அழிவை ஏற்படுத்தினேன். இனி வருந்திப் பயனில்லை. தப்பி ஓடவும் முடியாது. எனினும் கோழைபோல் தலைகுனிந்து நில்லாமல் வீரனின் முன் வலிமை யுடையவன்போல் நிற்பதே தகுதி” என்று நிமிர்ந்து நின்றான்.

தக்கனுக்கு இன்னும் ஆணவம் நீங்கவில்லை என்பதை உணர்ந்த வீரபத்திரர் தமது உடைவாளால் அவனது தலையைத் துண்டித்துத் தீயில் இட்டார். அதனைக் கண்ட தக்கன் மனைவி வேதவல்லியும்

பிறரும் அழுது புலம்பினர்.

வேள்வியும் வேள்வியிற் கலந்துகொண்டவரும் அழிந்ததைக் கண்ட திருமால் வேள்வியைக் காக்க எண்ணி வீரபத்திரருடன் போர் செய்யத் துணிந்தார். அவரது வாகனமாகிய கருடன் முன்னரே அஞ்சி ஓடிவிட்டமையால், தமது கோபத்தையே ஒரு கருடனாக உருவாக்கினார். கோபக் கருடன்மீது ஏறித் தமது பஞ்சா யுதங்களான சக்கரம், வில், வாள், தண்டு, சங்கம் ஆகியவற்றைக் கொண்டு பூத சேனைகளுடன் கடும்போர் புரிந்தார். வீரபத்திரரும் திருமாலுடன் போர் செய்யத் திருவுள்ளங் கொண்டார்.

அவ்வேளை, சிவபெருமான் கருணையால் அவ்விடத்தில் ஒரு தேர் வந்திறங்கியது. முன்பு வீரபத்திரர் குட்ட, மயங்கி வீழ்ந்த பிரமன் தெளிவு பெற்று அத்தேருக்குச் சாரதியாக அமர்ந்தார். அதில் வீரபத்திரரும் பத்திரகாளியும் அமர்ந்து திருமாலை எதிர்க்கச் சென்றனர். அப்பொழுது, திருமால் வீரபத்திரப் பெருமானை நோக்கி, “வீரனே சிவபிரானை இகழ்ந்த தக்கனைக் கொன்றதோடு நில்லாது, அவனது அழைப்பின் பேரில் வந்த குற்றமற்ற தேவர்களையும் மற்றையவர்களையும் கொன்றது ஏன்?” என்று கேட்டார்.

அதற்கு வீரபத்திரர், “பரம்பொருளான சிவபிரானை இகழ்ந்து செய்த வேள்வியிற் கலந்து கொண்டு அவிர்ப்பாகம் உண்டவர்களுக்கு வேதங்கள் கூறிய தண்டனையையே அளித்தோம். இப்பொழுது உன்னையுந் தொலைப்போம்” என்று கூறிப் போர் தொடுத்தார்.

திருமால் ஏவிய படைகளை எல்லாம் வீரபத்திரர் அழித்தார். திருமால் தமது நாராயண அத்திரத்தை விடுக்க, அதனைத் தமது வீரம் என்னும் அம்பினால் சிதைத்தார். அப்பொழுது திருமால் பல மாயவர்களை உண்டாக்கினார். அவர்களை வீரபத்திரர் தமது விழியால் எரித்து நுண்ணிய துகள்களாக்கினார். அதனைக் கண்ட திருமால் தமது சக்கராயுதத்தை ஏவினார். வீரபத்திரர் தமது திருக்கரத்தால் சக்கராயுதத்தைப் பற்றி விழுங்கினார்.

பின்னர் திருமால் வாளினால் வீரபத்திரரை வெட்டச் சென்றார். வீரபத்திரர் தமது உங்கார ஒலியால் (அச்சுறுத்தும் ஒலியால்)

அவரின் இயக்கத்தை நிறுத்தினார். செயலற்று நிற்கும் திருமாலைக் கண்டு வீரபத்திரர் சினந் தணிந்து நின்றவேளை, பிரமன் அறிவிலியாகிய தக்கன் யாகத்தில் கலந்துகொண்ட தன் பிழையைப் பொறுத்தருள வேண்டினார். அவ்வேளை திருமாலும் தெளிவுபெற்றுத் தமது குற்றத்தையும் பொறுக்குமாறு வணங்கி நின்றார். வீரபத்திரப் பெருமானும் கருணை கொண்டு அவர்கள் இருவரையும் மன்னித்தருளினார்.

அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாருடன் நந்தி முதலிய கணங்கள் புடைசூழ இடப வாகனத்தில் அங்கு எழுந்தருளினார். வீரபத்திரரும் பத்திரகாளியும் அம்மை அப்பரை வணங்கி நின்றனர். திருமாலும் பிரமனும் மகிழ்ந்து போற்றினர்.

வேள்விச்சாலை அழிந்து கிடப்பதையும் தக்கனும் தேவரும் முனிவரும் பிறரும் அங்கங்கள் துண்டிக்கப்பட்டு இறந்து கிடப்பதையும் உலக மாதாவாகிய உமாதேவியார் கண்டு மிகவும் இரங்கி, அவர்களை உயிர்ப்பிக்குமாறு இறைவரை வேண்டினார். இறைவரும் தமது நாயகியின் கருணை நன்றென நவின்று, வீரபத்திரரைப் பார்த்து, “நீ அழித்தவர்கள் அனைவரையும் உயிர்பெறச் செய்வாய்” என்று பணித்தருளினார்.

உடனே வீரபத்திரப் பெருமான், “நீவிர் யாவரும் உயிர் பெற்றெழுக” எனக் கூறியருளினார். அவ்வளவில் தேவர்கள் முதலாக யாகத்தில் கலந்துகொண்டு இறந்தவர்கள் யாவரும் உயிர்பெற்றெழுந்து சிவபிரான் முன் அஞ்சி நடுங்கியவாறு கூடி வணங்கினர். கருணாமூர்த்தியான கண்ணுதற் பெருமான் அவர்களுக்கு “அஞ்சேல்” என்று கூறி அபயம் அளித்தார்.

இறைவரது பேரருளை நினைந்து பெரிதும் மகிழ்ந்து திருமால், பிரமன் முதலியோர் அவர்முன் சென்று வணங்கித் தமது பிழைகளைப் பொறுத்தருள வேண்டினர். இறைவர் அவர்களை மன்னித்தருளி அவரவருக்குரிய பதவிகளை வழங்கி முன்புபோல் ஆட்சி புரியப் பணித்தருளினார்.

அவ்வேளை உயிர்பெற்று எழுந்தவர் கூட்டத்தில் தமது மகன் தக்கனைக் காணாது பிரமதேவர் இறைவரிடஞ் சென்று அவனையும்

உயிர்ப்பிக்குமாறு வேண்டினார். இறைவரும் அவ்வாறே அருள் செய்தலும் வீரபத்திரர் தக்கனுடைய தலையில்லாத உடலுக்கு ஆட்டின் தலையைப் பொருத்தி, அவனை உயிர்ப்பித்தார். தக்கன் எழுந்து வீரபத்திரரைக் கண்டு பயந்து கூனிக் குறுகி வணங்கினான். இடப வாகனத்தில் உமையம்மையுடன் எழுந்தருளிய சிவபிரானைக் கண்டு மேலும் அச்சமடைந்தான். அப்பொழுது இறைவர், "தக்கனே! இனி அஞ்சற்க" என்று அவனுக்கு அருள் செய்தார்.

தக்கன் ஆட்டுத் தலையுடன் முழுமுதற் பெருமான் முன் விழுந்து, தனது குற்றங்கள் யாவற்றையும் எண்ணி வருந்தி, தவறு செய்பவர்கள் இவ்விதம் தண்டனை அடைவது இயல்பே என்பதனை உணர்ந்து பலமுறை வணங்கினான்.

பின்னர் இறைவர் தேவியாருடன் திருக்கயிலைக்கு எழுந்தருளினார். அங்கு வெற்றி மிக்க வீரபத்திரருக்கு யாவரினும் மேலான பதவியளித்து மகிழ்ந்தார். வீரபத்திரப் பெருமானும் பத்திரகாளிதேவியும் தாய் தந்தையரை வீழ்ந்து வணங்கினர்.

## 22. அரும்பெருஞ் சோதி

யாவருஞ் சென்றபின் துன்பத்துடன் நின்ற தக்கனைப் பார்த்துப் பிரமதேவர் பேசலானார்:

"மகனே! உனது மதியற்ற செயலால் வானவருக்கும் முனிவருக்கும் ஏனையோருக்கும் ஒரு கூற்றுவனாக மாறிவிட்டாய். அளப்பருஞ் செல்வத்தைப் பெற்றமையால் ஆணவங்கொண்டு ஆண்டவரையே அவமதித்தாய். இவ்வித மயக்கம் எனக்கும் முன்பு இருந்தது. அதனை இறைவரே தீர்த்தருளினார். அவரே முழுமுதற் பொருளானவர், யாவரினும் மேலானவர் என்பதை யான் உணர்ந்து கொண்ட அனுபவத்தைக் கூறுவேன், கேட்பாயாக.

"முன்னொரு காலத்தில் எனது படைப்புத் தொழில் குறித்து யான் செருக்குற்றிருந்தேன். ஒருமுறை எனது தொழிலின் பெருமைபற்றித் திருமாலுக்கு எடுத்துரைக்க, அவர் தமது காத்தல் தொழிலே

முக்கியமானது என்று வாதிட்டார். விவாதம் இருவரில் யார் பெரியவர் என்ற பூசலை எழுப்பியது. அவர் தானே பிரமம் என நான் அதனை மறுத்து நானே பிரமம் என வாதம் புரிந்தேன்.

"அவ்வேளை எனது மகன் நாரதன் அங்கு வந்து பிரமம் ஒன்றேயன்றி இரண்டில்லை என்றும் எம்மைப் படைத்துப் பதவிகள் அளித்த சிவபிரானை நாம் மறந்து விட்டதால் அவரே வந்து இந்த உண்மையை எமக்கு உணர்த்துவார் என்றுங் கூறிச் சென்றான்.

"அவன் சென்றதும் சிவபெருமான் எனக்கும் திருமாலுக்கும் இடையில் அக்கினி மயமான மலைபோன்று தோன்றி, "சிறுவர்களே! இச்சோதி மலையின் அடியையாயினும் முடியையாயினும் முதலிற் கண்டறிபவர் எவரோ அவரே முதல்வராவர்" என்று கூறியருளினார்.

"உடனே முடியினைக் காண்பேன் என்று நான் கூற, திருமால் தான் அடியினைக் காண்பதாகக் கூறினார். அவர் பெரும் பன்றி வடிவம் எடுத்துப் புவியினைத் தோண்டிச் சோதிமலையின் அடியைக் காண முயன்றார். நான் பெரிய அன்னப் பறவையாகி முடியைக் காண வானத்தின்மேல் எழுந்தேன்.

"திருமால் பன்றி வடிவத்தில் நெடுங்காலமாகப் புவியைத் தோண்டியும் அதன்கீழ் உள்ள பாதாள உலகத்தை அகழ்ந்தும் சோதியின் அடியைக் காணாது களைத்து மேலும் தொடர முடியாது சோர்ந்து விழுந்தார். அத்துடன் அவரது அகந்தையும் விழுந்தது. நல்லறிவு எழுந்தது. சிவபிரானைச் சிந்தித்துத் தொடங்கிய இடத்துக்கே மீண்டுஞ் சென்று வணங்கி நின்றார்.

"நானும் முடியைக் காண முடியாது வருந்தி மூச்சிழந்தேன். சிவபிரான் அருளாற் சிறிது தெளிவு பெற்றபோது சோதியின் இடது புறத்திலிருந்து சிலர் சித்தர்களைப்போல உருத்திராட்ச மாலைகளை அணிந்துகொண்டு புறப்பட்டதைக் கண்டேன். அவர்களது உரைகளால் நானும் நல்லறிவு பெற்று புவிக்குத் திரும்பினேன்.

"சோதிலிங்கத்தின் அருகே நின்று திருமாலும் நானும் உள்ளன்புடன்

சிவபிரானை வழிபட்டோம். அப்பொழுது சோதிவடிவான உலகநாதர் உமாதேவியாருடன் காட்சி தந்தருளினார். நாம் எமது குற்றத்தைப் பொறுத்தருள வேண்டினோம்.

“அதுகேட்ட இறைவர், ‘நீவிர் எக்குற்றமும் புரியவில்லை. உங்களுக்கிடையிற் பூசலை யானே ஏற்படுத்தினேன். உயிர்களில் மட்டுமன்றி உயிர்கள் செய்யும் தொழில்களிலும் யான் இருக்கின்றேன். அதனால் தொழில்களில் ஏற்றத்தாழ்வு பார்க்கலாகாது என்பதனை உங்கள் மூலம் உலகத்தவருக்கு உணர்த்தவே இந்நாடகத்தைச் செய்வித்தோம். நீவிர் உங்கள் பதவிகளைத் தொடர்ந்து செய்வீர்களாக” என்று கூறி எமக்கு அருள்புரிந்தார். அப்பொழுது ஆதியும் அந்தமும் இல்லாத சிவசோதி ஒப்பற்ற ஓர் அக்கினிமலையாக ஒடுங்கியது. அந்தச் சிவலிங்கத்தை முறைப்படி வணங்கி எங்கள் உலகங்களுக்குச் சென்றோம்.

“சிவபெருமான் உயிர்கள் தம்மை வணங்குதற்பொருட்டு இலிங்கமாக ஒடுங்கிய தலம் திருவண்ணாமலை என்று வழங்கப் படுகின்றது. மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியாகிய சிவராத்திரியில் சோதிலிங்க வடிவமான அக்கினிமலையைப் பூசித்தவர்கள் பெறுதற்கரிய வரங்கள் பலவற்றைப் பெற்றார்கள்.

“ஆதலால், மைந்தனே! நீயும் சிவபெருமானது திருவருளைப் பெற்று வாழ்வின் உண்மைப் பயன்களை அடைவாயாக. அவரே தந்தையும் தாயும் குருவும் தவமும் செல்வமுமாய கடவுள். அவரை அனுதினமும் பூசித்துப் பிறப்பு இறப்பு இல்லாப் பெருவாழ்வைப் பெறுவாயாக!”

இவ்வாறு பிரமதேவர் தக்கனுக்கு அறிவுரை வழங்கினார். தக்கனுடைய முன்வினைகள் நீங்குங் காலம் நெருங்கியதால், அவனும் தந்தை சொல்லைக் கேட்டுச் சிவபிரானை வழிபடச் சித்தங் கொண்டான். காசிக்குச் சென்று கங்கை ஆற்றங்கரையிற் சிவலிங்கத்தை அமைத்து உண்மை அன்புடன் சிவபெருமானைப் பூசித்து வந்தான். அவனது பூசனையை ஏற்றுச் சிவபிரான் அவனுக்குக் காட்சியளித்து வேண்டுவது யாதென வினவியருளினார்.

தக்கன் மகிழ்ந்து, "ஐயனே! ஆணவ மலத்தால் அடியேன் தங்களை மறந்து அனேக பாவங்களைப் புரியலானேன். அவற்றை எல்லாம் போக்கி அருள்புரிந்து நல்லறிவு தந்த தேவரீரது திருவடிகளை நிலைத்த அன்புடன் நினைந்து வணங்கும் பேற்றினைத் தந்தருள வேண்டும். மேலும் திருக்கயிலையில் தேவரீரது வாயிலில் சிறந்திருக்கும் பதவியையும் தந்தருள வேண்டும்" என்று வேண்டினான். இறைவரும் அவன் கேட்டவற்றை அளித்தருளினார்.

தக்கன் காசியிற் சிவபெருமானைப் பூசித்ததுபோலவே ஏனைய தேவர்களும் முனிவர்களும் பூவுலகத்து அந்தணர்களும் பிறருந் தத்தமக்கு விருப்பமான சிவத்தலங்களிற் சிவபெருமானை வழிபட்டு வேள்வியிலே தமக்கு ஏற்பட்ட காயங்களைப் போக்கி முன்னைய சிறப்புகளைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு தக்கனுடைய வரலாற்றை இந்திரனின் மகன் சயந்தனுக்கு வியாழபகவான் கூறி முடித்தார். அதனைக் கேட்ட சயந்தனும் சிவபிரானது திருவடிகளைச் சிந்தித்துத் தேவலோகத்தைச் சிறப்புற ஆட்சிபுரிந்து வந்தான்.

## 23. முசுகுந்தனுக்கு அருளிய முருகன்

முன்னொரு நாள் திருக்கயிலையில் வில்வ மரச் சோலை ஒன்றிற் சிவபெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது வில்வமரத்தில் இருந்த முசு என்னும் ஒருவகைக் குரங்கு வில்வம் இலைகளைப் பறித்துக் கீழே எறிந்து கொண்டிருந்தது. அவை சிவபெருமானின் திருமுடியில் விழுதல் கண்டு தேவியார் வருந்தினார். "வருந்தற்க, அது நமக்கு அருச்சனையன்றோ செய்கின்றது" என்று இறைவர் தேவியை ஆற்றுப்படுத்தினார். அம்மையாரும் குரங்குமீது அருள் நோக்கங் கொண்டார். அதனால் குரங்கு நல்லறிவு பெற்றுக் கீழே இறங்கி வந்து அம்மை அப்பரை வணங்கிப் பிழையைப் பொறுத்தருள வேண்டியது. இறைவர் குரங்கை நோக்கி, "நீ செய்தது பிழையன்று. வில்வம் இலையால் எமக்கு நீ அருச்சனையல்லவா செய்தாய். அதனால் நீ பூவுலகத்திற் பிறந்து அரசு புரியக் கடவாய்" என்று கூறியருளினார்.

அவ்வண்ணமே அம் முசு நிலவுலகத்தில் அரிச்சந்திர குலத்திற் பிறந்தது. அதன் உடல் மனிதரைப் போன்று அழகுற அமைந்திருந்தாலும் முகம் மட்டும் முசுவின் முகமாக இருந்தது. அதனால் குழந்தை, முசுகுந்தன் என்னும் காரணப் பெயரைப் பெறலாயிற்று.

முசுகுந்தன் வளர்ந்து கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்தான். இவன் சிறந்த சிவபக்தன். முருகப் பெருமானின் திருமணத்துக்கு அழைக்கப்பெற்ற சிறப்புடையவன்.

அந்நாளிலிருந்து முசுகுந்தன் முருகப் பெருமானின் அடியவனாகி அவரை வழிபட்டு வந்தான். வசிட்ட முனிவரை அடைந்து முருகக் கடவுளுக்குரிய விரதங்கள், அவற்றை அனுட்டிக்கும் விதிமுறைகள் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டான். வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் ஆகிய மூன்று விரதங் களையும் முறைப்படி பலகாலம் அனுட்டித்து வந்தான். அதன் பலனாக ஆறுமுகப் பெருமான் ஒருநாள் வீரவாகுத்தேவர் முதலாய ஒன்பது வீரரும் இலட்சத்து வீரரும் புடைசூழ முசுகுந்தன் முன் எழுந்தருளி, “உனக்கு வேண்டும் வரங்களைக் கேட்பாயாக” என்று கூறியருளினார்.

முசுகுந்தன் பெரிதும் மகிழ்ந்து, “ஐயனே! இந்தப் புவி முழுதும் யான் இனிதே செங்கோல் செலுத்தும் வகையில் வீரவாகுத்தேவர் முதலிய வீரர்களை என் படைத்தலைவர்களாகத் தருதல் வெண்டும்” என்று கேட்டான். முருகப் பெருமானும் தமது ஒன்பது தம்பியரையும் நோக்கி, “என்னிடத்தில் மிக்க அன்புடையவனாகிய இம்மன்னனிடம் படைத்தலைவராகிப் பணி செய்வீர்களாக” என்றருளி மறைந்தார்.

மயில்வாகனனார் மறைந்தருளலும் வீரவாகுத்தேவரும் அவரது தம்பியர் எண்மரும் மானிடக் கோலங்கொண்டு முசுகுந்த மன்னரைச் சூழ்ந்தனர். அளப்பரும் ஆனந்தம் அடைந்த மன்னன் வீரர்களுடன் தனது தலைநகரான கருவூரை அடைந்தான்.

அங்கு நவவீரர்களை மிகுந்த மதிப்போடு வரவேற்று அவர்களை மாடமாளிகைகளில் இருக்கச் செய்தான்.

வீரவாகுத்தேவர் புஷ்பகந்தி என்னும் மங்கைநல்லாளை மணம்புரிந்து சித்திரவல்லி என்னும் பெண்ணுக்குத் தந்தையானார். சித்திரவல்லிக்குப் பின் அனகன், கனகன் ஆகிய ஆண் மக்களையும் பெற்றார். மற்றைய வீரர்களும் உத்தம பெண்களை மணந்து வித்தகக் குழந்தைகளைப் பெற்று மனிதகுலத்தோடு இணைந்து வாழ்ந்து வந்தனர்.

வீரவாகுத்தேவர் தமது மகள் சித்திரவல்லியை முசுகுந்த மன்ன னுக்கு மணஞ்செய்து கொடுத்தார். அவர்களுக்கு அக்கினிவர்மன் என்னும் அரிய புதல்வன் பிறந்தான்.

இவ்விதம் முசுகுந்த மன்னன் முருகப் பெருமானது அருளினாற் சிறப்போடு வாழ்ந்து வருகையில் இந்திரனுடன் வலாசுரன் என்பான் பெருஞ் சேனைகளோடு போர் தொடுத்தான். இந்திரன் தனக்குத் துணையாக வருமாறு முசுகுந்தனுக்கு அழைப்பு விடுத்தான். முசுகுந்தன் வீரவாகு முதலிய வீரருடன் சென்று அசுர சேனையை அழித்தான். இந்திரன் வச்சிரப் படையால் வலாசுரனைக் கொன்றான். அதனால் அவனுக்கு வலாரி என்னும் பெயரும் வரலாயிற்று.

இந்திரன் முசுகுந்தனின் உதவியைப் பாராட்டித் தனது நகருக்கு அழைத்துச் சென்று அங்கு ஒரு மாளிகையில் அவனைத் தங்க வைத்தான். பின்னர் நீராடிச் சிவபூசை செய்யலானான். முசுகுந்தனும் தான் இருந்த மாளிகையிற் சிவபிரானை நோக்கித் தொழுது வேதகீதம் பாடிப் போற்றிசெய்தான். சிவபிரான் அவன்முன் தோன்றி, “மன்னவ, திருமால் நெடுங்காலம் பூசித்து, இப்பொழுது தேவேந்திரன் பூசித்துவரும் எமது உருவத்தை நீ பூலோகங் கொண்டு சென்று பூசை செய்வாய்” என்று பணித்தருளினார். மன்னன் இறைவரின் அருளை எண்ணி வியந்து பெருமகிழ்ச்சி அடைந்தான்.

இந்திரன் சிவபூசையை முடித்தபின் முசுகுந்தனுக்குக் காமதேனுவைக் கொண்டு விருந்து செய்வித்தான். பலவிதமான பரிசில்களை வழங்கி, “மேலும் விரும்பியவற்றைக் கேட்பாயாக” என்று கூறினான்.

அதுவே நல்ல தருணம் என்று எண்ணி முசுகுந்தனும் இந்திரன்

வைத்து வணங்கும் இறைவரின் திருவுருவத்தைத் தான் பூலோகத்துக்குக் கொண்டு சென்று பூசிப்பதற்குத் தரும்படி கேட்டான். இந்திரன் அத் திருவுருவத்தைத் திருமால் மார்பில் வைத்துப் பூசித்து வந்தவர் என்றும் வாற்கலி என்னும் அசுரனுடன் போருக்குச் சென்றபோது அதனைத் தன்னிடம் கொடுத்தார் என்றும் விளக்கி, "திருமாலின் இசைவு பெற்றால் இறைவரின் திருவுருவத்தை உனக்குத் தருவேன்" என்றும் கூறினான்.

முசுகுந்தன் உடனடியாகவே பாற்கடலை அடைந்து திருமாலின் அனுமதியைப் பெற்று வந்தான். இந்திரன் தான் பூசித்துவந்த இறைவரைப் பிரிய மனமில்லாது வருந்தினான். முசுகுந்தனின் சிவபக்திக்கு ஒரு பரீட்சை வைக்கத் திட்டமிட்டான்.

தான் வழிபட்டு வந்த குமரக் கடவுளோடு கூடிய அம்மை அப்பர் திருவடிவம் போலவே ஆறு திருவுருவங்களைக் கண்டோர் அதிசயிக்கும் வண்ணம் தேவதச்சனைக் கொண்டு செய்வித்தான். அவற்றோடு தான் வணங்கும் திருவுருவத்தையும் வைத்து அவ்வேழு மூர்த்திகளில் விரும்பிய ஒன்றை எடுத்துச் செல்லும்படி முசுகுந்தனுக்குக் கூறினான். முசுகுந்தன் புதிய வடிவங்களில் ஒன்றைத் தெரிவுசெய்தால் பழைய திருவுருவத்தைத் தான் வைத்துக் கொள்ளலாம் என்பது இந்திரன் எண்ணமாக இருந்தது. ஆனால் இறைவர் திருவருளால் முசுகுந்தன் பழைய திருவுருவத் தையே தெரிவுசெய்தான். இந்திரன் முசுகுந்தனின் பத்தியை மெச்சி, "நீ தெரிவுசெய்த பெருமானோடு இவர்களையும் பூவுலகத் துக்குக் கொண்டு சென்று பூசிப்பாயாக" என்று தேவதச்சன் செய்த புதிய திருவுருவங்களையும் கொடுத்தான்.

முசுகுந்தனும் மிக்க மகிழ்ச்சிப் பெருக்கால் இந்திரனுக்கு நன்றி கூறி, ஏழு திருவுருவங்களுடனும் பூலோகத்தை வந்தடைந்தான். ஏழு மூர்த்திகளையும் ஏழு தலங்களில் ஒரே தினத்திற் பிரதிட்டை செய்து முசுகுந்தன் திருவிழா நடத்தினான். பழைய திருமூர்த்தியைத் திருவாரூர்ப் பூங்கோயிலிற் பிரதிட்டை செய்தான். புதிய ஆறு திருமூர்த்திகளையும் திருநாகை (நாகபட்டினம்), திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர் (திருவாய்மியூர்), திருமறைக்காடு (வேதாரணியம்) ஆகிய தலங்களிற் பிரதிட்டை செய்தான்.

(சிவபிரான் திருவாரூரில் வீதிவிடங்கர் என்றும் திருநாகையில் அழகவிடங்கர் என்றும் திருநள்ளாற்றில் நகரவிடங்கர் என்றும் திருக்காறாயிலில் ஆதிவிடங்கர் என்றும் திருக்கோளிலியில் அவனிவிடங்கர் என்றும் திருவாய்மூரில் நீலவிடங்கர் என்றும் திருமறைக்காட்டில் புவனிவிடங்கர் என்றும் பெயர் பெறுவர். இத் திருத்தலங்கள் ஏழும் சப்த விடங்கள் எனப்படும்.)

இந்திரன் தான் பூசித்த பரம்பொருளின் திருவிழாவைக் கண்டுகளிக்கத் திருவாரூருக்கு மானிட உருவில் வந்தான். யானையின்மீது முரசினை முழக்கி மக்களைத் திருவிழாவுக்கு அழைத்தல் முதலாய திருத்தொண்டுகளையுஞ் செய்தான். இவ்விதம் ஆண்டுதோறும் திருவாரூர்த் திருவிழாவைத் தரிசிப்பது அவனது வழக்கம்.

முசுகுந்தன் முருகப் பெருமானைக் குறித்துச் செய்த விரதங்களால் வானுலகம் வாழும் நவவீரர்களும் வந்து சேவைசெய்யும் பெருஞ்சிறப்புடன் பலகாலமாக முறையுடன் ஆட்சி செலுத்தினான். பின்னர் தனது மகன் அக்கினிவர்மனுக்கு முடிசூட்டித் தவம் மேற்கொண்டு தான் முன்பு இருந்த கயிலையை அடைந்தான்.

வீரவாகுத்தேவர் முதலிய நவவீரர்களும் அரிய தவங்களைச் செய்து, மானிட வடிவங்களை நீக்கிக் கந்தகிரியை அடைந்து கந்தப் பெருமானை வழிபட்டு வாழ்ந்தனர்.

## 24. வள்ளி திருமணம்

முன்பு முருகப் பெருமானைத் திருமணஞ் செய்தற்பொருட்டுச் சரவணப் பொய்கைக்கு அருகில் தவஞ்செய்த திருமாலின் புதல்வி சுந்தரி, முருகப் பெருமான் அருளியவாறு தொண்டைநாட்டுச் சிவமுனிவரின் மகளாகும் வண்ணம் பூவுலகுக்குச் சென்றார்.

தொண்டைநாட்டில் மேற்பாடி என்னும் பெருமை மிக்க ஊரில் வள்ளிமலை என்னும் மலை ஒன்று இருந்தது. அங்கு வாழ்ந்த வேடர்களுக்கு நம்பிராசன் என்பவன் அரசனாக விளங்கினான். தவத்திற் சிறந்த நம்பிராசன் ஆண் பிள்ளைகளைப் பெற்றும்

பெண் குழந்தை இல்லாத குறையால் வருந்தினான்.

அம் மலைச்சாரலிற் சிவமுனிவர் என்பார் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து வந்தார். சுந்தரி அவர்முன் அழகிய குழந்தையாகத் தோன்றினார். தவத்தில் இருந்த முனிவர் குழந்தையைக் கவனிக்கவில்லை. குழந்தை பசியால் அழுதது. அது கேட்டு முனிவர் கண்விழித்தபோது தெய்வமான் ஒன்று குழந்தைக்குப் பால் ஊட்டிக்கொண்டு நின்றது. வியப்புற்ற முனிவர் எழுந்து குழந்தையை நோக்கிச் செல்ல, மான் மறைந்து போயிற்று. அற்புதக் குழந்தையை முனிவர் அன்போடு எடுத்துத் தமது தவச்சாலையில் வளர்த்து வந்தார்.

நம்பிராசன் பெண் குழந்தைக்குத் தவம் இருப்பதை முனிவர் அறிவார். முருகப் பெருமான் அருளாற் குழந்தையை அவனுக்குக் கொடுக்கும் எண்ணம் முனிவருக்கு எழுந்தது.

ஒருநாள் நம்பிராசன் மனைவியுடன் தினைப்புலம் வந்து கொண்டிருந்தான். அதனைத் தமது தவவலிமையால் உணர்ந்துகொண்ட முனிவர் அவன் வரும் வழியில் வள்ளிக் கிழங்கு அகழ்ந்து எடுத்த குழியில் குழந்தையை வைத்தார்.

குழந்தை குயிலோசைக் குரலில் மெல்லிதாக அழுது அவ்வழியால் வந்துகொண்டிருந்த நம்பிராசன் கவனத்தைக் கவர்ந்தது. குழியிற் பிரகாசமான அழகோடு கிடந்த குழந்தை பெண் குழந்தையாக இருப்பதைக் கண்டு நம்பிராசன் பெருமகிழ்ச்சி அடைந்தான். அதனை வாஞ்சையோடு எடுத்து மனைவி கொடிச்சியிடம் கொடுத்தான். அவள் பெண் குழந்தை இல்லாத குறையைத் தமது குலதெய்வம் போக்கியது என்று வணங்கிக் குழந்தையைப் பாசத்தோடு பெற்று முத்தமிட்டுக் குதூகலித்தாள்.

நம்பிராசன் தனது சிற்றூருக்குத் திரும்பி, பெண் குழந்தையைப் பெற்ற மகிழ்ச்சியைப் பெருவிழாவாகக் கொண்டாடினான். வள்ளிக் குழியால் வந்தமையால் வயதில் மூத்த பெரியோர் குழந்தைக்கு வள்ளி எனப் பெயர் சூட்டினர். நம்பிராசனும் கொடிச்சியும் வள்ளியை மட்டற்ற பாசத்தோடு வளர்த்து வந்தனர்.

வள்ளிக்குப் பன்னிரண்டு வயதானபோது வேடர்கள் தங்கள் மரபுப்படி வளர்மதியன்ன வள்ளியைத் தினைப்புனங் காக்க வைத்தனர். வடிவேற் குமரனுக்கு மனைவியாகப்போகும் வள்ளிநாயகி தினைப்புனத்தில் ஏணியிட்ட பரண்மீது ஏறி எத்திசையுங் காண இணையில்லாத மின்னற் கொடிபோல் நின்றார். தட்டையுந் தழலுந் தாங்கிப் பறவைகளும் விலங்குகளும் தினைக் கதிர்களைத் தின்னாவண்ணம் காத்தார். பன்றிகளையும் மான்களையும் சிறு கற்களால் எறிந்து துரத்தினார். "நாகணவாய்ப் புட்களே, செங்கண் புறாக்களே, ஆலோலம்! தோகை மயில்களே, பேசுங் கிளிகளே, ஆலோலம்! கூவுங் குயில்களே, சேவல்களே, ஆலோலம்!" என்று நாயகியார் பறவைகளை ஓட்டினார்.

இவ்விதம் தினைப்புனங் காத்திருக்கும் வள்ளியம்மைக்கு அருளும் வண்ணம் ஆறுமுகப் பெருமான் கந்தவெற்பினை நீங்கித் திருத்தணிகை மலையில் தாமே தனித்து எழுந்தருளினார். அத்தருணம் பிரம்மஞானி நாரத முனிவர் அங்கு வந்து முருகப் பெருமானை வணங்கி, வள்ளியம்மையின் அளப்பரும் அழகையும் அரும்பெருந் தவத்தையும் எடுத்துக்கூறி, அவரின் காதலுக்குக் காந்தம் ஏற்றினார்.

முருகப் பெருமான் நாரதருக்கு விடைகொடுத்து அனுப்பியபின் ஒரு வேடனைப் போலக் கோலங் கொண்டு வள்ளிமலைக்கு எழுந்தருளினார். அங்கு தினைப்புனத்தில் இருந்த அழகிய வள்ளிநாயகியைக் கடம்ப மாலை அணிந்த காளையாகிய கந்தப் பெருமான் கண்டு காதல் வயப்பட்டார்.

தமது காதலி பக்கஞ் சென்று பெயர் என்ன என்று கேட்டார். பதில் இல்லை. ஊர் என்ன என்று கேட்டார். பதில் இல்லை. ஊருக்குச் செல்லும் வழி என்ன என்று கேட்டார். அதற்கும் பதில் இல்லை. அது கண்ட காதலர் "வாளினை ஒத்த கண்களையுடைய பெண்ணே! நீ ஒரு வார்த்தையேனும் பேசாது இருப்பாயானால் உன்மீது எல்லையில்லாத காதல் கொண்டுள்ள என்னை வருத்தும் பழி உன்னை வந்து சேரும்" என்றார்.

அப்போது பன்றிகளும் கரடிகளும் யானைகளும் விலகி ஓடும்வண்ணம் கொம்புகளை ஊதிக்கொண்டு வேடர்கள் சூழ்ந்துவர

நம்பிராசன் அங்கு வந்தான். குமரவேள் உடனே அடியும் நுனியும் வேதங்களாகவும் நடுப்பகுதி சிவாகமங்களாகவும் கிளைகள் பல கலைகளாகவும் ஆன ஒரு வேங்கைமர வடிவந்தாங்கி நின்றார்.

நம்பிராசன் தனது மகள் வள்ளிநாயகிக்குத் தேன், பால், தினைமா, கிழங்கு முதலிய உணவு வகைகளை அன்புடன் கொடுக்கையில் அங்கு புதிதாகத் தோன்றி நிற்கும் வேங்கை மரத்தைக் கண்டு அதுபற்றித் தன் மகளைக் கேட்டான். மகள் தனக்கு எதுவுந் தெரியாது என்று பதில் அளித்தார். "இது உனக்குத் துணையாக இத் தினைப்புனத்தில் தோன்றியுள்ளதுபோலும்" என்று கூறி அவன் தன் மனை திரும்பினான்.

அவன் சென்றதும் குமரப் பெருமான் முன்புபோல் வேட்டுவக் கோலங்கொண்டு வள்ளிநாயகியிடஞ் சென்று, "அழகிய பெண்ணே! உன்மீது யான் உயிரையே வைத்திருக்கிறேன். உன்னைத் தஞ்சமாக அடைந்த யான் உன்னைவிட்டு நீங்கேன். உயிரை விடுத்து உடல் எழுந்து நடக்காது. மான்விழி மடந்தையே! நீ தினைப்புனங் காத்தல் தகாது. என்னுடன் வருதியேல் உலகெலாம் உன்னைப் போற்றி வணங்கும் உயர்ந்த தகுதியை உனக்கு அளிப்பேன்" என்று உரைத்தார்.

இவ்வாறு குமரக் கடவுள் கூறலும் வள்ளிநாயகியார் அவர் கூற்றுக்கு நாணிப் பேசலுற்றார். "நீர் வேடர் போல் தோன்றினும் மன்னர்போற் பேசுகின்றீர். உயர்ந்த செல்வந்தராகக் காணப்படும் நீர் தினைப்புனங் காக்கும் பேதையை விரும்புதல் முறையன்று. புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமோ?"

அவ்வேளை வேடர் சூழ நம்பிராசன் மீண்டும் அங்கு வந்தான். அவர்களைக் கண்ட வள்ளிநாயகியார் அவர்கள் வலியர் என்றும் அங்கு நில்லாது தப்பிச் செல்லும்படியும் குமரவேளுக்குக் கூறினார். உடனே குமரவேள் தவத்துடன் கூடிய முதியவர் வேடந்தாங்கி, நம்பிராசனை எதிர்கொண்டு அவனுக்குத் திருநீறு வழங்கி அவனை வாழ்த்தினார். நம்பிராசன் திருநீற்றைப் பத்தியுடன் வாங்கித் தரித்து, "மேன்மை மிக்க முதியவரே! புகழ்வாய்ந்த இம்மலைக்கு விருந்தினராக வந்துள்ளீர். உமக்கு வேண்டியதைக் கேட்பீராக" என்றான். அது கேட்டு முதியவராகிய குமரப் பெருமான், "ஆண்மை மிகுந்த

அண்ணலே! நான் எனக்கு உண்டாகிய முதுமை நீங்கவும் மனத்தில் உள்ள மருள் நீங்கவும் உனது மலையில் உள்ள குமரித் தீர்த்தத்தில் ஆட வந்தேன்" என்றார். (இக்கூற்றின் உட்பொருள் "எனது மாறுவேடம் குலையவும் நெஞ்சில் உள்ள காதல் மயக்கம் கலையவும் உனது மகள் வள்ளிநாயகி என்னும் குமரியுடன் கலந்தாட வந்தேன்" என்பதாகும்.)

அங்ஙனம் முதியவர் கூறவும் நம்பிராசன், "தந்தையை யொத்த தவச் செல்வரே! நீர் விரும்பிய தீர்த்தத்தில் நிதமும் நீராடி எந்தன் மகளுக்கும் ஒரு துணையாகி இங்கு இருப்பீராக" எனக் கூறினான். பின்னர் தான் கொண்டுவந்த உணவுவகைகளை வள்ளிநாயகிக்குக் கொடுத்துத் தனது இருப்பிடஞ் சென்றான்.

அவனும் அவனது பரிவாரங்களுஞ் சென்றபின் முதியவர் தமக்குப் பசிக்கின்றது என்று வள்ளிநாயகிக்குக் கூறினார். நாயகியார் தேனையும் தினைமாவையும் கனியையும் கொடுக்க அவற்றை வாங்கி உண்டபின், தண்ணீர் வேண்டும் என்றார். அதுகேட்ட குறமகள், "இம் மலையிலிருந்து ஏழு குன்றுகளைக் கடந்து சென்றால் அங்குள்ள சுனையில் தெளிந்த தண்ணீரைக் குடிக்கலாம்" என்றார். கிழவரோ, "யான் இந்த ஊருக்குப் புதியவன். இம் மலையின் வழிகளை அறியேன். அதனால் நீயும் என்னுடன் வந்து சுனைநீரைக் காட்டுவாய்" என்றார்.

வள்ளிநாயகியும் அதற்கு இசைந்து முதியவரை அழைத்துச் சென்று சுனைநீரைக் காட்டினார். நீரை அருந்திய முதியவர், "மேகம்போன்ற கரிய கூந்தலையுடைய காரிகையே! எனது உடற் பசியைப் போக்கினை. தண்ணீர்த் தாகத்தையும் நீக்கினை. மேலும் நான் உன்மீது கொண்ட மோகத்தையும் போக்குவாயானால் என் குறை முழுவதையும் முடித்த பெருமை உன்னைச் சாரும்" என்றார்.

அதுகேட்ட சுந்தரி சீறிச் சினந்து, "முதியவரே! நீர் தாங்கும் தவக் கோலத்துக்குத் தகாத வார்த்தைகள் பேசினீர். மாதவத்தினராகிய நீர் தினைப்புனங் காக்கும் என்னைத் தழுவ விரும்புவது முறையாகாது. வேடர்கள் உமது கருத்தை அறியின் விபரீதமாக முடியும். உமது வஞ்சக எண்ணத்தால் வேடர் குலத்துக்கே பழியைத் தேடினீர். சரி, சரி.... உம்முடன் நின்று

பேச எனக்கு நேரமில்லை. எனது தினைப்புனத்தில் பறவைகளும் விலங்குகளும் தினைகளைக் கவர்தல் கூடும். அதனால் நான் செல்ல வேண்டும்" என்று கூறி வள்ளிநாயகியார் கடுகி நடந்தார்.

குமரப் பெருமான் குறமகளுடன் விளையாடக் கருதி விநாயகப் பெருமானைக் கும்பிட்டு அழைத்தார். உடனேயே விநாயகப் பெருமான் வள்ளிநாயகிமுன் பெரிய யானை வடிவில் தோன்றிக் கர்ச்சித்தார். வள்ளிநாயகியார் பயந்து திரும்பி ஓடி முதியவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அந்த யானையினின்றும் தம்மைக் காப்பாற்றும் வண்ணம் வேண்டினார். முதியவரும் ஆனைமுகப் பெருமானை வணங்கி, "ஐயனே! நீர் வந்தமையால் இப்பெண் என்னை அணைத்தாள். இனி நீர் எழுந்தருள்வீராக" என்று வேண்டலும் விநாயகப் பெருமான் மறைந்தருளினார்.

விநாயகப் பெருமான் சென்றதும் ஆறுமுகப் பெருமான் ஒரு சோலையில் வள்ளிநாயகியைக் கலந்து முதுமை நீங்கித் தமது சுயவடிவத்தைக் காட்டியருளினார். ஆறு திருமுகங்களும் பன்னிரு புயங்களும் கூரிய வேலாயுதமும் குலிசம் முதலாய படைக்கலன்களும் கொண்டு அழகிய பொன்போன்ற மயில்மீது வீற்றிருந்து கந்தப் பெருமான் காட்சி கொடுத்தருளினார். அற்புதமான அந்தத் திருக்காட்சியைக் கண்ணுற்ற குறவர் குலத்து மின்கொடிபோன்ற வள்ளிநாயகியார் வியப்புற்று விதிர்விதித்து காந்தளையொத்த கைகளைக் குவித்து வணங்கி காதல் மேலீட்டாற் கண்கலங்கி நின்றார்.

பின்னர், "எம்பெருமானே! உமது அழகிய வடிவத்தை முன்பே காட்டி என்னைத் தழுவாது காலம் கழித்தீர். அடியேன் செய்த குற்றங்களை இப்பொழுதே பொறுத்து என்னை ஆட்கொள்ள வேண்டும்" என்று வேண்டினார். அதற்கு முருகக் கடவுள், "முற்பிறப்பில் திருமால் மகளாகி நம்மை அடையப் பெருந் தவஞ் செய்தனை. அதனால் இப்பிறப்பில் உன்னை அணைந்தோம். நீ தினைப்புனம் செல்வாயாக. யாம் உன்னை அங்கு சந்திப்போம்" என்று கூறியருளினார்.

வள்ளிநாயகியார் புனத்துக்குச் சென்றதும் பக்கத்துப் புனங் காப்பாள் வந்து அவரின் உடல் வேறுபாடுகளைக் கவனித்து உவகையுடன்

உரையாடித் தனது பரணுக்குத் திரும்பினாள். முருகப் பெருமான் ஒரு வேட்டைத் தொழில் வல்லுநர் கோலத்தில் அத்தோழியை அடைந்து தாம் வள்ளியைக் காதலிப்பதாகக் கூறி அவரைச் சந்திக்க தோழியின் உதவியை நாடினார். தோழி தயங்கவே, “வள்ளியிடம் எம்மைச் சேர்த்து வையாதுபோனால் யான் அவள் வடிவத்தைப் படத்தில் வரைந்து பனைமடலிற் குதிரைசெய்து அதன்மீது நாளையே ஊர்த் தெருவில் ஏறுவேன்” என்றார். அதற்குத் தோழியானவள், “மடல் ஏறுதல் அரசருக்கு மாட்சியன்று. நீர் இந்தக் குருக்கத்திச் செடிகளின் பின்னால் மறைந்திரும். உமது ஆசை நங்கையை நான் இங்கு அழைத்து வருவேன்” என்று கூறிச் சென்றாள்.

அவ்விதமே அவள் வள்ளிநாயகியைக் குருக்கத்திச் சோலைக்கு அழைத்துவர அங்கு முருகப் பெருமான் அவரோடு கூடி இன்புற்றிருந்தார். பின்னர், “உன்னை உன் தந்தை முதலியோர் தேடுவர். நீ தோழியுடன் புனத்துக்குச் செல்வாய். நாம் உன்னை அங்கு காண வருவோம்” என்று கூறி மறைந்தருளினார்.

தினைப்புனத்தில் வள்ளிநாயகியார் செவ்வேளின் வரவை எதிர்பார்த்திருந்த காலத்தில், அவர் காத்துவந்த தினைக் கதிர்கள் முற்றி விளைந்தன. அவற்றை அறுக்க வேடர்களும் வந்து சேர்ந்தனர். இனிமேல் அவர் புனத்தைக் காக்க வேண்டிய தில்லையென வேடர்கள் அவரை வீட்டுக்குச் செல்லுமாறு கூறினர். வள்ளிநாயகியாரும் வருந்தி அங்குள்ள மான்கள், கிளிகள், புறாக்கள் முதலியவற்றுக்குத் தாம் புனத்தை விட்டுச் சென்ற செய்தியைத் தமது காதலராகிய முருகனுக்கு அறிவியுங்கள் என்று கூறியவாறு வீட்டுக்குச் சென்றார்.

வீட்டிலே தோழியரோடு சேராது தமது தலைவரைச் சிந்தித்த வண்ணம் தனித்திருந்த வள்ளிநாயகியாரைச் செவிலியும் நற்றாயும் கவனித்து, அவரது மேனி வேறாகியது கண்டு இற்செறித்தல் (இல்லத்தைவிட்டு நீங்காது உள்ளிருத்தல்) செய்தனர்.

கந்தப் பெருமான் களவிற் கூடிப் பிரிந்தமையால் வள்ளிநாயகியாரின் உடல் மெலிவுற்றது. கை வளையல்கள் கழன்றன. கண்கள் கசிந்தன. இக் குறிகளைக் கண்ட வேடமாதர் அவை தமது

மலைத் தெய்வத்தால் வந்த குறையெனக் கருதினர். அதனைத் தாய் தந்தைக்குக் கூறினர். அவர்கள் சுற்றத்தவரைக் கூட்டித் தமது குலதெய்வமாகிய வேலனுக்கு வெறியாடல் என்னும் விழாவினைச் செய்தனர்.

அவ் விழாவின் வெறியாட்டாளன்மீது (உரு ஆடும் வேலன்மீது) வெற்றிவேற் பெருமான் தோன்றி, "இவளை நாம் தொட்டோம். எம் மனம் மகிழும் வண்ணம் பூசனை புரிவீராயின் இவள் குறைகள் தீரும்" என்று குறிப்பாய்க் கூறியருளினார். அம் மொழிகளைக் கேட்ட வள்ளிநாயகியார் மயக்கம் மாறி மகிழ்ந்து எழுந்தார்.

அன்றிரவு குமரப் பெருமான் வள்ளிநாயகியின் சிற்றூருக்குச் சென்று அவரின் சிறு குடிலுக்குப் பின்புறத்தில் நின்றார். அவ்வேளை வள்ளிநாயகியின் பாங்கி (தோழி) ஒருவள் முருகப் பெருமானைக் கண்டு பணிந்து, "தேவரீர் இரவில் இங்கு வருதல் முறையன்று. அதேசமயம் தலைவியும் உம்மைப் பிரிந்து உயிர் வாழாள். அதனால் அவளை உடன்கொண்டு செல்வீர்" என்று கூற, அவரும் உடன்பட்டார்.

உடனே பாங்கி வள்ளியிடஞ் சென்று முருகவேள் அழைத்துச் செல்ல வந்த செய்தியைக் கூற, அவரும் உடன்செல்ல இசைந்தார். பாங்கியும் மகிழ்ந்து பெற்றார், உற்றார், மற்றையோர், யாவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்குஞ் சமயம் பார்த்து, பேயும் உறங்கும் நள்ளிரவில் வள்ளியை அழைத்துச் சென்று முருகப் பெருமானிடஞ் சேர்த்து, "இம் மங்கை நல்லாள் உமக்கு அடைக்கலம். இனி, இவளை உமது பெருமைமிக்க ஊருக்குக் கொண்டு சென்று காத்தருள்வீராக" என்றாள். ஐயனும் தோழியைக் கருணையுடன் நோக்கி, "நீ எம்பால் வைத்த அன்பினை என்றும் மறவோம்" என்று அருளி அவளுக்கு விடைகொடுத்து, தமது தலைவியோடு அவ்வூரைக் கடந்து சென்றார்.

தம்முடன் செல்ல இசைந்த தலைவி மென்மலர்ப் பாதங்கள் நோக நள்ளிரவில் நடந்து வருந்துவதை உணர்ந்த தலைவர் பசிய சோலை ஒன்றை அடைந்து அவரோடு இன்புற்றிருந்தார்.

அடுத்த நாள் அதிகாலையில் வள்ளியைக் காணாது கொடிச்சி

கவலைகொண்டு கணவன் நம்பிராசனுக்குத் தெரிவித்தாள். வேடர்கோன் வெகுண்டு மகளைத் தேடும் வண்ணம் தனது ஆட்களை அனுப்பினான். வேடர்கள் ஒன்றுதிரண்டு அம்பும் வில்லுங் கொண்டு வள்ளியைத் தேடி, அவளைக் கொண்டு சென்றவனைக் கொல்லுங் கோபத்துடன் விரைந்து சென்றனர். அவர்களின் ஆரவார ஒலிகளைக் கேட்டு வள்ளிநாயகியார் தமது அச்சத்தை ஆறுமுகப் பெருமானுக்குத் தெரிவித்தார். ஆறுமுகப் பெருமான் முறுவலித்து அஞ்சேல் என்றருளி அம்மையாரைத் தம் மார்போடு அணைத்துக் கொண்டார்.

அவர்கள் இருந்த சோலையை வேடர்கள் கண்டறிந்து, அதனைச் சூழ்ந்து நின்று அம்புமாரி பொழிந்தனர். குமரப் பெருமான் அருட்குறிப்பால் கொற்றக் கொடியாய் அமைந்த சேவல் நிமிர்ந்து நின்று கொக்கரித்தது. அவ்வளவில் வேடர்கள் அனைவரும் இறந்து வீழ்ந்தனர்.

தந்தையும் தமயன்மாரும் ஏனைய சுற்றத்தவரும் மாண்டு வீழ்ந்தது கண்டு வள்ளிநாயகியார் கலங்கி வருந்தினார். அச்சமயத்தில் அவரின் அன்பைச் சோதிப்பார்போல ஆறுமுக வள்ளலும் அச்சோலையை விட்டுச் செல்லலானார். வள்ளிநாயகியும் தமது தலைவரைப் பின்தொடர்ந்து சென்றார்.

அப்பொழுது நாரதமுனிவர் அங்கு தோன்றி வேடர்களைக் கொன்று வள்ளியைக் கொண்டு செல்லுதல் தக்கதோ என்று விண்ணப்பித்தார். முருகப் பெருமான் வள்ளிநாயகியை நோக்கி, “இறந்த உனது தந்தையையும் சுற்றத்தவரையும் எழுப்புவாய்” என்றருளினார். நாயகியும் மகிழ்ந்து, “அனைவரும் எழுக” என்று கூற இறந்தவர் எல்லோரும் உயிர்பெற்று எழுந்தனர்.

முருகப் பெருமான் உயிர்பெற்று எழுந்த வேடர்கள் காணும் வண்ணம் அருள்பொழியும் முகங்கள் ஆறும் பன்னிரு கரங்களும் வேல் முதலாய பன்னிரு படைக்கலன்களும் பொருந்திய தமது திருவுருவத்தைக் காட்டியருளினார். அவர்கள் வியப்புற்று மகிழ்ந்து தொழுது நின்றனர். அப்பொழுது நம்பிராசன், “எங்கள் ஊரைக் காக்குந் தெய்வமாகிய நீயே எமது குலக்கொழுந்தை களவினிற் கவர்ந்தாய். இனி எங்கள் ஊருக்கு வந்து அவளை முறைப்படி

திருமணம் புரிய வேண்டுகிறோம்” என்றான்.

குமரப் பெருமானும் அதற்கு இசைந்து வள்ளிநாயகியுடன் நாரதரையும் அழைத்துக் கொண்டு நம்பிராசனது சிற்றூருக்கு எழுந்தருளினார். நம்பிராசன் குமரப் பெருமானே வள்ளியைக் கவர்ந்தவன் என்றும் அவனே அவளை மணஞ் செய்ய வந்துள்ளான் என்ற செய்தியையும் தனது குடிமக்களுக்கு அறிவித்து, அவர்களைத் திருமணத்துக்கு அழைத்தான்.

எல்லோரும் வந்து கூடியபின் நம்பிராசன் தனது மனையின் கூடத்திலே அழகிய புலித்தோலை விரித்து அதன்மீது குமரக் கடவுளையும் தனது மகளையும் அமரச் செய்தான். புலித்தோலில் அமர்ந்து கொண்டு குமரன் வள்ளியை அருளோடு நோக்க, வேட்டுவக் கோலம் மாறி முன்னைய தெய்வக் கோலத்தை வள்ளியம்மை பெற்றார். அவரது அழகிய கோலத்தைக் கண்ட வேடர்கள் மிகவும் மகிழ்ந்து ஆர்த்தனர். அத் தெய்வமகள் தங்கள் குலத்தில் வந்து தோன்றியது தாம் முன்செய்த தவப்பயனே என்று போற்றினர். சிலர் கொம்புகளை ஊதினர். சிலர் மேளங்களை முழக்கினர்.

அப்பொழுது நம்பிராசன் தனது மகளின் திருக்கரத்தை கந்தப் பெருமானின் திருக்கரத்தில் வைத்து, “எமது தவத்தால் எம்மிடம் வந்த இத் தெய்வமகளை உமக்கு விருப்புடன் தந்தேன், ஏற்றுக்கொள்வீராக” என்று தாரைவார்த்துக் கொடுத்தான். அதனைத் தொடர்ந்து நாரதமுனிவர் அக்கினியையும் பிற உபகரணங்களையும் வருவித்துத் திருமணத்தை வேதமுறைப்படி செய்து முடித்தார்.

தமது மைந்தனின் திருமணத்தைக் காணச் சிவபெருமானும் உமாதேவியாரும் விநாயகப் பெருமானுடன் வானத்தில் எழுந்தருளினர். அவர்களைச் சூழ்ந்து திருமால், பிரமன், இந்திரன் முதலாய தேவர்களும் வள்ளி திருமணத்தைக் கண்டு களித்தனர்.

முருகப் பெருமான் வள்ளிநாயகியுடன் தாய் தந்தையரை வணங்கி நின்றார். அம்மை அப்பரும் விநாயகப் பெருமானும் அவர்களுக்கு அருள் செய்து மகிழ்ந்தனர். அப்பொழுது சிவபெருமான், “மகனே!

முற்பிறப்பில் திருமால் மகளாகியும் இப்பிறப்பில் சிவமுனிவன் மகளாகியும் வேட்டுவ குலக் கொழுந்தாகியும் வளர்ந்த வள்ளிநாயகியை நீ மணந்து, எல்லோரும் ஒரு குலம் என்பதனை உலகத்தவருக்கு உணர்த்தினை. உனது கருணையை உலகம் என்றென்றும் போற்றுவதாக" என்று கூறி மறைந்தருளினார்.

திருமால் முதலிய தேவர்களும் முருகப் பெருமானையும் வள்ளிநாயகியையும் வணங்கி வாழ்த்தினர்.

பின்னர் குமரப் பெருமான் நம்பிராசனை நோக்கி, "நாம் வள்ளிநாயகியுடன் திருத்தணிகையில் இருப்போம். நீ யாவரும் போற்றும் வண்ணம் இச்சிற்றூரில் அரசோச்சி இனிதே இருப்பாய்" என்று கூறியருளி வள்ளிநாயகியாருடன் திருத்தணிகை மலையைச் சென்றடைந்தார்.

திருத்தணிகையில் தேவதச்சன் முன்பு அமைத்த ஆலயத்தில் முருகப் பெருமான் வள்ளிநாயகியுடன் உலகெலாம் வாழும் உயிர்கள் அனைத்தும் உய்யுமாறு இருந்தருளினார். அக்காலத்தில் அவர் வள்ளிநாயகியார் விரும்பிய வண்ணம் திருத்தணிகை மலையின் பெருமையைப் பின்வருமாறு கூறியருளினார்:

"சூரபன்மனுடன் செய்த செருத்தொழில் தணிவடைந்து யாம் இங்கு வந்திருந்தமையால் செருத்தணி என்று இம்மலை பெயர் பெற்றது. எமது அம்மை அப்பர் கயிலை மலையில் விரும்பி இருந்தருளல்போல யாம் இம்மலையில் விருப்பத்துடன் இருப்போம். தேவேந்திரன் நாளும் எமக்குச் சாத்துவதற்காக மூன்று செங்காவி மலர்க்கொடிகளை இங்கு வைத்துள்ளான். அவற்றில் காலை, நண்பகல், மாலை ஆகிய ஒவ்வொரு பொழுதிலும் ஒவ்வொரு மலராக மூன்று மலர்கள் மலரும். இம் மலையைத் தொழுவார் பாவவினைகள் அனைத்தும் அகலும்."

இவ்வாறு கூறியருளியபின் அம் மலையின் ஒரு புறத்தில் தமது தந்தையாருடைய சிவலிங்கத் திருவுருவத்தை விதிப்படி பிரதிட்டை செய்து வள்ளிநாயகியாருடன் வழிபட்டு வந்தார்.

சில நாட்களின்பின் முருகப் பெருமான் வள்ளிநாயகியுடன் தேவலோகத்துக் கந்தகிரிக்கு எழுந்தருளினார். அங்கு தெய்வயானைப் பிராட்டியார் அவர்களை வணங்கி வரவேற்றார். வள்ளிநாயகியும் தெய்வயானையை வணங்கினார். தெய்வயானை, "எனக்கு ஒரு தோழி வாய்த்தது நன்று" என்று கூறி வள்ளி நாயகியை அன்புடன் அணைத்தார்.

அப்பொழுது முருகப் பெருமான் வள்ளிநாயகியின் வரலாற்றைத் தெய்வயானைக்கு விரிவாகக் கூறியருளினார். அதனைக் கேட்டு மகிழ்ந்த தெய்வயானை, "முன்னாளில் திருமாலின் மகளிராகப் பிறந்த இவளும் யானும் நெடுங்காலம் பிரிந்திருந்தோம். எனது சகோதரியை என்னுடன் ஒன்று சேர்த்த தேவரீரது கருணைக்குச் செய்யத் தக்க கைம்மாறு ஏதுமில்லை" என்று உரைத்தார். அதுகேட்டு வள்ளிநாயகியார் தமக்கையாரை வணங்க, தெய்வயானையும் இளையவளை எடுத்து அணைத்து இனிய மொழி கூறினார்.

தேவலோக மங்கையும் பூலோக நங்கையும் சிறிதும் பேதம் இன்றி உள்ளமும் உயிரும் சொல்லும் ஒன்றாகி மணமும் மலரும்போல அன்புடன் இணைபிரியாது இருந்தனர். இரு தேவியரும் கங்கையும் யமுனையும் கடலுடன் கலந்தாற்போல சரவணபவனுடன் கலந்து அவரது இரு பக்கங்களிலும் எழுந்தருளினர்.

முருகப் பெருமானும் இரு மனைவியரும் கிரியை ஞானம் என்னும் இரு சக்திகளாகப் பொருந்தியிருக்கப் பலவகை உயிர்களுக்கும் அருள் பாலித்து அவர்களைப் பக்குவப்படுத்திக் கிடைத்தற்கரிய முத்தியின்பத்தை வழங்கும் கருணையையும் செய்தவாறு இருந்தருளினார்.

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

கந்தன் கதை நிறைவு பெற்றது.

# நாளாந்தம் ஓதுதற்குகந்த கந்தபுராணப் பாடல்கள்

## விநாயகப் பெருமான்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருள்எலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

உச்சியின் மகுடம் மின்ன ஒளிர்தர நுதலின் ஓடை
வச்சிர மருப்பின் ஒற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்கரக் கணபதிக்(கு) அன்பு செய்வாம்.

## சிவபெருமான்

நாரண னென்னுந் தேவு நான்முகத் தவனு முக்கட்
பூரணன் தானு மாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேறா அநாதியா யுயிர்கட் கெல்லாங்
காரண னாய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம்.

ஏகனே போற்றி யார்க்கும் ஈசனே போற்றி யம்மை
பாகனே போற்றி மேலாம் பரஞ்சுடர் உருவே போற்றி
மேகமார் களனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா போற்றி.

அம்புயால் சனன்மா லென்னும் அளப்பருந் திறத்தாய் போற்றி
நம்பனே போற்றி எங்கள் நாதனே போற்றி கோதில்
செம்பொனே மணியே போற்றி சிவபெரு மானே போற்றி
எம்பிரான் போற்றி முக்கண் இறைவனே போற்றி போற்றி.

பொங்கரா வணிக ளாகப் புனைதரு புனிதா போற்றி
அங்கரா கத்திற் பூதி அணிந்திடும் ஆதி போற்றி
வெங்கரா சலத்தின் வன்றோல் வியன்புயம் போர்த்தாய் போற்றி
சங்கரா பரமா போற்றி தாணுவே போற்றி போற்றி.

எவ்வெவர் தம்மை யேனும் யாவரே யெனினும் போற்றின்
அவ்வவர் இடமாக் கொண்டே அவர்க்கருள் தருவாய் போற்றி
மெய்வரு தெளிவி லுன்னை வெளிப்பட வுணர்ந்து ளோர்க்குத்
தெய்வத போக முத்தி சிறப்பொடு தருவாய் போற்றி.

அம்புய மலர்மேல் அண்ணல் அச்சுதன் ஆதி வானோர்
தம்பதம் எமக்கு நல்குந் தற்பரா வென்றே யாரும்
நம்புறு பொருட்டால் வேதம் நவின்றிட வடைந்தோர்க் கெல்லாம்
உம்பர்தம் பதமும் ஈயும் உலகுடை முதல்வா போற்றி.

வேதநா யகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசம யங்கள் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதகம் அனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## உமாதேவியார்

செறிதரும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவறும் அரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.

## முருகப் பெருமான்

அருவமும் உருவும் ஆகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொ ணாமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளி னானே.

வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறி லாதவேல் அபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கய மணிமழுத் தண்டுவில் லிசைந்த
ஆறிரண்டுகை அறுமுகங் கொண்டுவேள் அடைந்தான்.

எங்க ணும்பணி வதனங்கள் எங்கணும் விழிகள்
எங்க ணுந்திருக் கேள்விகள் எங்கணுங் கரங்கள்
எங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயும் அறுமுகத் திறைக்கே.

மூவர்கண் முல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரிதல் தேற்றா(து) இருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்ன மெல்லாம்.

விரிஞ்சன்மால் தேவ ராலும் வெலற்கரும் விறலோ னாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத வொழுக்கமும் பிறவும் மாற்றி
அருஞ்சிறை யவர்க்குச் செய்த அவுணர்கோன் ஆவி கொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்.

மாயையின் வலியோ னாகி மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம் அரசுசெய் துகநூற் றெட்டுக்
காயம தழிவின் றாகிக் கடவுளர்க்(கு) அலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்றாள் சென்னி வைப்பாம்.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

துய்யதோர் மறைக ளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபேர் அடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

### வீரபத்திரப் பெருமான்

அடைந்தவி யுண்டிடும் அமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

### வைரவப் பெருமான்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
வரிவிலக்குள்ள ஒரு தரும தாபனமாகப்
பதிவு பெற்றது. பதிவு இல: 1201762

The Hindu Religious Society of Ontario
is a Registered Charitable Organization
with tax relief. Reg. No. 1201762